1

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
9-APR 1927
2345
894.811

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

மகாவிந்தமென்னும்

வைகுந்த அம்மானை

மதுரை சிவஞான தீபச்சபை

காரியதரிசி

ம. அழகர்சாமிபிள்ளை அவர்கள்

பார்வையிட்டு,

Accn. No. 176487
Pages. 284

மதுரை, வடக்காவணிமூலவீதி, புத்தகவியாபாரம்,

இ. ராமசாமிக் கோனாரால்,

மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில்,

பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை] 1926. [அணா-12.

பூவணம் N. K. S.
வேலுச்சாமிக் கவிராய ரவர்கள்,
இயற்றிய

சண்முகானந்த பக்திரஸ கீர்த்தனம்.

நண்பர்களே! கவனியுங்கள்! கவனியுங்கள்!!

பாவாணர் போற்றும் பூவணம் வேலுச்சாமிக் கவிராயரவர்களால் கால நாகரிகத்திற் கேற்றவாறு பற்பல அற்புத வர்ணமெட்டுகளா லியற்றிய இக்கீர்த்தனப் பிரபந்தத்துள்

பரங்கிரி வேலவன்மீது பாடியுள்ள பஞ்சாமிர்த, பாலபிஷேகப் பாடல் படிக்குந் தோறும் பஞ்சாமிர்தச் சுவைபோலவே இருக்கும்.

கார்த்திகேயக் கந்தன் மீதுள்ள தோத்திரப் பாடல்கள் படிக்கப்படிக் கச் சீர்த்தியாயும், மனப்பூர்த்தியாயு மிருக்கும்.

கழுகாசலக் குமரன்மீதும் திருக்கழுக் குன்ற முருகன் மீதும் பாடி யுள்ள ஓரடிச்சந்தப் பாடல்கள் உள்ளமகிழ்ச்சியை உடனே உண்டாக்கும்.

"தொனிக் கிணங்கு சங்கீதம், பாலஷண்முகனே, திருப்பார்வதி மகனே" என்ற வண்ணச் சந்தக் கீதங்கள் கேட்குந்தோறும் எண்ணுந் தோறும் கிளர்ச்சியை உண்டாக்கும்.

"செந்தாழந்தேன்" என்ற பாடலும் அதன் சந்தத்தொனியும் தாளத் தொனியும் மனதுக்கோர் சிலப் பதவியைத் தரும்.

இன்னும் அடங்கியுள்ள மற்ற அருமையான பாடல்கள் படிப்பவர்க் கும், கேட்பவர்க்கும் சதா ஆனந்தத்தை உண்டாக்கு மென்பதில் ஐயமில்லை.

விலை அணா—4.

முத்தமிழ் க்ஷேத்ரம் பழனி வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ
K. பக்கிரியாபிள்ளை யவர்களியற்றிய,
புதிய பாடல்களாகிய

தோத்திரக் கீர்த்தனப்பாமாலை.

அத்தன்மலரடி சித்தமகிழ்வுடன் நித்தந்துதிசெயும் உத்தம மித்திரர்களே!

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

பழனியம்பதியுறை ஸ்ரீதண்டபாணிப் பெருமான் சந்நிதியில் அவனருளாலே அவன்றாள் வணங்கி அசரீரி அடி எடுத்துக்கொடுக்கப் பரவசம் கொண்டு, பாமாரிபொழிந்த பக்தசிகாமணியாகிய நம் பக்கிரியாபிள்ளை யவர்கள் பாடிய இத் தோத்திரக்கீர்த்தனங்கள் பகவானைத் தோத்திரம் புரிவார்க்கு நேத்திரம் போன்றது. இதில் அடங்கியுள்ள செவிக்கின்பந் தரும் சிறந்த மெட்டுகளும், வாக்குக்கினிக்கும் வண்ணச்சந்தங்களும், உள்ளம் மகிழ்விக்கும் ஓரடிப்பதங்களும் படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் பரமானந்தத்தை உண்டுபண்ணும். இதில் முருகபிரானை மயில்மீது எழுந் தருளுமாறு இயற்றியுள்ள இங்கிலீஷ் பாடல் மனதிற்கு உருக்கத்தையும், உற்சாகத்தையும் உண்டாக்கும். சொற்பக்காப்பிகளே தயாரிலுள்ளன.

விலை அணா 0—5—0.

உ

நடேசன் துணை.

மகாவிந்தமென்னும்

வைகுந்த அம்மானை.

விநாயகர் துதி.

வெண்பா.

தக்கபுகழ் சார்ந்த தருமறைவர் வைகுந்தம்
புக்கபெருங் காதை புகலவே—மிக்க
வியமுகத்தான் பாரதத்தை மேலிடுகூத் தாடும்
கயமுகத்தான் பங்கயத்தாள் காப்பு.

வெண் செந்துறை.

கரிமுகப்பிள்ளையாரே கணபதியேமுன்னடவாய்
அரியதவத்துதித்த ஐங்கரனேமுன்னடவாய்
ஏடுதவறாமல் எழுத்தாணிசாயாமல்
கோடுதவறாமல் கொழுந்தோலைசாயாமல்
நாவுதவறாமல் நல்லோசைதாருமையா
பாவில்வழுவாமல் பரிந்தெனக்குமுன்னடவாய்
குரவில்குடியிருந்து குரலோசைதாருமையா
மறலியனுகாமல் வரமீய்ந்துகாருமையா
வெப்பாலைக்கீழிருக்கும் சப்பாணிப்பிள்ளையாரே
சப்பாணிப்பிள்ளையாரே பொற்பாதம்யான்மறவேன்
தப்பாமலிக்கதைக்குத் தக்கோனேமுன்னடவாய்
பஞ்சவர்கள் தன்கதையைப் பட்சமுடன்யான்படிக்க
செஞ்சொல்சிவனுடைய தேவிதிருமகனே
குற்றங்கள்வாராமல் குறையொன்றும்நேராமல்
கற்றமட்டும்யான்படிக்கக் கணபதியேமுன்னடவாய்

சுப்பிரமணியர் துதி.

தேவரெல்லாம்வணங்குந் தேவர்சேனபதியே
மூவரெல்லாம்புகழும் முருகோனே முன்னடவாய்
புள்ளிமயிலேறும் புனிதவடிவேலா
வள்ளிமணவாளா வந்தெனக்குமுன்னடவாய்
திருத்தணிகைவேலா நின் சீர்பாதம்யான்மறவேன்
கருத்துடனேபாடக் கட்டழகர்ஐவர்கதை
பஞ்சவர்கள்தன்கதையைப் பற்பலருந்தான்படிக்க
அஞ்சலொன்றில்லாமல் அடியேனும்யான்படிக்க
எம்பிரான்முன்னடக்க என்கதையும்பின்னடக்கத்
தம்பிரானனசிவ சண்முகனே முன்னடவாய்

சரஸ்வதி துதி.

நாவிற்சாரஸ்வதியே நான்முகனார்தேவியரே
பூவிற்பிறந்தவளே பூலோகரட்சகியே
மாசற்றதீபமே மன்னர்புகழ்விளக்கே
நேசத்துடனெனக்கு நெஞ்சிற்குடியிருப்பாய்
பஞ்சவர்களைவரும் பட்சமுடன் வைகுந்தம்
தஞ்சமுடனெல்லோரும் தட்சணமேசேர்ந்தகதை
புல்லனெனன்வாயில் புகழ்ச்சியாய்ப்பாடுதற்கு
வல்லகலைமகளே வாக்கிற்குடியிருந்து
நல்லவரந்தருவாய் நாவிற்சரஸ்வதியே
நித்தமுமெந்தன் நினைவிற்குடியிருந்து
பத்தியாயான்பாடப் பாரதியேமுன்னடவாய்

ஈஸ்வரர் துதி.

ஆதிபரஞ்சுடரே அரியசிவனாரே
சோதிமணிவிளக்கே தூயவருட்கடலே
கற்கண்டேசர்க்கரையே கனிவுள்ளமுக்கனியே
சொர்க்கபதியரசே அண்டாச்சுடரொளியே
எள்ளுக்குளெண்ணெய்போல் எங்கும்நிறைபொருளே
உள்ளுமெருதேறுந் தோன்றாதமெய்ப்பொருளே

மாலுமயனறியா வண்ணப்பரஞ்சுடரே
ஆலிவிடமுண்ட ஐயனேமெய்ப்பொருளே
பாண்டவர்கள்தன்கதையைப் பகவானேயான்பாட
ஆண்டவனே நீருமெந்தன் அடியேனுடநாவில்
இடருகள்வாராமல் இன்பமாயான்பாட
அடைவாகவென்னுவில் ஐயனே நீவருவாய்
இகழ்ச்சிகள்வாராமல் இடும்பொன்றும்நேராமல்
மகிழ்ச்சியாயெந்தனுக்கு மகாதேவர்முன்னடவாய்

மகாவிஷ்ணு துதி.

விருத்தம்.

வாரிசூழுலகுதன்னில் மன்னுயிர் துதிப்பவேண்டிச்
சீரியதமிழால்யானுந் தெரிந்துவம்மானைபாட
ஆரியனனந்தமாயன் அச்சுதன்கமலக்கண்ணன்
பாரியமேகவண்ணன் பச்சைமால்பதமேகாப்பாம்

இதுவுமது.

பார்த்தனையளந்தமாயன் பஞ்சவர்சகாயதூதன்
மேருவையெடுத்துமுந்நாள் விண்மழைதடுத்தமூலம்
சீர்பாதம்வணங்கியைவர் தெளிந்துவைகுந்தஞ்சேர்ந்த
வோர்கதையாமம்மானை வுரைக்கமால்பதமேகாப்பாம்

அண்டமளந்தவரே ஆதிநாராயணரே
கொண்டல்நிறமுள்ள கோபாலமாயவரே
கஞ்சன்வலதழித்த கார்மேகாமுன்னடவாய்
செஞ்சொலசோதையுட தேவிதன்பாலகனே
எல்லையளந்தவனே இரணியனைக்கொன்றவனே
கல்லைப்பெண்ணுக்கிவைத்த கர்த்தாவேமுன்னடவாய்
வெண்ணெய்திருடியே மிகவிடைச்சிகையாலே
வண்ணமுடனடியுண்ட மாயவனேமுன்னடவாய்
பாண்டவர்க்குத்தூதுபோன பகவானேமுன்னடவாய்
ஆண்டவனேயிக்கதைக்கு அருள்புரியவேண்டுமையா

அம்மானை.

கந்தனேசெந்தமிழ்க்குக் கணபதியேகாப்பாக
எந்தன்கலைவாணி எப்போதுமென்வாக்கில்
வந்துதவிசெய்ய வழுத்துகிறேனிக்கதையை
முந்துபரமேசர் மொழிந்தவசனமிது
செப்புதற்குலட்சுமியாள் ஸ்ரீதேவியுண்டாக
இப்புவியில்மாலயனு மெடுத்துரைத்தவேதாந்தம்
மாபாரதக்கதையாய் வகுத்துரைத்தசாஸ்திரத்தில்
பூபாலரைவர் பொருந்து துரியோதனனை
வென்றுபுவியாண்டு விஷ்ணுபதஞ்சேர்ந்தகதை
ஒன்றுமறியாம லுரைத்தேன்புவிமீதில்
பெரியோர்பொறுத்தருளும் பிள்ளையிவனெனவே
தெரியாதுரைத்தமொழி செந்தமிழோர்பொறுப்பீர்
பாவாணர்சீர்பாதம் பணிந்துமிக நினைந்து
நாவாணர்சீர்பாதம் நமஸ்கரித்துநாள்தோறும்
சொல்லுகிறேனம்மானை துதிக்கை துணையாகச்
செல்லுகிறகாலமெனச் செப்பினேனம்மானை
ஸ்ரீராமர்புவிவாழ்கத் திசைகளெட்டுந்தான்வாழ்கப்
பாரோர்புகழ்தமிழ்சேர் பாவலர்கள்தான்வாழ்க
திங்கள்மும்மாரி சிறந்துமிகப்பொழியப்
பொங்குபுகழ்காவேரி பொய்யாமலெந்நாளும்
தேசஞ்செழித்துவரச் செங்கோல்தழைத்தோங்க
ராஜன்புவியாள நற்றேவாலயம்விளங்க
மூவர்முதலான முப்பத்துமுக்கோடி
தேவர்களும்வாழ்கச் செங்கதிரோன்தான்வாழ்க
நாராயணன்வாழ்க நான்மறையுந்தான்வாழ்க
தாராருந்தவத்தோர் தபோதனருந்தான்வாழ்க
பஞ்சாட்சரமும் பகருமோரெட்டெழுத்தும்
துஞ்சாமலென்றுந் துதிப்போர்மிகவாழ்க
வீறுதிருநாமமுடன் வெண்ணீறுமுண்டாகக்
கூறுமுபதேசமென்றுங் குன்றாமலேவாழ்க

நன்றாய்ச்சிவன் தனையும் நாராயணன் தனையும்
ஒன்றாதக்காண்பபோ ருலகில்மிகவாழ்க
எல்லோருமுள்ளோரும் எளியோர்வலியோரும்
நல்லோருமிப்புவியில் நாட்டில்மிகவாழ்க
எண்ணிச்சீரங்க விராயருட தன்சிஷன்
மண்ணுலகிலோங்கியருள் வடவன்மனமகிழ்ந்து
அல்லலறவே அருவினைகள் தானறவே
சொல்லும்வைகுந்தக்கதை சொல்லியேயான்பாட
தண்ணழிசேர்வீதியிலே தழைத்தாலின்கீழிருக்கும்
விண்ணவர்கள் தான்போற்றுவிநாயகனே முன்னடவாய்
தோராதசூரனையுந் துஞ்சுகிறவஞ்சனையும்
வேரோடறுத்தெரியும் வேலோனே முன்னடவாய்
துவளுமிடையாளே சொற்சுவைக்குவல்லவளே
பவளநிறத்தாளே சரஸ்வதியே முன்னடவாய்
தெரியுங்கலைபகருஞ் செந்தமிழோர் தங்கள்முன்னே
அரியவைகுந்தகதை யம்மானைசொல்வதுகாண்
காசியமிவ்வுலகிற் கனமாரிபொழிவதுபோல்
பேசரியமென்பனிதான் பெய்வதொக்குமம்மானை
காவிற்குயில்கூவக் கண்டேயதற்கிணையாய்த்
கூவிக்குளறுமந்தக் கூகையொக்குமம்மானை
ஆதலால்யானுரைத்த அம்மானை தன்னிலொரு
ஏதுபிழைவந்தாலு மென்னகுறைநேர்ந்தாலும்
வாசமுள்ளபாடலென்று மாநிலத்தோர்கொண்டாட
நேசமுடன்பெரியோர் நிந்தனைகள்பண்ணுமல்
சிந்தைமகிழ்ந்துகொள்வீர் சிறியேனுரைத்ததமிழ்
சந்தேகஞ்சொல்லாமல் தாரணியிலுள்ளோர்கள்
ஆசையுடன்படித்து அன்புவைத்துக்கற்றவர்கள்
ஓசையுடனேவாழ்ந் திருக்கத்திருப்பீரம்மானை
ஆறுமுகன் துணையாய் அவையடக்கம்பாடுகிறேன்
பூருவமுள்ள புலனும்வெளியாகத்
தேயத்துள்ளோர்கேட்கச் செப்புகிறேனிக்கதையை

மாயங்கள்செய்யறியா மாதருமர்தம்பியரும்
அத்திபுரமதனை யாளுகின்றநாளையிலே
பத்தியுள்ளபஞ்சவரும் பாரளந்தமாயோனும்
நீதிவழுவாமல் நெடுநாட்புவியாண்டு
ஆதிமகாவிஷ்ணுபதம் ஐவருமேபோற்றிசெய்து
காலதுவாபரம்போய்க் கலியுகமும்வாரதினல்
சாலவேகோபாலர் சங்கையல்லவென்றுசொல்லி
உய்வதுக்குநல்ல உபாயம்மனதிலெண்ணி
ஐவருக்குப்புத்தி யடைவாகவேயுரைத்து
சீருடனேவைகுந்தஞ் சேரவென்றுசம்மதித்து
நாறுடனேபூவும் நனருகச்சேர்ந்ததுபோல்
பஞ்சவர்களைவரையும் பட்சமுடனிப்போது
தஞ்சமுடன்மாயன் தன்னிறம்போலாக்கிவைத்தான்
சிந்தைதனிலெண்ணத திருமாலபதஞ்சேர்ந்த
விந்தைக்கதையென்று மேதினியோதான் துதிக்க
அம்மானையென்றே அரியவைகுந்தத்தை
இம்மாநிலத்தோ ரெழுதிப்படிப்பதற்கு
வாக்கருளிச்செய்ய வடவன்முடித்தகதை
பார்க்கவிருத்தமொன்றும் பாரமலிக்கதையைச்
சுருக்கமாய்ப்பாடினதைத் தோற்றமுடனேதெரிந்து
பெருக்கவிரிவுசெய்து பெருமான்பதம்போற்றி
ஒன்றுபத்துநூறாய் ஒன்றுநூறாயிரமாய்
என்றுமுத்திசித்தி யிதுவேபொருளாக
திருத்தமுடனிக்கதையைச் சிறப்பாகச்செந்தமிழால்
விருத்தமுடன்கொச்சகமும் விபாமாய்த்தான்பாடி
பூலோகமெல்லாம் புதுமையெனக்கொண்டாடி
மாலோனுதவிசெய்ய வைகுந்தமென்பவர்க்கு
மெய்கண்டவேத வியாசர்மொழிந்தகதை
வைகுந்தவம்மானை மகாபாரதம்முடித்து
குருகுலத்திலுள்ள கொற்றவர்களற்றபின்பு
தருமருந்தம்பியருந் தாரணியில்தானிருந்து

வாழ்ந்தகதையும் மற்றுமுள்ளோர்தன்கதையும்
தாழ்ந்தகலிவருமுன் தங்களிலேதான்தெரிந்து
காளமுகில்மேனியனார் கண்ணனருளாலே
வாளபிமனீன்ற மைந்தன்பரிசித்துவுக்கு
பட்டந்தரித்துப் பாராளவைத்ததுவும்
நட்டந்தச்செங்கோல் நடக்குந்திறமறிந்து
வாசமுள்ளபஞ்சவர்கள் மனமகிழ்ச்சிதானடைந்து
தேசம்விட்டுமாயன்பதஞ் சேரவென்றுசம்மதித்து
மடந்தைபாஞ்சாலியொடு வைகுந்தஞ்சேர்ந்ததொரு
நடந்தகதைசொல்லுதற்கு நாரணமேகாப்பாமே

விருத்தம்.

ஓங்குகுருகுலமும்வாழ்க வுலகெலாங்கலகம் நீங்கி
பாங்குடனஞ்சுபேரும் பாவைபாஞ்சாலியாரும்
ஈங்குளகருமமெல்லா மெள்ளளவாசையற்றுத்
தீங்கிதுசெகமென்றெண்ணித் திடமுடனடந்தஞாயம்.

மண்ணுளார்வாழ்கவென்றும் மற்றுளதேவர்மூவர்
விண்ணுளார்வாழ்கவென்றும்வேதியர்முனிவர்ஞானக்
கண்ணுளார்வாழ்கவென்றுங் கலைபகர்தமிழோர்யாவும்
எண்ணுளகாலமெல்லா மிருந்தினிவாழ்கவாழ்க.

சொல்லுகிறேன்வீரைநகர் சோமலிங்கர்தாள்போற்றி
செல்லுகிறகாலஞ் செலுத்தலாமென்றுசொல்லி
வைகைநதியான வளர்வீரையம்பதியான்
மெய்க்கமலம்பூத்த விபூதிபஞ்சாட்சரந்தான்
எளியோர்க்கெளியனுமா மேழையிவனெனவே
தெளியோர்க்கடிபணியுஞ் சீஷனுக்குச்சீஷனுமாய்
வணங்கிநமஸ்கரித்து வழுத்துகிறேனம்மானை
அணங்குகலைவாணி யம்மையருளாலே
சொன்னதமிழ்பெருகச் சொன்னதுவேயம்மானை
தென்னன்மகள்மீனாட்சி தேவிதுணையெனவே

விரித்துரைப்பேனென்று மேதினியோர்தான்கேட்க
சிரித்துப்பழியாமற் சித்தமேதான்பொறுத்து
ஆட்பேருமாயிருந்தே அடியேன்மொழிந்ததமிழ்
கேட்பீர்வைகுந்தக்கதை கிருபையுடன்தானிருந்து

பாண்டவர் அத்திபுரத்தை ஆண்டது.

முன்னாளிற்பஞ்சவர்கள் மூத்தோருரைப்படியே
இந்நாள்வரையு மிகத்தில்நடந்தபடி
வேதமராமல் வேதியரும்பூசுரரும்
நாதமணிகீதம் நற்சங்குதான்முழங்க
வேள்விகளோமம் மிகுந்தபுராணமதை
கேள்விசிவகதைகள் கீர்த்தனங்கள்தான்முழங்க
நீதினடுஞாயம் நெறிமுறைமைதப்பாமல்
ஆதிமகாவிஷ்ணுபதம் அனுதினமும்போற்றிசெய்தே
மந்திரிமார்சூழ்ந்திருக்க மகுடமுடிமன்னருடன்
தந்திரிமார்வந்திருக்கத் தார்வேந்தர்காத்திருக்க
அந்தணரும்வேதியர்களானதபோதனரும்
செந்தமிழ்சேர்வாணர்களுந் தேவரிஷிமாதவரும்
அன்னசொன்னதானம் அறமேபெரிதாக
மன்னர்தங்கள்செங்கோல் வளருமனுநீதி
எப்பாலுஞ்செல்ல எருதுங்கொடும்புலியும்
தப்பாலோர்துறையில் தண்ணீர்குடித்துநிற்க
பூமிசெழித்துவரப் புவிராஜர்வாழ்ந்திருக்கச்
சாமிதிருமால் சகாயம்மனதிலெண்ணி
சேனைரதகஜங்கள் திக்கெங்குஞ்சூழ்ந்துவர
ஆனையின்மேல்முரசு அதிரப்பரிவாரம்
சங்கீதராகம் சகலகலைமுழங்க
இங்கிதமாய்நாளும் இடையூறுவாராமல்
கோத்திரங்களெல்லாம்குபேரனைப்போல்வாழ்ந்திருக்க
பார்த்தோர்மனமகிழப் பஞ்சவர்கள்பாராண்டார்
மக்கள்மனைவிசுற்றம் மகிழ்ந்துசிலகாலம்
திக்கெங்கும்போற்றித் திசைகளெட்டுந்தானதிர

வாள்வீமனுக்கு மைந்தன் பிறந்தது.

ஆளுகின்ற அத்திபுரம் அசையாமணிதரித்து
வாழுகின்றநாளில் வாள்வீமன்தேவி
சுந்தரிக்குக்கெற்பத் தோற்றமுடனேயிருந்து
மைந்தனையுமீன்றாள் மாணிக்கம்போலவேதான்
குழந்தைபிறந்ததென்று கொற்றவர்கள்தான்மகிழ்ந்து
வளந்தரவாய்த்ததென்று மனமகிழ்ந்தாரைவருமே
திங்களுமொன்றாகவளர் திங்கள்தனைப்போலே
அங்கம்பூரிக்கவேதா னேவர்வளர்க்கலுற்றார்
அன்னைமுகம்பார்த்து ஆஊவெனக்குளறி
தன்னாலேதாவித் தவிழ்ந்துவிளையாடினதைப்
பார்த்தானேபுத்திரனைப் பார்த்திபனப்போது
சேர்த்துமுகத்தோடுமுகம் சேர்த்துமுத்தமீய்ந்துமவன்
தங்கந்தங்கமெங்கள்குலந் தானதழைக்கவந்ததென்றே
அங்குமனமகிழ்ந் தருச்சுனன்தன்பேரனுக்கு
தண்டைசிலம்பு சதங்கையுடன்தான்பூட்டி
வண்டையமும்வச்சிரமணி வாள்வீமனமைந்தனுக்கு
பூஷணங்களெல்லாம் பொன்னாலலங்கரித்து
வாசமுள்ளவாள்வீமன் மைந்தனுக்குத்தங்கமெல்லாம்
பூட்டியலங்கரித்து பூரித்தகமகிழ்ந்து
நாட்டில்சீர்விஜய ராஜனுந்தானிருந்தான்
தும்பியமுதிமொம் சொல்லும்பயன்றிமொம்
அம்புவியைப்பார்த்தே அசைந்தாடிவாவெனவே
செங்கீரையாடிச் சிறுதாளந்தானாடி
வங்காரமுத்தமிட்டு மருவியதோர்சப்பாணி
சிற்றில்விளையாடிச் சிறுதேருந்தானுருட்டி
முத்தியொருவயது முழுதும்பருவமதாய்
தத்தடியுமிட்டுத் தம்பியவனுமெனவே
பத்தடியுந்தானடந்துபருவமதிரண்டாகி
தெரிசித்துப்பஞ்சவர்கள் சிந்தைமிகமகிழ்ந்து
பரிசித்தெனுநாமம் பகர்ந்தார்கள்பேரனுக்கு

மூன்றுவயதாகி மூலமறந்துவீதிசுற்றி
ஊன்றுசிறுகோலும் உண்டைவில்லுந்தான்பிடித்து
நாலுவயதாகி நடையுடையும்பாவனையும்
மாலுடையபேரனுக்கு வயதுமொரு அஞ்சாகி
அஞ்சுவயதாகி யானைரதமேறிக்
கொஞ்சும்பரியேறிக் கொற்றவனும்வித்தைகற்று
ஆறுவயதாகி யாடைவெகுபூஷணமும்
நீறுபுனைந்து நெடியோனைநெஞ்சில்வைத்து
ஆசானடிபணிந்து அரியசிலப்பங்கற்று
ராசாதிராசனென்று நாற்றிசையுங்கொண்டாட
வில்வித்தைசாஸ்திரமும் விதம்விதமாய்த்தான்படித்து
கல்வித்தமிழறியக் கட்டழகன்வேணுமென்று
ஏழாம்வயதிலெழுத்தறிந்தேயோதுதற்கு
வாளாலபிமன் மகனும்படித்திடவே

பாண்டவர் பரிசித்தைப் பள்ளியில் வைத்தது.

ஆதிகுருவிடத்திலேவரும்போய்ச்சேதிசொல்லி
ஓதிவிக்கவேணுமென்று ஒப்பிவைத்தாரம்மானை
அரியோமென்றவட்சரத்தை அரியின்தன்பேரனுக்கு
தெரியப்படுத்திச் சித்தரியும்பேரரியும்
எழுத்திலுடையட்சரமு மெல்லாம்படித்தெழுதி
அழுத்தமுடனின்ற ஐம்பத்தோரட்சரமும்
படித்துவிரசெழுதிப் பல்நூலுங்கற்றறிந்து
வடித்ததமிழ்நால்வகையும் வகையாவேபடித்து
பேசுதமிழ்பலவும் பிரியமுடன்தான்படித்து
ஆசுமதுரமுதல் அவையடக்கமுள்ளதெல்லாம்
தெலுங்குதமிழ்கிரந்தம் சீரியதோர்கன்னடமும்
துலுக்குபுகழ்நாகரமுஞ் சோர்வறவேதான்படித்து
நால்வேதசாஸ்திரமும் நயனகுறிப்பாஷைகளும்
மால்பேரன்தான்படித்து வயதுமோரெட்டாகி
தனுசாஸ்திரம்படித்தான் தாரணியெல்லாமகிழ

மனுவிக்யானம் நீதி மதிபுத்திவித்தைகளும்
பாஷைபதினெட்டும் பரிசித்துதான்படித்து
ஓசைபெறதேசம் உலகெங்குந்தானான
நல்வித்தைகற்றறிந்தான் நாராயணனார் தனபேரன்
வில்வித்தைகற்றவன்தான விளையாடும்பாலருடன

பரிசித்து வேட்டையாடப் போகிறது.

கான்வேட்டையாடிவர கையிலேவில்லெடுத்து
தான்வேட்டையாடவென்று தானடந்தானம்மானை
வாலைகளாய்க்கூடி வனம்புகுந்து நாலிடமும்
சோலைகளுங்காவுகளுஞ் சுனையும்மலைபலவும்
ஓடிவிளையாடி உயர்ந்தமலைதானேறித்
தேடிக்காடிபுலி சிங்கங்கள்யானை முதல்
மான்மரைகள்குத்தி வராகந்தனைவதைத்து
மேன்மையுள்ளதேனும் வித்தாரநற்கனியும்
வாழைக்கனியும் வருக்கைப்பலாக்கனியும்
தாழ்வில்லாதேசெழிக்குந் தனிமாதளங்கனியும்
மாங்கனியும்விளாங்கனியும் வளர்நாகலின்கனியும்
சாங்கமறப்பரிசித்துத் தனிக்காட்டிலேதிரிந்து
விளையாடியேபாலர் வெகுளிமிகவாகி
இளையாமற்சற்றும் இன்னதென்றுபாராமல்
காடுகலைத்துக் கடுகமலையேறி
ஓடுகிறபாம்பை யுயிரைவதைப்படுத்தி
ஆட்டிவிளையாடி அலக்களித்துநாகமதை
கோட்டிமிகப்பண்ணி கொன்றானுயிர்தனையும்
நாகமதுசெத்ததையும் நலமாகவேகிடத்தி
வேகமுடனோடி விளையாடுமெவ்வனத்தில்
அங்கேசடைமுடியோ டானதவமுனியும்
எங்கேசிவன்பாதமென்றைக்குக்காண்போமென்று
இருகைவிரித்து இருந்தார்சிவயோகம்
அங்கேசிறுவர் அவர்செயலைப்பாராமல்

சுடரில்விழும்விட்டிலைப்போல் துன்பமிக நினைத்து
இடருவருமென்றேசற் றெண்ணமனதேதோற்றாமல்
கேடுவரும்போதுமதி கெட்டுவருமிவ்வுலகில்
பாடுவருமென்று பரிசித்தறியாமல்
ஏதுவருமெனவே யெண்ணியவன்பாராமல்
தீதுவினைதன்னைத் தீதென்றறியாமல்
சற்பத்தைத்தானெடுத்துச் சன்னுசிதன்கழுத்தில்
உற்பத்திதானுமக்கு உடமையிதுவென்றணிந்தான்
கண்டந்தமாமுனியுங் கண்கள்பொறிபறக்க
விண்டந்தக்கோபம் வெளியிலகோரமதாய்
ஏண்டாசிறுபயலே யென்மீதுபாம்பதனை
வேண்டாதார்போலே விடவரவைப்போட்டாயே
தீண்டாதோவுன்னைச் சீறும்பொறியரவு
ஆறேழுனக்கினி அரவால்மரணமென்று
ஞானபரனா ஞானமுனிசாபமிட்டார்
சொன்னமுனிசாபந் துடைக்கவறியாமல்
என்னமோவென்று ஏகினர்காணம்மானை
தன்னிகரில்லாததொரு தனஞ்செயனார்தன்பேரன்
சென்னிகவிழ்ந்து சிறுவருடன்தான்கூடி
அத்திபுரம்நோக்கி ஆரணியம்விட்டகன்று
வெற்றிமிகப்பேசி விளையாடிக்கொக்கரித்து
பட்டணமுஞ்சேர்ந்து பரிசித்துவந்திருந்தான்
அட்டதிசைபுகழும் ஐவர்மிகவறிந்து
வில்லெடுத்துக்கானில் வேட்டைபோய்வந்ததுவும்
சொல்லெடுத்தான்நம்பேரன் சூரனிவனெனவே
ஆகங்குளிர்ந்து அன்புமிகப்பெருகி
தாகந்தெளிந்தைவர் தங்கள்சுமையாறுமென்று
தர்மநந்தம்பியருந் தங்களிலேசம்மதித்து
நன்மைசெய்தஞாயம் நமக்கேபலித்ததென்று

பரிசித்துவுக்குக் கலியாணஞ் செய்கிறது

சிந்தைமகிழ்ந்து சிறுவனமேலன் புவைத்து
தந்தையர்கள் தாமுந் தமரிலுள்ளமன்னர்களும்
கன்னிகலியானங் காசினியோர் தாமறிய
சீராகஐவர் சிறப்பாகப்போனுக்கு
நேராகநாள்முகூர்த்தம் நிட்சயதாம்பூலமிட
வேதியரைத்தானழைத்து வேண்டுமுகூர்த்தமிட
ஆதிநாராயணர்பால் ஐவரும்போய்ச்சென்றுகொண்டு
சுந்தரிதன்மைந்தனுக்குச் சுபசோபனம்முடியத்
தந்திரமின்னதென்று சாற்றுவீரெம்பெருமாள்
அழகுதிருமேனியனே அபிமன்னன்மைந்தனுக்கு
களபமுகின்மேனியனே கல்யாணந்தான்முடிய
வகையேதுபெண்தனக்கு மாயோனேசொலுமெனவூர்
துகைவகையில்ஐவருக்குத் தோற்றமுடனே நினைந்து
நால்வகையும்பார்த்து நாராயணர்தாமும்
பால்போலும்வங்கிஷத்திற் பாங்கானகோத்திரமும்
இன்னபடியென்று இதமாகச்சம்மதித்து
சொன்னதொருமாயோனைத் தொழுதுமிகப்பணிந்து
சாத்தகியாழ்வார் தானீன்றமைந்தனென்னும்
ஏற்றதுளசிமகா ராஜனவனீன்றெடுத்த
செல்வியெனும்பூமடந்தை சிறியாளைமாலையிட
நல்விசயமென்று நாராயணரைப்பெண்கேட்க
நாடிநடந்தார்கள் நல்லதொருபஞ்சவர்கள்
நேடித்துவாராகா புரிதனிலேசென்றுபுக்கி
கண்டார்கள்மாயனையே கமலமலர்ப்பாதமதைத்
தெண்டனிட்டுவாய்புதைத்துச் செப்பினர்தன்மருமே
அந்தமொழிகேட்டு ஆமென்றுகோபாலர்
சந்தோஷமாகச் சாத்தகியைவாவெனவே
உன்னுடையமைந்த னுற்றதுளசியவன்
தன்னுடையபெண்ணைத் தனஞ்செயன்தன்பேரனுக்கு

பூமடந்தையெனும் பொற்கொடியையிப்பொழுது
தாமளைபிமன்னன் தன்னுடையமைந்தனுக்கு
மாலையிட்டுதனைமுய் மணஞ்செய்யுமென்றுசொல்லி
சேலைபரிசம் செலுத்துமென்றுரைவரையும்
மாயனுரைக்க மன்னர்களாமெனவே
தூயபெருமுகூர்த்தஞ் சொல்லுமென்றுவேதியரைக்
கேட்டுமொருதினம் கிருபையுடனெல்லோரும்
தீட்டுபுகழவர் திருமாலிடந்தனிலே
கொண்டுவந்துவைத்தார்கள் கூறையொடுபரிசம்
கண்டுமனமகிழ்ந்து காயாம்புமேனியனார்
பாக்கியமாமென்று பச்சைமால்கொண்டாடி
வாக்கியமுஞ்சொல்ல மகிழ்ந்துதான்பஞ்சவர்கள்
நின்றவரைப்பார்த்து நெடியோன்மனமகிழ்ந்து
நன்றெனவேயிப்போது நாட்டாரசாணியென்று
செய்யுஞ்சடங்கு சிறப்பாகச்செய்யுமென்று
அய்யன்திருமா லருளினர்காணம்மானை
அந்தமொழிகேட்டவர் ஆமென்றுகோபாலர்
விந்தைமலர்ப்பாதமதில் விழுந்துநமஸ்கரித்து
வந்தார்களந்தப்புரம் வண்ணமணிமண்டபத்தில்
சந்தோஷமாயிருந்து சகலரையுந்தானழைத்து
அத்திபுரத்திலுள்ள அன்னைசுற்றந்தானறிய
சித்திவிநாயகனைத் தெரிசித்தடிபணிந்து
மூலப்பொருளே முதற்பொருளேமூர்த்தியையா
ஞாலப்பொருளை நமஸ்கரித்துநான்தொழுது
பாலனெங்கள்மைந்தன் பரிசித்துவேந்தனுக்கு
காலபலமாயிருந்து கலியாணமேமுடிய
முன்னிற்கவேணும்நீ முக்கணனார்புத்திரனே
சென்னிக்குள்நின்ற சிரோமணியேமுன்னடவாய்
என்றுதுதிபண்ணி யிறையோனைத்தான்பணிந்து
சென்றுநகரிற் சிறப்பித்தார்பட்டணத்தை
வான்கமுகுநாட்டி வளைபரப்பிப்பந்தலிட்டு

தேங்கிள நீர்மாங்கனிகள் தீங்கரும்புயாணிறைத்து
வாழைக்கனியுடனே வாழைமரந்தானிருத்தி
தாழைமடல்மல்லிகைப்பூச் சரமாலைதாணிறைத்து
பட்டாலலங்கரித்துப் பட்டுமேற்கட்டுகெட்டி
வட்டாரஞ்சூழ மாணிக்கமாலையிட்டு
மாடமலங்கரித்து மாளிகையும்மேடைகளும்
கூடமலங்கரித்துக் கோபுரமும்பாவனையாய்
தெருவீதியெல்லாஞ் சித்திரங்கள்தானெழுதி
மருவுமுல்லைமல்லிகையும் மருக்கொழுந்துவாசனையாய்
சாந்தும்புனுகும் சவ்வாதுநல்லகெந்தபொடி
ஏந்தும்பரிமளங்க ளெங்குங்கமகமென
வாசமுள்ளதெல்லாம் வகைவகையாய்த்தாணிறைத்து
தேசமலங் கரித்தார் தெய்வலோகம்போல
வைகுந்தம்போல வைரவைடூரியத்தால்
செய்கின்றாரைவர் திருமால்மனமகிழ
நாளுமுகூர்த்தம் நன்முகூர்த்தவேளையிலே
வாழுமரசாணியது மாணிக்கத்தூண்நாட்டி
அன்னசுற்றமெல்லாம் அலங்காரமாய்க்கூடி
தென்னவர்கள்மன்னவர்கள் தேசத்திலுள்ளவர்கள்
திக்கிலுள்ளகோத்திரமுஞ் சிறப்பாகத்தான்கூடி
முக்கியமாய்க்கல்யாணம் முடிப்பிக்கவந்தாராம்
வந்தஜனங்களோடு மகுடமுடிவேந்தர்களும்
பந்திபந்தியாகப் பாவாணர்கீதமுடன்
யானையொருகோடி தேருமொருகோடியதாய்
சங்கீதமேளந் தவில்முரசுமல்லாரி
எங்குமுழங்கிவர எக்காளம்பூரிகைகள்
பேரிகையும்மத்தளமும் பேசுங்கிடுபிடியும்
வாரியொலிப்பதுபோல் வான்முழக்கம்போலாகி
தித்திபுல்லாங்குழலும் திருச்சின்னந்தாரையுடன்
சத்திக்குமேகமெனத் தம்புருவுங்கின்னரமும்
மூவர்முதலாக முப்பத்துமுக்கோடி

தேவர்களும்மாதவரும் ஜெயசோபனங்கள்சொல்ல
மங்களவாழ்த்து மறையோர்கள்தான் துதிக்க
சிங்காதனத்தில் திருமாலும்வாழ்ந்திருக்க
மாப்பிள்ளைக்கோலமிட்டு மார்பிற்பூமாலையிட்டு
காப்புசிங்கமுகத்தோடா கைக்குக்கணையாழியுடன்
வாடைபரிமளங்கள் வாசனையுந்தானதிமிர்ந்து
ஆடையுடுத்தி அங்கிநிரைதான்தரித்து
காலுக்குமிஞ்சியிட்டுக் கடுக்கன்காதுக்குமிட்டு
மேலுஞ்சரப்பளியும் வெண்மைமுத்துத்தாழ்வடமும்
நாராயணன்பேரன் ராஜாதிராஜனுக்கு
சீரான நால்வகையுந் தெரிந்துநல்லபூஷணமும்
அரிசித்தமேமகிழ்ந்து அன்பானபேரனெனும்
பரிசித்துவேந்தனுக்குப் பலபணியுந்தான்பூட்டி
வேடிக்கையாக விசயன்தன்பேரனுக்கு
ஜோடித்தார்வேணதெல்லாம் சொர்ணமயமாக
துளசிமகாராஜனுட தூயபெண்பூங்கொடிக்கு
வளையல்தரித்து வாகுடையபட்டுடுத்தி
தேமருவும்பிச்சிமுல்லை செண்பகப்பூமாலையிட்டு
பூமடந்தையாமவட்குப் பொன்னலலங்கரித்து
சீப்பிட்டுமையெழுதிச் சித்திரம்போற்கோலமிட்டு
மாப்பிள்ளையும்பெண்ணும் மதனும்ரதிபோல
வைத்துமனமகிழ்ந்து வந்துசொன்னார்தாதியர்கள்
மெத்தசந்தோஷமென்று மேதினியோர்கொண்டாட
மாயவருமைவருமாய் வந்திருந்தார்பந்தலின்கீழ்
உன்பேரனை உற்றவபிமன்னனுக்கு
தன்பாலனை சமர்த்தன்பரிசித்துவுக்கும்
துளசிமகாராசன்பெற்ற தூயமடந்தையர்க்கும்
வளமாய்மணமுடித்து வாழ்த்தியாசீர்வதிக்க
வேணுமிருவென்று விளம்பினார்பஞ்சவர்கள்
பூணுமனமேமகிழ்ந்து புதல்வருடன்தானிருந்தார்
இந்தமணப்பந்தலிலே யெங்கள்பெரியன்னையரும்

வந்திருக்கவில்லையென்று மாதருமர் தானெழுந்து
புகழ்பெரியதாயார்தன் பொற்கோவிலில்சென்றுபுக்கி
முகமலர்ந்துவோர்வசனம் மொழிகுவார் தன்மருமே
கற்புடையமாதாவே காந்தாரித்தாயாரே
மற்புயவாள்வீமன் மைந்தன்பரிசித்துவுக்கு
ஜெகலோகமெய்க்கச் செய்யுங்கலியாணமெனச்
சகலரும்வந்தார்கள் தாயே நீர்வாருமென்று
சொன்னவுடன்காந்தாரித் தோகையரும் ஆமெனவே
அன்னமெனவேநடந்து அவருடனேகூடவந்து
நல்லதென்றுபந்தலின்கீழ் நடுவாகத்தானிருந்தாள்
செல்வக்கலியாணந் திருமால்தன்பேரனுக்கு
மணமுடிக்கவேண்டி மாயோனெழுந்தருளி
மணவரையிற்சென்று மாப்பிள்ளையைக்கைப்பிடித்து
கெண்டிநீர்வார்த்தார் கெம்பீரப்பேரனுக்குத்
தண்டாளமார்பன் தாமோதரன்மகிழ்ந்து
மனையைவலஞ்சுற்றிவந்து மணவரையிற்றானேறி
இணைமாகப்பெண்களையு மிப்படியேகூட்டிவந்து
தெய்வோமம்எக்கியங்கள் திருபாகமுள்ளதெல்லாம்
செய்துமுடித்துச் சிறப்பாகப்பந்தலின்கீழ்
சாஸ்திரத்திலுள்ள சடங்குமுடிந்தபின்பு
கோத்திரங்கள்சூழக் குலவைமுழக்குடனே
யானையதிலேறி அலங்காரமாய்வரவே
சேனைதளத்துடனே தெருவீதிசுற்றிவந்து
மங்கலியந்தான்தரிக்க வரவேணுமென்றுசொல்லி
இங்கிதமாய்மாப்பிள்ளையை ஏற்றினர்யானையின்மேல்
கன்னிகையுந்தேரேறிக் கணவனுடன்பின்தொடர
மன்னுமுடிமன்னவர்கள் மங்கையர்கள்சூழ்ந்துவர
சகலகலைமுழங்கச் சாம்பிராணிவாசமுடன்
பகலதுபோல்தீவத்தி பகல்வந்துநின்றிலக
இரவுபகலாக இந்திரன்தன்பட்டணம்போல்
அரவுயர்த்தோன்பட்டணமும் அலங்காரமாயிருக்க

வாணம்பலவிட்டார்கள் வானத்தின்மீதெனவே
காணவருவாருங் கண்டுமகிழ்வாரும்
இந்திரனேவென்பாரும் இறைவனேவென்பாரும்
சந்திரனேவென்பாரும் சரணமதுசெய்வாரும்
மன்மதனேவென்பாரும் மாலயனேவென்பாரும்
தன்மர்குலத்துதித்த தார்வேந்தனென்பாரும்
பூவாணமெங்கும் பூமர்போற்றுன்சொரியப்
பாவாணரில்ராகம் படித்துவாச்சங்கீதம்
பட்டணத்திலுள்ள பலஜெனங்கள்தான்பார்த்து
கட்டழகன்தான்வார கட்டழகைப்பாருமென்றார்
வீதிசுற்றிவாரான்காண் வீமனுடதன்பேரன்
ஆதிவஸ்துவாகுமெங்கள் அச்சுதனுர்தன்பேரன்
கோட்டையும்பட்டணங் குதிரைதளத்துடனே
நாட்டையுஞ்சுற்றி நகர்முழுதும்வலமாக
வந்துபந்தல்புக்கினர்காண் மாப்பிளையும்பெண்கொடி
இந்துபகல்போல் இருவர்மணவரையில்
மாயனருளாலே வந்திருந்தாரம்மானே
ஆயனுடனேவர் அருகிருந்துவேதியரை
ஓமம்வளர்க்கவென்ற உத்தாரம்பண்ணினர்காண்
சாமமொன்றுக்குள்ளாகத் தாலிதரிக்கவென்று
கும்பமுடன்மாவிலையுங் குசப்புல்லும்நூலுடனே
இன்பமுடன்ஜோடித் திருந்தார்கள்வேதியர்கள்
அக்கினியும்நெய்யும் ஆர்ப்பரித்துமேற்புரள
மூக்கியமாயெங்கும் மூலமுதற்பொருளாம்
வைகுந்தநாதர் மலரிணைத்தாள் துணையெனவே
கைக்கொண்டுவேதியனுர் கமண்டலத்தினீர்வார்த்து
தேங்காயுடைத்துமொரு சித்திவிநாயகர்முன்
பாங்காகவைத்துப் பரிசித்துவேந்தனுக்கு

மன்னன் பரிசித்து மங்கிலியந் தரித்தது.

கங்கணமுங்கட்டிக் கன்னிகைக்குக்காப்பணிந்து
வங்கணமாய்ப்பெண்கழுத்தில் மங்கிலியமுந்தரிக்க

அந்தணரும் மங்கிலியம் அக்கியோசாட்சியென்று
சந்தணரும்பூசித் தான்கொடுத்தாரம்மானை
தெய்வப்பிராமணருந் தேவர்களுஞ்சாட்சியதாய்
ஐவருந்தெண்டனிட்டு அபிமனுடபுத்திரற்கு
கண்ணன் திருக்கையாற் கற்பித்தார்மங்கிலியம்
விண்ணவர்கள்வாழிசொல்ல விரைவாய்த்தான்வாங்கி
தரித்தானேமங்கிலியம் தையனல்லாள்தன் கழுத்தில்
பரித்தேருடைய பரிசித்துமன்னவனும்
வேதமுழங்க வெண்கவரிதான்வீச
நாதமுழங்க நகரும்மிகவிளங்க
ஜெயஜெயோவென்று சேஷைகளுந்தானிரைக்க
தயவாய்மால்மாமுனிவர் தானட்சதைகொடுக்க
மங்களமும்பாடி வாழ்த்தினார்பந்தலிலே
திங்களொளிவதனச் சேடியர்சோபனமெனவே
சோபனமுஞ்சொல்லத் துடியிடைப்பெண்பூமடந்தை
பூபதியாமாப்பிள்ளையும் போய்த்தங்கள்மனைபுகவே
பண்ணினார்கோபாலர் பரிசித்துவேந்தனுக்கு
நண்ணினார்மாயோர் நடவுமென்றுகைபிடித்து
கணவருடபெண்கொடியைக் கைபிடித்தேகொடுத்து
மணவறையிற்போமெனவே மாயோனுதவிசெய்ய
அந்தநாட்சென்று அலர்கதிரோன்வந்துதித்தான்
நந்தகோபாலர் நரசிங்கமாமூர்த்தி
மற்றுநாள்மூன்றுநாள் மஞ்சள்நீராடுமென்றார்
உற்றார்கள்சொற்படியே உகந்துமஞ்சள்நீராடி
மாப்பிள்ளையும்பெண்ணும் வாழ்ந்திருந்தாரம்மானை
மூப்பிலுள்ளவங்கிஷமும் முன்னோரும்பின்னோரும்
அல்லியுந்தாமரைபோ லன்னைசுற்றமெல்லோரும்
துல்லியமாய்வந்து சுகமேயிருந்தனர்காண்
தன்மருந்தம்பியருந் தாரணியையாண்டிருந்தார்
நன்மைவளர நாற்றிசையுந்தான்வாழ்க
துன்பமலகத் தொல்லுகலந்தான்செழிக்க

கன்மமகலக் கவேரிபொங்கிவர
சென்னல்விளைவித்துச் சிறுசம்பாமுத்தின
கன்னல்விளை, து கனிமுந்திமுத்தின
கதலிபழுத்துங் கனிந்தூடைந்து ஆறோட
பதுரப்பலாமுத்து வழிந்தொழுகுந்தாேேட
கமுகுகுலைசிந்திக் கனிந்துபழமுதிரக்
குழுகுமென்றுதான்சொரியக் குன்றுமேல்தானிருந்து
தேங்குருவேதேன்மாவுஞ் சேர்ந்துகலந்துநிற்க
ஓங்குபுகழ்செல்வம் ஒருக்காலுங்குறைாமல்
ராஜநெறிநீதி நடுஞாயந்தப்பாமல்
வாசமுடனவர் மனுநீதியாயிருந்து
தாரணியையாண்டிருந்தார் தார்வேந்தர்போற்றிசெய்ய்
காரணியம்மீனாட்சி கயற்கண்ணிதன்னருளால்

விருத்தம்.

ஐவருமிருந்துபாரி லனேகநாட்சீமையாண்டு
செய்வதுகருமமாயந் திராசுபோல்நிறையாய்நின்று
கைவருங்கருமமெல்லாம் கரியமாலரியப்பின்னும்
மெய்வரும்புதுமைகண்டு மேதினியாளும்நாளில்

இதுவுமது.

சித்தசன்ரூபமான தீரன்வாள்விஜயன்மைந்தன்
பத்தனென்றெவர்க்கும்நல்லபரி சித்துவேந்தன்தேவி
எத்திசைமதிக்கவேதா தானேந்திழைகெர்ப்பமாகி
வேற்றிசேர்மாதம்பத்தும் விளங்கவேபூர்த்திபெற்றே

பரிசித்துவுங்குப் பாலன்பிறந்தது.

பார்த்தனுடபேரன் பரிசித்துவேந்தனுக்கு
நாற்றிசையுங்கொண்டாட தற்குரிகெற்பமதாய்
மாதமெனுந்தினங்கள் வந்ததென்றுதானறிந்து
நீதமுடன்சங்கு நேமித்தார்பெண்கொடிக்கு
மூதுகுநீர்வாக்க மொய்குழலாள்பூமடநதை

திங்களோர்பத்தாகி ஜெனமேஜென்பிறந்தான்
கங்குலகலக் கதிரோனுதித்தாப்போல்
மாணிக்கமுத்து வயிரமணிகோர்த்தாப்போல்
ஆணிக்கனகமதை யச்சுருக்கிவார்த்ததுபோல்
சீலமுள்ளபாலன் ஜெனமேஜெனன்வரவே
காலத்துவாபரமும் கழிந்துகலியுமும்
வருகுதுகாணென்று வழங்குதாமிவ்வசனம்
பெருகுபுகழ்தன்மருக்குப் பேரன்பிறந்ததினால்
வாளபிமன்தன்பேரன்வந்தானெனவேதான்
காளமுகில்மேனியனார் கண்ணனையவென்று
எழுதிநல்லவாசகமும் ஏவினார்தூதரிடம்
பழுதிலாவோலைதனைப் பார்த்தாராமெம்பெருமான்
ராசிகளும்நல்ல நட்சேதிரம்பார்க்க
பாலன்பிறந்தான் பரிசித்துவேந்தனுக்கு
காலமென்னராசியென்ன கருத்தெனபாருமென்று
மாயனிவைசொல்ல மறையோனுமேதுசொல்வான்
தூயவரேயிப்போது சொல்லுகிறேன்கேளுமினி
ஜெனமேஜெயன்பிறந்த சீரும்மகாபலமும்
கணமான நாளுங் காலதுவாபரமும்
நாளுஞ்சரியாகி ஞாயவரம்புதப்பி
கோளும்பெரிய கொடுமைகலியுகமும்
வருகுதையாவென்று மறையோனெடுத்துரைக்க
பருகுகனிவாயன் பச்சைமால்தானறிந்து
ஆன துவாபரமும் ஆச்சுதினிமேலேதான்
கானகமேசெல்லக் கருதியேமேகவண்ணன்
வையகத்தையாளும் மாதருமர்தம்பியர்கள்
ஐவருக்குந்தூதாள் அனுப்பினர்காணம்மானை

கண்ணன் ஐவருக்குங் கலியுகத்தன்மை யுரைத்தது

விருத்தம்.

காசினியளந்தமாயன் கலியுகம்வருமுன்னுகப்
பேசியேகொள்வோமென்று பிரபஞ்சவிபரமெல்லாம்

ராசியமாகத்தூதர் நாழிகைதன்னிற்சென்று
தேசிகனைவர்தன்னை சீக்கிரங்கொடுவாவென்றார்

இதுவுமது.

உற்றதோர்வசனங்கேட்டு ஒருநொடியதனிற்றூதர்
அத்தினாபுரத்திற்சென்று ஐவரைவணங்கிக்கண்டு
கத்தனாருளிச்செய்த கருத்தையுமுரைத்தபோது
சித்தமேமகிழ்ந்துதர்மர் சீக்கிரம்பயணமென்றார்

இதுவுமது.

தம்பிமார்நால்வரோடு தன்மனும்வருகவென்று
உம்பர்கோனானதேவன் உலகினையளந்தமாயன்
நம்பியேஉண்மையாக ரகசியமருளிச்செய்து
இன்பமாய்வருகவென்றாரேதென்றுதெரியவேணும்

இதுவுமது.

ஆயனார்தூதர்வந்தங்கருளினதெல்லாஞ்சொன்னார்
மாயனாருண்மைகண்டு வணங்கிநாம்வார்த்தைசொல்லி
தேயமாய்வருவோமதம்பி நிமுஷத்தில்வாருமென்ன
தூயதோர்தருமராஜன் துரகதமீதிலானார்

சந்தவிருத்தம்.

வீமன்விஜயநகுலனுமாய் வேதந்தெளிந்தசகாதேவன்
தாமோதரனார்தமைக்காணத்தன்மருடனேபுறப்பட்டு
ராமஅரிசீதரபூபா நாராயணனேரட்சியென்று
சோமவாரத்தினமதிலே துவாராபுரியிற்சென்றாரே

கதை.

வாசமுள்ளபஞ்சவரை மாயன்வரச்சொல்லியொரு
நேசமுள்ளதூதனைப்போல் நிமிஷத்தில்வாவெனவே
சொல்லியனுப்பத்தூதுவனுந்தானோடி
நல்லதென்றுதன்மரையும் நமஸ்கரித்துவாய்புதைத்து
கண்ணன்திருமால் காயாம்புமேனியனார்
அண்ணல்வரச்சொல்லி யருளினாருங்களையும்

அந்தமொழிகேட்டு அடியேனுமோடிவந்தேன்
விந்தைமலாமேனியனே விரைவாய்வரவேணுமென்று
ஆதனுரைத்தமொழி தூயதன்மர்தான்கேட்டு
போதமனமகிழ்ந்து பூரித்திருபுயமும்
தம்பியருந்தாமுந் தத்துபரிமீதேறி
கெம்பீரமாய்நடந்தார் கேசவனூர்தம்மூரில்
வந்தோமென்றைவர் மாயனுக்குத் தூதுவிட்டு
சந்தோஷமாகத் தானிருக்கும்வேளையிலே
கஞ்சமலர்மார்பன் கரியமால்தான்கேட்டு
பஞ்சவரை வாருமென்று பவளமணிமண்டபத்தில்
வந்திருந்தார்செங்கண்மாலாதிநாரணரும்
செந்திருவையொத்ததொரு சிங்காதனந்தனிலே
பத்தியுள்ளபஞ்சவரும் பச்சைமால்சொற்படிக்கு
சத்தியவாய்மை தவறாதமன்னவர்கள்
மண்டபத்தில்வந்து மாயன்தனைவணங்கி
தெண்டனிட்டுத்தன்மர் தெரிசித்தடிபணிந்து
நெய்யுண்டமாலே நெடியோனேயெங்களை நீர்
வைகுண்டமூர்த்தி வரவழைத்தகாரியமேன்
என்றுதன்மர்கேட்க வெம்பெருமாளேதுசொல்வார்
வென்றுதிசையெட்டும் விஜயனும்வீமனுமாம்
மண்டலத்தையாண்டீர் மனுநீதிதப்பாமல்
விண்டலத்தோர்கொண்டாட மேதினியிற்றானிருந்து
நீதிதவறாமல் நெறிமுறைமைபொய்யாமல்
சாதிவரம்பு தவநிலைகள்சோராமல்
வாழ்ந்தீரிதுவரைக்கும் மன்னவரேயிப்போது
ஆழ்ந்தகருத்தொன்றையருளுவேன்கேளுமென்றார்
நல்லதென்றுபஞ்சவர்கள் நாரணரேசொல்லுமென்றார்
வல்லதொருமாயன் வாய்திறந்தங்கேதுசொல்வார்
முன்னாள்யுகமும் முடிவுஞ்சரியாச்சு
இன்னாள்கலியுகமும் இப்போவருகுதுகாண்
சொல்லுந்துவாபரமுந் தொகையுஞ்சரியாகி

வெல்லுங்கலியுகமும் விளங்கிவருவதினுல்
இங்கிருப்பதழகல்ல வென்று நினைத்ததனே
உங்களிடமிவ்வார்த்தை உரைக்கவேயாமழைத்தோம்
இனிமேல்நமக்கு இவ்விடஞ்சகிக்காது
கனிதேனிருக்குமந்த கானகமேவீடாக
போகவென்றுதானினைத்துப் பூருவமுமுங்களுக்கு
ஆகமுஞ்சொல்லி யருளினேனுங்கண்டீரோ
வேறு நினைவு விபரீதமொன்றுமில்லை
கூறுகின்றேமில்வசனங் கொற்றவரேஉங்களுட
சேதியென்னவென்று திருமாலுந்தானகேட்க
நாதியநாதிநமோ நாராயணயநமோ
அண்டர்பெருமாளேயெங்க ளாதியாதிநமோ
புண்டரீகமார்பழகா புருஷோத்மனுயநமோ
ஆதிவராக அரிகேசவாசரணம்
சோதியேவேதச் சுருதிக்கதிபதியே
அச்சுதாவெங்கள்குல மத்தனேக்குந்தாயகமே
சச்சிதானந்தமெனுஞ் சாட்சாத்பகவானே
கற்பூரவாசகனே காயாம்புமேனியனே
பொற்பூவும்வாசமும்போற் பூலோகமீதில்வந்து
எங்கள் தனேக்காக்க இவ்வடிவுதானெடுத்து
தங்களுயிர்போலத் தற்காத்தீரெந்நாளும்
சீருஞ்சிறப்பும் செலுத்திவெகுசெல்வமெல்லாம்
பேருஞ்செலுத்திப் பிரபலமாய்த்தானிருக்க
வைத்தீரிதுவரையும் வாழ்ந்தோம்புவிமீதில்
மைத்துனர்போலெங்களுக்கு வாசமாய்த்தானிருந்து
ஆபாவிநெஞ்சன் அனியாயநிஷ்டூரன
மாபாவியான வணங்காமுடிவேந்தன
செய்தவினேகளெல்லாம் ஜெயமாக்தீரிருந்து
எய்தவனேக்கொன்று எமலோகந்தான்சேர்த்து
தந்திர்புவியாளச் சாங்கமாய்க்காத்திருந்தீர்
நந்தகோபாலரெங்கள் நரசிங்கமூர்த்தியென்று

தன்மருந்தம்பியருந் தான்போற்றிவாழ்த்திநின்று
மின்மருவுந்திண்புயனே வேதநாராயணரே
நாலுயுகந்தான்தெரிந்து நடிப்பீரிருப்பீர்காண்
மேலுமிருப்பீர் மேதினியுந்தாளப்பீர்
ஆருமறியாம லாலிலைமேற்பள்ளிகொள்வீர்
பாருலகையாண்டு படைப்பீரடியளவைப்பீர்
கோலமெல்லாம்நீரெடுத்த கோலமேயல்லாது
ஞாலமதிலும்மையல்லால் நடப்பதும்வேறுமுண்டோ
ஏதோதிருக்கூத்து எத்தனையோவித்தாரம்
சூதோதெரியாதுன் சூத்திரத்தையாரறிவார்
கண்ணுக்குட்பார்வையதாய்க் கலந்திருந்தநாரணரே
விண்ணுக்குள்மேகஜலம் மேதினிக்குண்டாக்கிவைத்து
கத்தனேயும்முடைய காவலாயிங்கிருந்தோம்
நித்தனேவும்மைவிட்டு நிமிஷமிருப்போமா
என்னமொழிபேசுகிறீ ரெம்பெருமாளென்றுசொல்லி
பன்னகத்தின்மீதிருந்த பச்சைமுகில்மேனியரே
அட்டதிக்கெல்லாமறிய ஐவர்தமையெப்போதும்
விட்டுப்பிரியாதே மேகவண்ணர்தம்மைவிட்டு
மண்ணாசையாலே மறந்தார்களென்றுசொல்லி
விண்ணோருமற்றுமுள்ள மேதினியோர்தானகைக்க
விருப்பமுடநாங்கள் மேகவண்ணாவும்மைவிட்டு
இருப்பதுவுமில்லையினி யெந்தவிதமானாலும்
வருவோம்திருமாலே வார்த்தைதாண்டுபேசாமல்
திருவுந்திபூத்தோனுன் செந்தாமரைப்பதத்தை
கண்டுவணங்கிக் கைகட்டிவாய்புதைத்து
தொண்டுபண்ணிநாங்கள் தொழுதுவைகுந்தமதில்
காத்திருந்துவேலைசெய்யக் கற்பிக்கவேணுமையா
வீற்றிருப்போமெந்நாளு மேதினியேவேண்டாங்காண்
என்றுதன்மர்சொல்ல எம்பெருமாள்மேகவண்ணர்
நன்றுநன்றுதன்மரே நீர் நால்வகையுஞ்சிறுபண்ணி
வாசமுள்ளசுற்றம் மனைவிமக்கள்வாடாமல்

தேசமலையாமல் செங்கோல்தவருமல்
மகுடமுடிவேந்தர் மனுநீதிதப்பாமல்
விகடமுரையாமல் வேறுகூறுகாமல்
சட்டமுடன்நாடோறுஞ் சாதகமாம்வார்த்தைசொல்லி
திட்டப்படுத்திச் செப்பனிட்டுக்கொண்டதன்பின்
ஏகாந்தமாய்வருவீ ரெல்லோருஞ்சம்மதிக்க
பாங்காய்ந்தவென்மொழியைப்பழுதயாமலேயிருத்தி
மார்க்கமாய்வாரும் வைகுந்தஞ்சேரவென்றூர்
தீர்க்கமிதுபஞ்சவரே செப்பினேனிவ்வார்த்தை
கலிபிறக்குமுன்னுகக் கானகத்தில்நாம்போவோம்
கலிபிறந்தசேதி காதில்விழுந்தவுடன்
அரைநாழிகைநேரம் அவனிதனில் நில்லாமல்
விரைவாக நீர்வாரும் வேறொன்றும்பேசாமல்
இந்தமொழிமாய னெடுத்துரைக்கத்தன்மருமே
சிந்தைமகிழ்ந்து திருத்தாள்சரணமென்று
தம்பியருந்தானும் சரணமெனப்பணிந்து
நம்பினேம்மாலே நமஸ்காரம்போய்வவோம்

விருத்தம்.

எங்குமாய் நின்றமூர்த்தி யீரேழுலோகமெல்லாம்
அங்குமாயிங்குமாகி யாருயிர்க்கெல்லாந்தானுய்
பொங்குமாரணமாய்நின்ற பொன்னலங்காராபோற்றி
தங்குவதில்லைநாங்கள் தரணியிலும்மைவிட்டு.
ஆவதோர்காலமெல்லாம் அச்சுதன்செயலினுலே
போவதோர்காலம்வந்தாற் புத்தியுமலைக்கலாமோ
சாவதோர்காலம்வந்தாற் சற்றங்கேதரிக்கப்போமோ
நாவதுரண்டுசொல்லோம் நாரணுபோற்றிபோற்றி

கதை.

என்றூர்தமர்மாயவர்தம் இருதாளைப்போற்றிசெய்து
இன்றுபோய்வாரோமென் றேகினர்காணம்மானே
அத்திபுரம்நோக்கி ஐவருந்தானபோனதன்பின்
வெத்திபுரிமாயன் விளங்குந்துவாரகையில்

வீற்றிருந்தசெங்கோல் விசாரிக்குமுன்னுளில்
சாற்றுசாஸ்திரங்கள்சொலுந் தவமூவரந்தணர்கள்
காலங்கலியுகமுங் கற்பனையும்வந்ததினுல்
கோலங்குருகிக் குணபேதகமாகி
பொய்யுங்கொலையும் புலையாட்டுமேகளவும்
செய்யும்பிரளி சினமுமுதாசினமும்
குண்டுணியுங்கோளுங் குடிகேடும்வஞ்சனையும்
தெண்டம்பெரும்பிடியுந் தெண்டனையுங்கண்டிதமும்
பானம்வரம்பந்து வரம்புதப்பிப்போவதுவும்
தானம்தவம்குலைந்து சத்தியமும்பொய்யாகி
மேல்குலமும்கீழ்குலமாய் கீழ்குலமும்மேல்குலமாய்
கால்மேல்தலைகீழாய்க் கலியனபிறக்குமென்று
நால்வேதஞ்சொல்லல் நாரணனுந்தான்கேட்டு
பாலபொருந்துமவாயாற் படைத்தலைவர்மந்திரிமார்
சாத்தகியாழ்வார் சகலரையுந்தானழைத்து
ஏத்தவிசாரமிதற் கேதுபாயஞ்சொல்லுமென்ருர்
தேவர்செயலாலே தீங்கரியோமும்மடியார்
ஏவல்செய்யுந்தொண்ட ரேதென்றெடுத்துரைப்பார்
சொற்புத்திகேட்குந் தொண்டருக்குநீர்தாமும்
கற்பித்தருளியசொல் கத்தனேசித்தம்வர
கேட்குமடியார்க்குக் கிருபையின்னதென்றுரையும்
தீர்க்கமுடனூழியங்கள் செய்கிருேமென்றுரைத்தார்
ஆதலால்மாலும் அவர்கள்தனையாதரித்து
நீதமுள்ளநாமும் நீணிலத்திலேயிருக்க
சோதனைகள்சொன்ன சொற்படியே நீங்களுந்தான்
வாதனைக்குள்ளாகாமல் வர்த்திற்றவமிருக்க
நன்ருகத்தோணுதப்பா நம்முடையயோசனைக்கு
குன்ருமல் நீங்கள் குவலயத்திலேயிருந்து
எப்போதும்போல இருப்பீர்சுகமாக
அப்போதிருந்தவர்க ளாகமிகவுருகி
இருக்குந்தருவாயி லின்னமொருகற்பனைதான்

பெருக்கும்பெருமாள் பிள்ளைகள்தான்செய்தபிழை
பச்சைமாலின்ற பதினாயிரம்புதல்வர்
இச்சையுடன்கூடிமுன்னாள் இசைவிளையாடுகையில்
தூர்வாசமாமுனிவர் சோதனைக்குப்பாலரிடம்
திருவாகமாக நீண்டசடைமுடியும்

பகவான் குழந்தை பதினாயிரமும்பரலோகமடைந்தது.

சன்னாசிவேடமுமாய்த் தானவரவுங்கண்டிவர்கள்
மின்னார்போல்வேடம் மிகுந்ததொருகெற்பினியாய்
கோலஞ்சடைந்து குழாங்களுடன்தானகூடி
காலஞ்சிமையதாய்க் காரணங்களேமுடிய
வந்துதவசியிடம் வாலைகளுஞ்சேட்டைபண்ணி
இந்தப்பெண்கெற்பினியா மென்னபிள்ளையும்பெறுவள்
அய்யரேசொல்லுமென்று அடிபணிந்துநின்றார்கள்
வெய்யதவமுனியும் வித்தையிதுவென்றுசொல்லி
செப்புகிறோம்தம்பியரே சேயிழையாள்தன்வயிற்றில்
இப்புவியில்நல்ல இரும்புலக்கையாய்ப்பிறந்து
உங்கள்குலமெல்லாம் உருவழிந்துபோம்படியாய்
கங்குலிருள்போலக் கழுந்துலக்கை தான்பிறக்கும்
என்றுமுனிசொல்லி யேகினர்காணம்மானை
அன்றுமுனிசொற்படிக்கு அவள்வயிற்றிலேயிருந்து
வந்துவிழுந்ததுகாண் மண்மேலேயிருப்புலக்கை
அந்தவுலக்கைதன்னை ஆயருடபக்கலிலே
கொண்டுபோய்வைத்தார் குழந்தையர்களெல்லோரும்
கண்டுதிருமாள் கருத்திலேகொண்டருளி
கொல்லர்தனையழைத்துக் கூடியவாளரத்தாற்
சல்லிப்பொடியாய்த் தவிடுபொடியாக்குமென்றார்
அந்தப்படியே அரத்தாற்பொடியாக்கிச்
சிந்தப்பொடியுஞ் சிறுமணல்போலாக்குமென்றார்
அரத்திட்டுராவ அதுபிடிக்குமெட்டாமல்
உரத்திச்சிறுகணுவே யுச்சிதமாய்மிச்சமென்றார்

கணுவையெடுத்துக் காற்கடலிற்போடுமென்றார்
அணுவாயுதிர்ந்ததெல்லாம் அலைமோதாநீந்தாவுமென
ஆமெனறரிந்தார்கள் ஆயனார்சொற்படிக்கு
தாமுயன்றகன்மந் தனக்கேபலித்துவிட
விரைத்தபொடியெல்லாம்மெல்லியவாள்கோரையதாய்
உரத்துமுளைத்துவெகு உன்னிதமாய்த்தான்வளர்ந்து
நின்றதுகாணங்கே நெடியோனருளாலே
ஒன்றுமிச்சமான துருண்டகணுவதனை
மச்சம்விழுங்கி மலையில்வந்துசிக்கியதே
அச்சமில்லாவேடனந்தமச்சங்கொண்டேகி
கீறிக்கறிசமைக்கக் கிடந்தெடுத்தாணிக்கணுவை
மீறிச்சாந்தொடுக்க வேணுமென்றுதன்குடிலில்
வைத்திருந்தான்வேடன வகையாக அம்மானை
புத்திரர்கள்கூடிப் பூரித்துக்கொக்கரித்து
ஆற்றிலேசென்று அணிவகுத்துக்கைபிடித்து
ஊற்றிலேதான்முளைத்த உயிர்க்கோரைதான்பிடுங்கி
அடித்துவிளையாடவென்று அனைவோருஞ்சம்மதித்து
துடித்துச்சிறுவர் துயரறவேதான்பிடுங்கி
நெருங்கியடித்து நிமிஷமதற்குள்ளாக
வருங்காரியமறியார் மதலைகளும்மாண்டார்கள்
விளையாடவந்திடத்தில் விதிவசங்கள்தான்சூழ்ந்து
கிளையோடிறந்து கிடக்கிறாரென்றுசொல்லி
கண்டபேரோடியே கண்ணாரிடந்தாமுரைத்தார்
அண்டர்பிரானும் அலுவலொழிந்ததென்று
செய்யுஞ்சடங்குகளைச் சீக்கிரமாய்த்தான்முடித்து
வைகுந்தம்போய்ச்சேர மனதுமுற்றாரம்மானை

விருத்தம்.

தம்பிமாமகுடமன்னர் சகலரும்வாருமென்ன
எம்பிரானருளிச்செய்ய ஏவல்கேட்டீதோவென்று
நம்பிநாரணரேவந்தோம் நாதனேசரணமென்று
தம்பிரானடிகள்போற்றிச் சாத்தகியாழ்வார்நின்றார்

இதுவுமது.

நின்றதோர் தம்பிமற்ற திருபர் தம்முகத்தைநோக்கி
ஒனறுகேளிகத்திறுசை யொழிந்ததுகானஞ்சென று
பொன்றிடவே னுமிந்தப் புவிதனையாண்டு நீங்கள்
தென்றலங்காமன்போலச் சிறப்புடன்வாழுமென்றார்,

இதுவுமது.

கரியமாலருளிச்செய்த காரணமேதோவென்று
தெரியவேவிபரங்கேட்கத் தேசிகாறிந்துநன்றாய்
அரியதோர்கலியன்வாரா னுனதால்வனத்திற்போவேம்
பெரியதோர்புவனமென்றன் பேர்தனைச்செலுத்துவீரே

இதுவுமது.

இப்படியிறையோன்சொல்ல ஏங்கியேமுகம்வாடி
அப்படியானுற்கூட அடியரும்வருவோமென்று
செப்பிடத்திருமால்தானுந் தெரிவேயுண்மையாக
வைப்பினிலிருங்களென்று வனம்புக நடந்தாரையா,

கண்ணன் காடுறைந்தது.

வனத்திற்றவமிருக்க மாயவனுர்தாம்நினைந்து
ஜனத்திற்கிதமாகத் தன்மைகளும்புத்திகளும்
சொல்லியுபசரித்துத் துயரமெல்லாந்தான்தீர்த்து
மெல்லியதோர்கான்புகவே விரும்பிமனதிலெண்ணி
சாத்தகியாழ்வாருக்குத் தனிமகுடந்தான்தரித்து
நாற்றிசையும்போற்ற நம்மைபோறுணிரென்று
நெடியமால்வாழ்த்தி நீரணிந்தார்தம்பியர்க்கு
முடிமகுடந்தான்தரித்து முதுமையிளமையரே
மன்னரமைச்சர்களே மகுடமுடிவேந்தர்களே
வின்னமில்லாதபடி மேதினியில்வாழ்வோர்க்குச்
சொன்னபடிகேட்டுத் தொழுதுவணங்கிநித்தம்
அன்னசுற்றமெல்லாம் அுசசமின்றித்தானிருங்கள்
காலங்கலியுகமாய்க் காரணமுந்தோன்றுகையால்

ஞாலங்கள்தாமறியும் நம்முடையரூபமெல்லாம்
கலியன்வருமுன்னே கானகம்போய்நாமிருந்து
சலியாதுநோன்பு தவமியற்றவெண்ணிவிட்டோம்
பொறுமைபெரிதாகப் போரேமிருங்களென்ருர்
சிறுமைவருமெங்களுக்குத் தேவரீர்போவதினல்
என்றுமயங்கி யெழுந்துமன்னர்தானழுது
நின்றுதலைகவிழ்ந்து நெடியோனைப்பின்தொடர
தொடர்ந்தழுததம்பியையும் துரைமக்கள்தங்களையும்
அடர்ந்துவாராதபடி அமர்த்தியே அச்சுதனர்
வானம்புவியளந்த வளர்ப்பாதந்தானேக
கானகமேநோக்கிக் கடுகநடந்தனராம்
நாடுவிட்டுத்தேசம்விட்டு நன்னகரிதானும்விட்டு
கூடுவிட்டதேன்குளவி கொட்டாதபாவனைபோல்
காடுகரைகண்டாரே கண்ணனுர்கண்ணாலே
தேடுதவமீதறிவு ஜெனித்திட்டமாநாகர்
பேரறிவுகண்டு புறப்பட்டார்மாயவரும்
ஓரறிவாய்நின்ற வுயர்ந்தமரங்களெல்லாம்
பூத்துச்சொரியப் புவனம்மிகத்தழைக்கக்
காற்றுவிசிறியதாய்க் காளாஞ்சிபூமியதாய்
மயில்கள்தொடர்ந்தாட வானரங்கூத்தாடிவர
குயில்களிசைபாடக் கொஞ்சுங்கிளிபேசிவர
புலிகளடிபணியப் பூதங்கள்வாய்புதைக்கக்
கெலிகள்வெருண்டோடக் கீர்த்தனங்கள்வண்டார்ப்ப
அரிகளடிபணிய அரியோனுந்தானடக்க
கரிகளடிபணியக் கரியோனுந்தானடக்க
கஸ்தூரிவாசனென்று கஸ்தூரிவந்துதொழ
வஸ்துவுக்குவேண்டினதோர்வஸ்தெலாம்வந்துதொழ
கற்பூரவாசனென்று கற்பூரஞ்சூழ்ந்துவர
நற்பூமலர்களெல்லாம் நாற்றிசையும்பூத்துநிற்க
அரவுநடித்தோன்பாதம அரவுபணிந்தாட
இரவுபகலாகும் எம்பெருமாள்வந்தவிடம்

மேக நிறமேனியற்கு மேகம்பணிமாற
ஆகங்குளிர்ந்து அனேகநெடுந்தூரம்
வந்துநெடுமோல் வனமெல்லாமாராய்ந்து
கொந்துலவுஞ்சண்பகஞ்சேர் குளிர்ந்தவனத்தருகு
சந்தனமும்கற்பூரந் தருவும்பெருவனமும்
கந்தமலர்க்காவுங் கடம்பவனச்சிறப்பும்
ஆதவனூடாடாத ஆரணியமானதிலே
மாதவனுஞ்சம்மதியாய் மனதுமிகமகிழ்ந்து

தாமோதரன் வனத்தில் தவமிருந்தது.

நாலுதிக்கும்பார்க்க நடுவேபெருவிருட்சம்
ஆலுதித்துநின்ற அடவுதனைப்பார்த்து
இந்தவிருட்சம்போ லெங்கும்நாம்கண்டதில்லை
அந்தவிருட்சம் அதுவேநமக்குநிலை
நிற்போம்தவசு நிறைவறவேனுமென்று
தற்பானுங்கலையா சனம்விரித்துமேற்சயனம்
கற்பூரவாசனுமே கால்மேலேகால்போட்டு
பொற்பூவும்வாசமும்போற் பொருந்திமனமொன்றுகி
அட்டாட்சரத்தி லமர்ந்திருந்தாரம்மானை
நட்டாற்றிலன்று நடுக்கடலிற்போட்டதொரு
இருப்புக்கணுபதித்த எய்யம்புதானெடுத்து
செருப்புச்செடிதாங்கிச்சீராகப்பணிபூண்டு
சிலையெடுத்துவேடன சித்தரிவாள்கைபிடித்து
கலைகலைத்துவேடன் கானகமெல்லாந்திரிந்து
மான்மரைகள்தேடி வனத்தூடேசெல்லுகையில்
தேன்மருவும்வாயான திருவேங்கடப்பெருமான்
ஆரணியந்தன்னில் ஆலமரத்தடியில்
தாரணியைவிட்டுத் தவசிருந்தகோலமது
வேடனுடகண்ணுக்கு வெருண்டுவந்தமான்போலே
காடதனிற்கண்ணனுட காலதனைக்கண்டானே

அச்சுதன்மேல் வேடன் அம்புதொடுத்தது.

கண்டான்பதறிக் சடுகச்சிலையெடுத்தான்
விண்டான்சரத்தை வேடன்கலைமானெனவே
மார்புருளவாங்கி வனவேடனெய்தவம்பு
சீர்மருவுமாயனுட சீர்பாதந்தன்னில்வந்து
பட்டுருவியம்பு பரிந்துமறுபுறமும்
தட்டுருவியம்புதைக்கத தண்டாமரைப்பதத்தில்
மண்ணையுண்டமாயன் மயக்கம்வந்துபூமியிலே
வெண்ணையுண்டமேனி விதனம்பொறுக்காமல்
மூச்சற்றுமேலும் மூகமும்வெளுப்பேறி
பேச்சற்றுக்காலசந்து பிரக்கினையுந்தோற்றமல்
தானே அசந்து தனியேகிடக்கையிலே
மானெய்தோமென்று மகிழ்ந்துசிலைவேடன்
பதையாதமர்ந்ததென்று பாங்குடனேஓடிவந்து
வதைபட்டமர்ந்துவிட்ட மானென்றுபார்ப்பளவில்
குதையம்புபட்டுருவிக் கோபாலர்தான்கிடந்தார்
இதைவந்துபார்த்தே ஏமாந்துவில்வேடன்
கதையோகதைப்பயனோ காலத்தின்வல்வினையோ
விதியோவிதிமயக்கோ வேதாவின்கற்பனையோ
சதியோசதிமயக்கோ சர்வேசன்கற்பனையோ
மதியோமதிமயக்கோ மகாதேவர்கற்பனையோ
ஏதுவிதிப்பயனோ எம்பெருமான்தன்மீதில்
தீதுவரக்காரியமேன் செய்ததவக்குறையோ
மானென்றெனைமயக்கி வந்தவிதிவசமோ
தானென்றுலகளந்த தம்பிரான்மானெனவே
பொய்மான்போல்வந்த புதுமையறியாமல்
மெய்மானென்றெண்ணி விரும்பிநானெய்துவிட்டேன்
என்செய்வேனென்செயலோ ஏதென்றறியேனே
முன்செய்ததீவினையோ முகுந்தர்மேலம்புபட
வஞ்சனைகளல்ல மனதறியவந்ததல்ல
கஞ்சனைமுன்வென்ற கார்வண்ணனென்றறியேன்

பாவியுமானேனே பச்சைமால்நாரணற்கு
தீவினையுஞ்செய்தேனே ஜென்மமென்னஜென்மமிது
என்றுசிலைவேடன் ஏங்கிவிழுந்தலறி
குன்றுதகர்ந்து குவலயத்தில்வீழ்ந்தாற்போல்
அலறிஅபயமிட்டு அய்யோசிவனேயென்று
தலையிலேகையைவைத்துத் தானழுதான்வில்வேடன்
வில்வேடன்தானழுக மெய்மகிழ்ந்துகோபாலர்
வல்வேடா நீயும் மலையாதேயென்றுசொல்லி
அழுதவனைத்தேற்றி அரவணைத்துவாவெனவே
தொழுதவனும்வந்து தூரநின்றுதெண்டனிட்டு
எந்தன்பிரானே எளியார்க்கெளியோனே
உந்தன்மலர்ப்பதத்தி லூடுருவியம்புதைக்க
எய்தேனேபாவி யெழுநரகில்வீழ்வேனே
மைதவளுப்மேனியிலே வடுவரவுங்காரியமேன்
வம்புபடாமேனியிலே வடுவரவுங்காரியமேன்
அம்புதொட்டகையை அறுத்துமுன்னுல்வைப்பேனுன்
அன்றுஉலகையெல்லாம் அளந்தபதமலவோ
சென்றுதிசைநான்முகனுர் தேடுபதமலவோ
அகலிகைக்குமோட்சம் அளித்தபதமலவோ
புகலரியகங்கை பிறந்தபதமலவோ
பேசுமுருவசியாள் பிறந்தபதமலவோ
பூசுரருந்தேவர்களும் போற்றும்பதமலவோ
என்றுசொல்லிவேடன் ஏங்கியழுகையிலே
ஒன்றுமில்லைசும்மா நீ உருகியழுகாதே
விட்ட அம்புபட்டதென்று மெய்சோர்ந்தழுகாதே
கிட்டவாவெனறழைத்துக்கிருபையுடனேதுசொல்வார்
முன்புதிரேதாயுகத்தில் மூர்க்கமுள்ளவாலியென
அன்பாயவதரித்து யார்வந்தெதிர்த்தாலும்
வரமகிமையாற்பாதி வல்லமையுந்தான்வாங்கி
காமகிமையாலவரைக் கண்டித்துயிர்மாய்ப்பாய்
தம்பிசுக்ரீபனுட தாரந்தனைக்கவர்ந்து

வம்புசெய்தேயடித்து மலைமேற்றூரத்திவிட்டாய்
வானரவீரருடன் வந்திருந்தான் அந்நாளில்
தானவர்கள்வேண்டுகைக்குத் தம்பிமார்மூவருடன்
ராமாவதாரமென நானிலத்தில்வந்திருந்தோம்
காமாந்தகாரமுடன் கட்குடித்து நீயிருந்தாய்
உன்தம்பிசுக்ரீப னுக்குதவியாயிருந்து
என்னம்பினால்மறைவா யிருந்துன்னைக்கொன்றதனால்
அந்நாட்பழியை அவனிதனில் நீவாங்க
இந்நாட்பிறந்து எய்துவிட்டாய்வில்வேடா
நமக்குமுடிவிதுகாண் நல்வேடாசொல்லுகிறேன்
சுமக்குங்கலியுகத்தால் துன்பம்வருமெனவே
வைகுந்தஞ்சேரவென்று வந்தோமிவ்வனத்திலேகாண்
கைகொண்டெறிந்தகணை காவிலேலதைத்ததுகாண்
முடிவுசரியாக முடிந்தவிதிப்பயனால்
மடியவுயிர்பிரிந்து வைகுந்தம்போய்ச்சேர
போரதறியாமற் புலம்புவதோ நீவேடா
வாரவிதிவந்தால் மாட்டோமென்றால்விடுமோ
வந்தவிதிவந்ததென்று லெந்தவிதியாலென்
இந்தமயக்கமதை இப்போதேவிட்டுவிடு
எனசேதியைப்பாரக்கி லுன்மீதில்குற்றமில்லை
என்சேதிசொல்லுகிறே னிதமாயுதவிசெய்வாய்
நல்லதென்றுவேடன் நாரணரைத்தான்பணிந்து
சொல்லுமென்றுவாய்புதைத்துச் சோம்பிமுகம்வாடி
வாட்டமுடன்நின்றந்த வல்வேடன்தான்கேட்க
நாட்டமுடன்தானும் நம்பெருமானேதுசொல்வார்
வாராய் நீவேடா மன்னுபுகழ்பஞ்சவர்கள்
தாயாரும் அத்திபுரம் தன்தருந்தம்பியரும்
சீராகவாழுஞ் சிறந்தநகர்தனிலே
நேராகநீபோய் நிமிஷத்திலுண்மையதாய்
தனமர்நகுலன் சகாதேவன்கேளாமல்
வன்மம்வெளியிலேதான் வாராமல் நீதானும்

வீமன்விஜயனுடன் விரைவிற்போய்மாயவனூர்
தான்நிமிஷம்வரத் தான்சொன்னுரென்றுரை நீ
வேறென்றுஞ்சொல்லாமல் விபத்துமேவந்துதென்று
கூறென்றுசொல்லிவிட்டார் கூர்வேடன்தன்னிடத்தில்
அவ்வசனங்கேட்டு அசந்துசிலைவேடன்
இவ்வசனஞ்சொல்லு மிராகவனைத்தெண்டனிட்டு
வழிகூடித்தானடந்தான் மனதுடைந்துவில்வேடன்
பழிபாவம்வந்துதென்று பயந்துதிசைநோக்கி
காடுகடந்து கருமலைகள்தான்கடந்து
நாடுகடந்து நன்னகரினூடேபோய்
நாலுதெருவும் நடுத்தெருவுந்தான்கடந்து
கோலஅரண்மனையுங் கொற்றவர்கள்தாமிருக்கும்
கோட்டைதனிற்சென்று குருகுலத்தோர்தங்களுட
வீட்டையுங்கண்டு வீமன்விசையனிடம்
அச்சதனூர்சொன்ன ஆந்தரியமுள்ளதெல்லாம்
உச்சிதமாய்வேட னுரைத்தான்மனம்பதறி
அந்தமொழிதன்ம ரறியாமலென்றுரைத்தான்
இந்தமொழிகேட்டு என்செய்வோமென்றிவர்கள்
வேடனைத்தான்போவெனவே வீமன்விசயனுந்தான்
தாடலந்ததன்மரிரு தாளிலடிபணிந்து
விதியோவிதிமயக்கோ மேகவண்ணரிப்போது
அதிசயமாயெங்களுக்கு ஆளனுப்பிவைத்தகதை
ஏதோதெரியாது இதுபுதுமைதான்கேட்டோம்
சூதோஅவருடைய சூட்சமோகற்பனையோ
தம்பிநகுலன் சகாதேவன்றன்னுடனே
உம்பரோஉங்களிடம் உரையாமலிச்சேதி
அண்ணருக்குமெனக்கும் அனுப்பிவித்தகற்பனைதான்
எண்ணமென்னசாமி யினிமேற்கருமமென்ன
என்றுவிஜய னிவ்வசனந்தான்கேட்க
தின்றுமயங்கி நினைவழிந்துதருமருமே
தம்பிரானைவர் சகாயந்தானிப்போது

எம்பிரான்கற்பனைக்கு என்னவென்றுசொல்வேனான்
காரணமாய்க்காணுதுகாண் கார்வண்ணன்தன்செய்தி
நாரணனார்சொற்கேட்டு நடந்தோமிதுவரைக்கும்
என்னதடைவந்தாலும் ஏதுவகையானாலும்
சொன்னமொழிதப்புவமோ சோதனைகாண்தம்பியரே
எப்படியோசித்தும் எம்பெருமான்தன்னினைவு
அப்படியேயல்லாது அன்றுமுதலின்றளவும்
சொற்படியேநாமும் தொண்டுபண்ணக்கடவோம்
விற்பிடித்தசேவகரே விமலரேயுங்களைத்தான்
வலுமையுளாராகையினால் வரச்சொனானுங்களையும்
மெலியுடையராயிருக்க வீரியத்தைவாங்கிவைக்க
வரச்சொன்னார் அங்கு வயணமாய்க்கேட்பதற்கு
தரச்சொல்வார்கையைத் தானகலநின்று நீங்கள்
அகலநின்றுகாரியங்க ளாசாரமாவணங்கி
சகலகலையறியுந் தாமோதரனிடத்தில்
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தார்
சேய்போலிருவருமே தெண்டனிட்டுத்தன்மரையும்
நடந்தார்வனந்தனிலே நாரணரைத்தான்தேடி
தொடர்ந்தார்வனங்களிலே சோதித்தாரங்கோடி
சந்தனச்சோலையிலே தனித்தாலின்கீழேதான்
அந்தமாவண்ணனங்கே அலறும்பரிதாபம்
தோற்றுதுதானென்றவர்கள் துவளநடந்தோடி
மாற்றலரைவெற்றிகொள்ளும் மன்னரிருபேரும்
அந்தவனந்தனிலே அர்ச்சுனரும்வீமனுமாய்
இந்தவனமாமென் றிசைந்தேர்டிவந்து நின்று
அண்ணல்திருமாலென் றறிந்துமனமிடைந்து
கண்ணருந்தான்மண்மீதிற் காயத்துடன்கிடக்க
கண்டார்விழுந்தார் கதறியபயமிட்டார்
விண்டார்மனத்துயரால் விண்ணுமண்ணுந்தானதிர

விருத்தம்.

அய்யகோராமமாமா ஐவரைப்பிரிந்துகானில்
மெய்யதுபுழுதிதாவ மேனியும்திறமும்வேறாய்
நையவும்வசமோஉன்றன் நாமமுமறந்துநாங்கள்
உய்யவேயினிமேற்பாரி லுண்ணவும்வேணுமோதான்.

காயமும்வருமோவெங்கள் கண்ணனூர்கண்ணிற்காண
ஞாயமுமிதுவோஐயோ நாங்களுஞ்சிக்கலாமோ
மாயமாயெய்ததாரோ மாயனெனறறிகிலாரோ
ஆயனேயெவரார்சொல்லு மவனியிற்கொல்வமென்றார்

பார்ப்பார் விழுவா ரெழுந்திருப்பார் பழியோகுலை யோமுடிந்துதென்பார், கேட்பார் திருமால்முகம்பார்ப் பார்கெதியோமதியோ விதியென்பார், ஏற்பாரிதுதான் செய்தபிழை யெய்தார்படுவாரித் துயரங், காப்பார்நெடி யோன் துணைநாளுங் கயிலைக்கடவுளார்தாமே.

கதை.

என்றுபுலம்பி யிருவோருந்தானழுது
குன்றுமலைபோலக் குதித்துவிழிந்தழுது
அழுதுபிரண்டுருண்டு ஐயோஅப்பமென்று
புழுதியின்மேல்விழுந்து புலம்பிப்பாதவித்து
பூமியதிரப் புவனமெல்லாந்தானதிரச்
சாமியுன்றன்மீதிற் சரந்தொடுக்கவல்லவரார்
உலகளந்தபாதமதி லூடுருவியம்புதைக்க
கலகஞ்செய்தாராரோ கண்டால்விடுவோமோ
எந்தவிதஞ்சாமி யிடையூறுவந்ததென்று
அந்தமுள்ளவீமன் அருச்சுனனுந்தான்கேட்க
சுந்தரஞ்சேர்மாயன் சொல்லுவாரோர்வசனம்
வந்தவிதிவந்ததென்றால் மாட்டோமென்றால்விடுமோ
கேளீரருச்சுனரே கிலேசமதைவிட்டுவிடும்
மீளீர்வலுவீமா வியாகுலங்கள்வேணடாங்காண்
காலங்கள்தான்முடிந்த கற்பனையுந்தோன்றாமல்

ஞாலங்கடந்து நற்றவசு ஞானிருக்க
சீலமுடனுங்களுக்குத் தெரியவேசேதிசொல்லி
ஏலவந்துகானகத்தி லிருப்போந்தவமெனவே
நாமொன்றுதானினைக்க நடுவிருந்தோன்தன்செயலா
தாமென்றுந்தோற்றுமல் சகாயமாய்க்கூட நின்று
இந்தவுடலுயிரும் எப்போதுந்தான்தனதாய்
சொந்தமெனப்பூவுலகில் சுமந்தளித்தகாலமெல்லாம்
மெய்யென்றிருந்தோம்நாம் மேதினியைநம்மதென்று
பொய்யாய்முடிந்ததுகாண் புத்தியுள்ளோர்கேளீர்
மோசம்வருவதற்கு முன்னறியநம்செயலோ
பாசம்பிடித்திழுத்தாற் பக்கவிலக்குமுண்டோ
நாசம்வருங்காலம் நல்லறிவுபோய்விடுங்காண்
நேசம்விளையாட்டாய் நினைவுதடுமாறிவிடும்
வல்லமைகளாலே வாழ்வதுண்டாபூவுலகில்
நல்லவர்கள் நீங்கள் நமக்குதவியாகவந்தீர்
பயிருமொருவேலியதாய்ப் பஞ்சவரும்நாமுமுதல்
உயிருமுடலதுபோ லுறவாகித்தாமிருந்தோம்
இப்போதுவந்த இடையூறுகானகத்தில்
செப்பமுடன்வேடன் சிலையெடுத்துமான்துரத்தி
வந்திடத்தேயோர்மான் வழிதப்பியோடியதால்
இந்தஇடத்திலேதூங்கி இருக்குமந்தமானெனவே
என்னுருவம்மான்போ லிருந்தபடியாலே
மின்னுருவேடன் விற்பிடித்துமெய்துவிட்டான்
வந்துவிழுந்ததுதான் மன்னுவின்னுந்தானதிர
வந்தழுதவேடனைத்தான் வாவென்றருகழைத்து
அங்கேஅனுப்பிவைத்தே னந்தரங்கவுண்மைசொல்லி
இங்கேநீர்வந்ததினா லென்துயரந்தீர்ந்ததிப்போ
அம்புபட்டவேதனைக ளாற்றமுடியுதில்லை
வம்புபட்டதேகம் வடுப்பட்டிருக்காது
ஆணிநரம்பு அறுபட்டுத்தான்போச்சு
பேணியெனைப்பார்த்துப் பிழைப்பிக்கவல்லீரோ

காயத்தை நீர்பாரும் களைநாம்புதான்பாரும்
நேயத்துடனே நீங்களுமேகானிருந்து
சோதித்துப்பாருமென்று சொன்னார்காண்மாயவரும்
ஆதித்தன்போலே அர்ச்சுனனும்வீமனுமாய்
உள்ளமுருகி யோருடம்புபுண்ணாகி
கள்ளமில்லாத்தன்மர்மொழி கடந்துரைக்கமாட்டாமல்
கல்லாய்மரமாய்க் கருத்தசைந்து நின்றார்கள்
எல்லாம்விதிவசமோ இதுநாளுடலுயிர்போல்
நடந்தோம்நகர்மெய்க்க நாமிருந்தகாலமெல்லாம்
கிடந்தேன் தனியே கிட்டவரவேபயந்தீர்
போதாதோவிவ்விளவு புதுமையதிசயந்தான்
காதாரக்கேட்டோமே கண்ணாரக்கண்டோமே
இனியார்சதநமக்கு இளைப்புற்றவேளையிலே
தனியேயினிமாளச் சங்கரனார்கற்பனையோ
தகையாயிருக்குதுகாண் தம்பியரேயிங்கெனக்கோர்
வகையாயிருக்குதுகாண் வந்திருவர்கைதாரும்
கைதாருமிப்போது களைப்பாய்வருகுதுகாண்
மெய்சேர்ந்துடலிங்கே வீழுமுன்னேகைதாரும்
இப்படியேசொல்ல ஈடழிந்துமெய்சேர்ந்து
அப்படியேநின்றா ரருச்சுனனும்வீமனுமாய்
போகுதடாசீவன் புண்ணாய்க்குலையுதடா
ஆருதடாசீவன் அருச்சுனரேவீமரேகேள்
இப்போதுயிருடலி லிருந்துநெருக்குதடா
அப்புவுந்தேயுவைப்போல் அங்கேநெருக்குதடா
தேயுவும்வாயுவைப்போய் சிக்கெனவேகட்டுதடா
வாயுவும்அங்கே வழிபார்த்துநிற்குதடா
காயம்விழுமுனனே கையாயுந்தரவே
நேயமாய்த்தூக்கி நிலத்தில்வைக்கமாட்டீரோ
ஆபத்தில்காக்கிறது ஐவரெனச்சொல்வார்கள்
தாபப்படுகையிலே தானபார்த்துநிற்பீரோ
நிமிஷம்பொறுக்காது நிற்சீவனுகுதடா

சமயமடா வீமரே தம்பி அருச்சுனரே
என்றுழன்றுமாயன் இப்படியேசொல்லுகையில்
நின்றதொரு அருச்சுனனும் நெடியதொருவீமனுமாய்
தங்கள்தெண்டாயுதமும் தனுவையுமே நீட்டலுற்றார்
அங்கே அதுவழியாய் அவர்பலத்தைவாங்கலுற்றார்
தண்டுந்தனுவுந் தானெடுக்கமாட்டாமல்
விண்டுமனமுடைந்து விள்ளாமலுள்ளசந்து
ஒறுத்துப்பிலங்குறைந்தே உள்ளசந்துமெய்சேர்ந்து
மறுத்துமொன்றுபேசாமல் வலுவிழந்து நிற்பளவில்
கறுத்ததிருமேனி காயாம்புமேகவண்ணர்
வெறுத்துப்புவியை மெய்மறந்துதான்பார்த்து
உடலும்வெளுறி யுயிருமிகப்பிரிந்து
சடலந்தனைப்போட்டுத் தப்பினுரொப்புடனே

விருத்தம்.

நீலம்பரந்துவிழிசொருகி நெருப்புதணிந்துநீர்மேகக்
கோலவுடலுமிகவேர்த்துக்கோளையுடனேசிலேட்டுமம்
ஆலம்பெரியமார்புருகி யாவியொடுங்கியறிவழிந்து
சீலம்பெரியவைகுந்தம் சேர்ந்தாரரியுஞ்செகம்பிரிந்தே

இதுவுமது.

விட்டுப்பிரிந்ததிருமாலைவீமன்விசயன்தானெடுத்துத்
தொட்டுப்புவியிலுள்ளடக்கித் துயரத்துடனேவிழுந்த
கட்டுப்பிரிந்துதெனவேங்கிக்கானகத்தைவிட்டகன்று
பட்டுப்பதறி ஆயுதத்தைப்பதையாதெடுத்தார்தலைமீதே

இதுவுமது.

ஆயுதந்தலைமேல்வைத்து அருச்சுனன்வீமன்றானும்
மாயனையிழந்தோமென்றுமனமெலாமிடைந்துபுண்ணு
தூயதோர்தன்மர்கேட்கச்சொல்லுவோம்வாருமென்ன
நேயமாய்க்கானம்விட்டு நிமிஷத்தில்வருவதானார்

கதை.

சீரானவைகுந்தந் திருமாலும்சேர்ந்தபின்பு
பேரானபார்த்தன் பெரியவனுவீமனுமாய்
மண்மேல்விழுந்தழுது மாயவனைக்காணுமல்
விண்மேல்முகம்நோக்கி மெய்சேர்ந்து நின்றழுதார்
கக்கதோபூமி கசந்ததமோநாங்களுந்தான்
மைச்சுனரேயென்று வயிற்றிலறைந்தழுதார்
அச்சுதரேயென்று அடிமேல்விழுந்தழுதார்
மெய்ச்சுடரேரூப வெளியேவெளிமயக்கே
நச்சரவிற்பள்ளிகொள்ளும் நாரணரேயிப்போது
அச்சமில்லாதெங்கட் கலைச்சல்வைத்துப்போனீரே
எங்கேயினிக்காண்போம் இப்பிறப்பிலும்மையென்றார்
அங்கேவருவோம் ஐவருந்தானும்மிடத்தில்
இப்படியாய்நின்று இவர்கள்புலம்புகையில்
தப்படியுஞ்சங்கீதம் சங்குசெயகண்டியுடன்
தம்புருவம்வீணை சாமன்டலை முழங்க
கிம்புருவங்கின்னரமுங் கீதமுடனாதமுமாய்
முழவகுதுகாண்சத்தம் முனிவர்மிகக்கொண்டாட
வழங்குதுகாண்கீதம் வைகுந்தலோகமெல்லாம்
காராருமேனியனே கமலமுகத்தோனே
சீராருங்கோகனகை திருவுறையும்மாயோனே
வேதாவையீன்றவனே விண்ணவர்கள்கோமானே
சீதைக்குநாயகனே தெய்வசிகாமணியே
என்றுமுனிவர் இருடிதபோதனரும்
நின்றுதொழுது நெடியோனைநெஞ்சில்வைத்து
ஆரணியந்தன்னி லருந்தவத்தோர்சொல்லுமொழி
பூரணமாய்நெஞ்சிற் பொருந்தஇருவருக்கும்
காதாரக்கேட்டுக் கலக்கமிகத்தெளிந்து
பாதாரந்தன்னிற் பணிந்துமலர்கள்தான்தூவி
சேர்ந்தார்வைகுந்தஞ் செங்கண்மாலென்றறிந்து
பூந்தேனொழுகும் புட்பவனச்சோலையிலே

நல்லடக்கம்பண்ணி நமஸ்கரித்தழுக்காலும்
வல்லதொருமாயவற்கு வாகாகவாள்விசயன்
செய்யுஞ்சடங்கு செய்கருமந்தான்முடித்து
கையுங்குவித்துக் கடுகிநடப்பதற்கு
வீமன்தண்டாயுதமும் வில்விஜயனதானெடுக்க
தாமும்பிலமில்லாமல் தலையிலேதான்சுமந்து
வந்தவழிநோக்கி வருகின்றவேளையிலே
அந்தவழிகடந்து அப்பாலும்போகையிலே
ஆடுகளுந்தான்மேய்த்து ஆயர்களுந்தான்போனார்
வேடுவர்கள்சென்று விரைந்தெடுத்தாராடுகளை
அப்போதிடையன் அருச்சுனரேவீமரே நீர்
இப்போதிவ்விடம் இருவர்களும்போகையிலே
நாடுபுகழ்மாயன் நடுக்காணகமுறைய
ஆடுகொள்ளைபோகுதுகாண் அபயமபயமென்று
கொள்ளைகொண்டார்வேடன் கூகூவெனவிடையன்
துள்ளிவந்துசொன்னான் துடிவீமன்பார்த்தனிடம்
இடையனிவைசொல்ல இவர்கள்மனமிடைந்து
தடைசெய்தவேடரொடு தான்பொருதவேணுமென்று
வீரத்துடன்வீமன் விஜயனுமேதிரும்பி
கோரத்துடன்வந்து கொல்லவென்றுவேடர்தனை
தெண்டெடுக்கவீமன் செயல்சற்றுமில்லாமல்
விண்டொலிக்கும்வில்லெடுக்க விஜயன்பலமில்லாமல்
வீமன்விஜயன் வேடருடன்போர்பொருத
நேமமுடன் ஆயுதங்க ளில்லாமல் நின்றதுதான்
கண்டந்தவேடர் கடுகிக்குதித்தார்கள்
சண்டைதொடுக்கத் தாவிக்குதித்தார்கள்
வேடரறிந்து வெகுண்டுசினந்தெழுந்து
சாடவேவீமனையும் தம்பிவிஜயனையும்
போடவெகுண்டு புறங்காட்டிப்போகலுற்றார்
ஊடழிந்துவேடர் ஒருமிக்க ஆடுகளை
ஈட்டழித்துச்சேர்த்து இடையனையுந்தான்பிடித்து

கூடத்திரட்டிக் கோபாலர் தங்களுடன்
பாரிற்றுவாராபுரி பட்டணமுங்கொள்ளைகொள்ள
காரிற்புனல்வேடர் கருதியேவார்த்தைசொல்லி
ஊரிற்புகுவதற்கு உச்சாயமாய்ப்பேசி
சீரிற்சிறந்த சிறைபிடிக்கவேணுமென்று
போனார்கள்வேடரென்று போர்விசயன்வீமனுமே
கூறாமலொன்றுங் குறாவிமனம்புண்ணாகி
நீறாகிவெந்து நினைவுதடுமாறி
வீறானஐவரென்று மேதினியில் நாமிருந்தோம்
எண்ணமெல்லாம்போச்சென்றிடைந்துமனமுருகி
கண்ணருடபட்டணமுங் காவலழிவதுவும்
என்னவென்றுசொல்வோம் எம்பெருமாள்கற்பனைக்கு
வின்னய்வாராதென்றிருக்க வின்னமேவந்துதென்றால்
ஆதிபிரானை அச்சுதற்குமேற்காது
பாதிப்பிறையணிந்த பரமருக்குமேற்காது
நமக்குவலுக்குறைந்து நாணியேநின்றோமாகில்
சுமக்கும்பழிபாவந் தோஷமிகவுண்டாகும்
அண்ணருக்கிச்செய்தி அறியவுரைப்பமென்று
தண்ணலரும்வீமன் தம்பியருச்சுனனும்
ஏங்கிமுகம்வாடி யிடைந்துவழிகூடி
தாங்கிநடந்திருவர் தர்மர்தனைநோக்கி
அத்திபுரஞ்சென்று அண்ணலையுங்கைதொழுது
சத்தியுள்ளவீமன் தனஞ்செயனுமேதுசொல்வார்
குருகுலத்தைநாளுங் கோபாலர்காத்தருளி
வருங்கருமஞ்சொல்லி வாரமாய்த்தானிருந்து
ஆதிநாராயணற்கு ஆபத்துவந்ததென்று
சேதிசொல்லக்கேட்டுச் சேதிதனையறிய
போவென்றருள்செய்த புண்ணியரே நீர்கேளீர்
காவொலகுந்தேடிக் காளகமெலாந்திரிந்து
வனமுமவனாந்திரமும் மலைகள்பலகோடி
புனமும்புகுந்தவுந்தி பூத்தோனைக்காணாமல்

தேடித்திரிந்துமொரு செண்பகப்பூங்காவனத்தே
நாடித்திருமாலை நாங்கள்கண்டோமன்றாவி
அம்புபட்டுலோக மளந்ததொருபாதமதில்
வம்புபட்டமேனி வாடிமெலிந்துநொந்து
மெய்க்கூடுதான்வெளுத்து மேனியெல்லாம்புண்ணாகி
பொய்க்கூடுபோலாகப் பூமியின்மேல்தான்கிடந்தார்
கண்டவுடனே கதறிவிழுந்தழுதோம்
புண்டரீகமேனியனார் போதமாய்த்தானமத்தி
என்னையெடுத்து நிறுத்துமென்றார்கோபாலர்
பின்னை நினைவுகொண்டு பேசாமல்நாங்கள் நின்றோம்
நின்றவரைப்பார்த்து நெடியோனும்பூருவத்தில்
நன்றிசெய்தபேச்சும் நடத்துகின்றசொல்முறையும்
உடம்புருகச்சொல்லுகின்ற உத்தரங்கள் தான்கேட்டு
குடங்கவிழ்த்துநீர்பிரிந்த கும்பமதுபோலாகி
தேவரீர்சொன்னதொரு செய்திதனைமீறமல்
தாவுலர்ந்துநின்றோமே நாரணரைநம்பாமல்
கருத்தறிந்துமாயன் கைதாவுஞ்சொன்னார்காண்
உருத்தறிந்துநாங்கள் ஒன்றுமுலையாமல்
நின்றோம்நெடுமால் நினைவுதனைநம்பாமல்
குன்றுமனது குன்றிமனம்புண்ணானோம்
அந்த நினைவறிந்து ஆயுதத்தை நீட்டுமென்றார்
எந்தவிதமாமோவென் றெண்ணியெங்களாயுதத்தை
நீட்டியிருவோரும் நின்றோமதுவழியாய்
வாட்டிவலுவை வாங்கிவிட்டார்மாயவனார்
பிலங்குறைந்துநாங்கள் பேசாதிருக்கையிலே
கலங்கிவிழிபிரட்டிக் கண்ணருமேமெய்சோர்ந்து
பாசங்கலங்கிப் பதறியுடல்வேர்த்து
வாசங்கள்விட்டு வைகுந்தஞ்சேர்ந்தார்காண்
செங்கண்மால்தானும் சீவன்விட்டுப்போகையிலே
தங்கள்மரபு தலைகுலைந்துபோகாமல்
காருங்கள் நீங்களென்று கற்பித்துப்போனார்காண்

வாருங்கள்ஐவரும்பின் வைகுந்தஞ்சேர்வதற்கு
எனறுசொல்லிமாயன் ஏகினர்காணம்மானை
சென்றுமலர்ப்பாதம் தீண்டியெடுத்தவ்வனத்தில்
அடக்கிச்சடங்கறுத்து அலங்காரமாகவேதான்
மூடிக்குஞ்சடங்கதுதான் மூடித்துவந்தோமண்ணவி
வந்தோம்வழிகூடி வாடிமனதுநொந்து
அந்தவழியிலொரு ஆயனுந்தானுடுவிட்டு
மேய்த்துவருகையிலே வேடர்புகுந்தாடெடுக்கும்
பார்த்துநீர்போரீரோ பார்த்தரேவீமரே நீர்
அபையமபையமென்று ஆயனுங்கூகூவெனவே
உபையமெனச்சென்று ஒருமித்துவேடருடன்
தண்டிப்பொருதத் தயவாகநாங்களுந்தான்
மிண்டிப்பொருத வேடருமேவந்தார்காண்
தரிப்பட்டுநிற்கத் தத்துவங்களில்லாமல்
அரியிட்டசாபமென்று அறிந்துவலுக்குறைந்து
முறிபட்டுவந்தோம் மூதுகுபுறங்காட்டி
தெரிபட்டுவந்து செய்தியெல்லாஞ்சொன்னேங்காண்
என்றிருவர்சொல்ல ஏங்கியேதன்மருந்தான
குன்றதிர்ந்துவீழ்ந்து குகித்துவிழுந்தழுது
சுகத்திலிருக்கவெண்ணிச் சொல்லாமற்போனீரென
முகத்திலறைந்து மூடிகுலைந்துதான்விழுந்து
துயில்கௌப்பாம்பணையிற்சுந்தரமாய்ப்போனீரோ
வயிற்றிலறைந்து மண்மேல்விழுந்தலறி
பூலோகநாயகனே புவனமளந்தோனே
சாலோகசாமீப சாரூபதேசிகனே
எள்ளுக்குளெண்ணெய்போ லெவ்வுயிர்க்குந்தானான
வள்ளலேயும்மைவிட்டு மறந்திருக்கக்கூடுமதோ
அழகுதிருமேனியனே ஆபத்தைக்காத்தோனே
களபமணிமார்பா கண்ணரேயென்றழுதார்
துளபமணிமார்பழகா சுகந்தமணிதிண்புயனே
புளகமதன்தனையீன்ற பூபாலாகோபாலா

தூதுசென்றுயெங்களுக்காய் சூதனிடமாக
தீதுகொண்டநெஞ்சன் துரியோதனன்றனையே
பாங்குடனேகொல்லப் படைமுடித்துஎங்களுடன்
சாங்கமாயநின்று தளமவன்சேனையெல்லாம்
கண்ணன்சகுனிமுதற் காவலர்கள்நூற்றுவர்கள்
மன்னவர்களெல்லாம் மடிந்தார்களந்தனிலே
மடிந்துவிழுமட்டும் வாரமாய்நின்றோனே
முடிந்துதோகாலம் முகில்வண்ணாவுனறனக்கு
எங்கேயினிக்காண்போம் எப்பிறப்பிலும்மையுந்தான்
அங்கேவைகுந்தம் அருகிருந்துகாண்பேனே
ஈரைந்துசென்னி இராவணனைவெஞ்சமரில்
போரஞ்சாவீரனையும் பொருதிநீகொன்றுயே
வாலிதனைக்கொன்ற மாயவனேஉம்முடைய
கோலத்திருவழகைக் குறித்தென்றுகாண்பேனே
ஆருக்குமேற்குமதோ ஐவரையும்விட்டகன்றீர்
ஊருக்குமேற்குமதோ உலகிலவர்தன்னைவிட்டு
போவீரோஇந்தப் புவியாட்டொழிந்தென்று
சாவீரேகாலஞ் சரியாச்சுதென்றுசொல்லி
மாமாலவாழ்விதென்று வைகுந்தஞ்சேர்ந்தீரோ
ஆமாமெனவே அசந்துமறப்போமோ
வாரோங்காணங்கே வைகுந்தந்தானோக்கி
கூரோங்காண்பொய்யுங் குவலயமும்வேண்டாங்காண்
எனறுசொல்லித்தர்மாிநந்தார்மனமிடைந்து
நின்றுநகுலன் நெடுமாலைத்தானினைந்து
குந்திவிழுந்தழுது கோவென்றபயமிட்டு
புந்திகலங்கிப் பதறியுடலசந்து
விழுந்துபுரண்டழுது மெய்சோர்ந்துகைசோர்ந்து
செழுந்துவர்வாய்மாயவனைச் சிநேகம்பிரிந்தோமே
விந்தைமலர்ப்பதத்தை மேதினியிற்காண்போமோ
அந்தமுள்ளமாலே அவனியளந்தோனே
அரிகேசவாமுகுந்தா அய்யாவுனைப்பிரிந்தால்

சிரியாரோபூவுலகிற் றேசத்திலுள்ளவர்கள்
பரியாசம்பண் ணுவரே பஞ்சவர்கள் நாங்களிரோம்
தரியோந்தரணியிலே சற்றிருேம்தாமிதமாய்
வருவோம்வைகுந்தமென் று வலுநகுலன்சொல்லியழ
தருவான நூல்வேத சகாதேவன் தான்சிரித்து
பொய்வாழ்வைமெய்யிதென்று போதமனமகிழ்ந்து
மெய்வாழ்வுபோலே விரும்பினீர்மன்னவரே
தேகம்பொருளோ ஜெகம்பொருளோஉங்களுக்கு
தாகம்பசியிளைப்பு சஞ்சலங்கள் தான்பொருளோ
தேடுந்திரவியங்கள் செல்வமுந்தான்பொருளோ
நாடும்நகருமித நற்பணிகள்தான்பொருளோ
தந்தைதாய்சுற்றம் தமருங்கிளைபொருளோ
மைந்தரும்வீடும் மனையாட்டிதான்பொருளோ
ஆனைகுதிரை யலங்காரந்தான்பொருளோ
சேனைவெகுபட்டண முஞ் சிறப்புமிது பொருளோ
என்னபொருளென் று இடைகிறீரெல்லோரும்
தென்னவரேமாயைதனைத் திறமென றுநம்புவரோ
காயந்தரியாது கணப்பொழுதுநில்லாது
நேயந்தவருது நிலைநின்ருேர்தங்களுக்கு
மேகந்தருநிழலை மெய்யென் றிருப்பார்களோ
காகுத்தனைதனைசெயலைக் காணுமறக்கண்டுகொண்டு
பதையாதிருப்பீர்காண் பாசத்தைநம்பாமல்
சதையுநரம்புஞ் சலமலமுங்கோழையுமாய்
ஊத்தைதிரண்டு உருவாயிருந்ததிலே
காற்றையடைத்துக் கயிறில்லாப்பம்பாம்போல்
நடையும்உடையும் நாகரீகப்பாவனையும
அடையுந்திருமிகளும் அழுகல்மிகநாற்றம்
மாயக்குரங்கின் வஞ்சமிட்டபொய்க்கூடு
காயக்கமேமிகுந்த காமக்குரோதமிது
ஒட்டுப்பிரவதுகாண் ஓயாக்கவலையிது
விட்டுபபிரியுமிந்த் வீணசுவரைநம்புவதோ

காரணங்கள்தான்முடியக் கரியமால்வந்துதித்து
நாரணனார்வந்து நடத்துகின்றார்பாரதத்தை
யுகத்துக்குயுகம்பிறந்து ஒடுங்காதபேரையெல்லாம்
ஜெகத்தோடொத்திருந்து ஜெயம்பண்ணியிப்படியா
எத்தனையேகோல மெடுத்ததவதாரம்
கர்த்தனார்தன்செயலைக் காண்பதறிதெனவே
வேதங்கள்நான்கும்விளக்குதுகாண்சாஸ்திரமும்
ஆதலால்மாயனுக்கு அளவற்றகாலமெல்லாம்
அழிவதுவுமில்லையவர் ஆதிமூலப்பொருளே
தெளிவதுவேசித்தமெனச் செப்பச்சகாதேவன்
அப்போதுரோபதையு மடித்துவிழுந்தலறி
மைப்பரவுமேனியற்கு வந்தவிதியேதெனவே
நானேதுணையிழந்தேன் நாரணரேயிப்போது
வானோர்கள்போற்றவுந்தான் வைகுந்தஞ்சேர்ந்தீரோ
கற்புகலையாமலெந்தன் கற்பைநிலைநிறுத்தி
துற்புந்திசெய்தோரைச் சொல்லரியபாழ்நரகில்
வைப்பித்தபுண்ணியர்தான மாளவந்தகாரணமேன்
மெய்ப்பித்தபஞ்சவரை மேதினியில்விட்டேகி
சொற்புத்தியோமதியோ துன்பம்பெரிதாலோ
தப்பித்தனிவழியே தான்போனஞாயமென்ன
தெய்வமேஞாயமிதோ செங்கண்நெடுமாலே 1
ஐவர்சகாயா ஆதியே அச்சுதரே
நாயகமேபஞ்சவர்க்கு நாளுந்துணையாயிருந்து
தாயகமாயென்னுளுஞ் சாங்கமாய்நின்றேனே
கணக்குப்புகழாகக் காசினியோர்தாமறிய
எனக்குப்பிழைவாராமல் ஏழைபங்கில்நின்றேனே
என்றைக்குனைக்காண்பே னெங்கள்பெருமாளே
குன்றைக்குடைப்பிடித்துக் கோவுகளைக்காத்தோனே
அய்யோதுணையெனக்கு ஆரினித்தான்பூவுலகில்
மெய்யோயெனைமறந்து விண்ணகத்திற்போவீரோ
கிளிமொழியாளிவ்வசனங் கிலேசமாய்ச்சொல்லியபின்

மொழிகுளறிக்குந்தியம்மாள்முகத்திலறைந்துகொண்டு
என்மருகாஎன்கோவே எல்லார்க்கும்நாயகமே
தர்மருக்கும்தம்பியர்க்குஞ் சாங்கமாயென்றனும்
இம்மைதனிலேயிருந்து எங்களையுங்காத்தோனே
நன்மைசெய்யக்கனமம் நடுக்கானதந்தனிலே
மாண்டிறந்துபோன மகிமையென்னநாரணரே
வேண்டிவினைசெய்த விதிவசமோயிப்படியாய்
அந்தரத்தில்நீரும் அருந்தவசுபோயிருந்த
தந்திரத்தையின்னதென்று தர்மரறிந்திலரோ
வீமன்விசயனுடன் மெய்வார்த்தைசொல்லாமல்
நாமன்சகாதேவனையும் நம்பாமற்போனீரோ
உற்றதொருநற்சேதி யொருவருக்குஞ்சொல்லாமல்
தற்பரனே நீர்போய்த் தவமிருந்தீர்மாயவரே
மந்திரவேதம் வரம்புதப்பிப்போனதுவோ
சந்திரருஞ்சூரியருந் தானொழிந்துபோனாரோ
அண்டமடுக்கும் அச்சுநிலைதானபேர்ந்து
கொண்டகருவழிந்து குறைகடலுந்தான்சுவறி
ஆகாசம்பூமி அந்தரங்கள்தான்குலைந்து
வாகானநற்றவங்கள் மாசடைந்துபோனாலும்
இறப்பதுவுமே துனக்கு எம்பெருமாளென்றழுதாள்
பிறபபதுவுமே துனக்குப் பிறந்துமிறப்பதுவும்
இரண்டுதொழிலாய்நடத்தி யிலங்குகின்றபுண்ணியரே
மிரண்டுபலவுரையேன் விளம்பேனொருவசனம்
என்றுகுந்திமாதேவி இத்தனையுந்தான்புலம்பி
சென்றுபுகுந்தாள் செய்யமணிமண்டபத்தில்
தம்பியருந்தர்மருடன் தானேமனமிடைந்து
வெம்பிமுகம்வாடி வேதநாராயணர்தம்
சொல்லரியதேசந் துவாரகாபுரிநகரம்
வெல்லரியவேடர் விபரீதஞ்செய்யாமல்
இப்போதேசென்று எம்பெருமான்பட்டணத்தை
மெய்யாகக்காக்கவென விடைகொடுத்தார்தர்மருமே

வீமன்விசயன மிகுந்தசகாதேவன்
தாமனகுலனுடன் தங்கள்பரிசேனைதனம்
சிறப்பாகச்சேனையுடன் சீக்கிரத்திலந்நேரம்
புறப்பட்டாபூமியிலே போரண்டம்தானடுங்க
நடந்தார்துவாரகைக்கு நன்னகரம்விட்டேகி
கடந்தார்வெகுதூரம் கண்டார்பெருநகரம்
விரைந்துநகர்புகுமுன வேடரங்கேதான்முடுகி
நிறைந்தார்வளைந்தார் நெடுமால்தன்பட்டணத்தை
பச்சைமால்தேவியர்கள் பதினாயிரவரையும்
இச்சையுடன்வேட ரெல்லோரையும்பிடிக்க
வளைந்தாராண்மனையை மாயவனார்தேவியரை
நுழைந்தேபிடிக்கவென்று நோக்குகின்றவேளையிலே
கங்குல்வந்துமூடிக் கதிரோனும்போய்மறைந்தான
செங்கதிரவன்மறுநாள் திறமாகத்தோன்றியதால்
விடிந்தேஅரண்மனையில் மெல்லிநல்லாளெல்லோரும்
இடிந்தேகரைந்து எம்பெருமாளென்றழுதார்

விருத்தம்.

தேவியாழுதவோசை செங்கண்மால்தனக்குத்தோற்றி
பாவிகள்வேடர்தாமும் பங்கமேசெய்யாவண்ணம்
ஓவியமானபெண்களுநுவெலாமாற்றிமுன்னுள்
தாவியரிஷிபோலாகித் தாதர்போல்வருகவென்றார்.

இதுவுமது.

தப்புசேகண்டிசங்கு சடைமுடி துளசிமாலை
இப்புவிதனிலேபோற்றும் இருடிபோல்வேடம்பூண்டு
ஒப்புடன்தாதராகி யொருவர்பினனொருவராக
மெய்ப்புடன்வந்தார்கண்டார் வேடருமலைத்துநின்றார்.

கதை.

அழுதார்கள்தேவியர்கள் ஆயிழைமாரெல்லோரும்
தொழுதபயமிட்டுச் சொன்னதொருதோத்திரந்தான்
அந்தமொழிகேட்டு ஆயனார்சூஸ்திரமாய்

மூந்திஇருந்த முனிவர்தபோதனர்போல்
ஆமென்றுசிந்தித்தா ரப்போது ஆயிழைமார்
ஓமென்று அவ்வுருவம் உருமாறியேயிருந்து
சடையும்முடியுடனே தாதர்வந்தார்வீதியிலே
படைகூடிக்காத்திருந்த பார்வேடரெல்லோரும்
விதிபோயசந்து மெய்மறந்துபார்த்திருந்தார்
சதிருள்ளபட்டணத்தைத் தான்கொள்ளையாடவென்று
நெருங்கிவரும்போது நிமிஷத்தில்தர்மர்படை
கருங்கடல்போற்சூழ்ந்து கைகலந்துதான்பொருதி
துரத்தியடித்துவிட்டுத் துன்பமறவேதிரும்பி
அரத்தியேசாத்தகி யாழ்வாருடனேதான்
மற்றுமுள்ளசேனை மகுடமுடிவேந்தரையும்
அத்திபுரந்தன்னில் அழைத்துவந்தாரம்மானை

விருத்தம்.

மாயவனுலகையாண்டு வனத்திலேயிறந்தாரென்று
நேயவில்வேடர்வந்து நிலமையைக்கொள்வாரென்று
தாயதோர்தருமர்தானும் சொல்லியேயோர்விரலைமூக்கில்
ஞாயமோசிவனேயென றுநைந்துடல்சோர்ந்திருந்தார்.

இதுவுமது.

இப்பவுஞ்சேதியென்ன என்றுதான்தம்பிமாரை
ஒப்புனழைத்துமுன்னே உண்மையேதென்றுகேட்க
அப்புறமினிமேலென்ன அண்ணலேஇந்தஞாயம்
மெய்ப்புடனிவிடமவிட்டுவிரையவைகுந்தஞ்சார்வோம்

இதுவுமது.

இளையவர்நீங்களின்ன மிருந்துதான்புவனமீதில்
கிளைவழியுடனுங்கூடிக் கிரீடமாமகுடமன்னர்
பழையவர்தமருந்தாயும் பாக்கியமனேகமெல்லாம்
குறைவறநிறைந்துவாழ்ந்துகுவலையத்திருங்களென்றார்

கதை.

தர்மரிவைசொல்லத் தனஞ்சயனும்வீமனுமே
கன்மமோவென்று கண்ணீர்மிகச்சொரிய
நகுலசகாதேவன் நாட்டமுடன்வாட்டமதாய்
மிக்ககவலையாகி விள்ளாமலுள்ளுடைந்து
எங்களையும்விட்டு இனம்பிரிந்தமான்போலே
தங்குவதுமெங்கே தரிப்பதுவுமெவ்விடங்காண்
நாங்களோஉம்மைவிட்டு நானிலத்திலேயிருப்போம்
தீங்கொன்றும்பேசாத் திருவுளமேயல்லாது
இருந்துமென்னதகாட்டை யெடுப்பதுமிங்கேதான்
வருந்துவோம்நாங்கள் வாடுவோமும்மைவிட்டு
என்னமொழிசொல்லி யெடுத்துரைத்தீரண்ணாவே
இன்னமிதுவரையும் இனம்பிரிந்து நின்றோமோ
மாயையிதுவாழ்வு மாமாயந்தன்னைநம்பி
சாயையிந்தவாழ்வதனைச் சதமென்றுதானிருந்தால்
கந்தவுடலெடுக்குங் கசுமாலப்பாண்டமிது
நாறும்புழுக்குரம்பை நன்றிகெட்டகாயமிது
நூறுவயதளவும் நோக்காயிருந்தாலும்
சோற்றுத்துருத்தியிது சொல்லரியபாண்டமிது
காற்றுப்பொறுமல் கழன்றோடும்பாவையிது
இடிகரையில்வாழ்மரம்போ லெண்ணமற்றகாயமிது
நெடியமரமிதுகாண் நிழலில்லாத்தாழைமரம்
வேரில்லாக்கொத்தான விழுசுவரைநம்புவரோ
தூரில்லாபொந்துமரம் சுட்டோடுஞ்சாம்பலிது
அலைகடற்றுரும்பதுபோ லாசையுள்ளபொக்கிஷத்தை
நிலையில்லாக்கப்பலிதை நிசமென்றுநம்புவரோ
ஓடும்மரக்கலத்தை ஒன்பதுவாசற்கூட்டை
போடுவதுமெவ்விடமோ பொருந்துமுயிரெவ்வாரோ
இந்தவுடலெடுத்து இவ்வுலகமேசதமாய்
சொந்தமெனத்தாமிருக்கச் சுகிர்தமோ அண்ணாவே
இதுகருமமல்ல இறையோனேஉம்முடைய

பதுமமலர்ப்பீதம் பணிவதுவேயல்லாது
அமுதுகரும்பெங்களுக்கு அறிவுகாணிப்போது
மதுரமொழிபகரும் வாசகமேயன்றைவே
நடக்கும்வகையறிந்து நாயகமே நீர்தாமும்
அடக்குமுபாயம் அவனிதனிலுண்டுபெண்ணை
வைக்கவுபாயம் வழங்குமென்றார் தம்பியர்கள்
தக்கபுகழ்தருமர் தம்பிபொறுமென்றுசொல்லி
நேசமுடன்வாழ்ந்து நிலத்திருக்குமந்நாளில்
தேசத்திலுள்ள தெய்வப்பிராமணரில்
முன்னாளில்வேதியன்றான் முழுதுந்தடியாயிருந்தான்
பின்னாளொருபார்ப்பான் பிரதேசம்விட்டுவந்து
இந்தப்பிராமணனை இருக்கவிடந்தாருமென்றான்
அந்தமனையி லவனுக்கொருபுறத்தை
விட்டுக்குடியிரென்றுவேதியனுந்தான்கொடுத்தான்
கட்டுடன்வீடங்கே கட்டிக்குடியிருக்க
பார்ப்பானுஞ்சம்மதித்துப் பதியிற்குடியிருக்க
நேர்ப்பாகஅவ்விடத்தில் நிதம்விளைந்துதானெடுக்க
வெட்டினான்பூமிதனில் விரும்பிச்சுவரேற்றிக்
கட்டினான்வீடு கனத்தபுதையலொன்று
மண்ணிலிருந்தெடுத்தான் மறையோனுமந்நேரம்
கண்ணிலே கண்டபொருள் கன்மமென்றுதானினைந்து
நமக்குத்தெரியாது நம்மிடத்தில்நிற்காது
சுமக்கும்பழிபாவம் துன்பம்வருமென்றேதான்
மனைநமக்குத்தந்த மனையாளன்தனமிதென்று
வினையொழியவேண்டி வேதியனுந்தானோடி
அய்யரேவேதியரே அதிசயந்தானைகேட்டீரோ
துய்யமனைகட்டத் தொடங்கியதோர்மண்கிடங்கில்
கண்டேன்திரவியந்தான் கண்பணிப்பெட்டகத்தில்
கொண்டோடிவந்தேன்பார் குடத்திற்பணந்தனையும்
உந்தன்பொருளிதுகா ணுற்றவர்கள்தானேபுதைத்த
சொந்தமுனக்கென்று தோறுதுகாணென்மனதில்

என்றுரைப்பவர்சொல்ல ஏற்றமுள்ளவேதியன்தான்
நன்று நன்று இவ்வார்த்தை நாமெங்குங்கண்டதில்லை
உன்மனைபிற்கண்டபொருளுனக்கல்லால்வேறுமில்லை
தன்மனையிற்கண்டபொருள் தன்னைவிட்டுப்போகாதே
ஆதலினாலிப்பொருளை அய்யரேவாங்குமென்றன்
றாதனமாய்ச்சொல்ல நூல்மறையோனேதுசொல்வான்
அன்றுமக்குநாமும் அன்பாகவீடுதந்தோம்
இன்றுமக்குத்தந்த இல்லிடத்திற்கண்டபொருள்
கண்டவர்க்கோசும்மா காணாதிருந்தவர்க்கோ
உண்டவர்க்கோஇன்பம் உறங்கினபேர்க்கென்னாகும்
வேண்டாங்காண்வேதியரே வீட்டிற்கொடுபோவீர்
தீண்டாப்பொருளதனைத் தீண்டுவரோநல்லோர்கள்
போங்காணுஞ்சும்மா பொருளதனைக்கொண்டேதான்
வாங்கேனொருநாளும் மதியேன்மனந்தனிலும்
என்றுமறையோனு மிவ்வசனஞ்சொல்லுவதை
நின்றுபிராமணனும் நீதியோவென்றுசொல்லி
பொருந்தாதகாரியத்தைப் பொருந்தவேபேசுகிறீர்
வருந்தாதாரென்று வருந்துவரோமானிலத்தில்
உந்தன்மனையெனக்கு உபகாரஞ்செய்ததற்கே
சொந்தமெனக்கெப்படிச் சொல்லுங்காண்வேதியனே
அடைமழையிற்காக்கைக்கு அன்னமிடந்தந்தாற்போல்
இடைபொருளை நானெடுக்கக் கிட்டாதுவேதியரே
எந்தன்விதிப்பயனோ இல்லூரிலும்மிடத்தில்
வந்தவிதிமயக்கோ வழக்காய்முடிந்ததுகாண்
உன்சமர்த்தும்என்சமர்த்தும் ஊரறியவேணுமென்று
புன்சமர்த்துப்பேசிப் புறப்பட்டார்மன்றேற
அறியவிருந்து மடிபிடியுஞ்சண்டையுமாய்
தெறியுடையதன்மரிடம் நீதிவிளங்கவென்று
பூசலிட்டுக்கொண்டு புண்ணியனார்தம்மிடத்தில்
ஊசலிட்டுச்சென்றார் உறுபூசல்தன்னுடனே
அந்தணர்கள்தன்மரிடம அவர்வழக்கைச்சொன்னாரே

வந்தவர்கள்சொல்லை வாகாகத்தான்கேட்டு
மந்திரிமார்தன்னை வாவென்றருகழைத்து
தந்திரிமாரெல்லாருஞ் சதிராகத்தான்கேட்டு
ஞாயம்நடுக்கண்டு நமக்குரையுமென்றுரைத்தார்
தாபதன்மர்சொல்லத் துணிந்தார்களெல்லோரும்
அடுக்கஇருந்து அவர்வழக்கைக்கேட்கலுற்றார்
தொடுக்குமறையோரே தொடுத்தவரார்சொல்லுமென
குடியிருக்கவந்தவனுங் கூறினன்தன்வழக்கை
மிடியிலிடைந்து வெகுதூரந்தானிருந்து
இவரிடத்தில்வந்து இருக்கஇடங்கேட்டேன்
அவரெனக்குவீடு ஆமென்றுதான்கொடுத்தார்
அவ்விடத்துமண்ணெடுத்து அணைவாய்ச்சுவரேற்றி
இவ்விடத்தில்வீடு இதமாய்முடித்திருந்தேன்
மண்ணெடுத்தகோடியிலே மறைபொருள்தானிருக்கக்
கண்ணிடத்திலேயிருந்துகரகத்திற்பொன்னெடுத்தேன்
எடுத்தேனிவரிடத்தில் எடுத்தவுடன்கொண்டேகிக்
கொடுத்தேனிவர்பொருள் கொள்ளேனெனவுரைத்தார்
அருகிபரதேசி அடுத்துக்குடியிருந்தால்
பகுதிபெரும்பிடியாய்ப் பண்ணுகிறுரென்றுரைத்தார்
அந்தமொழிகேட்டு அவரை நீர்சொல்லுமென்றார்
ஒந்தனமனையி லிவருக்கிடங்கொடுத்தேன்
இடத்திற்பொருள்தா னிருந்தெடுத்தாராமாகில்
மடத்திலேவைத்து வாழாமலென்னிடத்தில்
கொண்டுவரவாங்குவனோ குற்றமென்னசொல்லுமையா
பண்டுமுன்னாள்வைத்திருந்த பழையபொருளானாலும்
தன்னிடத்திற்கண்டபொருள் தனக்கேபிறர்தனக்கோ
என்னிடத்திற்கொண்டுவந்தாலெப்படி நான்வாங்குவது
என்றிரண்டுவேதியரு மியன்றமொழிதான்கேட்டு
நன்றிவர்கள்சொன்னமொழி நாம்தெளிவதெப்படியோ
சொல்லுமறையோர்வழக்குத் தோன்றுமல்மந்திரிமார்
செல்லுமவழக்கிதறகுத் தெறவுந்தான்மாட்டாமல்

நல்லதென்று தன்மரிடம் நவின்றார்கள்மந்திரிகள்
வல்லதொருதன்மர் மறையோரிருவருக்கும்
துஞ்சாதஞாயந் துலங்கியுரைப்பதற்கு
அஞ்சாநாள்வாருமென்று அருளினர்காணம்மானை
அடுத்தநாள்மூன்றாம்நாள் அதுகழிந்தநாலாம்நாள்
உடுத்தகரித்துணியும் உதாசினவார்த்தையுமாய்
அழுக்குச்சிறையும் அகந்தையிடும்புகளும்
ஒழுக்கமற்றபேச்சும் உருட்டுபிரட்டுடனே
மானமரபில்லாமல் வரம்பழிந்துநாணமற்று
தானதவமில்லாத சண்டாளச்சன்மனுமாய்
ஈனமிரக்கமின்றி யிரவலர்க்குமீயாத
ஊனமில்லாப்பாவ முறைந்தசடமாகி
கால்மேலுந்தலைகீழாய்க் கலியன்வந்துதோன்றினனே
மேல்சாதிகீழும் கீழ்ச்சாதிமேலாக
தாய்தலையிலேசுமையுந் தகப்பனகுடைபிடிக்க
பாய்பரியின்மேலே பைந்தொடியைத்தோளேற்றி
வந்தான்கலியனென்று வையகமெல்லாமுரைக்க
அந்தநாட்சென்று அலைகதிரோன்வந்துதித்தான்
மற்றுநாளாம்போது மறையோரிருவோரும்
சித்தமுடன்தன்வழக்குத் தேறவென்றுதன்மரிடம்
சொன்னகெடு அஞ்சாநாள் தோற்றமுடன்வந்துநிற்க
என்னகாண்வேதியரே இருவருடஞாயம்
என்றுதன்மர்கேட்க இருவோருந்தர்க்கமதாய்
நின்றுநடுஞாயம் நீதியுடன்சொல்லுமென்றார்
எந்தன்மனையி லிவனுக்கிடங்கொடுத்தேன்
எந்தன்புதைய லெடுத்திறான்கொள்ளைகொண்டு
கொடுக்கமனஞ்சற்றுங் குறையாமல்வார்த்தைசொல்லி
பிடிக்கிறான்சண்டை பெருமானேஎன்றுரைத்தான்
உன்செய்தியென்னெனவே வுகந்துதன்மர்தான்கேட்க
என்செய்திஎன்னசொல்வேன் எடுத்தபுதையலைத்தான்
கொடுப்பேனோநானுங் குடத்துப்பணத்தையெல்லாம்

எடுப்பார்கொடுப்பதுண்டோ எந்தனைதானுனாலும்
குடியிருப்பிலாதாயங் கூடுந்தொகையிதெல்லாம்
கொடுத்துக்குடியிருக்க வந்தேனேகொற்றவனே
அடுத்துக்குடியிருக்க அய்யனிடம்வந்தேனே
நிட்ரேம்பண்ணுகிறன் நீதியில்லையோயிவ்விடம்
எட்ரேறிய இழுக்கிறன்சந்நியிலே
நீதியுடன்சொல்லுமையா நீதிநெறிதப்பாமல்
வேதியன்தானிவ்வசனம் விளம்புவதைத்தான்கேட்க
இனியென்னஞாயம் எடுத்துரைக்கவாயேது
அனியாயமிப்போது அந்தணர்கள்தன்வழக்கு
கண்டோமதிசயங்கள் கலியனுடதன்கீர்த்தி
விண்டோம்புவியை வெறுத்தோங்கலியாலே

விருத்தம்.

அந்தணர்வழக்குங்கண்டோமடிக்கடிபிரட்டுங்கண்டோ
மிந்தமாநிலத்தில்நாமு மிருப்பதுகருமமல்ல
அந்தநாளாச்சுகாலம் ஆண்டுதான்முடிந்துமுற்றும்
வந்தநாள்வந்துதென்றல் வழக்கென்னவழக்குஞாயம்.

இதுவுமது.

பஞ்சமாபாவங்கொண்டு பாரினிற்கலியன்வந்தான்
என்செய்வோம்தம்பிமாரே இப்படியுலகந்தன்னில்
முன்செய்தஞாயம்போல முற்றுமேயினிமேல்நம்மால்
பஞ்சவரென்றுசொன்ன பாவனைமுடியாதின்றே

இதுவுமது.

ஆண்டவர்நடந்தாரிந்த அதிசயம்வருமென்றெண்ணி
நீண்டவர்மொழிந்துபோன நிச்சயநிசமுங்கண்டோம்
பாண்டவர்புதல்வர்நாமும் பாரினிலிருந்தோமானல்
மூண்டதோர்கலிவிடாது முடிவிதுநமக்குக்காலம்.

இதுவுமது.

வாழ்ந்தது துவாபரத்தில் மனுநெறிமுறைமை நீதி
தாழ்ந்தது கலியுகத்தில் தருமரென்பெயரும்போகும்
சூழ்ந்ததோர்கலியைத்தப்பி சுகத்தில்வைகுந்தஞ்சேர
ஆழ்ந்ததோர்புவியைவிட்டு அகலுவோமகலுவோமே.

இதுவுமது.

நாரணர்நம்மைவிட்டு நடந்துவைகுந்தஞ்சேர்ந்தார்
காரணர்மூடிந்தகோலங் கலியுகம்வருமென்றெண்ணி
ஆரணந்தன்னையீன்ற அச்சுதன்மூவரான
பூரணர்நடந்தமார்க்கம் போவதுகருமமின்றே.

இதுவுமது.

வானவரிமையோர்மற்ற மாதவர்முனிவர்தேவர்
தானவரிஷிகள்வேதத் தபோதனர்போற்றிசெய்ய
ஞானமுமினியகீத ராகமுமிசைகள்கூட
மேனகைபணிசுள்மார வெகுசுகமடையுந்தானே.

இதுவுமது.

வீமனேவிஜயதம்பி மேதினிதன்னிலுங்கள்
நேமமுபலமும்வாங்கி நெடியமால்போனான்றே
சாமமாம்வேடர்முன்போய் சமரினிற்புறமுங்காட்டி
நாமினியுலகில்வாழ நமக்கிதுசகியாதின்றே.

கதை,

நெறியுடனேபோக நினைத்த நினைவுள்ளதெல்லாம்
குறியுடனேசொல்விக் போபாலர்சன்னதிக்கு
பயணமென்றுசொல்லிப் பரிமளித்துநால்வருக்கும்
சுயஜனமாயுள்ள சுற்றத்தார்தங்களுக்கும்
மன்னர்மகுடமுடி வர்த்தனர்களெல்லோர்க்கும்
தென்னன்பயணமென்று சீமையெங்குஞ்சொல்லுமென
சீட்டெழுதிவிட்டார்கள் திசையிலுள்ளமன்னர்க்கும்

எட்டெழுத்தைவாசித்து எல்லோருந்தான்கூடி
என்னவிதிவசமோ என்றுமன்னரெல்லோரும்
மன்னர்சமுகமதில் வந்துகண்டாரம்மானை
ஆண்டவனேநீர்தா மழைத்தபணிவிடையென்
நீண்டபுகழ்பெற்ற நிமலனேசொல்லுமென்றார்
அப்போதுதன்மர் அரசர்தனைநோக்கி
இப்போகொடுங்கலிய னிவ்வுலகில்வந்துவிட்டான்
இனிமேற்கலியுகத்தி லிருக்கவுந்தான்முற்றாது
தனியேவனவாசஞ் சஞ்சரிக்கமெத்தநன்று
ஆனதினாலுங்களைநா மருகேவரவழைத்தோம்
மானமுடனீங்கள் வரம்புதப்பிப்போகாமல்
சாலமறிந்து சகத்துக்குள் நீங்களுந்தான்
காலத்துக்கேற்றதொரு கணக்கின்படியாக
தெரிந்துநடந்துகொண்டு செங்கோல்தவறாமல்
பிரிந்தொருவர்போகாமற் பிள்ளைசிறுபாலருடன்
கலந்துஜெகமுழுதுங் கட்டாக நீங்களுந்தான்
துலங்கும்பரிசித்துவுங்குத் துரந்தரிகந்தான்தழைத்து
வைக்கிறோம் நீங்கள் மகுடமுடிதரித்து
நிற்கிறோமென்று நின்னயமாய்ச்சொல்லுமென்றார்
நிற்கிறோமுண்மை நிகழ்பரிசித்துவுக்கு
வைக்கிறோம்பாரில் வணங்கிறோமுள்ளபடி
நீங்களிருந்து நெடுகவனம்புகுந்தால்
நாங்களிருந்து நடப்பதென்னகாரியந்தான்
எல்லோரும்வாரோம் இந்த்ரபதி சென்றாலும்
பல்லோரும்வந்து பணிவோமேயல்லாது
அரைக்ஷணமுமுமைவிட்டு அவனிதனிலேதனியோம்
துரையேதுரையரசே துரந்தரிகமன்னவனே
என்றுமன்னர்சொல்லி யிரைந்தலறியோலமிட
அன்றுதன்மராசன் அவர்களையுங்கையமர்த்தி
ஒன்றுக்குமஞ்சாம லுலகளந்தான் தன்னருளால்
கன்றுக்கிரங்குகின்ற கற்றாப்பசுப்போலே

நம்மைய னுதினமும் நன்ருகக்காத்தது போல்
செம்மையுடன்செங்கோல் செலுத்தும்பரிசித்துவுக்கு
ஆதரவாய்த்தானிருந்து அரசுநிலைதானிருத்தி
போதரவாய்வாழ்ந்து புவியீதிற்ருனிருப்பீர்
வெய்யோனும்மண்ணும் விண்ணுமுள்ளகாலமட்டும்
துய்யமறையோர் துதித்துப்புகழ்ந்தேற்ற
இருமென்று தன்மர் எல்லோர்க்குஞ்சொல்லியபின்
குருமூன்னிலையாகக் கொற்றவனுமந்நேரம்

பரிசித்துவுக்குப் பட்டங் கட்டியது.

முடிசூட்டிவைக்க முடிமகுடர்போற்றிசெய்ய
படியேழும்போற்றப் பார்மன்னர்கொண்டாட
தானிருந்துசெங்கோல் தரிக்கமகுடமுடி
கோனிவன்ருனென்று கொலுவிலலங்கரித்து
நானிவன்ருனென்று நாற்றிசையுந்தானறிய
தானிவன்ருனென்று சாற்றிமகுடமதை
வைத்துமுடிசூட்டி வாழ்த்திப்பரிசித்துவைத்தான்
மூத்துமுடிசூட்டி முடிமன்னர்காத்திருக்கக்
கொற்றக்குடைநெருக்கக் கோவேந்தர்சூழ்ந்திருக்க
சத்தகடல்போலத் தளங்கள்நெருங்கிநிற்க
கட்டும்பரியுடைய காவலர்கள்வந்திருக்க
வெட்டும்பரிவீரர் வீரவாள்கைப்பிடித்து
தத்துபரியேறித் தளங்களுடன்வந்துநிற்க
சுத்தரதமேறித் துரந்தரார்வந்துநிற்க
தூருமதவாரணமேற் றுரைமக்கள்வந்துநிற்க
கூருந்தமிழ்வாணர் கொண்டாடிவாழ்ந்திநிற்க
தம்புருவம்வீணை சரமண்டலமுழங்க
கும்புருவங்கின்னரர்கள் கீதங்கள்தான்முழங்க
சங்கீதராகமது தாளமுடன்மத்தளமும்
இங்கிதநாகசின்ன மெக்காளம்பூரிகையும்
நவரியுடன்சேகண்டி நற்சங்குதான்முழங்க

பவுரிசமாய்ப்பேரிகைகள் பலதிக்குமேமுழங்க
சேனைதளமுஞ் சிறப்பாகத்தான்சூழ
ஆனைபரிரதமும் அணியணியாய்த்தான்சூழ
யானையின்மேலேற்றி பவனியெல்லாந்தானு
சேனைதளத்துடனே சிங்காரமாய்க்கூடி
பட்டணமுஞ்சுற்றிவரப் பாவாணர்கொண்டாட
சிட்டர்பரிபாலனெனத் தேவேந்திரன்போல
வட்டக்குடைநிழற்ற வந்தான்பவனிவலம்
சட்டமாய்ச்செங்கோல் தரித்திரென்றுமன்னவர்கள்
துங்கபிரமனெனச் சொல்லிலரிச்சந்திரன்போல்
சிங்காரமாகவந்து சிங்காதனத்திருக்க
சிங்காதனச்சிறப்புஞ் சேனைமன்னர்தன்சிறப்பும்
துங்கன்பரிசித்துடைய துரைத்தனத்தின்சிறப்பும்
இருந்துசிலகால மிராச்சியபரிபாலனத்தைப்
பொருந்தநடத்துகின்ற புதல்வன்தனைப்பார்த்து
ஆளும்புவிராஜன் ஆம்பிளையாமென்றுசொல்லி
நாளுஞ்சிலகழிந்து நாடுகளுந்தான்வணங்க
தங்களுடபேரனெனத் தன்மருந்தம்பியரும்
எங்கள்பதிகாக்கு மிவனேபுவிராஜன்
ஆனலினிமேல் அச்சங்களொன்றுமில்லை
போனலும்நம்முடைய புவியிவனேயாள்வனென்று
செலுத்துவான்செங்கோல் திருமாலருளாலே
அலுத்தயர்ந்துதானிருந்த ஆலோசனைகளெல்லாம்
இன்றைக்குத்தீர்த்தோம் இனிமேற்கிலேசமில்லை
குன்றைக்குடைபிடித்த கோபாலர்தன்னிடத்தில்
போகலாமென்று பூரித்துப்பஞ்சவர்கள்
ஏகலாம்நன்ருய் இனிமேல்மயங்காமல்
என்றுபரிசித்துவையும் இங்கேவரவழைத்து
ஒன்றுமுரையாமல் உலகாள்வீரென்னுளும்
நாங்கள்வைகுந்தமதில் நடக்கவழிகாட்டிப்
போங்களென்றுசொல்லும் புண்ணியனே நீதானும்

மனதுசலியா மல் வாழ்த்திமிகமகிழ்ந்து
எனதுமனங்குளிர இன்பமுடன்சொல்லுமென
விம்மல்மிகுத்து வெகுண்டுபரிசித்துவுந்தான்
செம்மல்மலர்விழியாற் றிரண்டுகண்ணீர்தானோட
அய்யரேஎன்னைவிட்டு ஐவருந்தான்போனக்கால்
உய்யவேநானும் உடைந்திடைந்துபோகவேதான்
விட்டுப்பிரிந்தால் விளங்குவனோயான்பாவி
மட்டுப்படாச்செல்வம் வாழ்வுமிகவிழந்து
என்னைத்தனியவிட்டு ஏகினீராமாகில்
முன்னைப்பயனோ முடிந்தவிதிப்பயனோ
தந்தையைப்பெற்றவர்கள் தாரணியையாண்டிருந்து
விந்தையாயிந்த மேதினியைவிட்டிழிந்து
நடந்துசடத்தோடே நாம்போறோமென்றுசொன்னால்
தொடர்ந்துவருவேனான் தூர நீர்போனாலும்
கண்டிருக்கநானுங் காவலரேபோறோமென்றால்
விண்டிருக்கப்போமோ வித்தகரேயென்றாலே
சடத்தையிங்கேபோட்டுத் தப்பிவுயிர்போனாலும
சடத்துக்குள்ளதெல்லாந் தான்கருமம் நான்முடித்து
மறந்திருப்பேன்கண்டீர் மாநிலத்தோர்புத்திசொல…
இறந்துசடமொழிந்தா லெனக்குக்கிலேசமில்லை
உயிரோடேநாம்போறோ மூலகாளுமென்றுசொன்…
தயிரோடேநீர்பிரிந்த தன்மைபோலாவேனோ
ஊரிருக்கநாடிருக்க உற்றஜனந்தானிருக்க
பேரிருக்கநீர்போகும் பேச்சறியேனையாவே
எந்தவிதமென்று எனக்குவகைசொல்லுமிப்…
அந்தவசனம் அரியதர்மர் தானகேட்டு
மைந்தனை மகன்மனது மலையாமல்வார்த்தை…
கந்தமலர்க்கையாற் கட்டியுறவணைத்து
முகந்துமடியில்வைத்து முதுகுதனைத்…
மகன்றன்குழந்தை மனதுவாரவார்த்…
அமர்த்தியிருமென்று றவ்வாதுசம்…

சமர்த்தன்பரிசித்துவுந்தான் சாந்தமாய்நல்லதென்று
நல்லவழிசென்று நாரணரைத்தானோக்கி
செல்லுமென்றுநல்வசனம் செப்பினாம்மானை
மற்றுமுள்ளமன்னர் மகுடமுடிவேந்தருக்கும்
புத்தியுடன்சொல்லப் புகுந்தாரரண்மனையில்
தாயாரிருக்குந் தனிமாளிகைநோக்கி
ஆயாளிருக்குமந்த ஆசனத்தின்முன்னேகி
விழுந்துநமஸ்கரித்தார் வேதியரும்தம்பியரும்
அழுந்தத்தடவி ஐவரையும்முத்தமிட்டு
குழவேமைந்தருடன் தாயாற்றிருக்கையிலே
தாழமொழிபேசி தர்மருந்தம்பியரும்
தாயேசரணம் சலிப்பொன்றும்பேசாமல்
ஆயேநீயெங்களுக்கு அன்புடனேஇன்பமதாய்
பாயோனிடந்தனிலே வைகுந்தஞ்சேர்ந்திருக்க
நீயேகுமென்றுசொல்லி நேர்ந்துமொழிபுகன்று
சந்[illegible]ஷமாகத் தானனுப்பவேண்டுமிப்போ
எ[illegible]வேறென்றும் எண்ணமலன்புடனே
[illegible]ன்று ஐவருமேதான்கேட்க
[illegible]க்கா ளென்னைவிட்டுநீங்களுந்தான்
[illegible]ன்றுமுபசரித்து
[illegible]ன்றீயேதிரிய
[illegible]
[illegible]றந்து
[illegible]
[illegible]ருகி
[illegible]களற்று
[illegible]ர்ந்து
[illegible]ளில்
[illegible]துமுடியாமல்
[illegible]க்கிரமேமித்திரரே

வாரமென றமக்களுடன் மண்ணில்விழுந்தழுது
தந்தையருமில்லாமற் தனித்துநா னுங்களையும்
சிந்தைமயங்காமற் சிறியோர்பெரியோராய்
ஆகுமட்டுந்தான்வளர்த்த அன்னையல்லோஎந்தனையும்
சாகவிட்டுப்போகச் சம்மதியோவுங்களுக்கு
அந்தநாளெங்க ளன்னைபிதாவிடத்தில்
குந்தமாதேவியென்று குழந்தையாய்நானிருந்தேன்
சொல்லரியவேதத் துர்வாசமா முனிவர்
வெல்லரியகுந்திபுரம வீதிவழிவந்தளவில்
எங்களையர்கண்டே இருமென்று ஆதரித்தார்
அங்கவருந்தங்கி அமர்ந்திருக்கும்வேளையிலே
அஞ்சுவயதான ஆரணங்குகையாலே
மிஞ்சமொருசனமயல் விதமாகத்தான்முடித்து
அன்னம்படைத்தா லமுதுண்டுபோவேனென்றார்
என்னமுனிசொன்னளவில் எங்களையரெந்தனையும்
அவர்க்குப்பணிவிடைசெய் யம்மாவெனவுரைத்தார்
இவர்க்குமனதுவர இன்னம்பலகறிகள்
அன்புடனேதான்சமைத்து அமுதுபடைத்துவந்தேன்
இன்பமுடனமுதுண் டேகுகின்றநாளையிலே
சந்தோஷம்வந்துமுனி தனியேயெனையழைத்து
மந்திரமோரைந்து மகிழ்ந்துரைத்தாரெந்தனுக்கு
வேதமுனிசொன்ன வித்தைதனைவைத்திருந்தேன்
நீதமுள்ளபாண்டுவைத்தான் நிச்சயதாம்பூலமிட்டு
கலியாணஞ்செய்தார் கருத்துடனேவுண்மைசொன்னார்
வலிமையா நீங்கள் வருவதற்குமார்க்கமதாய்
உங்களையர்தம்மிடத்தி லுண்மைசொல்லிநான்கேட்க
அங்கவர்தான்சொன்ன அன்பானமந்திரத்தால்
தோன்றத்தவமிருந்து தொல்லுலகிற்புத்திரரை
ஈன்றுபுதல்வரையும் எந்திமுலைகொடென்றார்
அப்படியேதப்பாமல் அவர்சொல்லைமீறாமல்
இப்படியாயுங்களைநா னீன்றெடுத்துக்காப்பாற்றி

தாயாதிக்காரர் சதிகேடர் நாடதனில்
மாயாதேஉங்களையும் வளர்த்தேனி அவரையும்
என்னைவிட்டுப்போக எழுந்ததோஉங்கள்மனம்
அன்னையென்றுசொல்லி யருகிருந்துபோற்ருமல்
பிள்ளையில்லாத பெருமலடிபோலாகி
கிள்ளையில்லார்போலக் கிலேசமுற்றுவாடுவேனே
குந்திமைந்தரைவரென்று குவலயமெல்லாமறிய
முந்தித்தவமிருந்து மூன்னூறுநாட்சுமந்து
பெற்றெடுத்ததாய்வயிற்றிற் பெருந்தழலைத்தான்மூட்டி
வைத்துவிட்டுப்போமென்றுமன துவந்துபேசுவீரோ
ஈன்றெடுத்ததாய்வயிறு எரியவோவென்னிடத்தில்
தோன்றவெனக்குத் துயர்வருத்தவந்தீரோ
மக்களல்லவேயெனக்கு மாற்ருன்போலானீரே
பக்கமுள்ளபேருதவி பண்ணுவாரோவெந்தனுக்கு
தர்மரேவீமரே சகாதேவதம்பியரே
நன்மையிதுதானே நகுலா அருச்சுனரே
இம்மைதனிற்பாவம் என்னளவில்வந்ததுவோ
சென்மப்பலதானெடுத்துஞ் சிரிப்பார்க்குள்ளானேனே
இத்தவிதிவசத்தா னென்தலையிலேஅயனும்
மைந்தரில்லையென்று வகுத்தெழுதிவிட்டானே
அருமையுடன்பெற்றெடுத்த ஐவரேதமபியரே
பெருமையாவுங்களுக்குப் பேசவந்தகாரியந்தான்
இத்தனையுஞ்சொல்லி யிறைந்தழுதாள்குந்தியம்மாள்
கர்த்தனேயேநொந்தழுது கண்ணீர்சொரியலுற்ருள்
தண்ணீர்தனைவாங்கித் தாய்முகத்தைத்தான்துடைத்து
கண்ணீர்துடைத்தைவர் காலிலேதான்விழுந்து
எந்தனுடமாதாவே எங்களையுமேபழிக்க
வந்தகலிததிரத்தில் மாயாமலெங்களையும்
சத்தியவாய்மை தவருமல்நீகாத்து
நித்தியமுமிங்கே நீனிலத்திலேயிருந்தால்
புத்திகலங்கிப் பொறிகலங்கிப்பொய்யாகி

பத்திகலங்கிப் பஞ்சவர்கள்கொஞ்சமதாய்
மெய்வார்த்தைசொல்ல விரதம்படித்தவர்கள்
பொய்வார்த்தைசொல்லப் புலையராய்மானிலத்தில்
சிரிக்கவுடம்பெடுத்துத் திரியாயலெங்களுக்கு
விரிக்கும்பரலோகம் மெய்யுடனே நான்சேர
துதிக்கும்படியாய்த் துயரமற்று நீர்தானும்
விதிக்கும்படியாய் விளம்புவீர்மாதாவே
உனக்குப்பரித்தே உகந்தபிள்ளைபெங்களைப்போல
தனக்குத்தான்வேணுமென்ற சவுபாக்கியத்துடனே
அன்னசுற்றமெல்லா மருகிருந்துபோற்றிசெய்ய
சொன்னபடிகேட்கத் துரைமக்கள்தானிருக்க
ஆறுலுனக்கு அச்சுதனார்தன்பாதம்
வாழுள்முடிந்து வரும்போது நாரணனும்
நாங்களுங்கூட நடந்தெதிரேவந்துநின்ற
பாங்குடனேவைகுந்தப் பதியிலே நீயிருக்க
மூன்னேபோய்நாங்கள் முற்றுந்தனதாக
அன்னேயிருப்போம் அழவேண்டாந்தாயே நீ
தாயேதவங்குலைந்து தவங்கெட்டுப்போகாமல்
நீயே துணையாக நேசமுடன்புத்திசொல்லி
கன்மக்கலியுகத்தைக் கடந்துகரையேறி
தன்மந்தவருமற்றுயேசலியாமல்
அக்காலஞ்சென்று அழைக்கவந்தகலர்கையில்
சிக்காமல் நீரும் சிந்தைமகிழ்ந்தருள்வீர்
இறப்பதுவுமெய்யாகும் இருப்பதுவும்பொய்யாகும்
சிறப்பதுகாண்மாதாவே செல்வர்தனையனுப்பும்
ஆகாசம்பூமி யத்தாமுள்ளளவும்
போகாதுதர்மம் புகழேபெரிதாகும்
எனக்குமென்தம்பியர்க்கு மிடமுமினிமேலும்
உனக்குமிருக்க உதவியேநாங்களுந்தான்
இடம்பிடித்துயங்கே யில்லிடமுந்தான்சமைத்து
உடம்படிக்கைபண்ணி உலகளந்தான்தன்னிடத்தில்

வீற்றிருக்கவேண்டி விரும்பியனுப்பிவிடும்
நேற்றிருந்தாரின் றிருக்க நிச்சயமில்லாதவுடல்
சதமல்லநாளுஞ் சதமே அவ்விடமம்மா
நிதமுஞ்சிவபூசை நியமிவுதப்பாமல்
அவ்விடஞ்சதமென்று ஆத்மத்தைசுத்திபண்ணி
இவ்விடஞ்சதமல்லவென்று எங்களைத்தானனுப்பும்

குந்தி தன்மைந்தரைத் தூபேர்க்கும் வைகுந்தம்
போகவிடை கொடுத்தது,

மாதாவேதாயே மனங்கள்சலியாமல்
நீதான அப்புமென்று நீதியுடன்பாதமதில்
வீழ்ந்தார்சரணமென்று மெய்மகிழ்ந்துமாதாவும்
தாழ்ந்துமனதிரங்கித் தம்பியரேபோமெனவே
நீறுதரித்துநெடியோனையேநினைத்து
வேறுவினைவாராமல் வேதநாராயணரே
காருமென்றுவாழ்த்திக் கைநீறுவானணிந்து
சேருமுந்தன்பாதந் திருமாலேஐவரையும்
என்றுகுந்தமாதேவி யின்பமுடன்றானனுப்ப
மன்னுபுகழ்காந்தாரி மனைநோக்கியேநடந்தார்
காந்தாரிவீற்றிருக்குங் கனகமணிமாளிகையில்
பூந்தாரிவர்கள் புதியமனைபுக்குள்ளாக
கண்டாரடிபணிந்தார் காந்தாரியம்மனையும்
கண்டமைந்தரைவரையுங் கட்டியுறவணைத்து
மைந்தருக்குநல்ல வார்த்தையுபசாரமுடன்
ஐந்தருப்போல்தானிருந்த ஐவரையுங்கொண்டாடி
சிந்தைமகிழ்ந்துருகித் தேன்மொழியாள்தானிருக்க
அந்தமொழிதெரிந்து ஐவருந்தான்மார்க்கமதாய்
எந்தாயேமாதாவே இப்போதேயெங்களையும்
சந்தோஷமாகத் தானனுப்பவேண்டுமிதோ
கலியன்பிறந்தான் காரணமாயிங்குவந்தான்
சலியாமலெங்களையுந் தாயேயனுப்பிவிடும்

வைகுந்தஞ்சேர்வதற்கு வாழ்த்திவிடை தாரும்
கைகொண்டு நீறுதவுங் கலியனுக்குள்ளாகாமல்
என்றுதர்மர்கேட்க ஏங்கியேகாந்தாரி
ஒன்றுமுரையாமல் ஊசலிட்டுப்பேசாமல்
என்னிடத்தில் நீங்களுந்தானேதுக்குவந்தீர்காண்
உன்னிடத்தே நம்பி உற்றதுணையென்றிருந்தேன்
பாபாவிகிட்ட மைந்தரேவந்தீர்காண்
பூபாலரைவர் போதுமென்றுதானிருந்தேன்
நூற்றுவருமாண்டு நொந்திடைந்துமண்மீதில்
காத்திருந்து நானுங் காலம்முடியுமட்டும்
நீங்கள் துணையென்று நீணிலத்தில்தானிருக்க
நாங்கள்பயணமென்று நன்றாகச்சொல்லவந்தீர்
முன்செய்த தீவினையோ மூதாக்கள்செய்ததுவோ
பின்செய்த தீவினையோ பெருமாளின் கற்பனையோ
அந்தமைந்த நூற்றுவரும் ஆசிழந்துபோனாலும்
இந்தமைந்தர்போதும் இங்கேயெனக்குதவி
ஆமென்றுநம்பி ஐவரையுமுண்டெனவே
நாமொன்றுதானினைக்க நடுதின்றேனபேதகமாய்
தானேமுடித்துவைத்தால் தம்பியரேதுசெய்வோம்
நானேதுசெய்வேன் நாயகமேதம்பியரே
நாளுஞ்சரியாக நடையுடையும்வேறுச்சு
வாழும்புவியைவிட்டு வருவதுவுமங்காச்சு
போங்காலமென்றனக்குப் புத்திரருமில்லாமல்
சாங்காலம்வந்திருக்கத் தம்பியரேயென்னைவிட்டு
ஏகிடுவீரோயானால் என்றனக்குவேறுதுணை
ஆகிலும்நான்காணேன் ஐயரேயென்றழுதாள்
பெற்றும்பெறாமல் பெருமலடியானேனே
சற்றுமிரங்காமல் தர்மரேபோரமென்றீர்
மாளக்கொடுத்த மனச்சலிப்போமாறுமுன்
ஆழக்குழிதனிலே அழுந்தவிட்டுப்போவீரோ
பக்கத்துணையில்லை பரிந்தமுகப்பிள்ளையில்லை

துக்கத்துடனிருக்கச் சொல்லிவிட்டுப்போனீரோ
ஆராரிருந்தாலென்ன யானைகட்டிவாழ்ந்தாலென்ன
தாராருமைவரைப்போற் சகாயமெனக்குண்டாமோ
செய்யுஞ்சடங்கு தீக்கடனும் நீர்க்கடனும்
கையுங்கணக்குங் கடனுங்கழியாமல்
போகவழிகேட்டீரோ புத்திரரேயெத்தனையும்
ஏகவழிபார்த்து இருந்துபுலம்புவனே
யோசனைகள்சொல்லெனக்கு உற்றவிசேடமதாய்
வாசனைசேர்தர்மரே நீர் மகனேயுரையுமென்றாள்
அந்தமொழிகேட்டு அன்புடனே தர்மருந்தான்
வந்தவழிசொல்லுகிறேன் மாதாவே நீர்கேளீர்
என்னுடையதன்பிறவி ஏற்றதொருநூற்றுவரும்
மன்னுகுருவாசாரி மகுடமன்னரெல்லோரும்
உற்றதொருமைத்துனனும் உடன்பிறந்தார்சுற்றமுதல்
பற்றவேகொன்று பாராண்டேன்மாபாவி
ஆண்டுமுடிந்ததுகாண் அவர்களுடன்நான்போக
வேண்டுமிதுகாலம் விதியும்வெளிவசமாய்
காலஞ்சரியாகிக் கலியுகமும்வந்ததுகாண்
கோலஞ்சமைந்திருந்த கூற்றுஞ்சரியாச்சே
இனிமேற்கலியுகத்தி லிருந்தேனேயாமாகில்
அனியாயம்போலவும் அகந்தையும்உண்டாகும்
இடும்புகொலைகளவு ஏராளமாகிவிடும்
நெடும்புவியிலுள்ளே நீதிநடவாது
அந்தத்துவாபரத்தி லனேகதயவுதன்மை
இந்தக்கலியுகத்தி லெய்தாதுதானதவம்
நன்றுசெய்வோமென்றால் நமக்கறிவுவேறாகும்
குன்றிவிடும்புத்தி குறுகுங்கலிகாலம்
ஆனதினாற்றாயே அடியேன்பயந்துவந்தேன்
தானதவமிழந்து தர்மமென்றபேர்போகும்
பேருந்தவமும் பெருமையுந்தான்போகாமல்
காருமென்றன்மாதாவே கலியன்வசமாகாமல்

உன்றனக்குநல்ல உதவிசெய்யப்பாலகன்ருன்
என்றனுக்குப்பேரன் இலங்குபரிசித்துடனே
வேந்தர்மகுடமன்னர் வீரபரிவாரமுடன்
சேர்ந்ததுரைமக்கள் சேனைதளத்துடனே
இருக்கிருருன்றனக்கு ஏவல்செய்யவேண்டியபேர்
உருக்கமாயெங்களை நீ ரொன்றுந்தடைபண்ணுமல்
வாக்குத்ததும்பாமல் மனதுதடுமாருமல்
நோக்குமொருநினைவாய் நோகாமலொருவசனம்
சொல்லியனுப்புந் துரோபதையுமெங்களையும்
செல்லவிடைதாருமம்மா திருவாக்காலென்றுரைத்தார்
ஐவருந்தான்கேட்க ஆனதொருகாந்தாரி
மெய்வருந்திநல்வசனம் விரும்பிவிடைகொடுத்தாள்
விடைவாங்கிஐவருந்தாம் விழுந்துநமஸ்கரித்து
அடைவோங்காண்வைகுந்தம் அச்சுதனூர் தம்மிடத்தில்
வென்றுகலியுகத்தை விட்டுவெளியில்வந்தோம்
இன்றுபிழைத்தோம் இனிமேற்கிலேசமில்லை
நமக்கினிப்பயமில்லை நடப்போமெனத்துணிந்தார்
சுமக்குஞ்சுமையிறக்கித் துன்பமதைத்தான்கழித்தோம்
கேட்டவரங்கொடுக்கும் கிருஷ்ணுவுனக்கபயம்
நாட்டமுடனுங்கள் நல்லவழிநடந்து
வாட்டமறவாதவற்கு மாயவனே நீதுணையாய்
தேட்டமுடன்வந்து திருவுமேகாத்தருள்வாய்
வழித்துணையாய் நில்லும் மாலேசரணமென்று
கழித்துமனமகிழ்ந்து கண்ணர்தனைநோக்கி
நாற்றிசையும்பார்த்து நமஸ்கரித்துநன்ருகத்
தோத்திரஞ்சொல்லித் துணிந்துநடக்கலுற்ருர்

விருத்தம்.

மாத்திரைப்போதானலும் மாயனைமறந்துபாரில்
கோத்திரத்துடனேகூடிக் குலவிடமாட்டோம்நாங்கள்
பாத்திரமறிந்துவேத பாகதிசெல்லவாரோம்
சூத்திரத்துடனேவந்து துணைசெய்வாய்கரியமாலே.

இதுவுமது.

நாடிநடந்துதாவானேன்ராம் நகரும்பதியும்விட்டேகி
கூடிநடந்துவழியேதான் குறித்துநல்லதிசைநோக்கி
வாடியிடைந்துமருகாமல் மனமேதானுயுட்புகுந்து
தேடிமயங்கித்திரியாமல் சேர்வோமெமதுதிருமாலே.

இதுவுமது.

சித்தன்போக்குஞ்சிவன்போக்குஞ் சீவன்போக்கும் போலாகி, மத்தன்போக்கும் மதம்போக்கும் வானத்திருந்த மழைப்போக்கும், கத்தன்போக்குங் காரியந்தான் கண்டார் விண்டார்கொண்டாரோ, சத்தம்போக்கோமினிப்பேசோம் சமையமினிவா கோபாலா.

இதுவுமது.

சரணஞ்சரணங்கோபாலா சாமிசரணந்தருவாய் நீ
கரணம்பொறிபுலன்குணங் காமக்குரோதமணுகாமல்
திரணமிதுவேசடமாகத் தீரமிதுவேபெரிதாக
மரணமறியாதுடலாகி வந்தாட்கொள்ளவருவாயே,

இதுவுமது.

வழியிற்பயங்கள் தடையிடைகள் மற்றுமுளதோர் விக்கினங்கள், தெளியப்படுத்தி யடியார்கள் திகைத்து பலைத்துநில்லாமல், பழிகள்வினைகளணுகாமற் பால்போலுளமும் பூரணமாய் வெளியிலறிவு வெளியாகி வெளியே வருவாய் பெருமானே.

கருத்தைப்போருளாய்த் திரப்படுத்திக் கன்மக்காட்டையறுத்தெரிந்து, திருத்தியறிவை நிலைநிறுத்தித் திருந்தாப்புலனை வேரறுத்துக், குருத்தைக்கொழுந்தை முனைகூட்டிக்கொழுகொம்பேறவகைபடுத்தி, இருத்தி நடத்திவழிகூட்டும் எங்கள்பெரியபெருமாளே.

நானேநேர்வசனமல்லாது நாவிலிரண்டு சொல்லறி யேன், தானேதானுந்தனத்தாகித்தனக்குந்தானே நினை வாகி, ஏனேவெனைத்தானுண்டாய் நீ இகத்திலெவர்க்குந் தெரியவேதான், வானோறிய வழிகாட்ட வருவாய் பெருயபெருமாளே.

தேசமிழந்து ஜெகமிழந்து சேனைதளங்கள் தானி ழந்து, வாசமிழந்து மனையிழந்து மைந்தர்பெண்டிர் த னையிழந்து, பாசமொழிந்து பகைபொருந்துன் பாதம லரேபொருளாகி, நேசமிகுந்த நினைவதிலே நின்றே வளர்ந்த பெருமாளே.

ஐவருந்துணிந்து வாரோம் அவிடமே கெதிகள் என்று, தெய்வமே பொருளா யெண்ணித் தெரிசிக்கக் காணக்கண்கள், மெய்வளர் திருமால்பாதம்வேண்டிவை குந்தஞ்சேரக், கைதருமாலே போற்றி கருணையங்கடவு ளானே.

ராகவாமுகுந்தாபோற்றி ராஜகோபாலாபோற்றி
ஏகமாய் நின்றாய்போற்றி யெம்பெருமானேபோற்றி
போகநாயகனேபோற்றி புனிதநாயகனேபோற்றி
நாகமேற்றுயின்றாய்போற்றி ராமனேபோற்றிபோற்றி
மந்திரப்பொருளேயுனை வழுத்தியே துதித்துப்போற்றி
தந்திரத்துடனேயென்றன் தம்பிமார் நாலுபேரும்
ஐந்தருகுழலினாளும் ஐவரோடாறுபேரும்
சந்திரவரைவைகுந்தந் தன்னையேநோக்கிவாரோம்
அரிகரிராமராமா அச்சுதாநந்தகோபா
கரியமாலுந்திபூத்த கார்முகில்மேகவண்ணா
பிரியமாயவனியீன்ற பிரமனைப்பெற்றமாயா
உரியவாபதவிசேர உகந்தைவர்வாரோம்வாரோம்

கதை.

பஞ்சவரகளேவருடன் பத்தியுள்ள துரோபதையும்
கஞ்சமலர்வைகுந்தங் காணவென்றுதானடந்தார்
நடந்ததொருபஞ்சவரை நல்லபரிசித்துவுந்தான்
தொடர்ந்துவழிவிட்டுத் தொழுதுநமஸ்கரித்து
சேனைபடைத்தலைவர் ஜெகவேந்தரெல்லோரும்
ஆனைபரிரதமும் ஐவரையுந்தான்தொழுது
வந்தார்களத்திபுரம் வகுடமுடிமன்னரெல்லாம்
நொந்தாரிடைந்தார் நோக்கிவனம்போனவர்மேல்
காசினியரெல்லாம் கலங்கிமனம்வெருகி
வாசனைசேரைவர் வனம்போனாரென்றுசொல்லி
கோவென்றபயமிட்டுக் கொற்றவரைக்காணுமல்
பாவமோவென்று பரதவித்துநிற்பாரும்
அய்யோசிவனே ஐவரையுந்தானிழந்து
மெய்யோபுவியை விரும்பியிருப்போமோ
மன்னர்மன்னரெல்லோரும் மனைகள்தனிலிருந்து
தென்னவரைக்காணுமல் தேடிநினைப்போரும்
ஆராரிருந்தாலென் ஆனைகட்டிவாழ்ந்தாலென்
தாயாருமைவரைப்போற் ருரணியிற்கிட்டாதே
போனவழிபார்த்துப் புலம்பித்தவிப்போரும்
தானவனேயென்று தலைவிரித்துநிற்போரும்
வஞ்சனைகள்செய்தோமே மாபாவியானேமே
பஞ்சவரேஉங்களுக்குப் பாவிகளுமானேமோ
உங்களையும்விட்டு உலகிலிருப்போமோ
எங்களையும்விட்டுநீ ரிருக்கமனதாமோ
ஊரிருக்கச்சேனை யுலகேழுந்தானிருக்கச்
சீரிருக்கநீரும் தேசமிழந்தீரோ
பாரிருக்கச்செல்வம் பரிகரிகள்தானிருக்க
தேரிருக்கவாழ்ந்த தேசம்விட்டுப்போனீரோ
தாரிருக்குமார்பா தனஞ்செயனேயிங்குவுள்ள

பேரிருக்க நீரும் பிறதேசம்போனீரோ
மாடமிருக்க மனைவிமக்கள் தானிருக்க
கூடமிருக்க குடியிழந்துபோனீரோ
தாழ்வில்லாச்செல்வம் சகலபொருள் தானிருக்க
வாழ்வில்லாவாழ்விழந்து வனவாசம்போனீரோ
தன்மரேவீமரே தனஞ்சயரே தம்பியரே
நன்மைசெய்து நீங்கள் நாடிழந்துபோனீரோ
துடியிடையாள்சோர துரைமக்கள் தான்சோர
அடியெடுத்துவைத்து அவனிவிட்டுப்போகலாமோ
குந்தியம்மாள் தானிருந்து குழந்தைகளையே நினைத்து
அந்திசந்திதேடி யழுதகுரல்கேட்கலையோ
வேதாவிதித்த விதியின்படியெனவே
மாதாவழுதகுரல் வைகுந்தங்கேட்கலையோ
சாந்தமருந் தன்கிளையுஞ்சார்ந்தநலசுற்றமுடன்
காந்தாரிகூவென்று கதறினதுகேட்கலையோ
காலங்கலியுகத்தைக் கடந்துவழிகூடி
கோலங்கள்கொண்டு கூட்டோடேபோனீரோ
கூடுகொண்டுபோன குருகுலத்துமன்னரென்று
நாடுள்ளமட்டும் நடக்குமென்றுபோனீரோ
மெய்கண்டஐவரென்று மேதினியார்கொண்டாட
வைகுந்தஞ்சேர மனந்துணிந்துபோனீரோ
ஆனலினிமேல் ஐவர்செயலுண்டெனவே
மானபிமானமுடன் வாழ்வோம்புவிமீதில்
என்றுமன்னர்கூடி யிருந்தமன்னர்மந்திரிமார்
சென்றுபரிசித்துமனந் தேற்றியுபசரித்து
பூடுலகந்தாங்கும் புரந்தரனேயிப்போது
ஆலோசனைகள்பண்ணி யழவேண்டாமென்றமர்த்தி
வழிவசமாய்நாளும் மனதைமிகத்தேற்றி
களிகூர்ந்திருமெனவே காவலருங்காத்திருந்தார்
காத்திருந்தமன்னரையுங் காவலர்கள் தங்களையும்
பார்த்திருந்துசொல்வான் பரிசித்துமகாராஜன்

குந்தியம்மாள்பாட்டியவள் கூவென்றழுதசத்தம்
புந்திகலங்கிப் பொறிகலங்கிப்போகுதையோ
அந்தமனத் துயரம் யாவரும்போய் ஆற்றுதற்கு
எந்தனுடன்கூட வெழுந்தருளுமென்றுரைத்தான்
அந்தமொழிகேட்டு அரசமன்னர்தான்கூடி
வந்துகுந்திமாதேவி மனச்சலிப்புதான்தீர்த்து
காந்தாரிமாளிகையிற் கட்டுடனேதானடந்து
பூந்தாரிருந்தார் பொற்கொடியாள்தன்சலிப்பும்
வேண்டாமெனத்தீர்த்து வீற்றிருந்தாரம்மானே
காண்டாவனமெரித்த கண்ணுதலோன்தன்புதல்வன்
பார்வேந்தர்போற்றப் பரிசித்துமன்னனுந்தான்
தார்வேந்தர்கொண்டாடத்தாரணியையாண்டிருந்தான்
தேசக்குறிப்புந் தெரியவடித்தெழுதி
வாசக்குடிதளைக்க மனுநீதிதப்பாமல்
அரசருடசீமை யடங்கலெடுத்தெழுதி
விரசுப்படிக்கு விபரமாய்க்கண்டெழுதி
மன்னரமைச்சர் மற்றுமுள்ளோர்தங்களுக்கு
அன்னசொன்னமாடை யாபரணந்தானீய்ந்து
ஆனைபரிகளடங்கலுமிப்படியாய்
சேனைதளந்தனக்குச் செல்லும்படியெழுதி
வாசல்வழிகள் மனையாட்சியுள்ளதுக்கும்
ரோசுபடிச்சிலவு ரொக்கமாய்த்தானடத்தி
வேதியர்களந்தணர்கள் வீரசைவபூமிகாக்கும்
ஓதியதபோதனர்க்கும் உள்ளபடிதான்கொடுத்து
நீதிவழுவாமல் நெறிமுறைதப்பாமல்
சாதிமுறைமை தவங்குலைந்துபோகாமல்
அகுதிபரதேசியரும் அவதியொன்றுசொல்லாமல்
பகுதியுமோ ஆறிலொன்று படியேடுதப்பாமல்
தெய்வத்தலங்கள் சிறப்புடையபூசைகளும்
அஜவரிருந்தது போலவனியெல்லாங்கொண்டாட
கொலுவிலிருந்தான் குவலயங்கள்போற்றிசெய்ய

வலுவானவாள்வீமன் மகனுடையசிங்காரம்
மன்மதனுமென்று மாற்றுசிலபேர்கள்
தன்மராமென்று வாழ்த்துஞ்சிலபேர்கள்
வில்லியுடதன்போன் விஜயன்காணென்பாரும்
சொல்லரியவீமன் துரந்தரிகாணென்பாரும்
நகுலசகாதேவன் ராஜனிவனென்பாரும்
மகுலபுகழ்நகுலன் மன்னன்காணென்பாரும்
ஐவர்குலந்தனக்கு அரசுநிலையென்பாரும்
சைவர்சமையந் தழைக்கவந்தானென்பாரும்
குருகுலத்தில்வந்த குலக்கொழுந்தேயென்பாரும்
பெருகுதமிழ்வளரும் பிரபலன்காணென்பாரும்
கனநிதிகொடுக்குங் கர்ணர்காணென்பாரும்
தனதனெனுங்குபேர தனபதிகாணென்பாரும்
ராஜாதிராஜனிவன் ராஜசிங்கனென்பாரும்
போஜனிவனென்று பூரித்துநிற்பாரும்
பாராளவந்த பாராஜனென்பாரும்
சீரானநால்வகைக்குஞ் சீமான்காணென்பாரும்
மீதானசெல்வம் விளங்கவந்தானென்பாரும்
ஆதாரமாய்ப்புவியை யாளவந்தானென்பாரும்
வங்கிஷக்கட்டு வரப்பழிந்துபோகாமல்
அங்கிஷங்காக்கவந்த ஆண்பிள்ளைகாணென்பாரும்
எல்லோரும்வாழ்த்தியினி யெண்ணமில்லையென்பாரும்
பல்லோரும்போற்ற பார்த்திபன்போல்வீற்றிருந்தான்
தேசமெங்குங்கொண்டாடச் சிங்காதனத்திருந்து
ராசனெனயோகம் நடத்தும்படிகேளீர்
நந்தவனந்தோப்பு நாலுதிக்கும்நின்றிலங்க
சந்தனச்சோலைகளும் சாலைகளுஞ்சூழ்ந்துநிற்க
செண்பகச்சோலைகளுஞ் செங்கழுநீரோடைகளும்
பண்பானதெங்கு பலதிக்குஞ்சூழ்ந்துநிற்க
பூமரங்களெங்கும் பூமலர்கள்தானசொரிய
மாமரங்களெங்கும் வளமாய்ப்பழஞ்சொரிய

தேங்குபலாவி லுப்பை சிறந்தநெல்லியாரஞ்சி
கோங்குகமுகுபுன்னை கூட்டாய்ச்சூழ்ந்து நிற்க
கன்னல்கதலி கதிர்குலைகளீன்று நிற்க
செந்நெல்வயலுஞ் செந்தாமரைத்தடமும்
செல்வமுடன்தேசஞ் சிறப்பும்அரசிருப்பும்
வில்வவனஞ்சூழ வீற்றிருக்கலட்சுமியும்
பூங்காவனமும் புதியமலர்ச்சோலைகளும்
பாங்கானவாவிகளும் பதியும்பதிச்சிறப்பும்
கோபாலர்தன்பேரன் கொற்றவன்போல்வீற்றிருந்தான்
பூபாதனுயிருந்து பூமியிவனுளைகையில்
மந்திரிமார்வந்து வாய்புதைத்துச்சேதிசொல்ல
தந்திரிமாரெல்லோருஞ் சரணமென்றுபோற்றிசெய்ய
மன்னனரசிருக்க மண்டலத்தோர்காத்திருக்க
தென்னவர்கள்வந்து திறையிட்டுக்காத்திருக்க
அரசரொடுசேனை ஆனைபரிதாமும்
முரசொலிகளார்ப்ப முடிமன்னர்சூழ்ந்திருக்க
கிடிபிடிகளார்ப்பக் கெடிமன்னர்காத்திருக்க
துடியதிரப்பேரிகைகள் துரைமக்கள்காத்திருக்க
காளமொடுபேரிகையுங் கனகதப்புதான் முழங்க
தாளமொடுபல்லாரி சங்குந்தொனிமுழங்க
கைத்தாளமேளங் கடல்போலவேமுழங்க
சேகண்டிநாகசின்னம் ஜெகமெலாந்தான்முழங்க
ஆகண்டலன்போலே அரசன்கொலுவிருக்க
ஆலாத்திப்பெண்கள் அலங்காரமாக நிற்க
தாலாத்திருவிளக்கு சமுகத்தைச்சூழ்ந்து நிற்க
மெல்லிநல்லார்கையால் விசிறிசுழற்றி நிற்க
மல்லிமருங்கிடையார் மதுரகவிபாடி நிற்க
மின்னனையபெண்கொடியார் வெண்கவரிதான்வீச
பொன்னணிசேர்மாதரெலாம் பூமலர்கள் தான்சொரிய
பாவாடைவீசப் பாவாணர்கொண்டாட
நாவாணர்பாட நாட்டியப்பெண்ணுடிவர

கொற்றக்குடை நிழற்றக் கும்பக்குழலுடனே
மத்தகெஜமீதேறி மன்னன்பவனிவர
ஆலவட்டஞ்சூழ்ந்துவர அதிவீரர்முன்னடக்க
பீலிவட்டஞ்சூழ்ந்துவரப் பேரணிகள்பின்னடக்க
சந்திரகாவியின்டால் தளத்துடனேசேர்ந்துவர
இந்திரவிமானமது இணையாய்நெருங்கிவர
சாந்துசவ்வாதுடனே சாம்பிராணிதான்வீச
ஏந்துமுலைமாதர் இருபுறமுமாடிவர
கட்டியங்கள்கூறக் கனவிருதுமுன்னடக்க
பட்டணமுங்கோட்டைகளும் பவனிவலமாக
பார்த்துமிகக்கொண்டாடி பரிசித்துமன்னனுந்தான்
தூர்த்தர்களும்போற்றிசெய்ய துரைமகனும்பவனிவர
வந்துகொலுவில் மகாராஜன்போலிருந்தான்
வேதியரைத்தானழைத்து விரையவாவேணுமென்று
ஓதினான் தூதுவன்பால் ஓடினான் தூதுவனும்
அந்தணர்கள்தன்தெருவில் அந்நேரந்தானோடி
கொந்தலரும்வேதியனார் குடியிலிருந்தவரை
கண்டுநமஸ்கரித்துக் காவலரேவேதியரே
அண்டர்பெருமான் அழைத்துவரச்சொனனார்காண்
என்றுசொல்லவேதியரு மேதென்றெழுந்திருந்து
நின்றுமனையாளை நிமிஷத்தில்வாருமென்று
புத்தகத்தைத்தானெடுத்தே பொற்கொடியேவாருமென
வித்தகப்பெண்புத்தகத்தை விரையவேகொண்டுவா
வந்ததொருபுத்தகத்தை மாமறையோன்தான்வாங்கி
அந்தமுடன அத்திபுரம் அரண்மனையில்வந்துபுக்கி
பரிசித்துவேந்தனையும் பாங்குடனேவந்துகண்டு
தெரிசித்து அட்சதையுஞ் செப்பமுடன்தான்கொடுத்து
அரசற்கரசே அரசர்பெருமானே
முரசற்கொடியுடைய முடிபொருந்துமன்னவனே
என்னைவரச்சொன்ன இயல்பேதெனக்கேட்டான்
முன்னைப்பயனும் முடித்தரகசியமும்

நாளும்பலனும் ராசியுடலக்கினமும்
கோளும்பகையும் குணமுள்ள காசினியும்
ஆளும்புவியும் அரசியற்கைசெங்கோலும்
வாழும்பதியும் மனைப்பொருத்தமுள்ளதுவும்
பார்த்துரையுமென்று பரிசித்துமன்னனுந்தான்
வார்த்தைசொல்லக்கேட்டு மாமறையோர் நூலெடுத்து
ஆராய்ந்துபார்த்து அளவிட்டுச்சாஸ்திரத்தை
நேராய்மனைகீறி நிலையறிந்துகோணெழுதி
ஓரைகள்பார்த்து உச்சநிலைதான்பார்த்து
பேரைவிளக்கிப் பெரிய அரசுநிலை
ராசிபிரித்து நட்சேத்திரம்பிரித்து
ஆசுபலன்தாரைகள் அடவுடனேதான்பார்த்து
பலகறைகள்வைத்துப் பலசாஸ்திரம்பிரித்து
அழகுநிலைநிறுத்தி அட்ட இக்குந்தானிறைத்து
திசைகள்பதினாறுந் தெரிந்துவகைப்படுத்தி
இசையாகலக்கினங்கள் இதமாகத்தான்பார்த்து
சொல்கிறான்வேதியனுந் தோற்றமுடன்சாஸ்திரத்தை
செல்லுமொருகாலத்தில் தீவினைகளுண்டாச்சு
கேளுங்காண்மன்னவனே கிருபையுடன்சாஸ்திரத்தை
வாழுங்குருகுலத்து மன்னவனேயுன்னுடைய
ராசிப்பொருத்தம் நவக்கிரகந்தான்பார்க்க
தேசிகுதிரை திரவியங்கள்தானுமில்லை
உடமைகடமை உற்பத்திதானுமல்ல
திடமுடையசெம்பொன்முதற் தேடும்புதையலல்ல
மாடுயொருகூடம் மனையாட்டிமைந்தரல்ல
ஆடவனேஉம்முடைய ஆத்துமத்திலோர்வினைகள்
ஜென்மச்சனியுந் தேகத்திலவல்வினையும்
கன்மச்சிறுவினையுங் காலம்பலம்போதாது
செவ்வாயின்தோஷம் தென்னவனேபோகாது
செவ்வார்வியாழன் கருதிப்பனிரண்டில்வந்தான்
மாதயொருநாளில் வருகுதுகாணித்தோஷம்

போதாதுனக்குப் புத்திசொல்லத்தான்கேளும்
தத்துவருகுதுகாண் தந்திரமாய் நீயிருந்து
எத்துடனே நீயும் இதமாகத்தானொளிந்து
தப்பியிருக்கச் சமர்த்துண்டேயாமாகில்
ஒப்புடனேசொல்லுகிறேனுண்மைதனை நீகேளும்
விடவரவுதீண்ட வருகுதுகாண்பத்திரமாய்
அடவுடனிப்பாதத் தந்தியக்கழிவதனில்
சர்ப்பத்தினாலே சாவுனக்குத்தப்பாது
உற்பத்தியாக வுரைத்தேனகாண்சாஸ்திரமும்
என்றுமறையவேதியனும் எழுந்திருந்துதான்போனான்
ஒன்றுமனம்வில்லாமலுள்ளுடைந்துபுண்ணாகி
என்செய்வோம்நாமும் இதுக்குவகையேதெனவே
முன்செய்ததீவினைதான் முடிந்ததோநம்மளவில்
பெரியோர்கள்சாபம் பின்னேதொடர்ந்ததையோ
தெரியாமல்நாம்செய்த தீவினையால்வந்தகுற்றம்
போகநினைவு பொருத்தமுடன்பார்க்கவென்று
வாகானமந்திரிமார் மன்னவனைத்தானழைத்து
நமக்குவருங்கருமம் நாட்டமுடன்போதாது
உமக்குத்தெரிய உரைக்கிறேன்மன்னவரே
சனிபகவானைப்போதாது சர்ப்பமுந்தீண்டுமென்னை
இனிமேலுபாயம் இருக்கும்படிகேளீர்
கார்கடலுக்குள்ளே கம்பமதுதானூன்றி
நீர்மேல்சவுக்கை நிறுத்தியேகால்நாட்டி
சுத்திவரக்காவல் சூழ்ந்துநிறைநிறையாய
வைத்தாலிருந்து வகையாகத்தப்பிவித்து
வரலாமறைநொடியில் மாளிகையுண்டாக்குமென்றார்
பரமரகசியமாம் பாரிலுள்ளோர்காணாமல்
அந்தப்படியே அலைகடல்மேல்மாளிகையும்
மந்திரிமார்தான்முடித்து வந்துசொன்னாரம்மானை

பாம்புக்குப் பயந்து பரிசித்து
கடலிற் போயிருந்தது.

மன்னன்பரிசித்துவுந்தான்மைந்தன்ஜெனமேஜெயனை
தென்னவரமைச்சரையும் சேரவரவழைத்து
நான்போயிருந்து வருமளவும்ராச்சியத்தை
தான்போயிருந்து சட்டஞ்செலுத்துமென்று
மைந்தன்ஜெனமேஜெயற்கும் மன்னருக்குத்தானோதி
இந்தாபயணமென்று ஏகினர்காணம்மானே
கடலின்நடுவே கப்பலெல்லாஞ்சூழ்ந்துநிற்க
அடவுடனேபாற்கடலில் ஆகாயப்பந்தலிட்டு
படவுசுரிப்பு பலதிசையுங்காவலுமாய்
இடைவிடாக்காவல் எச்சரிக்கைஉச்சிதமாய்
வைத்துநடுவே வகையாகவீற்றிருந்தான்
கைத்தவிடவரவு கார்க்கோடனவனும்
முந்நாட்பழிவாங்க மூர்த்தம்வந்ததென்றுசொல்லி
இந்நாட்பயணம் இவனெங்கேயென்றெழுந்து
நாடுநகர்தேடி நன்னகரிதான்தேடி
காடுகரைதேடி காவலனுமெங்கேயென்று
உலாவித்திரிந்து ஊரெங்குந்தான்தேடி
கலாபத்துக்காகக் கடல்மேலிருப்பனென்று
ஊரில்குடியிருக்கும் உற்றஜனங்களெல்லோரும்
பாரிற்பலர்கூடிப் பையரகசியமாய்
பட்டணத்திலுள்ள பலஜெனங்களெல்லோரும்
திட்டமாய்த்தனித்தனியே செப்புகிறாரிவ்வசனம்
உரைக்கும்வசனம் உலகத்திற்கேட்டபின்பு
திரைகடலைநோக்கிச் சீராய்வந்தானவ்விடத்து
வருகுதுகாண்கோபமுடன் வலுவேகந்தன்னுடனே
பெருகுகடலருகே பெருநாகம்வந்துநின்று
நீடியதுயரம் நிலையாச்சமுத்திரத்தில்
ஓடிஒளித்தானிவனை ஒருநொடியிற்றீண்டுதற்கு
உபாயமென்னசெய்வோம் ஒருவழியுங்காணோமே

உபாயமிட்டகப்பலுக் குள்ளே நுழைவோமா
தோணிபடவு சொரூபமெடுப்போமா
வாணிபங்கள்செய்யும் வளம்போலெடுப்போமா
சம்பான்சொரூபம் சாதித்தெடுப்போமா
கம்பாய்மிதந்து கடல்தனிலேபோவோமா
பட்சியாய்ச்சென்று பறந்துவிழுவோமா
காட்சிக்கரிய காகம்போற்செல்வோமா
பாம்பாய்மிதந்து பழுதைப்போற்செல்வோமா
நாம்போகநினைவு நால்வகையிலேதெனவே

பரிசித்துவைப் பாம்புதீண்டினது.

பார்த்துழன்றுநாகம் பரிசித்தைக்கொல்வதற்கு
வேற்றுருவங்கொள்ள விதமொன்றுங்காணுமல்
என்னவடிவெடுப்போம் இணக்கமொன்றுங்காணேமே
மன்னவனைக்கொல்ல வாய்ப்பொன்றுங்காணேமே
தனதுபோலநாமும் சற்பனைகள்செய்வதற்கு
மனதுபிரியமுடன் வாரியெடுத்தணைத்து
முகந்துமணங்கொண்டு முகத்தோடுறவணைக்க
மிகுந்தகனியொன்று விசாரித்துப்பார்ப்பளவில்
இன்றூல்புளித்திருக்குந் தின்னுமென்றூற்பற்கூசும்
கண்டாற்களிகூருங் கண்மலரிற்றூனணையும்
திவ்வியமானதொரு தெய்வகனி தானுகும்
அவ்விதமானவுரு வாகநினைவுகொண்டு
எலுமிச்சநற்கனிதா னின்பமுடன்தோன்றுதங்கு
வலுமிச்சமென்ன வடிவெடுத்தான்கார்க்கோடன்
கனிரூபங்கொண்டு கடலிற்குதித்திறங்கி
தனியேமிதந்து தடையறவேபோகலுற்றூன்
கப்பல்விட்டுச்சுத்திக் காத்திருந்தகாவலர்கள்
தெப்பமெனவோர்கனிதான் தெரியுதுகாணென்பாரும்
அந்தாவருகுதுபா ரதிசயந்தானென்பாரும்
வந்தாலெனக்கென்று மற்கட்டிநிற்பாரும்

எனக்கெனக்கென்றுசொல்லி இச்சித்துநிற்பாரும்
உனக்கேன்கிடைக்குமென்று உபாயமிட்டுநிற்பாரும்
தான்கண்டேனென்று தாண்டிவிழநிற்பாரும்
நான்கண்டேனென்று நகைத்துச்சிரிப்பாரும்
ஆர்கண்டாலென்ன அன்மையாதொருவருக்கும்
பார்கொண்டராஜன் பரிசித்துவேந்தனுக்கு
தக்குமேயல்லாது தர்க்கமிட்டுக்கொண்டாலும்
சிக்குமோ உங்களுக்குந் தெய்வகனியென்பாரும்
இப்படிச்சொல்லி யிரையவெகுசனங்கள்
நிற்பளவில்சம்பீரம் நிலையாச்சமுக்திரத்தில்
அலையிலடிபட்டு அசைந்தசைந்து தான்குதித்து
கொலைசெய்யவாரதொரு குருசம்பீரங்கனிதான்
ஒதுங்கிவழிவிலகி ஒருஇடமும்போகாமல்
பிதுங்கிநெகிழாமற் பிடித்தார்பழந்தனையும்
எடுத்தகனிதன்னை இன்புற்றுஎல்லோரும்
அடுத்தகனிதன்னை அனைவோருந்தான்பார்த்து
யோசனைகள்பண்ணி ஒருமித்துஎல்லோரும்
ராஜனுக்காகுமென்று நடந்தார்சமுகமதில்
மன்னன்பரிசித்து மகாராஜன்தன்கொலுவில்
தென்னவர்கள்காரியப்பேர் சென்றுதொழுதேற்றி
ஆண்டவனேஎங்கள் அரசர்பெருமாளே
நீண்டவனேநாங்கள் நீநிலத்தில்கண்டதில்லை
கண்டறியாக்காட்சியெங்கள் கையில்வந்ததிசிக்கியதே
புண்டரிகமார்பா புவியாசேஉன்யோகம
அதிசயமாய்க்கண்டெடுத்தோம் அய்யாபுதுமையிது
விதிசேரும்யோகம் வெகுயோகமாமுனக்கு
வந்ததுகாணென்று வாழ்த்தியேயெல்லோரும்
சந்துபயில்மன்னன் தார்வேந்தன்றன்னிடத்தில்
கொண்டாடிக்கையிற் கொடுத்தார்கனிதனையும்
கண்டான்துரையுங் கனபிரியமாய்மகிழ்ந்து
நல்லகனியென்று நகைத்துமுகமலர்ந்து

செல்லமகன்வாங்கிச் செந்தாமரைமுகத்தில்
ஒத்தினான்கண்ணில் ஊடுருவக்கார்க்கோடன்
கொத்தினான்சீறிக் குதித்தான்கடல்தனிலே
பழிநமக்குவந்ததென்று படவரவுதானினைந்து
வழிகூடியேநடந்து மறைந்ததுகாணம்மானை
விதியின்பயனை விலக்கலாமென்றுசொல்லி
மதியுடனேவந்தொளித்த மன்னவனும்பட்டுருண்டான்

விருத்தம்,

விதியின்பயனை விலக்கவென்று விரும்பியொருத் தன்மூந்நாளில், அதியதலையைத் தான்சிறைத்து அகன்றுபிழைத்துவருவமென்று சதியேவருவதறியாமல்தாழ நிழலிற்போயிருக்க, விதிதான்மொட்டைத்தலைதனிலே விழுமாம்பனையின்கனிதானே.

இதுவுமது.

தலையில்விதித்த விதிதனக்குத் தலையைச் சிரைத் தோன் பட்டதுபோல, அலையிலொளித்த பரிசித்தும் அமர்ந்தானரவுவிஷத்தாலே, கொலையேசெய்த பழிபா வங் கொலைபால்முடிந்ததெனவேங்கி, மலையாதிருந்த மன்னரெல்லாம் மலைந்தேயுலைந்து குலைந்தாரே.

இதுவுமது-வேறு.

ஏங்கினார்முகங்கள்வாடி என்செய்வமென்றுசொல்லித்
தாங்கினாரசுதன்னைத் தளமெல்லாமபயமென்று
தூங்கினார்தலைகவிழ்ந்து துயரமும்வேறுவேறாய்
ஓங்கினார்குமாரன்கேட்க உத்தரமெழுதுகின்றார்.

கதை.

பட்டுக்கிடக்கின்ற பரிசித்துவேந்தனையும்
கட்டுக்குள்வைத்துக் காவலிட்டுத்தான்போற்றி
சாந்துசவ்வாது சந்தனமுந்தான்திமிர்ந்து
பூந்துகிலுமாபரணமு பூமலரும்வாசனையும்

கமகமவென்றிருக்கக் களபமெல்லாந்தான்திமிர்ந்து
சமமானபெட்டகத்திற் சயனமாய்த்தானிருத்தி
முன்னேஎழுதிவிட்டார் முடிபொருத்தவேந்தனுக்கு
பின்னேபயணம் பெருங்கடலைவிட்டகன்றார்
ஓலைதனைக்கொண்டு ஒருதூதனேடியங்கே
சேனைதலைகுனிய ஜெனமேஜெயன்சமுகமதில்
தெண்டனிட்டுத்தூதன் சென்னிதனைக்கவிழ்ந்து
தொண்டனுக்குவாய்தான் துணியுமோஎன்கோவே
என்றோலைதன்னை எடுத்துமுன்னேவைக்கலுற்றான்
நின்றோலைவாசித்து நிலத்திலேவிழுந்தழுது
மண்ணதிரவிண்ணதிர வயிற்றிலறைந்தழுது
கண்ணீர்களாறோடக் கதறியழுகலுற்றார்
வந்ததொருதூதுவனை வகையேதெனக்கேட்டான்
அந்தமொழியெல்லா மவன்வகையாச்சொல்லலுற்றான்
கேட்டுஜெனமேஜெயற்குக் கிலேசமிகவுண்டாகி
நாட்டுப்புகழ்மன்னனையும் நாழிகையிலிங்கேதான்
கொண்டுவரவேணுமென்றுகொற்றவனுந்தானுரைக்க
பண்டுசிவிகையின்மேற் பார்த்திபனைத்தானெடுத்து
வந்தார்களத்திபுரம் மன்னவனைக்கொண்டேகி
சந்தானமான ஜனங்கள்விழுந்தலறி
அனலின்மெழுகதுபோ லங்கமெல்லாந்தானுருகி
மனைவிமக்கள்சுற்றம் வந்துவிழுந்தலறி
கோவென்றசத்தங் கூக்குரலுந்தானாக
ஆவென்றழுக அனைவோரைத்தானமர்த்தி
நில்லென்றமர்த்தி நினையாதெல்லாம்நினைந்து
வெல்லும்பரிசித்துமகன் வேந்தன்ஜெனமேஜெயனும்
அழுதுபாதவித்திங் காவதினலொன்றுமில்லை
பழுதுசெய்துபோனதொரு பாம்புதனைவதைத்து
எந்தன்பிதாவை எழுப்புவனேயல்லாது
அந்தவகைவிஷத்துக் கானதெல்லாஞ்சேகரித்து
எழுப்பினற்பிள்ளை யில்லாவிட்டாலென்னபிள்ளை

மழுப்பியழுதால் வருமோ உயிர்தானும்
தந்தையரை வைத்துச் சமர்த்தாகத்தானிருத்தி
விந்தையுடன்வேள்வி விரமாய்வளர்க்கலுற்முன்

ஜெனமேஜெயமகாராசன் சர்ப்பயாகஞ்செய்தது.

சாஸ்திரத்திலுள்ள தளபாடமத்தனையும்
சூஸ்திரமாய்ச்சேகரித்துச் சூழத்திரைவளைத்து
வேதியரைத்தானழைத்து வேணதெல்லாங்கொடுத்து
ஓதியவேதமது ஒன்றுங்குறையாமல்
சொல்லுமுயிர் திரும்பச் சூட்டுமென்றான்வேதாந்தம்
கல்லுமுருகிவிழக் கதித்ததொருமந்திரத்தால்
உற்பத்தியானதொரு ஓம அனல்தான்மூட்டி
சர்ப்பத்தைவெந்துவிழத் தாக்குமென்றார்மந்திரத்தை
ஆமென்றுசொல்லி அந்தணருந்தான்கூடி
ஓமென்றுவேள்விசெய்ய ஓமத்தீமூட்டினரே
யாகத்தீமூண்டதுகாண் அண்டமுகடுமட்டும்
சாகத்தான்சர்ப்பந் தவிடுபொடியாகவுமே
நீருகவெந்து நெருப்புத்தணலாகி
வேறுகிச்சர்ப்பம் வெந்துநீருவதற்கு
எங்கேயெனத்தேடி யெழுந்ததே அக்கினியும்
அங்கேஅரவமது அக்கினிக்குஆற்றுமல்
ஈரேழுலோக மெங்கெங்குந்தானேடிப்
பாரேழுந்தானலைந்து படவரவு ஆற்றுமல்
மேலசந்துநாகம் வெருவிப்பயந்தேகிக்
காலசந்துவோடிக் கனலில்விழப்பட்டிடைந்து
பார்த்தவிடமெல்லாம் பரந்தெழுந்து அக்கினியால்
ஆத்தமுடியாமல் அயிராவதத்தனிடம்
ஓடிச்சிங்காதனத்தி னூடேநுழைந்துகொண்டு
நாடிச்சீர்பாதம் நமஸ்கரித்துத்தெண்டனிட்டு
அபயமுனக்கபய மடைக்கலங்காணென்றுசொல்லி
உபயமெனக்காரும் உத்தமனேயென்றலறி

தெய்வேந்திரன்சபையிற் சென்றுபுகுந்தவர்முன்
ஐவருடபோ ஞனபரிசித்துவைத்தான்
மூற்பழிசெய்தானெனவே முயன்றவனை நான்தேடி
பிற்பழிநான்கேட்டுப் பிராணனையேவாங்கிவிட்டேன்
அந்தப்பழிகேட்க அடியேனையேதொடர்ந்து
இந்தஜெனமேஜெயனும் என்பேரிலக்கினியை
ஏவிவிட்டான்தாங்க என்னால்முடியாமல்
தாவிவிட்டுவந்தடைந்தேன் சரணமெனக்காரும்
என்றரவஞ்சொல்ல இந்திரனுமப்போது
மன்றலருந்திண்புயத்தான்மன்னன்ஜெனமேயனுக்கு
இந்திரனுஞ்சீட்டேழுதி யேவினன்தூதுவனை
அந்தரத்தூதுவனும் அரைநொடியிலோடிவந்து
சீட்டைக்கொடுத்துச் செய்திசொன்னன்தூதுவனும்
சீட்டதனைப்பார்த்து ஜெனமேஜெயன்பயந்து
நம்மிடத்தில்வந்தவரை நாமேவதைகள்செய்தால்
தம்மிடத்தில்வந்தவரைத் தான்கொல்லாரோபுவியில்
முன்னாட்டவமிருந்த முனிவன்மேல்நாகமதை
மன்னனஉன்தகப்பன் மாலையாய்த்தானணிந்தான்
கோபம்பொருமல்முனி கூறினர்சாபமதை
பூபனேஉனக்குப் போமென்றுசொன்னர்காண்
அந்தமுனிசாபம் அருகேகுடியிருந்து
வந்தவிதிவசந்தான் வருமளவும்பார்த்திருந்து
எழுத்துமுடிவும் இறுதியிம்மட்டெனவே
கொழுத்தமறலிவந்து கூட்டுகின்றகாலமென்ன
சமையமிதுவென்று சர்ப்பமூந்நீண்டினது
அமையுமோஉன்னால் அமையாதுமன்னவனே
யாகத்தைத்தானமர்த்தி யாற்றுமென்றூர்கோபமதை
வாகுற்றயாகம் வளர்த்தாயேயாமாகில்
ஏகமாய்ப்பற்றி எரியும்புவனமெல்லாம்
நாகமட்டும்எகுமென நடவாதுஇச்செய்தி
அண்டமடுக்கும் அகண்டமுதலட்டதிக்கும்

விண்டலமும்வெந்து வெளியாய்முடிந்துவிடும்
உனக்குநிலையில்லை உலகத்திலெவ்வனவும்
எனக்குநிலையில்லை இந்திரனென்பேருமில்லை
செத்தார்பிழைப்பதுண்டோ தேசத்திலுள்ளோர்கள்
மற்றருஞ்சொல்லார் மயக்கத்தைவிட்டுவிடும்
தந்தைதனையடக்கிச் சாஸ்திரங்கள்தான்முடித்து
விந்தையாய் நீயிருந்து மேதினியையாளுமென்றார்
வாசவன்கைச்சீட்டு வாசகத்தைமீறமல்
ராஜன்ஜெனமேஜெயனும் நல்லதென்றுசம்மதித்து
ஆறியமர்ந்து அனைவோருந்தான்கூடித்
தேறித்தெளிந்து தெய்வமேயென்றுசொல்லி
மந்திரிமாரும் மகுடமுடிவேந்தருடன்
தந்திரமாய்த்தானிருந்து சடங்குதனைமுடித்து
மாதானம்பூதானம் வஸ்திரதானமுதல்
கோதானமீய்ந்து கொற்றவன்றன்கையாலே
சடங்குமுடிந்தார்காண் சாஸ்திரத்திலுள்ளபடி
அடங்காக்கிலேசமெல்லாம் ஆறித்தெளிந்தபின்பு
மன்னரமைச்சர் மகுடமுடிவேந்தருடன்
தென்னவர்களெல்லோரும் ஜெனமேஜெயன்றனக்கு
பட்டந்தரித்துப் பாராளுமெனறுசொல்லி
திட்டப்படுத்தி ஜெகவேந்தர்காத்திருந்தார்
இருக்குந்தருவாயில் ஏலவேசாபமிட்ட
வருக்கமுள்ளமாமுனிவர் மன்னன்பரிசித்துவைத்தான்
நாகமதுதீண்டுகையால் ராஜன்மடிந்திடுவான்
சாகுமுன்னேசென்று சர்ப்பத்தின்தன்விஷத்தை
திரும்பிவிஷமீட்டித் தென்னவனைத்தானெழுப்பி
விருப்பமுடன்வைப்போம்நாம்மேதினியையாளுமென
தம்சாபந்தீர்க்கத் தவசிவருகையிலே
வம்பானசர்ப்பம் வழியிலெதிர்வந்ததுவாம்
சதிராகவாழுந் தலமெதுவென்றுசொல்லி
நாகமதுகேட்க நற்றவசியேதுசொல்வான்

லோகமுழுதாளும் ரூபமதன் றன்னையொப்பாய்
இருக்கும்பரிசித்துவுக்கு என்னுடையசாபமதால்
பெருக்கவிஷந்தீண்டிப் பிடிக்கவருகுதென்று
தீர்த்துவிஷந்தன்னைந் திருப்பிவிடவேணுமென்று
ஏற்றதிசைநோக்கி யேகிவந்தோம்கண்டீரே
என்றுமுனிசொல்ல இடைந்திருந்துகார்கோடன்
நின்றுமயங்கி நெடுமூச்சுக்கொண்டுழன்று
படவரவுதீண்டிப் பரிசித்துராஜனுந்தான்
சடமழிந்துபாரிற் றணல்கொளுத்திச்சுட்டுவிட்டார்
சாம்பல்குவித்துச் சடங்குமுதற்செய்துவிட்டார்
என்போரீரென்றரவம் எதிராகச்சொல்லியபின்
மெய்யோஎன்சாபம் வீணையாய்முடிந்ததுவோ
அய்யோ அரசிறக்க லாமோபுவிமீதில்
நம்மாலரசனுக்கு நாசம்வந்ததாகையினல்
சும்மாவிடலாமோ தோஷம்நமக்குவரும்
அத்தியடங்கி அதுசாம்பலானலும்
சுத்தமாய்நாமெழுப்பித் துரைமகனையுண்டுபண்ணி
திக்கெல்லாம்போற்றத் தேசத்தையாளுதற்கு
வைக்கலாமென்று மனந்துணிந்துவந்தேன்காண்
இல்லாததாலெனக்கு ஈடேற்றம்வாராது
பொல்லாதசாபம் பொருந்தவுரைத்துவிட்டேன்

விருத்தம்.

வாக்கினுற்கண்ணுற்கையால்மலகினுற்செய்தபாபம்
வாக்கினுற்கண்ணுற்கையால்மனதினுற்தீராவிட்டால்
வாக்கினுறகண்ணுற்கையால் மனதினுற்தீருமென்ன
வாக்கிற்கண்ணுற்கையால்மனதினலழிந்துபோமோ.

கதை.

வாக்கினுற்கண்கையால் மனதினுற்செய்தபாவம்
வாக்கினுற்கண்கையால் மனதினுற்தீரவேணும்
தீராதேபோனுற் றிருவுளத்துக்கேற்காது

வாராதசிவனேயும் வவரவழைந்துச்சாம்பகையும்
உருவாய்வகுத்தே உயிரைஉடல்பொருத்தி
குருவினுடமந்திரத்தாற் கொள்ளலாங்காரியமும்
என்றுமுனிசொல்ல ஏற்றதொருநாகமது
ஒன்றுமறியாம லுரைத்தீரேமாமுனியே
நாமொன்றுசொல்லுகிறேம் நமக்கிசைய நீர்தாமும்
ஆமென்றுசெய்தா லதிசயமாமென்றறிவோம்
மாமரந்தான்பூத்து வடிவுடனேகாய்கனியாய்ப்
பூமரந்தான் நிற்பதைப் புகைந்தெரியத்தீண்டுகிறேன்
பற்பமாய்ப்போகும் பச்சைமரமானதுவும்
உற்பத்தியாக உயிர்மரம்போலாக்கிவைத்தால்
செத்தார்பிழைப்பார்கள் செகத்துள்ளோர்கொண்டாட
வித்தகரேமாமுனியே மெய்யென்றுநானறிவேன்
சற்பமிவைசொல்லச் சன்யாசி ஆமெனவே
கற்பகப்பூமாமரத்தைக் கடியுமென்றுதானுரைத்தார்
உரைத்தமொழிகேட்டு ஒருமித்துநாகமது
இரைத்தரவஞ்சீறி எயிருடையதந்தமதால்
வாய்பிளந்துகவ்வி மாமரத்தைத்தீண்டியதே
காய்கனிகளுள்ள கப்புக்கவர்களெல்லாம்
வெந்துநீரானதொரு விருட்சமெனுமாமரத்தை
சந்துபயில்மாமுனிவன் தளிர்மரம்போலாக்கிவிட்டான்
அப்போதுமாமுனியை அரவதுகொண்டாடி
இப்போதுநம்பழிக்கு ஈடாகப்பண்ணிவித்தோம்
அஷ்டமாநாகமதில் யாரொருத்தன்தானாகும்
இஷ்டமுடன் நீரும் எழுப்பிடுவீர்மாமுனியே
எங்களதிகாரம் எண்ணமெல்லாம்போய்விடுங்காண்
திங்களொளிதனமணி சிரத்திலிருந்தெடுத்து
பெரியவராமென்று பேரரவந்தான்கொடுக்க
அரியமணிவாங்கி யருந்தவசியேகியபின்
நாகமகிழ்ந்து நடந்ததுகாணம்மானை
ஏககயிலாசமதில் ஈசருடசன்னதிக்கு

சென்றரவம்போனதற்பின் ஜெனமேஜயன்ரூனும்
அன்றலருந்தாமரைபோ லாதித்தன்தன்வாயே
இருந்துசிலகாலம் இந்திரனைப்போலாகி
திருந்துபுகழ்கொண்ட ஜெயவிஜயன் தன்பேரன்
தேசமொருகுடைக்கீழ் செங்கோல்மனு நீதி
வாசமிகுபூவுலகில் மன்னவர்கள்போற்றிசெய்ய
யோகமுடன்பாரி லுகந்துஜெனமேஜெயனும்
ஏகசிம்மாதனத்தி லிருந்தான்காணம்மானை

விருத்தம்.

பஞ்சவர்பேரனான பரிசித்தைவிஷங்கள் தீண்டித்
துஞ்சினதாலேயாலே சுதன்ஜெனமேசன்தன்னை
மிஞ்சுமாசனத்தில்வந்து வேந்தருமமைச்சர்தாமும்
அஞ்சலென்றடிகள்காண அவனியிலிருந்தானன்றே

இதுவுமது.

இப்படியநேககால மிருந்தரசியற்கைசெய்து
சொற்றவருநவாய்மை சோர்வறநடத்துங்காலே
முற்படிஞாயம்போல முன்னவனிவனுமென்ன
அப்படியிருந்துபாரி லவனியையாளும்நாளில்.

இதுவுமது.

ஆகமவேதஞானம் அருந்தமிழ்கவிதை நூல்கள்
பாகமாயுணர்ந்துகேட்டுப் பத்தியாப்பெரியார் தன்பால்
போகவும்வரவுந்தன்மை புகழதுமதுரமோங்க
ஏகசிம்மாசனத்தி லிருந்துடன்வாழும்நாளில்.

கதை.

பார்த்தன்மகன்வாள்வீமன் பாலன்பரிசித்துவுடன்
ஏற்றதொருபால னிராஜன்ஜெனமேஜெயன்ரூன்
சீற்றமுடன்பாரிற் செங்கோலதிகாரம்
தோற்றமுள்ள நீதி துலங்கும்ரவிமதிபோல்
சுத்துகடல்சூழும் காசினியெல்லாம்விளங்கும்

மூத்தும்நவமணிபோல் முளைத்தெழுந்தரத்னமென
வந்தான்மகராஜன் மன்னன்ஜெனமேஜெயனும்
விந்தமலர்போல் விகசிதமாய்ச்சிங்காரம்
தங்கியிருக்குந் தவளமணிமார்பன்
பொங்குபுகழ்பூரணமாய்ப் பூலோகநாயகமாய்
இறைமிறைமையாறிலொன்று எள்ளவுமீறுமல்
புறையுடையதன்மரெனப் பூலோகமாளுகிறுன்
அத்திபுரம்போற்ற அரசாளும்நாளையிலே
சத்தியவாய்மை தவருதவேதமுனி
நாற்றிசையுங்கொண்டாட நன்னகரிதன்னில்வந்தார்
வாழ்த்தியனைவோரும் மலரடியைப்போற்றிசெய்து
இருக்குந்தருவாயில் இளவரசுதான்கேட்டு
உருக்கமுடன்கண்டு ஒழுக்கமாய்வார்த்தைசொல்லி
போற்றிஜெனமேஜெயனும் பூரித்தகமகிழ்ந்து
ஏற்றிசிங்காசனத்தி லிருத்தியேதான்வணங்கி
கனிவகைகள்சீனிமுதற் கற்கண்டுசர்க்கரைதேன்
இனியபலாக்கனியு மின்பமுள்ளமாங்கனியும்
வாழைக்கனியும் மாதளையின்தன்கனியும்
தாழைக்கனியுஞ் சகலகனியுள்ளதெல்லாம்
கொண்டுவந்துவைத்துக் குருவேசரணமென்று
தொண்டுபண்ணிநின்றுன் தொழுதுமிகவணங்கி
நல்லதொருவேதமுனி ராஜனையுங்கொண்டாடி
வல்லதொருமாங்கனிதேன் வாயமுதுசெய்து
தாகமதுதீர்ந்து தபோதனரும்வீற்றிருந்தார்
நாகரிகமானதொரு ராஜன்ஜெனமேஜெயனும்
தாகமுடன்வேதமுனி தாளிணையைப்போற்றிசெய்து
பாகமுடன்வந்துநின்று பகருவானேர்வசனம்

விருத்தம்.

பாரதமுடியுமன்னுள் பயின்றதோர்வேதமெல்லாம்
மேருவிலாதியாக விநாயகன்கோடுகொண்டு

சீராதுசிறக்கக்கீர்த்தி ஜெகத்தினிலுதித்தவேந்தர்
போரதுமுடியவென்று புகன்றதுதேவர்தாமே

இதுவுமது.

குருகுலத்தரசற்கெல்லாங் குருவெனவந்துதோன்றி
கருவுருவகுத்துக்காட்டக் காசினியாளுமென்று
அருகினிலிருந்து நீதி அறிவுடன்தெளிவுஞ்சொல்லி
பெருகுசீர்புவனமீது பெரும்பகைமுடித்தாய்போற்றி

இதுவுமது.

பஞ்சவாள்நூற்றுவற்கும் பகையதுவருவதுண்டோ
அஞ்சலென்றமத்தி நீரும் அறிவினால்விபாஞ்சொல்லில்
மிஞ்சவும்பகைகொள்வாரோவேதமாமுனியேநின்றன்
வஞ்சமேவஞ்சமல்லால் மற்றொன்றுமுடியுமோதான்.

கதை.

எத்திசையுங்கொண்டாடும் எந்தன்குலத்தரசே
சத்தியவாய்மை தவறாதமாமுனியே
சீரானஐவருடன் சிறந்ததுரியோதனனும்
பாராளும்நாளிற் பகைகளொன்றும்வாராமல்
தாராளமாகத் தன்மையுடன்சேகரமாய்ப்
பேரானபூதலத்திற் பேதமென்றும்வாராமல்
மார்க்கப்படுத்திவைக்க வாராதோவுன்றனக்கு
தீர்க்கமுடன்முன்னாள் திரிகாலமுள்ளபலன்
இன்னபடியென்று ஈஸ்பார்முன்றானுரைத்தீர்
சொன்னபடிதப்பாமற் றேற்றமுடன்மேருவினில்
எழுதும்விநாயகரே யென்றிறையோன்தான்கூற
தொழுதுவிநாயகனார் சொன்னதொன்றுந்தப்பாமல்
ஒருகொம்பொடித்தெழுதி ஊணிவித்தாருமுடசொல்
பெருகுபுகழ்வேத வியாசரென்றுபேருமிட்டு
திகரில்லாவேதாந்தம் நிலைகண்டுநின்றோனே
பகருமொழிகேளாத பேருண்டோபாருலகில்
குருகுலத்துக்கெல்லாங் குலக்கொழுந்தாய் நீயிருந்து

அருகிருந்துபுத்திசொல்லு மரசனுமாயிருந்து
வின்னம்வாராதபடி வேதியரே நீர்மொழிந்தால்
மன்னவரும்வாழாமல் மாளுவரோ பூவுலகில்
எந்தவிதமோகிருபை ஏதென்றறிவேனே
உந்தன்விதமாக வொருவருக்குந்தோற்றாமல்
வஞ்சவினைசெய்தீரே மாமுனியேயிப்படித்தான்
உன்செயலேயல்லாது உலகத்தில்வேறுமுண்டோ
தோராத்துரோணர்மதி சொல்லுங்கிருபருடன்
தாரார்துரியோதனனுந் தம்பிமார் நூற்றுவரும்
மற்றுமுள்ளமன்னர் மகுடமுடிவர்த்தனரும்
சுற்றமுள்ளராஜர் துரைமக்களெல்லோரும்
எண்ணாதேழக்ரோணி எண்ணவொண்ணாச்சேனைதளம்
மண்ணாசைபற்று மாண்டிறந்துபோனதெல்லாம்
உன்னாலேயல்லோ ஒருவர்மேற்குற்றமில்லை
அன்னாளிலேயவர்க்கு ஆமென்றகாரியந்தான்
தெரியவகைசொல்லிச்செப்பினீராமாகில்
பிரியாதிருந்து பேதமுற்றுவாழாரோ
இறந்தாரே நூற்றுவர்க ளிருந்தார்கள்பஞ்சவர்கள்
சிறந்திருந்தபஞ்சவர்கள் செடத்தோடேயிப்போது
விந்தைகிரிவைகுந்தம் விரும்பியவர்சேர்ந்ததென்ன
அந்தவகையெனக்கு அறியவேசொல்லுமையா
சொல்லுமென்றுகேட்ட துரையேஜெனமேஜெயனே
சொல்லுகிறேன்கேளும் தோற்றமுடனிப்போது
மூண்டதவரவர்கள் முன்னாளி லூழ்வினைகள்
மீண்டொருவராலும் விலக்கவல்லோருண்டோதான்
ஆகையினாலே அவரவர்கள் தீவினையும்
மாயையாய்வந்து விளைத்ததுகாண் கன்மவினை
என்றுமுனிதானு மெடுத்துரைத்தசேதியெல்லாம்
நின்றுஜெனமேஜெயனும் நினைவாகத்தான்கேட்டு
நினையாதெல்லாம் நினைத்து நெடுமூச்சுவிட்டேங்கி
தினையைப்பனையாக்கித் திரணமதைமோராக்கி

கைக்குக்கையில்லாமல் கால்வேறு தலைவேறாய்
மெய்க்குமெய்யில்லாத விதனமதைத்தான்மூட்டி
ஆட்டிவிட்டுப்பாவைதனை யாடவிட்டுப்பார்த்திருந்து
கோட்டிமிகப்பண்ணிக் குலத்திலுள்ளோர்களையும்
கூட்டிக்கனலைக்கொளுத்திவிட்டசூஸ்திரமே
மூட்டிவினைசெய்த முனியேஇனிக்கேளும்
தன்மரென்றுபேரெடுத்துத் தாரணியிலில்லாத
கன்மமேசெய்தவரைக் காசினியிற்தர்மமென்றால்
என்னவென்றுசொல்லிஎடுத்துரைப்பேனும்மிடத்தில்
தன்மையுமற்று ஜனமுமினமுமற்று
இம்மைதனிற்றான்வாழ எல்லோருமாண்டிறக்க
வன்மம்பிடித்து வதைசெய்தமாபாவி
இருந்தாரேபாரில் என்றுஞ்சதமெனவே
வருந்தாமல்வைகுந்தம் வானேறிப்போனதென்ன
சொல்லுங்காண்மாமுனியே தோற்றமெல்லாம்நீயாக
வெல்லும்விதியும் விதிப்பயனுந்தானாக
தோற்றுதுகாணெனக்குத் தோஷமெல்லாம்நீரெனவே
ஏற்றமொருவிபாம் இறையோனேநான்காணேன்
பொறையுடையதர்மர் பொய்சொல்லாமெய்யரென்று
நிறையுடையாரானால் நீருரைத்தபூருவத்தை
கேளாரோசற்றுங் கிருபையென்றுபாராமல்
வாழாரோபாரில் மைந்தரொடுசெல்வமுமாய்
வண்மையாய்த்தீமைசெய்தார் மாண்டுபுவியிழந்தார்
தன்மைசெய்துபாராண்டு நாளுமிருக்காமல்
ஏன்காணும்பாரிழந்து ஏகினார்வைகுந்தம்
நான்தான்புவியாள ஞாயமோஎன்றனுக்கு
பாரதப்போருண்டுபண்ணிபகைமூட்டிமுன்னாளில்
மேருதனிற்றானெழுதி வைத்தவரும்நீரல்லவோ
நினைத்தபடிமுடிக்க நீர்துணிந்தீரல்லாது
மனந்தனையேநீர்திருத்தி வாழவைக்கமாட்டாமல்
புத்திமதிசொல்லிப் பொருந்தவுரையாமல்

சத்துருவாய்மாமுனியே சற்பனைகள்செய்தீரே
தாராரும்வேந்தர் சமரில்மடிந்ததெல்லாம்
பாராய்முனியேதான் பழிபாவமுன்றனுக்கு
சாராமற்சார்ந்ததுகாண் தப்பாதுசொன்னேன்யான்
தீராதபாவமிது செய்தீர்காண்மாமுனியே
என்றுஜெனமேஜெயனு மிவ்வார்த்தைதானுரைக்க
நன்றுகாணென்று நகைத்துமுனியேதுசொல்வார்
தம்பியரேஇப்படி நீ சமர்த்தாகப்பேசினதால்
நம்பிடவேசொல்வேன் நலமாய்க்கேளென்வார்த்தை
வெம்பியெனையுரைத்தாய் விட்டகுறைபாராமல்
நம்பியுயிர்கொல்லும் நமன்றனையுநோகாமல்
தலையிலெழுதிவைத்த சதுர்முகனைச்சொல்லாமல்
கொலைசெய்யும்ருத்திரனைக் கூர்ந்துநீசொல்லாமல்
மாயைபலசெய்யும் மாயனையுஞ்சொல்லாமல்
தாயகமாய்நம்மைச் சலித்துமிகச்சொன்னீரே
ஊழிவிதியெனவே ஒருமித்துச்சொல்லாமல்
காளிபலிகொண்ட கதையையுற்றுப்பாராமல்
பந்தியாய்மூற்றும் பருஞ்சுமையைத்தானேற்றி
முந்திச்சுமைதலையாய் மொழிந்தீர்வகைகேளும்
சுற்றும்வினைவந்து சூழ்ந்தசெயல்சொல்லுகிறேன்
கொற்றவனேகேளுமென்று கூறலுற்றார்மாமுனியும்
மன்னவர்கள்நூற்றுவர்க்கும்வாய்த்ததர்மரைவருக்கும்
முன்னாளிற்புத்தி மொழிந்ததில்லையென்றுரைத்தார்
தொயர்ந்தவர்க்குப்புத்திசொன்னேனேசொல்லலையோ
நயந்தவருங்கேளாமல் நம்மையவர்தான்மீறி
சூதுங்களவுந் துற்புந்திவஞ்சனையும்
வாதும்மயிர்பிடியும் மற்கட்டெங்கற்பனையும்
தாயாதிபாராட்டிச் சர்ப்பனையேவிளைத்து
வாயாதஞாயம் வாய்க்கவுபாயமிட்டு
உள்ளவஞ்சனைகளுபாயமிகநினைத்து
கள்வரொருநூற்றுவருங் காரூடமேபெரிதாய்

உபகாரஞ்செய்வதுபோ லுடைந்தையுடனிருந்து
அபகாரஞ்செய்யும் அனியாயநிஷ்டூரன்
வஞ்சனைமுற்றும் மாபாவிதானினைக்க
பஞ்சவர்கள்சற்றும் பதையாதொடுங்கிநிற்க
அஞ்சினபேர் நின்று ரகந்தைசெய்தோர்போனார்
நெஞ்சமதில்ஞ்வசமதை நினைத்தோரழிந்திடுவார்
நடக்குமரியாதைவுத்தி நாமவர்க்குச்சொல்லலையோ
அடக்கமவர்க்கில்லைவெகு அகந்தையேஉண்டாகும்
சொன்னபடிகேட்பார் தூயதொருபஞ்சவர்கள்
என்னதான்சொன்னாலு மிவன்கேளான்மாபாவி
வாதுசொல்லிப்பஞ்சவரை வகையாய்வரவழைத்து
சூதுவிளையாடித்துரத்திவிட்டான்கானகத்தில்
கானகமேதான்றிரிந்து கண்ணுக்குக்காணுமல்
தானதவமேலாய்த் தர்மம்பெரிதாகி
ஞானமதுகல்வி நற்கேள்வி நல்வசனம்
மானமபிமானமுடன் வனவாசமேதிரிய
அங்குஞ்சில துன்பங் அனியாயமே நினைத் தான
எங்குந்திருமால் இவர்வசமாய்த்தானிருந்து
கார்த்தார்வினை தீர்த்தார் காயாம்புமேனியனுர்
ஏந்தார்முழுது மீடேறப்பஞ்சவரை
காட்டிலிருக்கக் கசடனுக்குவேளைவரில்
தாட்டிகமாய்வில்லி தற்காத்திவன்றனையும்
மீட்டிவனைக்கொண்டு வெளியேறவிட்டாலும்
நாட்டில்வராதேயென்று நடுங்கமொழிந்திடுவான்
நீதுசெய்தான்மாபாவி நிரியோநிரன்றுனும்
ஏதுமறியா திருப்பார்கள்பஞ்சவர்கள்
பொறுத்தாரரசாண்டார் பொங்கினார்மாண்டார்கள்
பொறுத்தார்கள்பஞ்சவர்கள் போனார்கள் நூற்றுவர்கள்
அகந்தையழிந்தது கா ணவர்மேற்குற்றமில்லை
இகந்தனிலேசூதுபண்ணி யெல்லோருமாண்டார்கள்

சொற்படியேகேட்டிருந்துந் துற்புத்திவிட்டாரோ
தம்பிஜெனமேஜெயனே தார்வேந்தே நீர்தாமும்
வெம்பிமனம்வெகுண்டு வெடுவெடன்றுசொன்னாயே
கேட்டீரோஞாயம் கேடுகெட்டான் தன்செய்தி
போட்டீரோபுத்தி புலையாட்டன்பேசுகிறீர்
இவ்வசனமாமுனிதா னெடுத்துரைத்தஞாயமதை
அவ்வளவுங்கேட்டு அரசன்ஜெனமேஜெயனும்
வாரீர்முனியேயுன் மந்திரமுந்தந்திரமும்
பாரீர்புவிதனிலே பஞ்சவர்க்கும்நூற்றுவர்க்கும்
வின்னம்வாராதபடி விற்பனமாயுட்புகுந்து
தன்மைகள்பாராட்டித் தாங்கியேசொன்னாக்கால்
இத்தனைக்குமித்திரங்க ளேதும்வாராதுகண்டீரா
கத்தனேதோற்றாமற் கண்காட்சிபாரத்துவிட்டீர்
சுற்றமுந்தன்கோத்திரத்தைத் துன்பம்வந்துசூழாமல்
சித்தமதிற்சற்றிறக்கத் திரணமுமக்கில்லாமல்
இருந்தவசியுனக் கின்பமில்லை துன்...
அருந்தவசியாயிருந்தும் ஆத்மத...வில்லாமல்
அவர்களுக்குக்காலபல னடைவ... நீர்சொல்லாமல்
இவர்களுக்குக்காலபல னிதமு...ன் நீர்சொல்லாமல்
இருந்ததினால்மாண்டார்க ளேதென்றுதோற்றாமல்
வருந்தினதினாலேதும் வாரப...முண்டோ
வேந்தனிவைசொல்ல வேதமு...யேதுசொல்வார்
பூந்தேருடைய போர்வேந்தேயி...து
யாகம்வளர்க்கவென்று அரசே நீ...யே
பாகமுடன்யாகமதிற் பலிக்குதுகாணுன்றனக்கு
ஏற்றபிரஹத்தி யியல்பாய்பிடிக்குதுகாண்
மாற்றவுனக்கு வகையுண்டோ ஆமாகில்
என்னைச்சலித்ததுதா னெவ்வளவுங்குற்றமில்லை
பின்னையுனக்குத் தெரியும்பிரமையினால்
உள்ளபடிசொன்னோம்நாம் உற்பனமாய்மகிழ்ந்து
வள்ளலறிய வழுத்துகின்றோமிவ்வசனம்

176487

போரோம்புவிவேந்தே பொன்னுலகந்தான்சேர
வாரோமினிமேலும் மன்னவன்தன்னிடத்தில்
என்றுமுனிசொல்லி ஏகினர்காணம்மானை
அன்றுஜெனமேஜெயனும் அவரைநமஸ்கரித்து
அனுப்பிச்சிலகாலம் ஆண்டிருந்தான்பூலோகம்
தனுப்பிடித்தகையுடைய தார்வேந்தனப்போது
யாகம்வளர்க்கவென்று அவனியெல்லாந்தானறிய
சேகரமாயுள்ள செல்லுந்தளபாடமுதல்
வரவேண்டுமென்று மந்திரிமார்தன்னுடனே
துரைவேந்தர்தாமுஞ் சொல்லலுற்றாரம்மானை
திரமுடையமந்திரிமார் தேசத்திலுள்ளோரை
பரவசமாகவேதான் பார்வேந்தன்தன்னிடத்தில்
அந்தப்படியே அவனிதனிலேயிருந்து
வந்ததளபாடம் மற்றுமுள்ளதாலிதெல்லாம்
சீராகச்சேகரித்துத் தெய்வப்பிராமணரை
நேராகஆயிரம்பேர் திருவாகமுள்ளோரை
வாகுடனேதானழைத்து வளர்ப்பதற்குபாகமதை
ஆகுதிசெய்ய ஆவினுடநெய்யாலே
நூறுகுடநெய்யும நொடிக்குமுன்னேதானமைத்து
வீறுடனேயாகம் வேதியரேசெய்யுமென்ன
தானுயதுமுடித்துச் சதுரமொக்கப்பந்தலிட்டு
ஆலயமாய்ச்சூதானம் அந்தணருந்தானிருக்க
விலாசமாயுண்டுபண்ணி வித்தாரொருநொடியில்
பலாசுமரம்பிளந்து பலகைவெகுசோடினையாய்
அரசுபலாமாவிலுப்பை ஆல்விறகுதெற்பையுடன்
புரசுமுதலுள்ள புங்குசங்குவேணதெல்லாம்
சேகரித்துவைத்து ஜெனமேஜெயன்றான்மூழ்கி
யாகத்தடியில்வந்து அந்தணரைத்தெண்டனிட்டு
வேதியர்க்கெல்லாமிசை வேணுமென்றவஸ்திரமும்
நீதியுடன்தான்கொடுத்து நிருவாகம்பண்ணுமென்ன
அக்கினியுண்டுபண்ணி யாகுதிகள்தான்கொடுத்து

மெய்க்கினியமந்திரங்கள் வேதியர்கள்தான் துதிக்க
சூழவேதானிருந்து சொல்லுமந்தவேதியர்கள்
வாழ்வீமன்பேரனையும் வாருமென்றுதானழைத்து
பலகைதனைப்பரப்பிப் பரிசித்துமைந்தனுக்கு
இலகுமணிரத்ந சனமுமிதமுடனே
பூசைசெபம்செய்யுமென்று புகழ்ந்தார்கள்வேதியர்கள்
நேசமுடனிருந்து நேமமுடனெல்லோரும்
வாசனையாய்ச்செய்யுமென்று வகுத்துரைத்தாரம்மானை
ஆசனத்தின் மீதிருந்து அட்சதையுந்தான்வாங்கி
யாகத்தைநோக்கி அன்புற்றுத்தானிருந்து
வாகொத்ததெற்பையது வாங்கியிருக்கலுற்றான்
அழகுமதியாகம் அக்கினியுந்தானெழுந்து
புளகமாய்த்தான்வளரும் பொற்புடனேஎக்கியமும்
முக்கியமாய்ச்செய்து முடித்துவரும்யாகமதில்

விருத்தம்.

மூன்னாள்மூனிவன்சொற்படிக்குமுடிக்கும்யாகந்தன்னிதேதான், இன்னாள்மயக்கம் வருவதற்கு ஏதோமறையோன்போலிருந்து, சொன்னான்வேதயாகமதிற் றூக்கமதனாற்றுயின்றசந்து, தன்னால்மயங்கிவீழாமற் சன்னை செய்தான்தார்வேந்தன.

இதுவுமது.

ஐயோமறையோனக்கினியி லசந்துவிழுவானெனன்றெண்ணிக், கையாற்றெற்பை தனைக்கொண்டு கழுத்திற்பிடரியதிற்றெட்டவே, மெய்யாப் புலிதான் பாய்ந்ததென்று வெருவப்பயந்து மறையோனும், நெய்யிலெரியுஞ்சுடரதனில் நேராய்விழுந்து நிமிர்ந்தானே.

கவிதை.

அருகிருந்துசாஸ்திரங்கள் அனுஷ்டிக்கும்வேதியரில்
உருண்டுவிழுந்து ஓமத்தீமூன்னிலையாய்
அசதிவந்துபார்ப்பா னசந்துகண்ணைத்தான்மூடி

பிசகுவருமென்று பேயனுந்தானெண்ணமல்
நித்திரைகொண்டு நிலத்தில்விழுவார்போல்
மித்திரமாய்ப்பார்ப்பான் மெய்மறதிகொண்டலேந்து
உறங்கித்தலேகவிழ்ந்து ஒணைசைந்ததுபோல்
திறங்களுமற்றலேந்து தேகம்விழுவதுபோல்
அந்தஉறக்கமதி லானதொருசொற்பனமும்
வந்தவழிதன்னில் வதியகடுவாய்ப்புலியும்
எதுக்கமறித்து இவனேவதைசெய்வதற்கு
அதக்கிவிளித்து அதட்டிப்பயமுறுத்தி
பிடிக்கின்றதுபொலப் பிராமணனுந்தான்பயந்து
நடுக்கியுடற்பதறி நஞ்சுண்டமீனதுபோல்
இருக்குந்திறமதனே இளவரசுதானறிந்து
வருக்கமுள்ளயாகம் வளர்க்கவென்று வந்திருந்தோம்
அதுக்குவிகாதம் அந்தணனலிப்போது
எதுக்கஇருந்தும் இசைகேடுதான்மூடிய
பார்த்திருக்கப்போகாது பாவம்வருமென்றுசொல்லி
எத்திருக்குந்தெற்பையினலிவன்சன்னேபண்ணவென்று
தீட்டினன்தெற்பைதனே நினேவுவருமென்றுசொல்லி
காட்டிற்புலிபாய்ந்துதென்று கலங்கயுடல்பதறி
ஆட்டிக்குதித்து அந்தணனுந்தீயில்விழ
மாட்டினன்தீயில் மடிந்தான்பிராமணனும்

பரிசித்துக்குப்பிரமஹத்திதோஷம்பற்றியது.

கண்டுஜெனமேஜெயனுங் கலங்கியுடல்பதறி
பண்டுவியாசர் பகர்ந்தமொழிப்படிக்கு
வந்ததுகாண்பாவம் மதியைவிதிவிலக்கித்
தந்ததுகாண்யாகபலன் சனியன்பிடிக்கவென்று
வெந்துமனமிடைந்து வெருட்சியதுதான்பிடித்து
இந்துரவியில்லாத இருளதுபோற்றன்மூடி
மாயைபிடித்துமனு நீதியைமறந்து
பேயும்பிடித்ததுபோற் பிரமைகொண்டானம்மானே

மன்னன்ஜெனமேஜெயனும் மாயைபிடித்திருக்க
தென்னவர்களெல்லாந் தீவினையோவென்றுசொல்லி
ஆருந்துயரம் அருந்துயரம்வந்ததென்று
நீராகிவெந்து நெஞ்சமெல்லாம்புண்ணாகி
என்னசெய்வோமென்று ஏங்கிப்பரதவித்து
முன்செய்த தீவினையோ முனிவனுடசொற்படியோ
எந்தவிதமோதா னிடையூறுதான்முடிந்து
வந்தவிதியறியோம்மகாதேவாவென்றயர்ந்து
செய்யுமருந்துகள்தான் தேசத்திலுள்ளதெல்லாம்
வையுமென்றுபண்டிதங்கள் வைத்யமருந்தாலும்
சற்குணமில்லாமற் றனுசத்தியாடுகையால்
பித்துக்கலங்கி பிதற்றுகிறானென்றுசொல்லி
கலிக்கமுரைத்துக் கண்ணிலிட்டுமொன்றுமில்லை
தலையிற்குடோரியிட்டுத் தயிலந்தனைத்தேய்த்து
கலையுதில்லைபித்தம் காலவினையென்பாரும்
மருள்பிடித்ததென்று மந்திரங்கள்செய்வாரும்
இருள்பிடித்ததென்று எந்திரங்கள்கட்டுவாரும்
செய்யவினோதமெல்லாஞ் செய்தலுத்துமெல்லோரும்
அய்யோசிவனேயென்று அபயமிட்டுச்செல்வோரும்
மெய்யன்மகேஸ்பரபூசை வேதியர்க்குப்போசனமும்
வேய்யோனுக்குள்ள விளங்குபொங்கல்தான்முடித்து
அகுதிபரதேசியர்க்கு அன்னமிடக்கொடுத்து
நிகுதியுடன்தானதவம் நேமமுடன்கோவில்குளம்
சத்திரமடங்களன்ன சாலைகளுமந்தணர்க்கு
சித்திரமாய்ப்பூசைபல செய்வாரனுதினமும்
நால்வேதசாஸ்திரமும் நாளும்விளங்கிவர
பால்தயிர்கள்நெய்கள் பருப்புமுதலரிசி
வாகாய்மறையோர்க்கு மாறாமல் நித்தியமும்
பாகாய்முறைப்படியே படியளந்தவேதியற்கு
தானதவஞ்செய்து தவிப்பார்பரதவிப்பார்

ஞானசிவபூசை நடத்துவார்தாட்சியற
தேசத்திலுள்ள ஜெனமும்ஜெனமேஜெயனும்
வேசத்திருந்து மெய்மறந்துகைசோர்ந்து
பாருலகைத்தாங்கும் பரிசித்துவேந்தனுக்கு
காருலவுமேனியரே கண்ணரே இப்போது
தீதுவரக்காரியமேன் செய்ததவக்குறையோ
வாதுசெய்தமாமுனியும் வாராரோ இப்போது
எதுசெய்வோமென்று இருந்ததருவாயில்
சாதுவெனும்வேதமுனி தன்னினைவிலேதோன்றி
பராராஜமாமுனிவன் பயின்றதொருபுத்திரனும்
சாராசவேத சகலகலைவல்லவனார்
வேதவியாசமுனி மேதினியிலேநடந்து
போதகமாயத்தினபுரந்தனிலேவந்தார்காண்
வந்தரிஷிபாதம் மன்னரெல்லாந்தான்வணங்கி
இந்தவிகாரம் இவற்குவந்தகர்மவினை
தீர்த்தருளவேணும் ஜெனமேஜெயன்றனக்கு
காத்தருளவேணுங் கடவுளேகாரணரே
சிறியோனறியாதே செய்தகுறையைப்பொறுத்து
வெறிபோகப்பாருமையா வேதவியாசரே நீர்
என்றுமன்னர்சொல்ல இறையோன்மனமகிழ்ந்து
ஒன்றுமறியாமலுரைத்தீரேமன்னவரே
நாமேதுசெய்வோம் நாடும்விதிதனக்கு
போமேதுசெய்தாலும் போமோபிரமையிது
அல்லவேசொல்லுகிறேனந்தப்படியிவன்முன்
சொல்லவேகேட்டாற்றொடர்பிரமைதீர்ந்துவிடும்
முன்னாளிற்பஞ்சவர்கள் மூண்டுசமர்பொருது
மின்னுனபாரதப்போர் வென்றுமுடிந்தகதை
சொல்லென்றுகேட்டான் தோதாய்ச்சமர்தனிலே
மத்தகசந்தன்னை வாரிப்புடைத்தெரிய
சத்தமுகில்கடந்து தாண்டிவெகுவானுயரம்

போய்ச்சுழன்றபிதென்று பூரித்தான்பாரதத்தில்
வாய்வுச்சுழியில் வளைபட்டமத்தசெஜம்
வாராமலங்கே மரித்ததுகாணந்தரத்தில்
சிராய்ஜெனமேஜெயனுஞ் செவியுற்றுத்தான்கேட்டு
பொய்யென்றளவிற் பொரிவெளுப்புவெள்ளையதாய்
மெய்யெங்குந்தாவி வெண்பொரியாய்க்கண்டதின்பின்
ஐயமுடனெல்லோரும் அழுதுபாதவித்து
இதுக்குவகையேது என்னவென்றுபார்ப்பளவில்
அதுக்குவகைதா னறிந்தோரெடுத்துரைக்க
புத்தியென்றுகேட்கப் பொருந்திமதியுடனே
பத்தியாய்ப்பாரதத்தைப் படிபடியாயின்னொருக்கால்
கேட்டீரேயானுற் கிலேமறத்தீர்ந்துவிடும்
நாட்டீர்மனதையதில் நடுவே நிதானமதாய்
என்றுரைக்கவேபெரியோ ரின்பமாய்வந்திருந்து
அன்றுஜெனமேஜெயனும் ஆமென்றுபாரதத்தை
படியைப்பிடியடா|பாரதப்பட்டாவெனவே
முடியுமட்டுந்தான்கேட்டு முற்றிலுமே ஆராய்ந்து
வெள்ளையுந்தீர்ந்திலேயே வேந்தனிவன்றனக்கு
கொள்ளைபிரமைமிது கூட்டோடேபோவதற்கு
ஐவரரசாண்டு அவனிவிட்டுத்தானேகி
செய்யபுகழ்வைகுந்தம் சேர்ந்தகதைதான்கேட்டால்
திரும்பிரமைமிது தென்னவரேயென்றுரைத்தார்
பாரும்புதுமைமிது பலிக்குஞ்சலிப்புறவே
கரும்பட்டுப்போத்திக் கருத்துடனேதான்கேட்டால்
அரும்பட்டும்வெண்பட்டா யாகுமதுதப்பாது
அப்போபிரமை யகன்றுவிடுங்கண்டீரே
இப்போதுகேளும் இன்புற்றுத்தானிருந்து
என்றுசொல்லிமாமுனியு மேகினர்காணம்மானை
நன்றுநன்றென்று நமஸ்கரித்தாரெல்லோரும்
ஆமென்றுசம்மதித்து ஹரிஓமெனவேதான்
ஓமென்றுராஜ னுற்றஜெனமேஜெயனும்

வைகுந்த அம்மானை வாகுடனே தான்கேட்க
செய்கின்ற சாஸ்திரங்கள் செய்வித்துவேந்தனுந்தான்
அம்மானைபாடுகின்ற அரியகதைதனையும்
செம்மான்தரித்த சிவனருளே உண்டெனவே
கதை துவக்கங்கேட்கக் கருத்திலுற்றமன்னவனும்
பதையாது கேட்கப் பல நினைவுமில்லாமல்
நெஞ்சமயருமல் நினைவுதடுமாருமல்
அஞ்சுபஞ்சபூத மடக்கிப்பொறிபுலனை
வேராறுத்தூக்காம வெகுளியும்விட்டேகி
காராறுத்துமாயக் கசடதனையூடறுத்து
ஏகமனதாய் இருதயத்தைச்செப்பனிட்டு
ஆகமுடன்கேட்க அரசன்கொலுவிருந்தான்

விருத்தம்.

வேதவியாசர்முனனுளில்விளம்புவசன முள்ளபடி சேதிமுழுதுஞ்சிறப்புள துந் தெரிந்துபார்க்கச் சமனித மாய்ப், பூதமனைந்ததயிர்போலப் புவனமிருந்த வகை மோசம், நீதமிருந்தும்நெறியிருந்தும் நிலையாவண்ண மெளிதாச்சே.

இதுவுமது.

விதித்தவிதியைப் பாராமல் வேதவியாசர்தனை நோக்கி, எதுத்துச் செய்திகேட்டபல னிப்ப நமக்குப் பலித்துதென்று. மதித்துமனை தில்ஜனமேஜயன் மனது கலங்கித்தெளிந்தறிவாய்த் துதித்து முனிவரடி பணிந்து நயமகிழ்ந்து சொன்னனே.

வேறு.

சொல்லியகதையைக்கேட்கச்சுத்தமாய்மனதைத்தேற்றி
பல்லயவசனமெல்லாம் பரிவுடன்தெரியநன்ருய்த்
துல்லியமாகக்கேட்டுத் துயரறப்பிரமைபோக
மெல்லியபட்டுப்போத்தி வீற்றிருந்தரசன்கேட்டான்.

கருநிறப்பட்டுப்போத்து கதைதனையுற்றுக்கேட்டால்
கருநிறம்வாங்கிவெள்ளை கதித்தவெண்பட்டதாகும்
வருமொருபிரமை நீங்கி மனத்துயர் தீருமென்று
குருமுனியுரைத்தநேசங்குணமெனக்கேட்டானரசன்

கதை.

வாகுடையபஞ்சவர்கள் வைகுந்தஞ்சேர்ந்தகதை
பாகுடையசொல்லான் பரிசித்துராஜன்மகன்
சீரார்ஜெனமேஜெயனுஞ் சித்தமகிழ்ந்தன்பாக
நேராகக்கேட்க நீலவண்ணர்காப்பாமே
ஓதும்புகழ்கதையை உரைக்கவேதான்கேளீர்
மாதுசரஸ்வதியாள் வழுத்துகின்றசொற்படியே
மேருவிலேகந்தர விரித்தெழுதும்வேதாந்தம்
பாரிலுள்ளோர்கேட்கப் படிக்கிறேனம்மானை
ஐவர்சகாய னரிகேசவன்முகுந்தன்
சைவர்சகாயன் தாமோதரனிருக்கும்
அரியவைகுந்த மடைவோமெனவேதான்
உரியதொருதன்ம பொருமித்துஒமெனவே
நடக்கிறார்தேசம்விட்டு நன்னகரிதான்கடந்து
வடக்குமுகமாய் வடமேற்கொருபுறமாய்
தர்மருடதம்பியருந் தாரார்துரோபதையும்
கன்மமெல்லாம்விட்டுக் கங்கைக்கரையில்வந்தார்
கங்கைநதிகண்டு கையாற்புனலேந்தி
மங்கைதுரோபதையும் வாகானஐவருமாய்
தலையிற்புனல்தெளித்துத் தாயேசரணமென்று
[illegible]லையிலேதான்மூழ்கி அனுஷ்டானமேமுடித்து
அ[illegible]த்தனைவணங்கி ஐவருந்தானங்கிருந்து
ஆ[illegible]த்தார்வேற்றுருவஞ் சன்னாசிவேடமுமாய்
சாதிதமரவுரியுஞ் சடைமுடியுந்தான்தரித்து
சா[illegible]தமாய்வேடம் பருவமாய்த்தான்முடித்து
பாத[illegible]ாசைதானும்விட்டு உற்றமன்னராசைவிட்டு
ஊர[illegible]

பாராசைதானும்விட்டுப் பைங்கொடியார் தன்னைவிட்டு
மாதாவினையும்விட்டு மந்திரிமார் தன்னைவிட்டு
மீதானகானகத்தில் விரையவேசென்றனர்காண்
அப்போதுமாய னவர்மனதைத்தேற்றுதற்கு
இப்போதெதிரே இவர்காணவேகலியன்
தன்னுடையமாதாவின் தலைமேற்சுமையேற்றி
மன்னுமனைவிதன்னை வார்புயத்திலேயேற்றி
வந்தவனைக்கண்டு மன்னர்தர்மர்தானகைத்து
இந்தவகைதம்பியரே ஏதோசகாதேவா
கண்டோம்புதுமை அய்யா கலியுகமே ஆகையினால்
அண்டாப்பெருஞ்சுமையை அன்னைதலைமீதேற்றி
பெண்டீர்தனைத்தோளிற் பிரியமுடன்வைத்துவந்தான்
பண்டுமொழிதவறிப் பழுதுவருமேநமக்கு
மாநகரைவிட்டுவந்து வகையாய்ப்பிழைத்தோமே
ஆனதம்பிமாரே அரிகேசவன்பதத்தை
நன்றாகஉச்சரித்து நம்பியேயென்பிறகே
குன்றாமனத்துடனே கோபாலருண்டெனவே
தர்மருந்தம்பியர்க்குத் தயிரியமாய்வார்த்தைசொல்லி
சீர்மருவுங்கானகத்தில் சென்றுபுக்காரம்மானை
கல்லுமுருகிவிடுங் கடுவிஷமும்வெந்துவிடும்
புல்லும்புகைபாலவனம் போய்ப்புகுந்தாரம்மானை
மேவலர்கள்தன்பதமும் மின்னனையாள்தன்பதமும்
பூவிலுமெல்லியதாள் பொருமலுந்தானேதுரைப்பார்

விருத்தம்.

தேகமிழந்துவாராமற் செடத்தைமிகவேதான்சும[illegible]
ஆகமகிழ்ந்துவருவோர்தம் அடிகள்சுடுமோகோ[illegible]த்து
தாகமிகுந்ததவிப்பினைப்புஞ் சாராதுடவிற்றயவு[illegible]பாலா
மேகஞ்சிறந்தமேனியனே விடைதாநந்தகோபால[illegible]ய்து

ஒன்றுமறியோம்பொருளறியோம் உலகளந்தமாய[illegible]ா.
நன்றுமறியோம்தீதறியோம் நந்தாமுகுந்தாநாரசி[illegible]வரே
[illegible]ங்கா

அன்றுசகாயமுடனிருந்து அடியார்தங்களிடர்தீர்த்த
குன்றுமனங்கள்குன்றுமற்குடிகா நந்தகோபாலா.
அடியார்க்கிடருவாராமல் அருகேவருவாய்பிரியாமல்
வடிவேற்கரத்தான் மாம னென்றுநேயமுடனேதான்
கடிவாய்மிருகமன்றோடக் கடியசுரங்களனுகாமல்
நெடியோனேவந்தருள்செய் நீயேநந்தகோபாலா.
உருவாயுருவிலோருருவா யுடலிற்புகுந்துதனதாகி
வெருவாய்குளறியிரையாமல்வேறேகவனம்நினையாமல்
கருவாய்மயலேபிடியாமற் காத்தாய்கருதியெம்முனே
வருவாயடியார்வைகுந்தம் வரவேநந்தகோபாலா.

மனதுவெறுமை பொல்லாது மாயக்குரங்கு வலு சேட்டை, எனதுமனது பலபலவு மென்றேயெங்கும் பொறிபுலனைத், தனதுதனது எண்ணுமற் றனக்குத்தானே தனித்துமனம், உனதுபதியே கெதியாக உதவும் நந்தகோபலா.

கதை.

கலக்கமில்லாதெங்களையும் கண்ணுதலேகாத்தருள்வீர்
மலக்கராமதைவிலக்கி வழிகூட்டியெங்களையும்
நடத்தும்பெருமாளே நாங்களொன்றுந்தானறியோம்
சடத்துக்குள்வாழும் தத்துவமேபோறறியென்று
நடந்தார்வழியில்நமோ நாராயணவெனவே
மடந்தைதனைவருமாய் மலர்ப்பாதந்தானோக
சோலைநிழலில்லாத சுடுவனங்களானதொரு
பாலைவனங்கடந்து பஞ்சவர்களப்பாலும்
அருள்முனிவர்வாழு மாச்சிரமர்தான்பார்த்து
இருளிரண்டுவாரதின விரவியுமேபோய்மறைந்தான்
கார்மேவும்வல்லிருளிற் காவலர்களைவருமாய்
பார்மீதிலேபளிங்குப் பாறையின்மேலேநடந்தார்
கொள்ளிக்குவிள்ளாத கூரிருளிலேயலைந்து

தள்ளிவழிநடக்கச் சற்றுந்தெரியாமல்
மனந்திகைத்துப்புண்ணாகி மாயோனைத்தானினைந்து
கனலின்மெழுகதுபோல் கானகத்திலேயுழன்று
தம்பிமார்தன்துயரந் தானறிந்துதன்மருந்தான்
எம்பிமார்தன்மனது இனியறிவோமென்றுதன்மர்
பார்த்தனுடன்நால்வரையும் பாஞ்சாலிதன்னையுந்தான்
ஏத்தவொருஉற்பனந்தா னினிக்கூறக்கேளுமென்று
தம்பியரைநோக்கித் தன்மருந்தானேதுசொல்வார்
வெம்பிக்கலியால் வெருண்டுபயந்தைவருந்தான்
எதிர்த்துப்போராடாமல் இளைத்தோடிப்போனதால்
துதித்துலகோர்தானுந் தூஷணிப்பார்கண்டீரோ
இருந்துஜெயங்கொண்டு எதிர்த்துவிரட்டாமல்
அருண்டுமிகப்பயந்து ஆரணியம்போய்ப்புகுந்தார்
என்றுலகஞ்சொல்லி ஏசாமலிப்போது
மன்றுலகந்தன்னில் வாள்வீமன்மைந்தனுக்கு
சென்றுதவியாகத் திரும்பியேநால்வோரும்
ஒன்றுபோல்கூடி யுலகாளத்தம்பியரே
சேர்ந்துகலகம்புகுந்து சேய்க்குதவியாயிருந்து
ஏந்துபரிசித்துவுக்கு எதிர்த்தோரைவாதுசெய்ய
கலியனும்வந்து கைகலந்துதானெருங்கி
வலியச்சருவி வளைத்துப்போர்செய்தாக்கால்
சிறுவன்வினையறியான் செருக்களத்திற்சென்றறியான்
உறும்பூசைசெய்தறியான் உற்றதொருபேருமில்லை
தானேதனியாத் தயங்கிமலையாமல்
தேனேயென்தம்பியரே சேர்ந்துகலந்துகொண்டு
உற்றபரிசித்துதனக் குதவியாய்ப்போயிருந்து
வெற்றிசெய்யவந்தோரை விரட்டிவினையூடறுத்து
செங்கோல்தழைத்தோங்கத் தேசமெல்லாந்தான்வாழ
அங்கேயிருந்து அவனிதனையாளுமென்று
சீராருந்தன்மர் தெரிந்துரைத்தாரம்மானை
நேராயிருந்த நேரிளையோர்நால்வருந்தான்

மன்னா நீரெங்களையும் மாநகரிற்போயிரென்றால்
அண்ணலே நாங்க ளபசாரஞ்செய்ததுண்டோ
கந்தனுடசித்தங் கலங்கினதுளந்தவிதம்
பெற்றபிதாவறியோம் பின்னையொன்றுந்தானறியோம்
இந்தமட்டுமெங்களை நீ ரிடுக்கிக்கொடுதிர்ந்து
வந்தவினைக்கெல்லா மறுப்படாதெங்களையும்
வளர்த்த அருமையிதோ வனந்தனிலேவந்திருந்து
அழுத்தமுடனெங்களை நீ ரகலப்போமென்றுசொன்னீர்
அய்யாகுருகுலமே அண்ணலேயென்றழுதார்
மெய்யோதான் நீரும் விட்டுப்பிரிவீரோ
எங்களையும்விட்டு இருப்பீரோதான்தனியே
திங்கள் முகவதனு செப்புகின்றவாறேது
சித்தத்துக்கேறாத தீவினைகள் செய்தோமோ
கத்தரே துரோகங் களவினைகள்செய்தோமே
செங்கோல்செலுத்துமென்று தேவருடவாக்கதனால்
எங்கள்முகம்பார்த்துரைக்க வெழுந்ததோசித்தமது
கணப்பொழுதும்மைவிட்டுக் காணாதிருப்போமோ
க்ஷணப்பொழுதுதான்பிரிந்தால் தரிக்குமோஎங்களுயிர்
அண்ணரேயெங்களைத்தா னவனிதனிற்போமெனவே
எண்ணிமனந்துணிந்து இயம்பினீரண்ணாவே
தம்பியருமீதுரைக்கத் தன்மருந்தானேதுரைப்பார்
அன்புடையதம்பியரே ஆளுகின்றதேசம்விட்டு
என்பிறகேவந்தா லிளவரசுக்காருமில்லை
தம்பிமுகம்வாடித் தானேபசித்திருப்பான்
அரசுநிலைநிறுத்தி அவனிதனிலேயிருந்து
விரசுண்ட அத்திபுரம் மேதினியைத்தாணாண்டு
குருகுலத்துமன்னருட, கோத்திரத்திற்றான்கூடி
மருவியிருந்து வாழுமென்றுதா னுரைத்தார்
அந்தமொழிகேட்டு ஆனதம்பிநால்வருந்தான்
இந்தமொழியுரைத்தீ ரென்கோவே அண்ணாவி
மண்ணாசைபெண்ணாசை யற்றுமுள்ளபொன்னாசை

கண்ணனைமைந்தரொடு காசினியிற்பேராசை
எல்லாமனம்வெறுத்து இப்போதுஉம்முடனே
எல்லாரும்வைகுந்தஞ் சேரவென்றுதானினைந்து
வந்தோம்புவ்யைவிட்டு வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாய்வரவே சஞ்சலங்கள்சொல்வதென்ன
ஆண்டவனேஇப்போது அடியேனுஞ்செய்தபிழை
நீண்டபுவியில் நெறிசேருமண்ணவி
சரணஞ்சரணமென்றுதாளிணையைப்பூண்டுகொண்டார்
சரணமென்றதம்பியரைத் தன்மரெடுத்தணைத்து
அடிகள்மிச்சுடவும் ஆவிதளன்றிடவும்
கடியமணற்சுடவுங் காலோயநின்றிடவும்
மாயையிருளில் வழிதிகைத்துநின்றிடவும்
சாயைவிட்டுவெந்து தட்டழிந்துநின்றிடவும்
பதியிழந்துகானிற் பரதேசியாய்வரவும்
அதிகபயுசிழந்து அரும்பசிகொண்டேவரவும்
நீங்கள்படும்பாடுகண்டு நெஞ்சம்பொறுக்காமல்
தாங்கமுடியாமற்றானுரைத்தேன் தம்பியரே
இன்றூடன் நீங்க ளென்பிறகேவந்தவரை
துன்பமிகநினைந்து சொல்லுவனேயான்பாவி
நாருந்திருமால் நமக்குத்துணையாக
ஆளுங்குருசாமி அரியோன்பதஞ்சேர
நினைத்துவந்துநெஞ்சம் நிலைதவறுதோர்மனதாய்
மனந்துணிந்துவந்தீர் வைகுந்தம்சேர்வோம்நாம்
என்றுதன்மர்தம்பியர்க்கு ஏற்றதொருசெய்திசொல்லி
நின்றுதுரோபதைதன் நினைவறியவேணுமென்று
கால்களடிச்சுவடுங் கண்கள்பொறியெழவும்
மேல்களதுபுண்ணாகி மெய்மறந்துகைசோர்ந்து
அருமைதலைகுலைய ஐவருடன்பின்னேதான்
பெருமைசிறுமையதாய்ப் பெண்ணரசேயிப்போது
உரு[illegible]ன் நீவருவ துத்தமமோவெங்களுக்கு
தருமரென்றபேரேது தயவுசற்றுமில்லாவிட்டால்

ஆனதினாற்பெண்ணேயென் அன்னையர்தானுன்மாமி
தானவளும்மாளிகையிற் றனியேயிருப்பாள்கேள்
மானனையீர் நீபோயுன் மாமியுடன்சேர்ந்திருந்து
ஞானசிவபூசைகள்தான் நடத்தியனுதினமும்
குந்தியம்மாளிடத்திற் கோதையரேசேர்ந்திரென்றார்
அந்தமொழிகேட்டு அருந்ததியுமேதுசொல்வாள்
மெய்யரோயெந்தனையும் வித்தகரோ இப்போது
பொய்யுரையாவேந்தே போவென்றுசொன்னதென்ன
தான்பாவியானேனே நாயகமேயென்றழுதார்
தேன்பல்குங்கோவே சித்தத்திற்கண்டதென்ன
வாகாகவென்னை வரவேண்டாமென்றதென்ன
ஆகாப்புலைச்சி யழிபுலைச்சியனேனே
சற்பனைகளான சதிகேடுசெய்தேனே
கற்பழிந்துவேறு கண்டாசைகொண்டேனே
ஐவர்துணையென்று அன்றுமுதலின்றளவும்
மெய்வருந்திநாளும் விட்டுப்பிரியாமல்
சித்தம்வாநடந்து சேவடியைப்பூண்டிருந்தேன்
கத்தனுக்குத்தமன்னு கண்டீரோவென்கோவே
இனிமேலடியேற்கு ஈடேறப்புத்தியென்ன
பணியானபொய்யுடலைப்பாரமென்றுகொள்வேனே
வையகத்தோர்சொல்லி மழுப்பிநகையாரோ
மெய்யகத்திற்சென்று மேலும்பிரியாமல்
காத்தருளவேணும் கண்ணருடதன்னருளால்
ஏற்றசிறைதன்னை யீடேறமுற்றிலுமே
சீர்பாதந்தன்னிற் றினமும்பணிந்துதொழ
ஓர்மனதாயிற்றென்று உத்தாரம்பண்ணுமென்றாள்
தன்மர்மனமகிழ்ந்து தையலையுங்கொண்டாடி
கன்மமெல்லாம்விட்டுக் கரையேறுவோம்மேலே
சற்றுங்களங்கமில்லை தையலுடன்தம்பியர்மேல்
முற்றுந்தெளிந்து மோகவலைவிட்டேகி
வந்தோமினிமேல் மலைவுகள்சற்றுமில்லை

சந்தோஷமாச்சுதென்று தன்மர்மனகிழ்ந்து
அல்லிருளுந்தானீங்கி யாதித்தன்வந்துதித்தான்
வல்லிருளும்போனபின்பு வாய்த்ததன்மறைவருந்தான்
எழுந்துசுத்திசெய்து இன்பமுடன்சூரியனை
விழுந்துநமஸ்கரித்து மென்மலர்கள்தானெடுத்து
தானமதுசந்திபண்ணித் தற்பணமுந்தான்முடித்து
ஞானமதுசிவமும் நறுமலரும்தான தூவி
வெய்யோனைத்தெண்டனிட்டு மிக்கானஐவருந்தான்
மையிருண்டகானக வனத்தில்வழிகூடி
புலிகரடியாளிசிங்கம் பொல்லாதயானைபன்றி
நலிவுகண்டுதானதட்டி நடந்தார்வனங்கடந்தார்
பார்த்திபருங்காடுவிட்டுப் பரிவாய்வெளியில்வந்தார்
ஆற்றோரம்வந்து ஆத்துமத்தைச்சுத்திபண்ணி
சீரானகாட்டிலுள்ள தீர்த்தமதுதானாடி
தாராருமாமுனிவர் தன்னையடிபணிந்து
மாமுனியேநாங்கள் வைகுந்தஞ்சேர்வதற்கு
பூமேவும்மேனியரே பொருந்திவிடைதாருமென்றார்
நேமமுடனிப்போது நெடியோன்பதஞ்சேர்வீர்
ஆமென்றுமாமுனியும் அருளினார்நல்வசனம்
நல்லதென்றுபாலைவனம் நடந்தார்கள்பஞ்சவர்கள்
வல்லதொருகானல் வழிந்தொழுகிநீரதுபோல்
காடுதனிலோடுங் கானலைநீரென்றுசொல்லி
ஓடுவாரள்ளியுண்ண ஒண்டொடியுமைவருமாய்
பாலைவனக்கொடுமை பார்பிளந்துவேறாகி
சாலையெனும்மூங்கில்வனந் தானெருங்கித்தூளாகி
விண்ணளவுந்தீவளர்ந்து மேகமுந்தீர்வற்றிடுமாம்
கண்டுபயந்து கடவுளேதஞ்சமென்று
விண்டுவின்தன்பாதம் மென்மேலுமுண்டெனவே
நடந்தார்மலையாமல் நாரணரேதஞ்சமென்று
அடர்ந்துமருதவன மடித்துமெள்ளவந்ததுவாம்
இருந்துதவிபுரிய எழுந்திருந்தாரம்மானை

வருந்துகிறஜவரந்த வனமுங்கடந்தேகி
ஓடியொருபதினேழு யோசனையுந்தான்கடந்து
நாடித்திசைநோக்கி நடந்துவழிகூடி
பத்தியாய்த்தேங்கும் பரிந்துநிழலாடும்
வெத்தியுள்ளவெள்ளை வெளியாகத்தான்தோன்றும்
அடுத்தோரைக்காட்டுகின்ற அளவற்றசோதியது
தொத்துவெகுதூரஞ் சுந்தவெளியானதொரு
பளிங்குநல்லபாரையிலே பாங்குடனேதானடந்து
பொழிந்துபனிமழையும் புயல்பெய்யக்கண்டனராம்
கண்டபுதுமைதனைக் கண்ணுடையதம்பியர்க்கும்
ஒண்டொடிக்குங்காட்டி உயர்கானகங்கடந்து
மேனிமிகக்குழைய மெல்லடிகள்கொப்பளிக்க
சோனைமழைபெய்யுந் தொல்கானகங்கடந்து
வெகுதூரந்தான்கடந்துவிசாரமெல்லாந்தான்களைந்து
ரகுராமாவென்று நடந்தார்காணம்மானை
அங்கேநெடுந்தூரம் ஆறும்அருவிகளும்
தங்காமலேநடந்து தாண்டிக்கரையேறி
ஓடும்நதிகடந்து உப்பாறுதான்கடந்து
தாடும்புனல்கடந்து தகையாறிநின்றளவில்
நெடுங்கானகந்தனிலே நெருப்பாறுதான்வரவே
கடுங்கானலாரவாரங் கண்டேயவர்கள்மனம்
கலங்கிமனமிடைந்து காவலர்களந்நேரம்
மயங்கியேதன்மர் மாயோனைத்தானினைந்தார்

நெருப்பாற்றைவழியில்கண்டுவிஷ்ணுவைத்துதித்தல்:

விருத்தம்.

ஆயனேநந்தகோபா அச்சுதாபச்சைமாலே
மாயனேசமயமிப்போ வந்துநீர்காக்கவேணும்
தூயனேநெருப்பினாறு சுழியெரிந்தோடக்கண்டேன்
நேயனேஆறுதாண்ட நெடியவாதுணைசெய்வாயே.

நெருப்பாற்றின்வலுவேகம் நீயேயறிவாய்நானறியேன்
கருப்பாறெனவேகனலதனைக் கையலைத்துக்கையார
திருப்பாற்கடலைப்புனலாக்கி செவ்வேவழியுந்திறந்துநல்ல
தருப்போலுதவும்மாயவா சரணஞ்சரணஞ்சரணமே.

அனலாயெழுந்து வருந்தீயை அடியேன்கண்டு பயந்துநொந்து, புனலேகண்ணீ விருந்தொழுகப்புண்ணாய்நொந்துபுலப்புகிறேன், கனலேபுனலாய்க்கொண்டருளிக் கற்பித்தருள்வாய் கண்ணுதலே, எனலாவிரங்கியடியார்முன் இனிவாநந்தகோபாலா.

கதை.

மாயன்றனை நினைந்து மனதிற்றியானமதாய்
நேயமுடனைவர் நின்றுதொழுமவ்வசனம்
அரிகரிமாதவனே ஆபத்துக்காத்தவனே
விரிகடற்பள்ளிகொண்ட வித்தகனேவந்தருளும்
வடமலைக்கோபாலா வந்துநீகாக்கவேணும்
கடலையடைத்தவையா காவலுனகாவலையா
மாமாரிதனைக்காத்த மாதவாகோவிந்தா
இதுதற்சமையமையா எங்களைக்காப்பாற்றவாரும்
பச்சைமாலென்றுசொல்லப் பாவமகன்றுவிடும்
அச்சுதாநந்தகோபா ஆயனேயென்றுசொன்னார்
விக்கினங்களெல்லாம் விலகுமேயென்றுசொல்ல
அக்கினிபகவானும் அன்பாய்மனதிரங்கி
மற்றுமந்த அக்கினிதான் வழிவிலகியப்பாலே
உற்றமருமகனுக்கு ஒதுங்கிநின்றமாமியைப்போல்
விலகிவழிவிடவும் விரைந்தவர்தானடந்தார்
இலகுபுகழக்கினிவிட் டேகினர்காணம்மானை
அவ்வனத்தைவிட்டு அநேகநெடுந்தூரம்
எவ்வனமுமாயுதமு மிக்கோலமாய்நடந்தால்
பாவமகலாது பார்த்தவற்குமேருந்து
தேவகிதன்பாலன் திருமாலுதவிசெய்வார்

வரும்நமக்குஞானம் வழியேபுதுமையெனத்
தருமருத்தானினைந்து தம்பியரைத்தானோக்கி
தாராார்புயவீமா தம்பியருச்சுனரே
சீராகநானொருசொல் செப்புகிறேன்கேளுமென்றார்
தம்பியரெண்ணாது தமையனுமென்றெண்ணாது
தம்பியதோரன்னைசுற்றம் நால்வகையுமெண்ணாது
பெற்றபிள்ளையீதெனவே பிரியமுடனெண்ணாது
சுற்றமென்றுசற்றே துணையுமென்றெண்ணாது
மன்னர்மகுடமுடி வர்த்தனரென்றெண்ணாது
தென்னர்குருவாசாரி தேவரையுமெண்ணாது
தானவனுமென்னுந் தவசியென்றுமெண்ணாது
ஞானசிவயோகியொரு நாதரென்றுமெண்ணாது
வாதுசமர்பொருத வந்துவிடுமிந்தமதம்
தீதுவருமல்லாது தெளிவுவரமாட்டாது
மூர்க்கமேஉண்டாகும் மூளையேமிகவாகும்
தீர்க்கமுடனுண்மையிது செய்யுந்தொழிலாகும்
ஆசாரந்தோற்றாது அன்புசற்றும்வாராது
ராசாதிராசனென்று லாகிரியேஉண்டாகும்
வித்தைமதம்புத்திமதம் வேகமேஉண்டாகும்
இத்தையெல்லாங்கொண்டு ஏகுவதுஞாயமல்ல
ஆயுதமுமாகாது அருந்தவசில்வந்தவற்கு
வேயுதவிதம்பியரே வில்லுமெடுப்பார்களோ
வல்லதொருநீள்சிலையை வாருதியிற்போடுமென்றார்
அல்லதினிநாமும் அவனேஒருதுணையே
போவதுவேஞாயம் புத்திசொல்லக்கேட்டருளும்
தேவரீர்சொன்னமொழி சிறிபோகன்கேளோமோ
அண்ணரேயெங்கள்சிலை ஆழ்கடலிலேயெறிந்து
இண்ணமாய்வாரோமென் தேவேநாமென்றுசொல்லி
தருமருரைத்தமொழி தம்பியருந்தட்டாமல்
பொருசிலைகொண்டுபோய்ப் போட்டாரலைகடலில்
நடந்தார்நிராயுதராய் நல்லதன்மர்தம்பியரும்

கடந்தார்வெகுதூரங் காதமிருகாதவழி
அப்பால்வெகுதூர மானபிரமகிரி
மெய்ப்பாகவேநடந்து விரையவேகாதவழி
வந்துதவிப்பாரி வாணுதலுமைவருமாய்
சிந்துலவுங்கண்ணூரங்கா தேவியுறைநாகமலை
தாங்காமல்வந்து சங்கரியைத்தான்தொழுது
பூங்காவனம்புகுந்து போனார்களைவருமாய்
அந்தவனந்தனிலே அணுகாவனமாகி
நொந்துவழிகாணுமல் நொந்திடைந்துஐவருமாய்
மறுகித்திகைத்து மாயோனைத்தஞ்சமென்று
முறையிடவே அந்தரத்தில் மொழிபிறந்ததம்மானை
வேழமுகத்தானுமைய விக்கினங்காணென்றுசொல்லி
காளமுகில்மேனியனார் கற்பித்தாரந்தரத்தில்
அவ்வசனங்கேட்டு ஆனதன்மருளமகிழ்ந்து
எவ்வசனஞ்சொல்லி யேற்றித்தொழுவமென
விக்கினங்கள்தீர்க்கும் விநாயகனேதஞ்சமென்று
கைக்கினியமாங்கனிதேன் கடலைபயறுடனே
எட்பொரியும்நெற்பொரியு இயலானசர்க்கரையும்
செப்பமுடன்முட்பொழுதுந் தெவிட்டாதுணவுசெய்ய
வைப்பேன்பலாசுளையும் வாழைப்பழமுந்திருத்தி
அப்பமுடன்தேங்காய் அலங்காரஎள்ளுருண்டை
சீனியதிரசமுஞ் சிறந்தநல்லச்சரிசி
நானீவேன்தப்பாது நாகாதுணைசெய்வாய்

சந்தவிருத்தம்.

மூலப்பொருளே முதற்பொருளேமுத்தேவித்தாய் மூளைத்தெழுந்த, ஞாலப்பொருளே எவ்வுயிர்க்கும் நடுவாய்நின்ற நாயகமே, கோலத்துடனே உள்ளிருந்து குருவாய் மூலக்கிழங்காகி, சாலதிருத்தி யெனையாளுந் தந்திமுகவா யிதுசமயம.

வேறு.

வல்லபைதனக்குநேசம் வைத்தவுன்சித்தம்போல
நில்லையாவென்றுநெஞ்சம் நினைவுடன்கலந்துபாரில்
மெல்லவேமயக்கிவிட்ட வெறுமையையகற்றியப்பாற்
செல்லவேநடத்துமையா திருவடிசரணந்தானே.

சந்தவிருத்தம்.

ஐந்துகரமுமொருமார்பும் அகண்டசெவியுஞ்சிறு கண்ணுந், தொந்திவயிறும் புகர்முகமுந் தூலவுடலு மிருபதமும், தந்திவடிவு மிருமணியுஞ் சந்தமொலிப்ப மந்தாரை, சிந்தியொழுக அடியார்முன் தெரியவரு வாய்பரபதியே.

என்றுதன்மர்தானினைந்து ஏற்றகணபதிக்கு
நன்றாகச்சொல்லி நாடித்திசைநோக்கி
நெஞ்சுதனில்வைத்து நேசத்தையுள்ளிருத்தி
பஞ்சமலம்நீக்கிப் பாசத்தையுள்ளறுத்து
அடுக்காறும்பார்த்து அகண்டவெளிதான்பார்த்து
நடுக்கமதுதவிர்த்து நமன்விதியைத்தள்ளிவைத்து
நேசித்துக்கம்பகத்தில் நினைவானபூரகத்தில்
நாசித்துவாரம் நடுவணையைத்தான்திறந்து
சித்தன்பரிசித்துந் தெரிந்துவகையறிந்து
சத்துமசத்துந் தடுத்துவிடையமற
ஆராய்ந்துதேடி ஐம்புலனையொன்றாக்கி
சீராய்ந்துபூத்த இறுக்கைமூறுக்கெடுத்து
காலால்கனலெழுப்பிக் கணபதியைப்பார்ப்பளவில்
மூலக்கிழங்காகி முத்துக்குவித்தாகி
மும்மண்டலமு முடியடியுந்தானாகி
எம்மண்டலந்தனக்கு ஏகமுதலாகாசம்
அம்மண்டலந்தனக்கு ஆதியனாதியுமாய்
கம்மென்றநாதமணி கலகலெனத்தான்முழங்க

பஞ்சவர் ஏகந்தனி அஞ்சலி செய்தல்.

வந்தார்மரம்பிடுங்கி மலைகள்தகத்தெறிந்து
பந்தாடியேமலையைப் பாய்ந்துபிளந்தெறிந்து
கண்கள்சிவந்து கனலாய்ப்பொறிபறக்க
விண்களதிர விநாயகர்வந்துதித்தார்.

சந்தவிருத்தம்.

தடதடவிகடித நடனாசரணம்
கரிமுகலரிதிரு மருகாசரணம்
வடவரையதிரிட வந்தாய்சரணம்
மதகளிறெனவுரு கொண்டாய்சரணம்
அடவியில்வழிதடு மாறியுமடியேன்
அன்புடமனதினி லுனையேநினைய
நடமிடுசிவசுத னானெனவந்தாய்
நாதாகணபதி சரணஞ்சரணம்.

இடைந்தே மனதுபுண்ணாகி யெங்கேயெங்கே யென்றசந்து, குடைந்தேநினைவு குடல்கும்பி கோழை யூரல்வலுவுளதும், கடைந்தேதொடர்ந்து பின்சென்று கத்தாஏகதந்தனென, அடைந்தேன்சரணம் வைகுந்த மறியும்படியே வழிகாட்டும்.

கதை.

தன்மர்துதித்துச்சரணமென்றுபோற்றிசெய்ய
மும்மதவேளானை முகனும்மனமகிழ்ந்து
ஏன்பிள்ளாய்தம்பியரே இத்தூரம்நீங்களுந்தான்
தான்பிறந்தநாடுந் தலமும்நிலமும்விட்டு
பெற்றபிள்ளைபேரன்முதற் பெண்டுகளும்ஆளடிமை
உற்றசனந்தாயும் உறைமுறையுந்தன்னைவிட்டு
கானகத்தில்வந்தமையாற் கஸ்தியுமக்குண்டாகி
வானகத்தோர்தாமறிய மனதுமிகப்பதற
தடுத்தோம்நாமுங்களையும் தன்மரேயென்றுசொன்னார்

அடுத்துமிகத்தன்மர் ஐங்கரனைத்தெண்டனிட்டு
நடந்தவிபரிதமும் நாரணனார்கற்பனையும்
முடிந்தரகசியமும் முழுதுமெடுத்துரைத்து
தொடர்ந்துகலிவருமுன் தொல்லுலகைவிட்டகன்று
அடர்ந்தவனத்தூடே அடியார்வருகையிலே
வழிமயக்கித்தேவர் வாட்டப்படுத்தினதால்
தெளியவழிகாட்டவென்று தேவர்தமை நினைத்தோம்
என்றுதன்மர்சொல்ல ஏற்றவிநாயகனும்
நன்றுகாண்தன்மரே நீர் நாரணனார்தம்மிடத்தில்
சென்றுவைகுந்தஞ் சேர்வதற்குநாம்தானும்
இன்றுவழிகாட்ட எழுந்தருளுமென்றுசொல்ல

பஞ்சவர்க்கு விநாயகர் பாதைகாட்டியது.

கானகத்தினூடே கணபதியுந்தானடந்தார்
வானகத்துக்கேற்ற வழிதானிதுவெனவே
நல்லவழிகாட்டி நடந்தார்விநாயகரும்
வெல்லரியதன்மர் விநாயகனைத்தான்தொழுது
தம்பியரும்தன்மருமாய்த் தானடைந்தாரம்மானை
நம்பிவெகுதூரம் நடுக்காடுந்தான்கடந்து
காடும்மலைசெடிகள் கல்லடர்ந்தபூமியுமாய்
இடரும்வழிமுழுதும் இக்கட்டாய்க்காதவழி
அலுத்துநடந்து அப்பாலும்போகையிலே
வலுத்துவெகுவுன்னிதமாய் மலைதெரியக்கண்டார்கள்
கண்டவுடன்தன்மர் கருத்துடையதம்பியரே
கொண்டல்சொரியுங் குழலாள்துரோபதையும்
அசந்தாள்நடைதளர்ந்தாள் ஐயோவெனவேதான்
உயர்ந்தமலைதன்னில் ஒண்டொடியும்நாமுமிப்போ
தங்கியிருந்து தவிப்பாறிப்போகவென்று
மங்கியிருள்வருமுன் மலையடுப்பமென்றுசொல்லி
மலையைத்திசைநோக்கி வந்தார்காணம்மானை
நிலையைத்தொடுத்து நெடுகவளர்ந்தமலை

மேகம்படியும் விலாசமுள்ள தந்தமலை
மாகமுகடளவும் வளர்ந்தமலைதனிலே

பஞ்சவரைக் காந்தருவன் போருக்கழைத்தல்.

காந்தருவனென்றொருவன் கண்டெதிரே வந்துநின்று
ஊர்ந்துவருமகனிடமோ உயிர்வெறுத்துவந்ததென்ன
ஏகவிடுவதில்லை யென்பெயரும்மேகநாதன்
தாகமுடன்பேருருஞ் சாற்றுமென்னம்மானை
அப்போதுதன்மர் அவனைமுகம்நோக்கி
இப்போதுநாங்களுந்தான் ஏற்றகுருகுலத்தில்
சந்தனமகாராஜன் றன்னுடையவங்கிஷத்தில்
வந்துதித்தோம்பஞ்சவராய் வகைவிபரம்நீர்கேளும்
எந்தன்பெயர் தருமர் எனக்கிளையோர் நால்வரிவர்
வந்தோங்கலியாலே வைகுந்தஞ்சேரவென்று
இந்தவழியாக ஏகிவந்தோமிப்போது
அந்தமொழிகேட்டு அவனேதுசெப்பலுற்றான்
விந்தையுடனென்குலத்து வேந்தரையுங்கொன்றழக்கி
வந்தீர்களிப்போது வாய்த்தபழிதனக்குச்
சந்தோஷமாய்த்தருமர் தம்பிமார் நால்வரையும்
தந்துவிட்டுப்போமெனவே தானுரைத்தானம்மானை
முன்னாளில்வானவர்க்காய் மூர்க்கமுள்ள அர்ச்சுனனும்
அன்னாளில்வந்தான் அந்தரத்தோர்தங்களுக்காய்
மன்னுபொறுத்துவிட்டேன் வலியவந்தீரிப்போது
இன்னாளிலென்பழிக்கு எதிராகவந்துவிட்டீர்
கொன்றுசினந்தீர்ப்பேன் கொற்றவரேஉங்களையும்
இன்றுசமராவாருமென்று எதிர்த்தான்வனந்தனிலே
காந்தருவன்சொல்லக் காவலர்கள்தான்கேட்டு
சாந்தமாய்த்தன்மர் தானுரைப்பாரோர்வசனம்
கலியைவிட்டுத்தப்பி காசினியைத்தானிழந்து
வலியவனந்தனிலே வைகுந்தந்தானோக்கி
போகையிலேநீமறித்துப் போர்வாடாவென்றயே

ஆகையினாலேதான் அடர்ந்தூபோர்செய்வதில்லை
என்று தன்மர்சொல்ல ஏற்றதொருகாந்தருவன்
தன்றுதானதன்மரே நீர் நம்மோடெதிர்க்காவிட்டால்
திரும்பியுங்களத்திபுரம் சேருமென்றானிவ்வழியே
கரும்புநிகர்மொழியான் காந்தருவனைப்பார்த்து
ஏனோகெடுவாய் நீ இவ்வசனந்தானுரைத்தாய்
பேய்கொண்டகாந்தருவா பேசாதிருபோடா
வாய்க்கொண்டதட்டாதே வழிவிலகி நீபோடா
மன்னா நீபோர்புரிய மாட்டாயேயாமாகில்
என்னுணையுன்ற னிளையோரேயென்மேலே
கடுகஅனுப்புமென்று காந்தருவன்தானுரைக்க
முடுகிப்பொருதவென்று மூற்கனவன்சொல்லுகையில்
தருமர்மனம்வெகுண்டு தம்பியரைத்தானோக்கி
பொருமலுடன்மனது பொறுமைமிகவாகி
வார்த்தைசொல்லத்தம்பியர்கள் வணங்கிப்பதருமல்
கீர்த்தியல்லசாமி கேடுகெட்டான்சொல்வதுதான்
என்றுசொல்லியப்பா லிருக்கின்றநால்வரையும்
இன்றுபடைபொருத என்னோடுவாருமென்ன
சாற்றுபுகல்பார்த்தனையுஞ் சகாதேவன்வீமனையும்
ஏற்றபரிநகுலன் இவர்களையும்வாருமென்ன
போருக்கழைத்தான் புத்திசற்றுமில்லாதான்
பாருக்குள்ளாவி பதைக்கவுடல்பதற
இக்கணமேயுங்களையும் எமலோகமேற்றுதற்கு
தக்கமுடன்வாருமென்று தாவிக்குதிபோட்டான்
இப்போதுநாங்களுங்கள்மேல் எதிர்ப்பதில்லையானாலும்
தப்பாதசொல்லுடையார் தன்வார்த்தைகேளாமல்
உன்மேலேயுத்தம் ஒருநாளுஞ்செய்வதில்லை
தன்மர்மொழிதப்பத் தருமமோஎங்களுக்கு
என்றாரிளையோர்கள் என்சொல்வான்கந்தருவன்
நன்றாகக்கேட்டிலையோ நம்செய்திவிண்ணுலகில்
முன்னாளிந்திரன்மேல் முடுகிச்சமர்பொருத

மன்னவன்போர்புரிய மாட்டாமலப்பொழுது
சொன்னான்காணவர் தோற்றமுடனிந்தவழி
இன்னாள்வருவா ரெதிர்த்துப்போர்செய்யுமென்றார்
அப்படியே நீங்க ளவர்சொல்லைமீறாமல்
சொற்படியேவந்தீர்காண் சூழ்ந்தேனேஉங்களையும்
மன்னவர்பஞ்வர்கள் வைகுந்தம்போரவரை
ஏண்டாதடைகள்பண்ணி ஈடழிந்துபோகாதே
சொல்லக்கேள்வப்பா துடுக்கதனைவிட்டுவிடு
அல்லகாண் நீங்கள் அடர்ந்துபோராடாமல்
போவதறிவமென்று புத்திகெட்டகாந்தருவன்
தாவிதுரோபதையைத்தானெடுத்துத்தோளில்வைத்து

துரோபதையைக்காந்தருவன் தோளில் வைத்தேகக்
குரோதமாய் வீமன் குதித்துச் செயித்தது

கொண்டுசெல்லமங்கையுந்தான் கோவிந்தாவென்றழுக
கண்டுபுகழ்வீமன் கண்கள்பொறிபறக்க
ஆகாசம்பூமி யதிரவேசத்தமிட்டுப்
போகாதேயென்று புறப்பட்டான்போர்வீமன்
காந்தருவன்தன்னைக் கட்டிமிகப்பிடித்து
சேர்ந்துபொருதிச் சினந்திரண்டுபேர்தானும்
காற்றுமழையுங் கலந்துபோர்செய்வதுபோல்
சிங்கமிரண்டுஞ் சேர்ந்துபோர்செய்வதுபோல்
பொங்குகடலிரண்டும் பூசல்விளைத்ததுபோல்
வாலியுடன்சுக்ரீபன் வளைந்துபோர்செய்வதுபோல்
கோலியேமுன்னாளிற் கோபாலர்சிங்கமதாய்
இரணியனைக்கொன்றதுபோ லெதிர்த்தான்மதவீமன்
தரணிதனிலவனைச் சங்கரிக்கவே நினைத்தான்
தன்மருந்தானறிந்து தன்பேரிலாணையிட்டு
மின்மருவுவீமா விட்டுவிடுதம்பியென்றார்
அண்ணல்மொழிகேட்டு அவன்மயிரைவிட்டறுத்து
மண்ணதிரவிண்ணதிர வாரியெடுத்தெறிந்து

குத்தினான்வீமன் கூவென்றான்காந்தருவன்
புத்திவந்ததென்று போற்றியேவீமனையும்
தெண்டனிட்டுஓடலுற்றான் திரும்பியேபாராமல்
சண்டையிட்டகாந்தருவனை தப்பிப்பிழைத்தானெனவே
மின்னாள் துரோபதைதான் வேந்தரைவர்தங்களுடன்
சொன்னாள் துயரமிகத் துன்பமென்னால் நீங்களுந்தான்
பாடுபட்டதெல்லாம் பாவியேன்றன்னாலே
கேடுகெட்டேன்யானுங் கிலேசமெல்லாம்விட்டுவிடும்
என்றுசொல்லத்தன்ம ரேந்திழைக்குப்புத்திசொல்லி
நன்றுநன்றென்று நடந்தாரவ்வடம்விட்டு
மலைகள்சிறுகுன்று வனமும்பலகடந்து
கொலைசெய்யும்யாளிசிங்கங் கொடியபுலிக்குஞ்சரமும்
வலுமிருகம்வாழும் மலையும்வனந்திறமும்
பலமிருகந்தானும் பஞ்சவர்களென்றறிந்து
விலகும்மிருகமதை வித்தையென்றுபார்த்திருந்து
கலகமிடுமிருகங் கண்டொதுங்கிப்போகுதென்று
தங்களிலேதான்பேசிச் சந்தோஷமாய்நடந்து
பொங்குநதியாறுகளும் பூபாலர்தான்கடந்து
செங்கழுநீர்தாமரையுஞ் சேர்ந்தநீராம்பலுடன்
திங்கள்முகங்காணாத சிறந்தவனச்சோலைகளும்
வைகைநதிபாயும் வாவிதடாகமுமாய்
பொய்கையதுகண்டு புனலருந்தியங்கிருந்து
செய்யும்புகராசரிஷி செய்யுந்தவந்தனையே
வல்லபுகழ்தர்மர் விசேஷமிதுவென்றறிந்து
கண்டுபணிந்தைவர் களிகூர்ந்துதெண்டனிட்டார்
தொண்டுபண்ணிநின்றார்காண் துரைராஜமாமுனியை
பார்த்திபர்கள்மாமுனியைப்பணிந்தேதுகேட்கலுற்றார்
பெற்றும்புலித்தோலுடையீர் பொய்கையுமேதெனவே
நாடுபுகழ்வேந்த நாகமடந்தையர்காள்
ஆடுகின்றதீர்த்தமிது ஆமென்றாரம்மானை
அப்போதுமாமுனியை ஐவருமேதானோக்கி

செப்போமுலைமடவார் நீர்த்தமிகவாடுதற்கு
எப்போவருவா ரெனக்கேட்டாரம்மானே
தப்பாதமாமுனியுந் தானவர்க்குவ துசொல்வார்
ஓதுகின்ற நீள்பரிதி உதயமென்னும்வேளையிலே
காதலாலங்கவரைக் காணலாமென்றுரைத்தார்
கோலமடந்தையுடன் கொற்றவருமங்கிருக்க
வாலாயுதயமதில் வந்தார்மடந்தையர்கள்
மீதானபொய்கைதனில் மெல்லியர்கள்தான்மூழ்கி
கோதானமாதரெல்லாங் குழலாத்தித்தான்முடித்து
வந்தவரைக்கண்டு மங்கையருந்தான்கூடி
இந்தவனத்தி லிவராரெனவேதான்
துங்கமுடிமன்னவரோ துடியிடையாள்தன்னுடனே
இங்குவந்த நீங்க ளெவ்வூரெவ்விடமென்றார்
பாரோர்புகழுகின்ற பாண்டுமன்னன்தன்புதல்வன்
தாரார் தருமனென்பேர் தம்பிமார்நால்வரிவர்
வாய்ந்தகவியுகமும் மண்ணுலகில்வந்ததினால்
ஆய்புந்தகழ்வைகுந்தம் அடையவெனவந்தோங்காண்
தருமரேமங்கையுடன் தம்பியர்கள்நால்வருந்தான்
அருமையுடனிப்போது ஐவரையுங்கண்டோமே
எங்களுக்குநற்காலம் இப்போது நீங்களுந்தான்
உங்களுக்குதாங்க ளுகந்தடிமைதானாகி
புரந்தரனூர்தம்மிடத்திற் போவோமெனமகிழ்ந்து
வரந்தருவாரங்கே மகுடமுடிசூட்டிவைப்பார்
நாளைமுடிசூடி நாகலோகமானதெல்லாம்
ஆளும்படிக்கு அரசாளவைத்திடுவார்
நன்றாகஉங்களுக்கு நாங்களெல்லாமிப்போது
மன்னர்சபையறிய மனையாட்டியாகிடுவோம்
சேருவோம்வானவர்முன் செல்வியுடனேவருமாய்
வாருமையாவென்று மடந்தையர்கள்தானழைக்க
பாசமுள்ளபெண்கள்நாம் பார்மீதிலாசைவிட்டு
வாசமுடன்நாங்கள் வைகுந்தம்சேரவென்று

போகையிலே நீங்கள்சொல்லப் புத்தியல்லமங்கையரே
தாகமுடன்சொல்லத் தகுமோதானுங்களுக்கு
என்றுதன்மர் சொல்ல ஏந்திழைமார் தான்கேட்டு
ஒன்றுமில்லைநாமிவர்க்குஉள்ளாசைகொண்டதெல்லாம்
சற்றாசையில்லாமற் றானுரைத்தார் தன்மருமே
சித்தாசையானபெண்கள் திரும்புமென்றுதான்போன
மன்னவரைவிட்டு மடந்தையர்கள்போனதன்பின்
தென்னவர்களைவருமாய்ச்சேர்ந்த துரோபதையும்
மாமுனியைதான்வணங்கி வாழ்த்திவிடைதாருமென
பூமுனிவன்வாக்கருளிப் போமென்றுசொல்லுகையில்
தன்மரே நீங்கள் தாவும்வழிதனிலே
தென்மலைபோற்பாம்பு சீறியேதான்விழுங்கும்
எப்படி நீர்போவீ ரென்றுரைத்தான்ராஜரிஷி
மெய்ப்புடையதன்மர் விரைந்தேது செப்பலுற்றார்
விதிவசத்தையார்தான் விலக்கவல்லோருண்டோதான்
சதிரானமாமுனியைத் தானனுப்பியேநடந்தார்
மின்கொடியுந்தன்மருமாய் வீமனுடன்தம்பியரும்
வன்குமுதமாமலையில் வந்தனர்காணம்மானை
அந்தமலைச்சார்பு அருகேஒருபுறமாய்
சந்துசிறுதாரைவழி தான்கடந்துபோகையிலே
சிற்றடியும்பாதையுமாய்ச் சிறியமலையதுபோல்
புற்றரவமானதுவும் புரளாதிருந்ததினால்

பாம்பு பஞ்சவரை விழுங்கப் பாவ விமோசனமானது.

ஓங்கிவளர்ந்த உயர்மலையாமென்றுசொல்லி
தாங்கிநடவாமற் றாராளமாய்நடந்து
வந்தவர்களைவரையும் வனிதைதுரோபதையும்
சந்தோஷமாயரவந் தான்விழுங்கிற்றம்மானை
அப்போதுவீமனையிற்சிறுவாளதுவும்
தப்போதுநாகமதைத் தான்பிளந்துகிறியதாம்
மெய்ப்பானதன்மருந்தான் விதிவசமோவென்றுசொல

இப்பால்வெளியில்வந்து எச்சில்பட்டோமென்றவரும்
மாதீர்த்தமாடி மடுக்கரையில் நிற்கையிலே
கோதிவிழுங்குகின்ற கொடியரவம்பார்ப்பானும்
வந்துபணிந்தான் மன்னவர்களைவரையும்
இந்தமகிமையிது ஏதென்றுதன்மருந்தான்
கேட்கும்பொழுது கிருபையுடன்பார்ப்பானும்
தாக்குமுதல்மூந்நாள் சபித்தாரேமாமுனிவர்
பாங்கானபுஷ்பம் பறித்துவரச்சொன்னவுடன்
பூங்காவனந்தேடிப் போனேனவடமதில்
மாமுனிவர்சொற்படிக்கு மலரெடுக்கப்போகையிலே
காமுறவேரம்பையரைக் கண்டுமயங்கிவிட்டேன்
பூசைசெபந்தனுக்குப் புஷ்பம்வரவில்லையென்று
ராஜரிஷிகோபமதாய் நாட்டமுடனெந்தனையும்
பாம்பாகவேசபித்தார் பாரமுனிகோபமதாய்
ஆம்போயிச்சாபம் அகலுவதெக்காலமென்றேன்
ஐவர்வைகுந்தம் அடையவென்றுதான்வருவர்
மெய்வாய்பிளந்து விழுங்கிவாய்ஐவரையும்
தாமதமேமென்சாபந் தன்னைவிட்டுநீவிலக
வீமனுடசிற்றிடைவாள் மெய்யுடலைத்தான்பிளக்கும்
அப்போதுசாப மகன்றுவிடுமென்றுரைத்தார்
இப்போதுதானும் ஈடேறஇங்குவந்தீர்
தன்மரையும்நால்வரையும் தான்கண்டபோதெனக்கு
ஜென்மவிமோசனமாய்த் தேவர்சபைநான்சேர
நீரேகொடுத்தருளும் நிமலர்தனைநினைத்து
போரேனெனப்பார்ப்பான் போயினன்காணம்மானை
மார்க்கமுடனந்த மலைகடந்து அப்பாலும்
தீர்க்கமுடனைவர் திருமால்தனைநினைத்து
வாரவழியில் மலைகளோராயிரமும்
ஏறியிறங்கியப்பா லெண்காதந்தானடந்தார்
நடந்துவரும்வழியில் நல்லதொரு அஸ்தகிரி
அடர்ந்தோங்குமாகாச மந்தமட்டுந்தான்வளர்ந்து

நீண்ட மலைகண்டு நினைவயர்ந் துதன்மருந்தான்
ஆண்டவனே இந்த அதிசயந்தானேதெனவே

சயிலமாயிருந்த மறையோற்குச் சாபம் நீங்குதல்.

தெண்டாயுதமெடுத்துத் திறல்வீமனப்போது
அண்டமதிர அடித்தான் மலைதகர
தகர்ந்தமலைவேதியனாய் தானின்றானம்மானை
பகர்ந்துதன்மரோதென்று பார்ப்பானைத்தானோக்கி
இந்தவிசேஷ மேதென்றுதான்கேட்கலுமே
சிந்தைமகிழ்ந்து செப்பலுற்றான் வேதியனும்
முன்னாளரசருடன் மூர்க்கமாய்நான் தானும்
என்னோடவர்கள் இகல்செய்யமாட்டார்கள்
உதைபட்டசாருயிர்மடிந்துமண்மீதில்
வதைபட்டுயிர்போக வைகுந்தந்தந்தோமென்றார்
வகைதான்தெரியாமல் வைகுந்தந்தந்தோமென்றேன்
பகைவருவதறியாமல் பாவியேனானாக
சொல்லிவிட்டேன்வீணாய்ச் சொன்னதையுமாலறிந்து
கல்லாயெனைச்சபித்தார் கார்வண்ணரப்போது
பண்டையுருமாறிப் பாரமலைதானாகி
விண்டுயரந்தான்வளர்ந்து மேதினியிற்றானிரென்றார்
ஆயரே அச்சுதரே அடியேற்குச்சாபமுந்தான்
தூயரேஎப்போது தொலையுமென்றுயான்கேட்டேன்
நேயமுடனேவர் நினைத்துநம்மைத்தானோக்கி
மாயவரேதஞ்சமென்று வைகுந்தஞ்சேர்வதற்கு
வருவாரிதுவழியாய் மாலணையார்தன்னுடனே
தருமருடதம்பியெனுந் தார்வீமன்தெண்டாலே
உருமாறவுன்னை உடைபடவேதானடிப்பான்
வருவாய்போவென்று மாயன்சபித்துவிட்டார்
ஆனதினாலென்சாபம் ஐவரே நீர்தீர்த்தீர்
நானதினாலேபிழைத்தேன் நல்லவரேஉங்கள்தன்மம்
நான்போறேன் நீங்கள் நாரணனார்தம்மிடத்தில்

தான்போங்களென்று சதுர்மறையோன்றானடந்தான்
ஆமாவென்றைவர் அனேகநெடுந்தூரம்
தாமோதரனே சரணஞ்சரணமென்று
தன்மருந்தம்பியருந் தாரார் துரோபதையும்
இம்மைதனிலெல்லாந்தா மிங்கேகழித்ததென்று
ஆசித்தனாடாடா தருங்கானகம்புகுந்து
பேசித்தவல்மிருகம் பெரும்பூதநாதகணம்
சாரும்பலவிருக்ஷம் தழைத்தநிழற்சோலைகளும்
ஊரும்பலசாதி உயர்பறவைவல்விலங்கும்
மன்னுயிருந்தன்னுயிர்போல் வாழும்புகழ்தன்மரான
பன்னுயிரெல்லாம்வணங்கும் பஞ்சவர்கள் தங்களையே
எண்பத்துநான்குயிரு மிவர்களுடன் தான்பேசப்
பண்பொத்துப்பஞ்சவர்கள் பலசலிப்புமில்லாமல்
வேற்றுமைகளற்று விலாசமுடனவ்வனத்தில்

அசுவமுகப்பெண் அருச்சுனனால் விமோசனமானது.

வாரார்களைவருடன் வனிதையொருபெண்ணுமென
பேராகக்கண்டெதிரே பெண்கொடியாளொன்றொருத்தி
அசுவமுகமாக ஐவர்முன்னேவந்துநின்றாள்
விசுவசொரூபமுடன் மேவலரைமேவவென்று
தருமருடதம்பி தார்வீமனுக்கிளைய
வரும்விசயன்புயத்தில் வந்துதழுவலுற்றாள்
புரவிமுகமானதுவும் புண்டரீகமாமலர்போல்
இரவிமதிபோலே ஏந்திழையாள் நிற்பளவில்
தாதலருந்தன்மர் தானே அதிசயமாய்
காதலரேயிந்தக் காரணமேதென்றுரைத்தார்
கானில்முனிதேவி காளியென்பேர்முன்னாளில்
வானிலொருமுனிவன் வந்தென்னைச்சேருகையில்
அறிந்தெதந்தன்பத்தாவும் அசுவமுகவாவையென்றார்
பிரிந்தேன்முனியைவிட்டுப் பேச்சொன்றுமில்லாமல்
அய்யாயிச்சாபம் அகலும்வகையென்னவென்றேன்

மெய்யாக நீயும் விசயனுட தன்தோளை
சென்றுதழுவத் தீரும் அசுவமூகம்
என்றுமுனிசொன்னபடி யிப்போது தீர்ந்துதென்றுள்
பூவுலகில்வாழும் போர்வேந்தரைவருந்தான்
தேவுலகுவைகுந்தஞ் சேர்வீரெனமொழிந்து
போனுளென்சாபம் போச்சுதென்றுதான்மகிழ்ந்து
மானுளும்போனதற்பின் மன்னவர்களைவருந்தான்
கானுர்வனம்நோக்கிக் கடுகநடக்கலுற்றுர்
சேனுபதிவேந்தர் திருவுளமேஉண்டெனவே
நடந்தார்வெகுதூரம் நாலாறுகாதவழி
கடந்தப்பால்வந்துநின்று கண்டார்விமலமலை
அந்தமலைகடந்து அநேகநெடுந்தூரம்
சந்தனச்சோலை தடாகமதுகடந்து
ஆலிலைமேற்றுயின்ற அச்சுதனைத்தானினைந்து
மாலியாறென்னும் மாநதியும்வந்துகண்டார்

ஆறுயிருந்தபெண்ணை நேராகச்செய்தது.

ஆறுதனைக்கண்டு ஐவருந்தானக்கரைக்கு
ஏறவொண்ணுதென்று இயல்தருமர்தானுரைக்க
வீரிட்டுவீமன் விசயனையுந்தன்மரையும்
பூரித்திரண்டு புயமீதில்வைத்துமிக
ஒருகைசகாதேவன் ஒருகைநகுலனையும்
மருவுமலர்முதுகில் மங்கையரைத்தானேற்றி
பிறவிப்பெருங்கடலைப் பெரியோர்கள்நீந்துகைபோல்
திறவிக்கரிய திறல்முனிவர்போலாகி
ஆறுதனைநீந்தி அந்தவைகுந்தமதில்
ஏறுதல்போலக்கரையி லேறினர்காணம்மானை
அந்தமுள்ளபோரா றுஆரணங்குபோலாகி
வந்தவளும்நிற்க மன்னுபுகழ்தன்மருந்தான்
ஏதுகாண்பெண்கொடியே இவ்வேடமுன்றனக்கு
ஓதுவீரென்றுதன்மருண்மையாய்த்தான்கேட்க

நீதமுனியின்தேவி நித்யகன்னியென்பெயரும்
சாதகமாய்நித்திரையிற் ருனனந்தல்செய்துவிட்டேன்
ஆகையினுலென்னை ஆருவாகென்றுரைத்தார்
மாகையினுசாபம் வாங்குவதெக்காலமென்றேன்
அரியபுகழ்தன்மருடன் ஐவர்துரோபதையும்
பெரியவர்களிந்தவழி பெண்ணேவருவார்கள்
ஆறென்றுசொல்லி யவர்கள்மயங்கிநிற்பார்
ஏறென்றுவீமன் இவர்கள்தனையிடுக்கி
நீந்திவருகையிலே நீங்குமுந்தன்சாபமென்ருர்
சாந்தமுனிசொற்படியே தான்வந்தீர்ப்போதென்
சாபமுந்தீர்ந்ததுகாண் தன்மரேஉங்கள்தன்மம்
பாவமகன்றதுகாண் பதிதனக்குநான்போறேன்
தேவரீர் நீங்கள் சேரும்வைகுந்தமென்று
காவவிளங்குயிலாள் கணவன்பதிபோய்ச்சேர்ந்தாள்
அந்தமொழிகேட்டு அதிசயமாயுளமகிழ்ந்து
வந்தார்வெகுதூரம் வனமும்மலைகடந்து

பாஞ்சாலி வைகுந்தப்பதவி யடைந்தது.

வரும்வழியிலே நிமித்தம் மதிமயக்கமாயுரைக்க
தருமாதுகேட்டுத் தானேவிசாரமுற்று
கன்னிதுரோபதைக்குக் காலம்பொல்லாதெனவே
இன்னிமித்தஞ்சொல்லுதென இடைந்துமனமுழன்று
வருகையிலேநடந்துபின்னல் வந்ததுரோபதையும்
இருகைவிரித்தலறி யெடுத்தடியும்வையாமல்
மெய்சோர்ந்தசந்து மேல்மூச்சுவேர்வையுமாய்
கைகாலசந்து கனைதாங்கிநின்றளவில்
ஐவர் திரும்பி ஆரணங்கைவந்தணைத்து
கைதாங்கிமெள்ளக் கருத்தேதெனக்கேட்க
தனக்குவருமயக்கந் தானுரைத்தாளம்மானை
உனக்குவருமயக்க முள்ளபடியென்னதென்று
சொல்லென்றுகேட்கத் துரோபதையும்வாய்வெருவி

நில்லென்றுதாது நெடிதாடியுள்ளசந்து
தத்துவங்களாற்றுத் தலை நினைவுதான்மாறி
பித்துக்கலங்கிப் பேரறிவுஞ்சிற்றறிவாய்
கண்டத்திற்சேத்துமமாய்க் காலனெனுமாபாவி
அண்டத்தில்நின்று ஆறடுக்குத்தானசைத்து
பிண்டத்தடுக்குலைந்து பிராணனெனுவாயுவைத்தான்
விண்டகத்தைநோக்கி விடையமிகப்பதறி
பொறிகலங்கியந்தப் புலனும்மதிமயங்கி
நெறிகலங்கியெந்தன் நினைவுதடுமாறி
வாதமொடுங்கி வன்பித்தமேருளிர்ந்து
சீதம்பலத்துச் சேத்துமமுமேலாகி
மண்ணுந்தண்ணீரதனில் வந்துமிகவொடுங்கி
தண்ணீருந்தீயிற்று னொடுங்கிமேலாகி
வாயுவிலேதீயும் வந்தெட்டிப்பார்க்குதிப்போ
காயுமுடம்பு கடுப்புடனே ஆக்கைவிட்டு
அசதிகொடுக்குதுகாணவரேயென்றுரைத்தாள்
அசதியென்றசத்தம் ஐவருமேதான்கேட்டு
வீமன்நகுலன் விஜயன்சகாதேவன்
தாமுமயங்கித் தயங்குவதைத்தன்மருந்தான்
நால்வருக்குநெஞ்சு நடுங்காமற்புத்திசொல்லி
வேல்விழியாள் துரோபதைக்கு மெய்யேபதறாமல்
சொல்லுகிறார்தன்மர் துரோபதைக்குநேசமுடன்
வில்லுக்குறிநல்ல விஜயன்மனையாளே
மின்னே துரோபதையே விட்டுப்பிரியாத
பொன்னேநவமணியே புத்திசொலக்கேட்டருளும்
நெடியோனேதஞ்சமென நெஞ்சிற்தியானமதாய்
பிடியேநிலையாகப் பிடியென்றுதன்மர்சொல்ல
இடையாள்நல்ல துரோபதையுந்தான்மகிழ்ந்து
படியிளந்தமாலே பச்சைவண்ணாதஞ்சமென்று
மகிழ்ந்து துரோபதையும் வழுத்துகிறதோத்திரந்தான்
புகழ்ந்துபுவியிலுள்ளோர்புத்தியென்றுகேட்டருள்வீர்

விருத்தம்.

பஞ்சவர்தமக்குநானும் பாஞ்சாலியாகத்தோன்றி
பஞ்சவரைந்துபேர்க்கும் பாரியாயிருந்துபாரில்
துஞ்சவேசூதுவென்று துற்சனன்துகிலைக்கொய்து
அஞ்சலென்றருளிச்செய்த அச்சுதாசரணமென்றேன்.

இதுவுமது.

மேருவிற்பொறித்தவுண்மை வியாசர்சொற்படியாயிந்த
பாரினிற்பகையுமற்றுப் பார்தனையாண்டுமிப்பால்
ஊரினிற்கலியன்வாரா னென்றைவர்ஒதுங்கிவந்த
சீரினிலடியாளுக்குச் சேரவைகுந்தந்தாரும்.

இதுவுமது.

ஐவர்க்குந்தேவியாகி அழியாதகன்னிதானுய்
ஐவரைப்பிரியாதிந்த அவனியிலிருந்துவாழ்ந்து
ஐவருமடியாள்தானுய் அருந்தவஞ்சேரவந்தோம்
ஐவர்க்குமுன்னேவாறேன் அரியவைகுந்தந்தாரும்.

இதுவுமது.

வந்தவிடத்திலிடைவழியில் மரணமெனக்குச்சரியென
இந்தவனத்திலுடலிழந்து எளியேனுந்தன்பதஞ்சேர
விந்தகிரிக்குவழிகாட்டி வேறோர்துன்பமணுகாமல்
நந்தாமுகுந்தாவைகுந்தா நாரார்மலர்தாள்தருவாயே.

இதுவுமது.

என்னைநமனுமணுகாம லெதிரேபுட்பரதம்வருக
உன்னைமனதில்மறவாம லுள்ளவருவேன்வைகுந்தம்
பின்னைமனதுபதருமற் பிடித்தபிடியும்தவறுமல்
முன்னேவருககோபாலாமுகுந்தாசரணஞ்சரணுமக்கே

கதை.

என்று துரோபதையும் இறையோனைப்போற்றிசெய்து
ஒன்றுமறியேன்பரனே உன்பாதமேயெனக்கு

தந்தருளவேண்டும் தானுவேபோற்றியென்று
நந்தாமுகுந்தா நடுக்காட்டிலென்னுடல்விட்
டிந்தாபிரித்துயர்தா னென்கோவேஉம்மிடத்தில்
வந்தாவிடைவழியில் மறுக்காமலும்முடைய
வைகுந்தந்தந்தருளும் மாயோனேபோற்றியென்று
மெய்கண்டுபோற்றி விமானமதிலேறி
தோத்திரங்கள்பண்ணித் துதித்துமறவாமல்
மாத்திரைப்போதானாலும் மனதுமயராமல்
தில்லைநகர்காளத்தி திருவருணைகாஞ்சிபுரம்
நெல்லைநகர்மதுரை நீரானைக்காவலொடு
அவந்திஅயோத்திதிரு வாய்ப்பாடிமாயூரம்
நவந்திதுவாரகையும் நாகைதிருக்குடந்தை
காசிசிந்துகாவேரி கங்கையமுனையவ
நாசிசரச்சுவதி நருமதைகோதாவரியும்
திருப்பதிபொன்னகரம் ஜெகநாதஞ்சோலைமலை
விருப்பமிகவுள்ள விசேடதலமத்தனையும்
சிந்தைதனில்நினைத்து தியானித்திருப்பளவில்
அந்தரத்திலுள்ள அரம்பையர்களெல்லோரும்
துய்யமலர்சொரிந்து துந்துமிகள்தான்முழங்க
வெய்யமணிபதித்த விமானமதிலேதான்
ஆயாள்துரோபதையை அரம்பையர்கள்தான்சூழ
நேயாள்வைகுந்தம் நிறைந்திருந்தாளம்மானை
மைக்கண்துரோபதையும் வைகுந்தஞ்சேர்ந்தபின்பு
மிக்கதொருபஞ்சவர்கள் மெய்கலங்கியுள்ளசந்து
வாடிமனதுடைந்து மழைகாணாப்பயிரதுபோல்
கூடிப்பிரியாதிருளிற் கொம்பிழந்தவானரம்போல்
சோடுபிரிந்துமனத் துயரமுறுமன்றிலைப்போல்
காடுதனில்நின்று கவலைபெரிதாகி
தெய்வமேஉண்டெனவே தேறிமனதோர்மையதாய்
ஐவருங்கூடி அடக்கிருத்தமியை
மெய்யுந்தவறாமல் மேனிசற்றயராமல்

செய்யுஞ்சடங்குகளைச் சீக்கிரமாய்த்தான்முடித்து
நடந்தார்திசைநோக்கி நல்லபுகழைவருந்தான்
கடந்தார்வெகுதூரங் கானகமும் ஆறுகளும்
அப்பாலும்போகையிலே ஆனதொருவீமனுந்தான்
தப்பாதசொல்லுடைய தார்வேந்தே அண்ணாவே
கற்புடையமாது கானகத்திலேமடிந்த
உற்பனமேதென்று உயர்வீமன்றான்கேட்க
வாசமுள்ளதன்மர் மகிழ்ந்தே துசெப்பலுற்றார்
ஈசர்பதிவாழு மிமையோர்மடந்தையிவள்
மாபாரதமுடிய வந்திருந்தாளிவருக்குள்
தீபாவியான திரியோதனன்மடிந்து
பாரதப்போரும் பகையறவேதான்முடித்து
பாரதனையாண்டு பரலோகஞ்சேரவென்று
கலியுகத்தைத்தாண்டிக் காடுறைந்துநாம்வரவே
சலியாமல்நம்பிறகே தான்நடந்தாளித்தூரம்
தேவர்சபையறியுஞ் செய்திபோகாததினால்
பாவசரீரமிதைப் பார்மீதிலேகிடத்தி
முன்னேநடந்துவிட்டாள் முகுந்தனுடன்சன்னதிக்கு
பின்னேநடந்து பிறகேவழிகூடி
தாமும்நடக்கவென்று நடந்தார்வெகுதூரம்
தாமும்பின்தம்பியருந் தையலையுந்தான்பிரிந்து
கானகத்தினூடே கடுகிவருகையிலே
வானகத்துச்சிங்கம் மலைக்குகைக்குள்ளேயிருந்து

மடங்கலாய்வந்த மறையோனுக்கு திடங்கொண்ட
வீமனாற் சாபந்தீருதல்.

வந்துபதுங்கி வருவாரைத்தான்பார்த்து
எந்தன்பசிதீர எடுத்துண்பேனுங்களையும்
என்றுமகிழ்ந்து எதிராக ஆர்ப்பரித்து
கொன்றுபுசிக்கக் கூர்நகமுங்கைகளுமாய்
கண்ணுமுகமும் கனல்போலெரியெழவே

விண்ணுருவப்பாய்ந்து விழுங்கவென்றுஐவரையும்
சேர்ந்துபிடிக்கவென்று சிங்கமதுதான்சீறி
பாய்ந்துபிடித்ததுகாண் பருவீமன்றன்னையுந்தான்
கண்டானேவீமன் கண்டுரவந்தனையுங்
அண்டாதடித்தொதுக்கி யப்பால்வெகுண்டெழுந்து
சிங்கத்துவாயலகைத் திறல்வீமன்றான்பிடித்து
பங்கப்படுத்திப் பகுந்திரண்டுகூறாக்கி
உதைத்தானடிவயிற்றி லுருண்டோடிச்சிங்கமது
பதைத்துத்திகைத்துப் பதறியுடல்நடுங்கி
வேதியர்போல்வந்துநின்றான் மெய்த்தருமர்முன்பாக
நீதிமறையோனும் நிற்பளவிற்றன்மருந்தான்
ஏதுகாண்வேதியரே இப்படி நீவந்ததென்ன
சாதுவிசுவமுனி தன்பூசைக்கேமலர்கள்
நானெடுக்கப்போனேன் நடுக்கானகந்தனிலே
தானெருங்குஞ்சோலையிலே தனித்திரண்டுசிங்கமது
ஆர்ப்பரித்துவாற்கிளப்பி யங்கிரண்டுஞ்சண்டைசெய்ய
தாபபிரியமாய்ப்பார்த்துத் தாமதமாய்நின்றுவிட்டேன்
வருகாமலங்கிருக்க மாமுனியுமோடிவந்து
தருகாமலென்னைச் சபித்துவிட்டார்சிங்கமதாய்
ஏற்றியசாபமெனக் கெப்போதுதீருமென்று
போற்றியேயான்துதிக்கப் புகழ்முனியுமப்போது
மைமருவுங்கானகத்தில் மால்பாதந்தான்தேடி
ஐவருந்தான்வருவா ரவர்களாலுந்தனக்கு
போகுமென்றுதான்மகிழ்ந்து போனான்மறையோனும்
மறையோனும்போனதற்பின் மன்னவர்களைவருந்தான்
இறையோனேதஞ்சமென்று ஏகினர்காணம்மானே
மலைகள்பலகடந்து மாயோனைத்தானினைத்து
கலைகள்மறைகள்க ரடிபுலிசிங்கம்
பெரியமதவாரணங்கள் பிடியுமுட்பன்றிகளும்
அரியவனக்காட்சி அதிசயமாய்த்தான்பார்த்து
மஞ்சுலவுஞ்செண்பகிரி வட்டமலையோர்புறமாய்

மிஞ்சுபுகழ்பஞ்சவர்கள் விரைந்துவருகையிலே
தானதவம்பூசைசெபந் தன்னுடனே அம்மலையில்
ஏனமுனிவ ரிருந்தாரவர்தனையும்
கண்டுவணங்கிக் கையால்மலர்சொரிந்து
தொண்டுபண்ணி நிற்கையிலேதோற்றமுடனம் முனியும்
மன்னவரேஎங்கிருந்து வாரீரெனக்கேட்டார்
தென்னவர்கள்போற்றுஞ் சீரானதன்மருந்தான்
பாண்டுமைந்தர் நாங்கள் பாராசைவிட்டகன்று
வேண்டுங்கலியனிங்கு மேவுமுனே நீண்டோனை
தேடிவந்தோம்வைகுந்தஞ் சேரவென்று நாங்களுமே
நாடிவந்தோமும்முடைய நற்பாதந்தெண்டனிட்டோம்
என்றுதன்மர்சொல்ல இயல்முனிவரே துரைப்பார்
நன்றுகாண்பஞ்சவரே நான்சொல்ல நீர்கேளும்
வேகமுடனித்தூரம் விரைந்தோடிவந்ததினால்
தாகம்பசியிளைப்புத் தகையாறவேண்டுமென்று
ஐவரையுந்தானிருத்தி யன்புடனேவார்த்தைசொல்லி
மெய்யருந்திக்கந்தமூலம் வேண்டுமென்றுதானினைத்து
போசனமும்பால்தயிரும் போதவுண்டாகவென்றூர்
வாசமுடனமுனிவன் மகிழ்ந்துரைத்துஐவரையும்
பாத்திபரேஎன்முகத்தைப் பாருமென்றுதானுரைக்க
போற்றிமுனிமுகத்தைப் பூரணமாய்த்தான்பார்த்தார்
தேனுங்கனியுந் தெவிட்டாதபால்பழமும்
தானுஞ்சிலமுனிவர் தன்னிடத்திற்றோன்றியதால்
அந்தக்கனிதேன்பழமும் அருந்துமென்றூர்மாமுனியும்
இந்தக்கனிபால்பழமும் இப்போதழைத்தவிதம்
அதிசயமாமென்று ஐவருமேதானருந்தி
நதியிற்புனலருந்தி நமஸ்கரித்தார்மாமுனியை
இருந்துதகையாறுமென்று இன்பமுனிதானுரைத்தார்
விருந்துண்டிளைப்பாறி வீற்றிருந்தாரைவருந்தான்
கதிரோனும்போய்மறைந்தான் கங்குல்வந்துமுடியதே
சதிரானமாமுனியுந் தன்மர்கதைதான்கேட்டு

வேதவிதிசாஸ்திரமும் விளக்கமாயைவருக்கும்
போதகமாய்ச்சொல்லிப் போதித்தார்மாமுனியும்
கங்குல்விடிந்து கதிரோனும்வந்துதித்தான்
பொங்குபுகழைவருந்தான் பூரித்தெழுந்திருந்து
கதித்தபரிதியுடன் காலக்கடன்கழித்து
மதித்துமகிழ்ந்தைவர் மாமுனிவர்தம்மிடத்தில்
வந்துவணங்கி வைகுந்தஞ்சேர்வதற்கு
தந்துவழிவசமாய்த் தான்வழியுஞ்சொல்லுமென்றார்
மூவர்முதலான முப்பத்துமுக்கோடி
தேவர்களுமச்சுதனைத் தேடியின்னுங்காணார்கள்
நீங்கள்போய்க்காணுவது நிட்சயங்காணிப்போது
ஓங்குபுகழ்முனிவருகந்துரைக்கப்பஞ்சவர்கள்
பன்னகமேற்றுயிலும் பச்சைமால்நாரணரை
என்னாளுமெங்க ளிருதயத்தில்வாழ்வோனை
அடியார்க்கெளியானை ஐவருக்கும்நாயகனை
படியேழளந்தானைப் பராபரமாய்நின்றானை
தஞ்சமென்றபஞ்சவர்க்குச் சகாயமாய்நின்றானை
அஞ்சலென்றுவந்ததுவும் ஆதிமுதலோனை
கற்பாய்நினைந்தோர்க்குக் கண்ணெதிரே நின்றானை
இப்பாரிலெங்க ளிடர்தீர்க்கவந்தோனை
தப்பாதசொல்லுடைய சருவதயாபரனை
ஒப்பாருமில்லாத உயர்ந்தபராபரனை
காணலாமையா கருத்திலனுதினமும்
பூணலாஞ்சீர்பாதம் போற்றலாங்கண்ணா
ஏதுவினைவந்தாலு மெங்கள்மேற்சாராமல்
தீதுவினைதீர்த்த திருமால்காண்மாமுனியே
ஆதலாற்கண்டிடலா மச்சுதனார்தன்பதியை
காதலாற்காணவழி காட்டுமென்றாரம்மானை
அந்தமொழிகேட்டு அருள்முனியுமேதுரைப்பார்
எந்தவகையாலு மிப்போதே நீர்காண்பீர்
கேசவனைக்காணக் கிட்டாதென்றேயுரைத்தேன்

பேசநெறியால்மன து பேதியாதேயிருந்நீர்
நேசமதுகண்டேன் நிச்சயமாய் நீர்காண்பீர்
வாசமுள்ளபாதை வடதிசையில் நீர்நடவும்
காடுமலையுங் கடந்துகேதாரமட்டும்
நாடிநடவுங்காண் நல்லவைகுந்தபதி
காணலாமென்று கட்டுரைத்தார்மாமுனியும்
தோணவேமாமுனியைத் தொழுதுமிகவணங்கி
நடந்தார்களைவர் நாரணரோதஞ்சமென்று
கடந்தார்வெகுதூரங் கடியவனுந்திரமும்
திரண்டமலையுஞ் சிறுமலையுங்காடுகளும்
இருண்டவனங்கடந்து இப்பால்வருகையிலே

ராட்சதையாயிருந்த நங்கைக்கு மீட்சியாயைவர் விமோசனஞ்செய்தல்.

கரியமுகில் நிறத்தாள் கடலருந்தும் நீர்வாயாள்
பெரியபிறைவயிற்றாள் பிரிந்தநெற்றிக்கண் ணுடையள்
விரிந்தகன்றவாயாள் விண் ணுமண் ணுமொன்றாகி
பரிந்துமிகபாரிற் படுத்திருந்தாள்வல்லிடும்பி
பார்த்துமனமிடைந்து பாதையொன்றுங்காணமல்
மாற்றுவழிபார்க்க வல்லரக்கிவாய்வழியாய்த்
தோற்றுதுகாணங்கே சுற்றிவரப்பாதையில்லை
கூற்றுவனபோலேயிருந்தாள் கொடும்பாவிநெட்டேரி
வேறுவழிகாணேம் விடங்கர்சற்றுமில்லையிங்கே
மாறுபடாநாமும் வாய்வழியிலே நுழைந்து
பிடரிவழியாகப் புறப்பட்டுவந்தவளை
இடரிவளைதானசெய்ய எடுத்தவினையின்னதென்று
அறிவோமெனவே பிடரிவழியேகிவந்தார்
வாகுடனேஐவர் வந்துவெளியாகியபின்
வேகமுடனரக்கி வேற்றுமுகமாயெழுந்து
சாதுவெனும்லட்சுமிபோல் தனவடிவுமாறியந்த
மாதுதுரோபதைபோல் வந்துநின்றாளம்மானை

இந்தவனந்தனிலே எங்களையும்விட்டகன்று
அந்தவைகுந்த மடைந்தனையேயென்றுசொல்லி
தேகமெடுத்தடக்கிச் செய்கருமம்தான்முடித்து
வேகத்துடன்நாங்கள் விள்ளாமலித்தூரம்
வாராதுகண்டு வழியிலெதிராகவந்து
கூறுதுரூபங் குறையாமற்றானவள்போல்
நின்றுமலைவுபண்ணி நெடுந்தவங்கள்தானுலைக்க
குன்றுமலைபோற்கிடந்த கொடும்பாவிநெட்டூரி
சொல்லுநீயெந்தன் துரோபதையாய்வந்தகதை
நில்லுமையாசொல்லுகிறேன் நிலவரமாயிப்போது
யோகமுனியென்றகப்பன் உற்றசெவிகன்னியென்பேர்
வாகனையரூப மடவாருடன்கூடி
கற்பகச்சோலையிலே கண்துழன்றுபெண்களுடன்
உற்பனமாய்நானும் உறங்கவிழித்தெழுந்து
நிற்பளவிற்கோமுனிவன் நீண்டபூங்காவனத்தில்
பற்பமலர்வேள்வி பரிவாய்ச்சிறப்புடனே
வேதக்கடலொளிபோல் வேதாந்தவாக்கியத்தில்
நாதமுனிவேள்வியதை நாலுதிக்கும்தான்பார்த்தேன்
கோபித்துக்கோமுனியுங் கொடுசாபந்தான்கூற
சாபித்தராட்சதையாய்த் தானிருப்போமென்றுரைத்து
இச்சாபமென்றனுக்கு எப்போதெளியுமென்றேன்
அச்சாபந்தீர்வதற்கு ஐவர்தானிந்தவழி
வருவாரவர்கள்தன்னை வாகுடனேநீகாணில்
மருவார்குழலணங்கே மாறுமிச்சாபமென்றார்
சாபமுந்தீர்ந்ததுகாண் தன்மரேஉங்கள்தன்மம்
பூபரனேநான்போறேன் போமென்றவள்போனாள்
நல்லதென்றுபஞ்சவர்கள் நாட்டமுடனேநடந்தார்
வல்லதொருகாடும் வனமும்பலகடந்து
தப்பாதுசொல்லுடைய தன்மருந்தம்பியரும்
அப்பால்வெகுதூரம் அறுபத்துநாற்காதம்
வேகமுடனடந்து வில்லாமலுள்ளயர்ந்து

வாகுடைய துர்வாச மாமுனிவர் தன்னகரில்
வந்துநின்றுபார்த்து வழியேதெனக்கேட்க
ஐந்துகரத்தொந்தி யவன்காவல்வாசலென்றார்
அப்போதுதன்மர் ஐங்கரனைநெஞ்சில்வைத்து
எப்போதுமெங்க ளிருதயத்தில்வாழ்வோனே
அடியார்க்கெளியோனே ஐவருக்கும்நாயகனே
படியேழளந்தானைப் பராபரமாயுள் நினைந்து
தஞ்சமென்றபஞ்சவர்க்குச் சாங்கமாய்நின்றவனே
அஞ்சலென்றெங்கள் முன்னே ஆதரிக்கவந்தருளும்
அடியார்க்கெளியோனே ஐங்கரனேஎங்கள்குல
குடிகாக்கவந்ததொரு குஞ்சரமேவந்தருள்வாய்

விருத்தம்.

வருந்துமடியார் தனக்குதவும் மத்தகஜமேவழிதிறவும், இழிந்தபதியுமிடமும்விட்டு இங்கேவந்தோம் வைகுந்தம், பொருந்தும்படியாய் வழிகூட்டிப் போவென்றருளும் புகர்முகனே, திருந்துமுனிவர் தனைக்காணத் திறவுங்கதவை சிவக்கொழுந்தே.

இதுவுமது.

வாசமுனிவர் துருவாசர் மலர்தாள்பணிந்துவரங்கேட்க
நேசமுடனேவழிதிறவும் நெடுமால்மருகா அடியார்கள்
தாசருனதுசரணடைந்து தயங்கா நினைவுதந்தருளும்
ஈசன்மகனேகணபதியே எளியார்க்குனதுகதவுதிற

உற்பனநகரந்தன்னி லுயர் முனிபாதங்காண
நிற்பதுமழகுதானோ நின்னுளமறியாதேனோ
கற்பகக்களிரேயுன்றன் காவலாம்வாசல்தன்னை
விற்பனுவிரைவில்வந்து வெளிதிறந்தழையுமையா.

வேறு.

அய்யாகதவு திறந்தருளு மடியார் தன்னை வாவென்று, மெய்யாசரண முதவிசெய்யும் வேழமுகனே

கணபதியே, செய்யாவினைகஞ்செய்தருளும் சித்தே வித்தே சிவக்கொழுந்தே, கையாற்கதவு திறந்தருளுங் கண்டேமுனியைத் தெண்டனிட.

கதை.

முக்கணனார்மைந்தா மூஷிகவாகனனே
விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனேஉம்முடைய
வாசல்தனில்வந்து மருகியேஐவருந்தான்
நேசமுடன்மேல்வாசல் நின்றுமனம்புண்ணாகி
குஞ்சரனேஎங்கள் குருபரனேஇப்போது
அஞ்சலென்றுவந்ததுவும் ஆனைமுகத்தோனே
காமனுக்குமைத்துனனே கணபதியேகற்பகமே
சோமன்கதிர்காமனுக்குத் தோற்றமுடன்மூத்தோனே
வள்ளலேபார்வதியாள் மைந்தனேஎங்களைத்தான்
தள்ளுவதுஞாயமல்ல சரணஞ்சரணமையா
வேழமுகத்தோனே விக்கினங்கள் தீர்த்தருளும்
காளமுகில்மேனியனார் கண்ணனார்மருகோனே
கதவுதிறவுமையா கணபதியேசரணமென்று
இதமுடனே தன்மிருதாள்வணங்கிநிற்க
மத்தகெசமுகனும் வாசல்வழிதிறந்தார்
வித்தைவிநாயகனை விழுந்துநமஸ்கரித்து
வட்டமதிக்குடையோன் மாநகரில்வந்துபுக்கி
பட்டணங்களெங்கும் பளிங்குநிறம்போலெனவே
எங்குஞ்சிவாலயமும் எம்பெருமாளாலயமும்
பொங்குந்தவமுடையோர் பொருந்தியநல்வீதிகளும்
தவமும்ஜெபமுஞ் சன்னியாசிவேடமல்லால்
அவமும்பவமும் அஞ்ஞானமூடமற
தெளியும்பெரியோர் தேரும்பவுரிகளும்
வழியும்வழிவாசலும் மன்னவர்கள்தான்பார்த்து
மகிழ்ந்துகளிகூர்ந்து வந்தார்களைவருமாய்
புகழ்ந்துமுனிபாதம் போற்றியடிபணிந்து

அப்பனேஎங்கள் ஆதிகுருபானே
செப்பமுடனெங்கள்குலத் தெய்வசிகாமணியே
என்றுதன்மர்தெண்டனிட்டு இன்பமுடன்றான்பணிய
நன்றுநீர்பஞ்சவர்கள் நாடிழந்துவந்தகதை
பாண்டுவுடமைந்தர் பசியிழந்துஇத்தூரம்
வேண்டியிங்குவந்த விசாரமேதென்றுரைத்தார்
அய்யாமுனியேகே ளடியேன்சொல்விண்ணப்பம்
பொய்யானதோர்கலியன் பூமிதனில்வந்ததினுல்
வந்தோம்புவியிழந்து வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாயனுப்புந் தவமுனியேயென்றுரைத்தார்
தன்மரிதுசொல்லத் தான்கேட்டுமாமுனியும்
இம்மைதனில்வைகுந்தம் எவர்சேர்ந்தாரிப்புவியில்
வேதரிஷிமாதவர்கள் விண்ணவர்கள்காணுத
சீதமால்விந்தபதந் தேடிநீர்காண்பீரோ
ஆனுலுமாயன் ஐவருக்குமன்புடையோன்
தானனகோபாலர் தன்னிடத்தில் நீங்களுந்தான்
போனுலுமுங்களுக்குப் புத்திநான்சொல்லுகிறேன்
மானபிமானம் மதியாமலோர்மனதாய்
வேகம்வெகுளி வெகுண்டதொருகோபம்
தாகம்பசியிளைப்புச் சஞ்சலங்களில்லாமல்
இடும்புகொலைகளவு ஏதொன்றுமில்லாமல்
கடுங்கமாவாசை கருத்துற்றுப்பாராமல்
ஐம்புலனையுள்ளடக்கி ஆத்துமத்தைச்சுத்திபண்ணி
எம்பெருமாள்தன்னை யிருதயத்திலே நினைத்து
மன்னுயிருந்தன்னுயிர்போல் மனதிலேதானினைந்து
பன்னுமறைகாணுத பழம்பொருளைத்தானேக்கி
நடந்தாற்றெரியுமப்பா நந்தகோபாலருட
இடந்தான்தெரியுமப்போ தென்னுணேதப்பாது
தாரார்துளபமணி தானணியும்சீர்த்திதன்னை
ஆராய்ந்துதேடி யருள்பெறுவீர்கண்டீரோ
செல்லும்வழிதனிலே தீதொன்றும்பாராமல்

சொல்லுகிறேன்கேளும் துன்பமற்றபாதையிது
தீதானபேர்களங்கு செல்லாவழிகேளீர்
கேதாரம்போய்ப்புகுந்தால் கிட்டுவது தூரமில்லை
பக்கவிலக்கமில்லை பலபாதைதானுமில்லை
சொர்க்கமதுசேரச் சொல்லுகிறேன் நீர்கேளும்
கதித்ததொருவாசல் காவல்பத்ரகாளியம்மை
துதித்தவளைப்போற்றித் துன்பமறவேநடவும்
என்றுதுருவாச ரிவ்வசனந்தான்கூற
நன்றென்றுபஞ்சவர்கள் நமஸ்கரித்துமாமுனியை
நடந்தார்திசைநோக்கி நல்லதொருபஞ்சவர்கள்
அடர்ந்துவழிகூடி அம்மையுடகோவில்சென்று
பணிந்தார்நமஸ்கரித்தார் பத்திரகாளிதன்னை
துணிந்தார்துதிக்கத் தோத்திரமுஞ்சொல்லலுற்றார்

பாண்டவாள் பத்திரகாளியைப் பணிந்து துதித்தல்.

சந்தவிருத்தம்.

சக்கரமொருகை தண்டொருகை தனுசுமொருகை யம்பொருகை, உக்கிரவாளாயுதமொருகைஉடுக்கையேந் துமெண்டோளி, அக்ரமைம்பத் தொன்றதனி லமர்ந் துநின்ற வரும்பொருளே, வக்கிரதந்தமுகமிலங்க வரு வாய் வரங்கடருவாயே.

காளிகவுரிகங்காளி கன்னிகுமரியெண்டோளி ஆளி யூர்தியந்தரியே அடியார்க்கிரங்கிவழிகாட்ட, வேளையிது வேமாதாவேவிரும்பிவிடைதாவென்றடுத்தோம் ஆளே எந்தனையாளே அம்மா இம்மா நிலந்தனிலே.

வேறு.

துந்துமிபிடாரிசெல்வி தோதகிமயானருத்ரி
இந்துமாவதனவீய யிடாகினிமகுடதாரி
சிந்துரத்திலகமிட்ட தேவியேபத்ரகாளி
வந்துமுன்தோன்றவேணும் மரகதவடிவினளே.

சந்த விருத்தம்.

தாதுமலர்ந்தகுழலணங்கேசமையமிதுகாண்வழிகாட்ட
மாதுதனதுகேதார மட்டுஞ்சேராமலேவன்றி
ஏதுவினைதான்வந்தாலு மெளியோரிடமே நீயிருந்து
தீதுவினைகளணுகாமற் செய்வேநடத்துந்திரிபுரையே
நடக்குந்துயரமறிந்துனது நாட்டமதினாற்கண்டிறங்கி
அடக்கமுடையபொருளறிய அம்மாவுனதுசெயலாலே
கடக்கவேணும்வழியொழியக்காணவேணும்வைகுந்த
வடக்குவாசல்மடக்கொடியேவருவாய்வரங்கடருவாயே

கதை.

மாதுகவுரி மகமாயிராஜகன்னி
சாதுவேகங்காளி தயாபரியேமாகாளி
அங்கயற்கண்மீனாட்சி யம்மைசடாச்சரியே
கங்காளற்கன்பான கண்மணியேநாரணியே
அஞ்சலென்றுமக்கு அஷ்டாக்ஷரப்பொருளே
பஞ்சவர்கள்தாங்களம்மா பாரவனந்தனிலே
பஞ்சாட்சரத்தி பரிமளத்திபாம்பணைத்தி
அஞ்சலென்றுவந்திருந்தோம் அறியோம்பதஞ்சேர
மாதாவேதாயே வழிகாட்டவந்தருளும்
ஆதாரமில்லையம்மா அடியேற்குவந்துதவும்

மாகாளி ஐவர்க்கும் வழிகாட்டியது.

என்றுதன்மர்தான்துதிக்க இரங்கிவந்துமாகாளி
நன்றுதன்மரேவுமக்கு நல்லவழியீதெனவே
வழிகாட்டிமாகாளி மறைந்தனள்காணம்மானை
தெளிவாகப்பஞ்சவர்கள் சென்றார்வழிகூடி
தாராளமாய்நடந்தார் சத்திபத்ரகாளிதன்னை
நேராயிருதயத்தில் நிறுத்தித்துதித்தேற்றி
எண்பத்துநாற்காத மிளைப்புறவேதானடந்தார்
நண்புற்றகானகத்தில் நடக்கும்வழிதனிலே

அப்பாலுமோர்மலைதா னளவுற்றவுன்னிதமாய்
ஒப்பாருமில்லாத உயர்ந்தமலைமீதேகி
அந்தமலைப்பெருமை ஐவருந்நான்பார்ப்பளவில்
கந்தமலையரக்கன் கயிலாசனென்றவன்பேர்
ஆகாசம்பூமி யளவாகவாய்பிளந்து
வாகாயவனுடைய வயிறுதனையெக்கிநின்று

கதாயுதன் கயிலாசராட்சதனை அதாகுதஞ்செய்தல்.

தீயெரிந்தகண்ணுஞ் சிவந்தவிழிநாசியுமாய்
பேயிருந்தவீடதுபோற் பேருடலும் நீள்வயிறும்
காட்டானைசிங்கங் கரடிபுலியாளிபன்றி
நாட்டமுடன்காதுவழி நடந்துதிரிவதுவும்
நாசிவழிசென்று நடமாடப்பட்டதெல்லாம்
யோசனைகாதவழி யுழன்றலைந்துமேதிரும்பி
சேட்டுமத்திலீயதுபோற் சித்தியலைந்திடவும்
வாட்டுகின்றகாத்து வல்லரக்கன்றன்மூச்சு
எல்லையிலாப்பேருடல்தானெந்தமட்டோநாமறியோம்
தொல்லையுடல்கிடக்குந் தூரம்வெகுதூரம்
கடக்கமுடியாது கார்மேகன்தன்னையொப்பாய்
கிடக்கின்றராட்சதனைக் கிட்டியேசென்றாலும்
அடக்கமுடியாது ஆர்தனக்குமெட்டாது
நடக்கவழிகாணோம் ராட்சதனைத்தாண்டியப்பால்
எதிர்த்துப்பொருதாலும் ஈடல்லநான்தானும்
மதித்தவனுமுண்ணவென்றால்வாய்க்குநாம்பத்தோமே
கைகாலுலாவிவரும் கால்கள்துளாவிவரும்
ஐவரும்பத்தாது அவன்வயிற்றுக்கிப்போது
என்றுமயங்கி யிருந்துவழிபார்த்தார்கள்
நின்றுமயங்கி நெடுமூக்குத்தானெறிந்து
ஆவலாய்ச்சுத்திவந்து அங்கேவழிபார்த்து
காவலர்கள்போகவழி காணுமலேதிகைத்து
உற்றதொருராட்சதனை உசிப்பினார்கிட்டவந்து

சத்தமிட்டுக்குத்தியவர் தட்டியெழுப்பவுமே
என்னவென்றுசத்தமது எள்ளளவுந்தோற்றாமல்
வின்னமுன்றிச்சும்மா மெய்யசந்துகண்ணுறங்க
ஏதுவினைசெய்வோமென் றெண்ணிமனம்புண்ணாகி
தீதுவினைகாணிவனுந் திருவுளமேஉண்டெனவே
சுற்றுமிவராய்ந்து சூழவழிகாணாமல்
மற்றுமினிப்போவதற்கு வழுதானுமில்லையென்று
நின்றுவிசாரமிட நெடியதொருவல்லரக்கன்
குன்றுமலைபோலவனுங் கொட்டாவிகொண்டெழுந்து
ஐவரையுங்கண்டரக்கன் அளாவிப்பிடிப்பளவில்
தெய்வமேயென்று சினந்தெழுந்தான்வாள்வீமன்
மண்ணதிரநண்ணும் மலைகள்கிடுகிடென
விண்ணதிரத்தாண்டி வீமன்மிகச்சினந்து
ஆர்ப்பரித்துக்குத்த அரக்கனுமேதான்சினந்து
ஏர்ப்பரித்துவீமனெதிர்த்துப்பொருதலுற்றான்
மலையும்மலையுடனே மற்கட்டிநின்றதுபோல்
அலைகடலுங்காற்று மடர்ந்துகொண்டவிட்டதுபோல்
காடுசெடிநீறாகிக் கற்கறடுதூளாகி
ஈடுசெய்யமாட்டாமலேடுபட்டான்வல்லரக்கன்
தாக்கினான்வீமன் தலைகளுருண்டோட
நோக்கியேராட்சதனும் நொடிக்குள்ளேமாண்டானே
பட்டவரக்கன் பாரிறபிழைத்தெழுந்து
துட்டன்நம்மைத்தேடித் துரத்திப்பிடிப்பனென்று
தாராருந்தன்மர் தம்பியரைவாருமென்று
சீராகத்தானடந்தார் திருமால்துணையெனவே
வருத்தமுடனேகி வளர்ந்தவனக்காடுகளும்
திருத்தமுடன்கடந்து சென்றார்வழிகூடி
நடந்தார்வெகுதூரம் நாற்பதின்காதவழி
கடந்தார்மலைகள்பல கானகமுந்தான்பார்த்து
வருமளவிலேவீமன் வார்த்தையொன்றுதானினைந்து
தருமாடிபணிந்து தயவுடனேஏதுசொல்வார்

நடக்கும்வழிதொலைய நாயகமேளங்களுக்கு
அடக்கமுள்ளமுற்கதைக ளருளுமென்ருரம்மானை
அருளுமென்றதம்பியர்க்கு ஆதரவாயுளமகிழ்ந்து
பொருளுமுரைத்தார் போதமுடன்முற்கதைதான்

முற்கதையைத்தன்மர் அற்புதமாயோதல்,

சாற்றுகிறேன்தம்பியரே தான்கேளுமென்றுரைத்தார்
போற்றுமுலகம் புவனம்பதினுலும்
வேதாவும்மாலும் மிக்கதொருருத்திரனும்
மீதானமூவர் விதித்தவிதிபாராமல்
நான்படைத்தேனென்று நான்முகனுந்தான்கூற
மான்பிடித்தருத்திரனும் வகைபலவுந்தானெனவும்
தூயதொருமாயவனுந் தோற்றமெல்லாந்தானெனவும்
நேயமுடன்மூவருந்தான் நீபெரியன்நான்பெரியன்
என்றுபகையாகி யெதிர்த்துவழக்காட
மன்றிலிவர்களுட வல்லபத்தைத்தான்பேச
படைப்பிக்கவேதாவும் படியளக்கமாயவனும்
முடிப்பிக்கருத்திரனும் மூவருமேயல்லாது
ஒன்றையொன்றுமிஞ்சாது உள்ளபடிஞாயமிது
மன்றில்விளங்க வழக்குரைக்கமூவர்களும்
பார்க்கிற்சரியெனவே பரமரகசியத்தை
ஏர்க்கெனவேமுந்நா ளெழுதிவைத்தார்மேருவினில்
ஆர்க்கும்பெரியோ னவனல்லால்வேறுளதோ
தீர்க்கமாய்மூவர் செய்தொழிலில்மிச்சமில்லை
அவனைமறந்துவைத்த அபசாரந்தீரவென்று
சிவனுமயனுந் திருமாலுந்தான்கூடி
ஒருவற்கொருவ ருயர்வுசொல்வதல்லவென்று
மருவித்தழுவி மகிழ்ந்திருந்தார்மூவர்களும்
அண்டபுவன மகண்டமெல்லாந்தான்படைத்து
அண்டங்கடந்துநின்ற ளுடுந்திருக்கூத்தைக்
கண்டறியமாட்டார்கள் கருதியுரைத்ததெல்லாம்

கொண்டவிதிப்பயனுற் கூறினேனுமிவ்வார்த்தை
அவனேபெரியோ னங்குமிங்குமொன்ருகி
எவனேஅவன்கா ணெல்லையில்லாப்பேரொளியை
மறந்துரைத்தகுற்றம் வாராமலேயிருக்க
இறந்துமனமிடைந்து இருந்தார்காணம்மானை
ஈதலாற்றம்பியரே இன்னமொருநற்கதைதான்
ஆதலாற்சொல்லுகிறே னன்புடனேதான்கேளும்

தேவர்களமூதங் கடைந்ததைச் செப்புதல்.

வானவருந்தானவரும் மாதவரும்இந்திரரும்
தானவர்களொன்ருய்ச் சபைகூடியேபேசி
அன்னுளிற்றேவ ரமூதங்கடையவென்று
பொன்னுருமந்திரமாம் பூதரத்தைத்தூணுக்கி
நாகமதுகயிருய் நாட்டியதோர்தூண்தனக்கு
வாகனையமாமதியும் மத்தாகத்தான்சேர்த்து
வானவர்களோர்புறமும் தானவர்களோர்புறமும்
ஆனவர்கள்பாற்கடலி லமூதங்கடையும்போது
மலைதான்சுழன்றிடவும் வாசுகியுமப்போது
நிலைதாங்கமாட்டாமல் நீள்விஷத்தைக்கக்கிடவே
மீறியதோலாலவிடம் வெகுண்டுமிகவேயெழுந்து
சீறியுலகெங்குஞ் சென்றுபறந்தப்பாலும்
அண்டமடுக்குமகண்டமூதற்ருன்பறந்து
விண்டலமூடுருவி விரிஞ்சனுடலோகமெல்லாம்
பொங்கிவிஷம்பெருகிப் புகையெழுந்தகோரமுடன்
தங்கியமூவுலகுந் தானுமூமிழ்வதுபோல்
வாரவிடத்தனனே வானவருங்கண்டேங்கி
போரவழிபார்த்துப் போகவழிகாணுமல்
கண்டவிடந்தன்னைக் கலங்கியமரரெல்லாம்
அண்டவிடமில்லாமல் அரன்கைலைசென்றுபுக்கித்
தெண்டனிட்டும்கண்டு சிவனையடிபணிந்து
தொண்டருக்குவந்ததொரு தோஷங்கள்தீர்த்தளுரும்

பரனேபராபரனே பார்வதிமனோகரனே
அரனே அரவணியு மண்ணலே நீர்கேளும்
கடைந்தவமுதிற் காலவிடந்தான்பிறந்து
அடர்ந்ததிரிலோகமெங்கும் மந்தகாரமாமெனவே
தொடர்ந்துவரும்நஞ்சைத் துடைக்கவகைகாணாமல்
கடந்துபயந்தோடிவந்தோங்கயிலைமலைவாசா
கண்கலங்காதெங்களை நீர் காத்தருளவேணுமையா
பெண்கலந்தமேனி பிறைகலந்தசெஞ்சடையும்
பெம்மானொருமான் பிடித்தபெருமான்கயிலை
அம்மான்பொன்மான்மூ னருள்மாலுக்கேற்றவம்மான்
கஞ்சமுகமஞ்சுடையாய் கைமலரிரஞ்சுடையாய்
விஞ்செழுத்தஞ்சுடையாய்மெய்த்தொழிலஞ்சுடையாய்
மன்மதனையன்றெரித்தாய் வன்கரியை நின்றுரித்தாய்
முன்மலைவில்லாதரித்தாய் முப்புரந்தனையெரித்தாய்
தெண்டிரைசூழ்வையமெல்லாஞ் சிவனேசிவனேயென
எண்டிசையுந்தான்படைத்து எங்கடியரந்துடைத்தாய்
என்றமரர்கூறி யிறைஞ்சியபயமிட
நின்றமரர்தன்னை நீள்சடையோனஞ்சலென்று
சென்றுபரந்துவந்த தீதான நஞ்சுதனை
ஒன்றுபோற்றான்றிரட்டி யுட்கொண்டாரீஸ்பரரும்
நஞ்சுண்டாரென்று நல்லதொருபார்வதியும்
அஞ்சுவிரல்தன்னா லழுத்தினாள்கண்டமதில்
எவ்வுயிருங்காக்கவென்று ஈஸ்வரனுண்டநஞ்சு
அவ்வுயிரெல்லாம்பிழைக்க அரன்மடிந்துபோவரென
கோலிவிடம்பாயாமற் குறுக்கேமிடரடியில்
தாலிபிழைக்கவென்று தடுத்தாள்காத்தாலே
கண்டத்தில்நின்று கறுத்த அகோரவிஷம்
அண்டத்துக்கப்பா லாலவிடந்தானடங்கி
நின்றதுகாணந்த நெற்றிமேலுச்சிதனில்
அன்றுபிழைத்ததுகா ணண்டபிண்டமாமனைத்தும்
துறவிமுனிவர்முதல் சுவர்க்கத்தோரெல்லோரும்
இறவாமலேயுலகை யிரட்சித்தாரம்மானை

சிவன் திரிபுரமெரித்ததைச் செப்புதல்.

ஈதலால்வேறுகதை யின்னமொன்றுசொல்லுகிறேன்
ஆதலால்முன்னாளசுரரெனுமுப்புரத்தார்
இவ்வுலகிலுள்ள எண்பத்துநான்குயிரும்
அவ்வுலகுமிவ்வுலகு மடங்கலுமேகொள்ளைகொண்டு
இடுக்கங்கள்பண்ணி யிருந்த நிசாசரமும்
துடுக்குமுபத்திரமுந் துன்பமதுக்காற்றாமல்
தேவருமிந்திரனுந் திசைநான்முகத்தோனும்
மூவருமொன்றாய் முழுமுதலாமீஸ்வரனை
இன்றுவரைமுப்புரத்தாரிடுக்கமதுக்காற்றாமல்
வந்தோம்பராபரனே வல்லவனேகாவுமென்றார்
அந்தமொழிகேட்டு அரனாருமேதுசொல்வார்
செங்கணசுரரெல்லாஞ் சிவபக்தராயிருப்பார்
அங்கவரைநம்மா லழிக்கவேபோகாது
சிறந்தவர்கள்செய்யுஞ் சிவபூசைதன்னையிப்போ
மறந்துவிடப்பண்ணில் வாகாயழித்திடலாம்
என்றுசிவன்சொல்ல எம்பெருமான்தன்பதிக்குச்
சென்றுதிசைமுகனுந் தேவர்களும்போய்ப்பணிந்து
கண்ணுறங்குந்தா கவுரியார்நியானிக்கும்
அண்ணாதுளபமணி ஆயனே அச்சுதனே
முப்புரத்தோரென்னாளும் மூவுலகங்கொள்ளைகொண்டு
இப்போதழித்ததுகாணேன்செய்வோமென்றுசொல்லி
வண்ணரேயீஸ்பரர்க்கு வாகாகப்போயுரைத்தோம்
திண்ணமுள்ளமுப்புரத்தார் சிவபத்தர்கையினால்
அவனவன்சிவபூசை யகற்றினாலிப்போது
சிவனவர்கள்முப்புரத்தை ஜெயிக்கிறோமென்றுசொலி
நம்மாலேயீதாமோ நடவாதொருக்காலும்
உம்மாலே ஆகுமென்று யோசித்தார்தேவர்களும்
ஆகையினாலும்மை யடுத்திங்குதேடிவந்தோம்
மாயைபலசெய்து வகையாய்ச்சிவபதத்தை
மறந்திருக்கப்பண்ணுமையா மாபாவிமுப்புரத்தை

இறந்துநெருப்பெரிய எம்பெருமாள்பண் ணுமையா
வானவருமிந்தவிதம் மயங்கிநின் றுவார்த்தைசெப்ப
ஆனபெருமாளும் அவர்களுக்குத்தானிரங்கி
விண்ணவரே நீங்களஞ்ச லேண்டாமினிமேலே
தண்ணமரும்முப்புரத்தோர் தங்களுடனேகலந்து
எண்ணமற்றநாமும் இருந்தவர்கள்வாய்தனிலே
மண்ணையடிப்பதற்கு மார்க்கமாய்த்தானிருந்து
தழுவியவர்களையுஞ் சற்பனையேசெய்துழக்கி
வழுவறவேதான்பார்க்க வருகிறோம்போங்களென்றார்
அகமகிழ்ந்துவானவர்கள் அமராபதிசேர்ந்தார்
ஜெகநாதரப்போது திரிபுரத்தைத்தீயெரிக்க
வந்தார்காண் முப்புரத்தில் மாயோனுபாயமதாய்
விந்தையாய்ப்பூசை விழுத்தாட்டவேணுமென்று
பித்தர்சமையமென்று பித்தர்வடிவுகொண்டு
வித்தகனார்போயிருந்தார் வீரானமுப்புரத்தில்
போயிருந்தபுத்தர்தமை பொல்லாதமுப்புரத்தார்
தீயவினை நினைந்து சென்றுபுத்தர்தனைநோக்கி
சிறந்தசிவபூசையிங்கே செய்யுந்தலந்தனிலே
மறந்துமொருபுத்தன் வருவானோவென்றுசொல்லி
புத்தனுடனெதிர்த்துப் புரத்திலுள்ளோரெல்லோரும்
தத்துவங்கள்பேசியவர் தர்க்கித்தாரம்மானை
தர்கித்ததத்துவத்தாற் சமயமொருபன்னிரண்டு
நிற்கநிறுத்தி நிலைநிற்கவாதுசெய்து
சமையமொருநால்வேத சாஸ்திரமும்புத்தரென
அமையும்படிக்கு அறிவித்தார்புத்தரென்று
வாதாடிமுப்புரத்தார் மலைத்திருந்துதான்தெளிந்து
சூதானபுத்தனது சூட்சமறிவோமெனவே
புத்தரே நீரிருக்கும் பூமாத்தைநாங்களுமே
அத்தெரிந்துநீரு யதுசாம்பலாகவேதான்
பார்க்கிறோம்நாங்கள் பசுமரம்போலாக்குவீரோ
ஆக்கினிராணு லானும்தீரெனவே

பாதம்பணிந்துபலகாலும் பூசைபண்ணி
வேதமெல்லாமுடைய வேதமேதான்படித்து
ஈசனிங்குவந்தாரென் றேற்றுவோமென்றுரைத்தார்
வாசமுடன்முப்புரத்தாற் வகுத்துரைத்தசெய்தியினால்
புத்தர்சினந்து பூமரத்தைப்பாருமென்றார்
பத்தறவேமுப்புரத்தார் பார்த்தார்மரந்தனையும்
பூமரம்வெந்து பொடியாகிநீறான
பூமரத்தைப்புத்தனுந்தான் பூமரம்போலாக்கிவித்தார்
கண்டுதான்முப்புரத்தார் கண்காட்சியென்றுசொல்லி
தெண்டனிட்டுப்போற்றிச் சிறந்திருந்தாரம்மானை
ஆயனுடமாயை அறியாமல்முப்புரத்தார்
நேயமுடன்தங்கள் நினைவுமிகமறந்து
ஒருத்தனன்றித்தங்க ளுபதேசம்மறந்து
வருத்தமுடனீசனுட வாசனையுந்தான்மறந்து
பெத்தவாமிழந்தார் பெரியதவந்தான்மறந்தார்
எத்தவத்தபுத்தனையு மீசரெனத்தான்பணிந்தார்
பூமரத்தால்முப்புரத்தார் புத்தனையேதெய்வமென்று
நேமமாந்திருந்தார் நெடுமாலுமப்போது
ஈசன்றனை நினைந்து இப்போதுமுப்புரத்தார்
பூசைதவங்குலைந்து போர்புரியமாட்டாமல்
வேளையிதுவாருமென்று மேகவண்ணர் தானழைக்க
காளைதனிலேறுங் கடவுளருந்தானறிந்து
முந்திமனதில் மூஷிகனைத்தானினைந்து
விந்தமகாமேருவையும் வில்லாகத்தான்வளைத்து
வாசுகியேநாணாக மால்தானுமம்பாக
நேசமுள்ளநால்வேதம் நெடும்பரியுந்தேராக
சதுர்முகனேசாரதியாய்ச் சங்கரனார்தானடந்தார்
முதுபகழிதானெடுத்து மூரிச்சிலையேந்தி
வருமளவில்மாயனுட மாயைதனையறிந்து
திருமருவும்முப்புரத்திற் சென்றுநின்றுதான்சிவனும்
காயாம்புமேனிக் கண்ணருடகுட்சமதை

வாயாரச்சொல்லி வழுத்தமுடியாதெனவே
சித்தத்தில்கொண்டருளி சினந்துசிறுநாணேந்தி
சத்தவொலிநாணைசைத்தார் தராதலங்கள்தானடுங்க
கத்தனார்முப்புரத்தைக் கண்டுநகைசெய்தளவில்
பத்தறவேமுப்புரமும் பஸ்பமாய்த்தானெரித்து
மாபாவிமுப்புரத்தார் மாண்டார்காணம்மானை
பூபாலனான புண்ணியனார்தன்மருமே
இக்கதையைநன்று யிளையோர்க்குந்தானுரைக்க
அக்கதையைக்கேட்டு அடவிகளும்மாமலையும்
கடந்துமொருநூறு யோசனைகாதவழி
நடந்தகதைகேட்டு நல்லதென்றுபோகையிலே
வென்றியுள்ளவீமன் விரையவேயப்போது
அன்றியுமோர்கதைதானருளுமென்றுரைத்தான்
மன்னவரேதம்பியரே மற்றுமொருகதைதான்
இன்னமொன்றுசொல்லுகிறே னியல்பாகநீர்கேளும்

தப்பிமார்நடக்க இரணியன்கதையைத்

தருமரெடுத் துரைத்தல்.

ஆடகனென்றேஒருவன் அவனிதனிற்றோன்றி
நாடதனிற்றன்பேர் நலமாய்விளங்கிடவே
மூரணிபந்தமாதேவர் மூவர்கள்தம்மாலும்
மரணமின்றிவாழ்ந்திருப்பார் வல்லசுரனம்மானை
தேவர்களுமிந்திரனும் திசைநான்முகத்தோனும்
ஏவல்செய்துநாளும் இரணியனையேபோற்றி
ஆருமலையவர்க ளச்சுதனார்தம்மிடத்தில்
கூறுனமாபாவி கொடுமையெல்லாந்தானுரைத்தார்
அந்தமொழிகேட்டு ஆயரங்கேதுரைப்பார்
சிந்தைவருந்தாதீர் தேவர்களே அஞ்சாதீர்
மூரணியந்தநாரசிங்க மூர்த்திவடிவமதாய்
இரணியனைக்கொல்ல எடுப்போமவதாரம்
மாண்டனெனக்கருதி வானவரேதான்மகிழ்வீர்

வேண்டாமினித் துயரம் விட்டுவிடும்சட்டெனவே
என்றுசொல்லமாய னிமயவருமிந்திரரும்
சென்றார்கள்பொன்னுலகம் சேர்ந்திருந்தாரம்மானை
தாணிமுதல்மூவுலகுந் தானேகடவுளென்று
இரணியநமாவெனவே எல்லோருஞ்சொல்லிடவே
உலகமெல்லாந்தன்குடைக்கீழாகந்தாண்டிருக்கையிலே
சலசலோசனன்கிருபை தன்னாலிரணியற்கு
ஆமேபிறகல்ல அரியொருவனென்றுசொல்ல
கோமேதகம்போலக் குழந்தைதிறந்தோன்ற
வந்துபிறந்தார்காண் மகிழ்ந்தானிரணியனுந்
தந்தையருந்தாயாரும் தானேபிரியமதாய்
காலுக்குத்தண்டையிட்டுக் கனத்தசதங்கையிட்டு
மேலுக்கு ஆபரணம் விதவிதமாய்த்தான்பூண்டு
ஐந்துவயதளவும் அருமையாய்த்தான்வளர்ந்து
முந்துமறைவேதம் மொழிவதற்குவேதியனா
மைந்தனுக்குவித்தை வருத்துமெனத்தானுரைக்க
அந்தமொழிகேட்டு அந்தணருஞ்சம்மதித்து
தம்பியற்குநல்ல சாஸ்திரங்களோதிவிக்கத்
தும்பிமுகனைத் துணையெனவேஉச்சரித்து
ஏடுபிடித்து இரணியநமாவெனவே
தேடுதமிழ்வேதியருஞ் செப்பினார்புத்திரற்கு
பேசாமலேயிருந்தான் பிரகலாதேவனவன்
ஆசானைத்தான்பார்த்து ஐயரேவேதியரே
உலகில்வளர்ப்ப முறையாமிப்போது
தலைகீழாய்ச்சொன்னால் சம்மதியாதார்தனக்கும்
வளப்பமென்னவென்று மறையோனுந்தான்கேட்க
அளப்பொன்றுமில்லை அரிநமோவென்றுசொன்னால்
வேதமழிந்தாலும் விண்ணோரழிந்தாலும்
ஆதவனும் அம்புலியு மண்டமழிந்தாலும்
ஒருநாளுமழியாத உண்மைப்பொருளொக்குமிது
திருமாலும்நான்முகனுஞ் செப்புமொழிவேதாந்தம்

ஓம்நமோ நாராயணா வென்னுமுபதேசம்
ஆம்னூமுயிர் தனக்கும் அத்தானையுரித்தருவே
என்றுசிறுவ னெடுத்துரைக்கவேமறையோன்
ஒன்றுமுரையா லோவியர்போற்றுனிருந்து
மன்னனிரணியன்முன் வந்திருந்துவேதிய னும்
தென்னவனேஉன்மதலை செப்புகின்றவார்த்தைதன்னை
சேட்டிலையேயென்று கிருபையுடன்சொல்லலுற்றான்
தாட்டிகமென்மொழியைத்தப்பியவன்சொன்னதுதான்
இரணியநமாவென்று இன்பமுடன்சொல்லுமென்றே
முரணியனைமுதுரையாய் மொழியவேமுற்றுநமோ
அரிநாமமென்றசத்த மகண்டமெலாங்கொண்டிருக்கும்
சரியாயிரணியனைத் தானைஇராய்ச்சொல்லுவரோ
என்றுனுன்மைந்தன் இரணியனேயென்றுரைத்தார்
நன்றுச்செனவேயந் நாளிகையில்மைந்தனையும்
கூட்டிவரச்சொல்லிக் குழந்தைதனைப்பார்த்து
பூட்டிவைத்தசொல்லதனைப் பொருந்தாமலிப்போது
ஏறுமாறுயுரைத்த தென்னபள்ளாய்நம்பியரே
கூறுமிரணிய நமாவென்றுகூறுமென்றார்
அரியோம்நமாவென்று அருளிநான்பாலகனும்
எரியெழவேகோபமதாய் இரணியனுந்தான்சினந்து
சொன்னபடிசொல்லென்று சுடரையவன்மேலேவி
முன்னமேசொன்ன மொழியல்லால்வேறுமுண்டோ
என்னவதைசெய்தாலு மெடுத்துரையேனிந்தமொழி
மன்னவனேஎட்டெழுத்தை மறப்பதுவுஞ்ஞாயமல்ல
ஆகாதசொல்லதனை ஆமென்றுசொல்லுவாரோ
சாகாவரமுனக்குத் தந்ததினாலிந்தமதம்
வந்ததுகாணென்று மைந்தனிவையுரைக்க
விந்தைவிந்தையிந்தமொழி வேண்டாமெனவேதான்
சென்னியதையசைத்துச் சினமாயிரணியனும்
என்னிலுந்தான் பெரியோ னின்னுமொருவனுண்டோ
சொல்லடாவென்று சுதனைப்பிடித்தடிக்க

நீல்லடாசொல்லுகிறேன் நிரந்தரவஸ்தொருவன்
இருக்கிருன்கண்டாய் என்னுக்குளெண்ணெய்போல்
உருக்கியேகாட்டென் றுதைத்தானடிவயிற்றில்
திருப்பிமதலையவன் திருமால்தனை நினைத்து
துரும்பிலிருப்பான்காண் தூணிலுந்தானிருப்பான்
என்றுப்ரகலாதேவன் இவையுரைக்கஅப்போது
மன்றுபுகழ்ரத்னமணி வயிரத்தூண் தன்னிலேதான்
இருப்பானேவென்று இரணியனுங்கோபமதாய்
நெருப்பாயெழுந்து நிலைவாரமோவென்றுரைக்க
அப்போதுபாலன் அச்சுதனையுள் நினைந்து
இப்பொரதத்தூணி லிருக்கிருனென்றுரைக்க
எண்ணமன்றியங்கே என்செய்திதானறிந்தும்
வண்ணமணித் தூணில்வந்திருப்பானென்றுசொன்னாய்
எங்கையடாவென்று எழுந்தறைந்தான் தூண்தனையே
நங்கைபங்கன் தூணில் நரசிங்கமாயெழுந்தார்
கண்டவுடன்மைந்தன் கடவுளிவர்தாமெனவே
தெண்டனிடவேணுமென்று செப்பினுன்தந்தையிடம்
அந்தமொழிகேட்டு ஆகாதிரணியனும்
வந்தநரசிங்கமுடன் வாகாப்பொருதலுற்றான்
வாய்த்ததென்றுசொல்லி மாயன்மிகச்சினந்து
சாய்த்தவனைப்பற்றி தன்மடியிலேகிடத்தி
வாசற்படிதனிலே வந்திருந்துகூர்நகத்தால்
பாசக்குடல்மார்பதனைப் பகுத்திரண்டுகூறாக்கி
குடல்பிடுங்கிமாலையிட்டுக் குடித்திரத்தம்வீழாமல்
அடல்கதிரோன்பாதி அஸ்தமிக்குப்வேளையிலே
கொன்றார்கானிரணியனைக் கோபாலர்கைநகத்தால்
சென்றானிரணியனுந் தீநரகிலம்மானை
மாயோனைவந்து வானவர்கள்தெண்டனிட்டு
நாயேன்களுக்காக நரசிங்கமாயெழுந்து
நடுக்கந்தவிர்க்கவந்த நாரணரேதஞ்சமென்று
இடுக்கந்தவிர்க்கவந்த இறையோனைப்போற்றிசெய்து

போனார்கள்வானவர்கள் பொன்னுலகந்தானோக்கி
ஆனாலும்பஞ்சவர்கள் அநேகநெடுந்தூரம்

மாவலிவாணன் வரலாறுகூறுதல்.

பாதைதொலையவென்று பழங்கதைகள்தான்பேசி
வாதைகளன்றி மனத்துயரந்தான்தீர
கதையால்வழிதொலையக் காரணரேதஞ்சமென்று
பதையாமல்வீமன் பணிந்துதன்மர்சேவடியைப்
பூண்டுகொண்டுசெல்வமெனப் புகழானதனமருமே
மீண்டுமொருகதைதான்விளம்புகிறேன்கேளுமென்றார்
கூறுமொருசிவனார் கோவிற்றிருவிளக்கு
ஆருஞ்சுடரொளிபோய் அமருகின்றவேளையிலே
நீண்டவிளக்கதனில் நெய்பருகவே நினைந்து
மூண்டோரெலிவிளக்கை மூஞ்சியினாற்றாண்டிடவே
அவியாமலேவிளக்கு ஆழமாகநின்றெரிய
உவியாமல்தூண்டுகிற உற்றஎலிதனையும்
பரமசிவனும் பார்வதியுந்தான்மகிழ்ந்து
வரமருளவேணுமென்று வாவென்றெலிதனையும்
அண்ணலாய்த்தாழ மாசாட்சியாளுமென்றார்
மண்ணுலகையாள வரங்கொடுத்தார்மாவெலியும்
பூவுலகிலேபிறந்து புரந்தரன்போலோகமெல்லாம்
தேவாடிபணியத் தேசமெல்லாமோர்குடைக்கீழ்
ஆளுகின்றான்லோகம் அயிராவதந்தனைப்போல்
வாழுகின்றான்மாவெலியும் வையகமெல்லாந்தழைக்க
ஆயிரம்லிங்கம் அடைவுடனேபூசைபண்ணி
கோயிற்குளமும் குடிபடையுமேசெழிக்க
தானதவமுந் தன்மபரிபாலனமாய்
வானவர்க்குமெட்டாத மாபூசைகுருபூசை
ஞானசிவயோகியென்ன நற்குணமும்விற்பனமும்
ஈனமிரக்க மிரப்போர்கலிதீர்த்து
திரப்பொன்றுமில்லாமல் நெறிதவறிதில்லாமல்

இரப்போர்க்கொருநாளும் இல்லையென்றுசொல்லாமல்
ஆல்போல்தழைத்து அருகதுபோல்வேரூன்றிப்
பால்போல்பெருகப் பாருலகோரெல்லோரும்
பசியாமலுண்ணப் பாக்கியமுந்தானருளி
ரிஷிகள்தபோதனர்கள் நெறிமுறைதப்பாமல்
பாராளுமந்நாளிற் பச்சைமால்சோதனைக்கு
தாராளமாயிதனைத் தானறிவோமென்றுசொல்லி
வந்தார்புவியில் மாவெலிதன்செயல்கண்டு
சந்தோஷமாயிருந்தார் தவத்தின்பெருமையென்று
ஒருவிளக்குத்தூண்டி யுலகமெல்லாந்தானுண்டான்
திருவிளக்குலோகமெல்லாஞ் சிறப்பாயிருக்குதென்று
இவனுடையமாதரும மீரேழுலோகமெல்லாம்
சிவனுடையரூபமதாய்த் தீபச்சுடரொளியாய்
எங்கும்விளக்கொளியா யிருக்குதுகாண் தானதவம்
பொங்குதுகாண் வையகங்கள் பொய்யாதபுண்ணியங்கள்
இவன்செய்யுந்தானதவம் எள்ளளவுங்குற்றமில்லை
அவஞ்செய்தழிக்கவென்று லாகாவெவையாலும்
வள்ளல்கொடுத்தவரம் வளருதுகாண்மாவெலிக்கு
உள்ளமதனி லுபாயமென்னசெய்வமென்று
கள்ளத்திருடன் காயாம்புமேகவண்ணன்
மெள்ளமனதில் வேறேநினைவுகொண்டு
மாயோனுந்தானிருக்க மாவெலியுமந்நேரம்
நேயானுந்தானதவம் நீநிலத்திற்செய்வதற்கு
உகந்துநதிமூழ்கி யுற்றநதிக்கரையில்
புகழ்ந்துசிவபூசை பூரணமாய்த்தான்முடித்து
மாதானம்பூமி வஸ்திரதானமுதல்
கோதானம்மாநிதியுங் கொடுத்தருளவேபலவும்
கன்னிகைதானங் காவலனுந்தான்கொடுக்க
உன்னிமனதி லொருமித்திருகாத்தாற்
கொடுக்கிறனென்று கோபாலன்தான்கேட்டு
அடுக்கவந்துநின்று அந்தணர்போல்தானிருந்து

நரைதிரையும்மூப்பும் நடுக்கமுடல்வாதமுமாம்
புரையிருமலாகிப் புகைந்திருண்டகண்களுமாய்
நாசியொழுகவொரு நாடிதழன்றிடவும்
பாசிபற்றும்பல்லும் பழுவாயீர்முக்கலுமாய்
போற்றும்பரிவட்டமது பொள்ளலாய்க்காற்றோட
பீத்தப்புடவையுடன் பிராமணன்போல்வந்துநின்று
அன்னந்தருமாவெலியே அட்சதையிந்தாவெனவே
மன்னவனேஉன்னிடத்தில் வந்தேனெனவேதான்
அட்சதையுந்தான்கொடுத்து அந்தணனுந்தேகியென
பட்சமுடன்தேகியென்ற பார்ப்பானைவாருமென்று
ஏதுனக்குவேணுமென்று இன்பமுடன்மாவெலியும்
சாதுவுடன்கேட்கத் தள்ளாடிமாமறையோன்
இடறிவிழுவார்போல் எய்ப்புமிளைப்புடனே
வடதேசமேயிருந்து வந்தேனுனும்மிடத்தில்
உன்னிடத்தில்வந்தேன்கா ணுத்தமனேஎந்தனுக்கு
நன்னிலத்தில்நானிருக்க நாட்டமுடனிப்போது
இருக்கஇடந்தாரும் என்னுடையகாலாலே
சுருக்கமாய்மூவடிமண் சொல்லியேதத்தம்பண்ணும்
போருமுனக்குப் புண்ணியமேசெய்யுமென்றான்
வாருமையா நீர்தாமும் மற்றொன்றுங்கேளாமல்
இவ்வளவுகேட்டதென்ன இப்போதேதாரோம்நாம்
குவ்வுபுயமாவெலியுங் கொடுக்கவொருமனதாய்
கெண்டிதனையெடுத்துக் கெங்காசலம்விடுத்து
தெண்டிரைசூழ்வையமதில் தெத்தம்பண்ணும்வேளை
தக்கதொருசுக்கிரனுந் தன்னுடையசீஷனென்று
மிக்கதொருவண்டெனவே வீழ்ந்தந்தக்கெண்டியிலே
பக்குவமாய்த்தானிருந்து பாணியும்வீழாமற்
சிக்கெனவேதானடைக்கத் தெரிந்தந்தமாமறையோன்
தருப்பையினாற்குத்திடவே தாரையொன்றுகெட்டிடவே
இருப்பையறிந்தேகவியை எல்லோருமேசிடவே
ஈவோர்தனைவிலக்கில் இப்படியேகுற்றம்வரும்

தீவினையாய்தான் முடியுஞ் செய்வோர் தனைவிலக்கில்
என்றுசபைசொல்ல இருந்தான் தலைகவிழ்ந்து
ஒன்றுமுரையாத வூமைபோலேயிருந்தான்
பூரியென்னமாவெலியும் புகழ்ந்துதத்தம்பண்ணினனே
தெத்தமதுவாங்கித் திருமாலும்மூவுலகில்
வைத்தாரொருபாதம் வானுலகிலோர்பாதம்
ஈரடிமண் தானு மில்வுலகும்மவ்வுலகும்
ஓரடிமண்ணெந்தனுக்கு உன்மேல் நிலைமையென்று
மாவெலியையவன்சிறையில் வைத்தார்காண்வானகத்தில்
தேவலோகஞ்சேர்ந்து சிறையிருந்தான்மாவெலியும்
வானவருந்தேவர்களும் மாயோனையேவணங்கி
தானவரும்வேதியரும் சதுர்வேதநான்முகனும்
மாயனைவாழ்த்தி வாழ்ந்திருந்தாரம்மானை
தூயதொருபஞ்சவர்கள் தொலைதூரமேகடந்து
வேகமுடன் நடந்தார் விந்தமதுகாணவென்று
தாகமுடன்வீமன் தன்மர்தனைத்தொழுது
வைகுந்தஞ்சேர வழிதொலையவேணுமென்று
மெய்கண்டமூர்த்தியே நீர் விளம்புமொருகதைதான்
நடக்கமுடியுதில்லை நல்லகதைசொல்லுமென்றான்
அடக்கமுள்ளதம்பியரே அருமையுடனோர்கதைதான்

பெரியவன் நான்தான் என்று

அரியுமயனும் அடித்துக்கொள்ளல்.

சொல்லுகிறேன்முன்னாட் சுருதிமுதல்முற்கதைதான்
புல்லும்புவியும் புவனமுதலாகாசம்
கல்லுங்கரடுங் கல்லுத்திசைகளெட்டும்
அல்லும்பகலும் அம்புவியும்வெய்யோனும்
இல்லாதகாலம் இறையோனொருத்தனுமாய்
அல்லாமதுமயமாய் அகண்டமெல்லாந்தானுகி
வெளியாகியெங்கும் விளக்குமொளியாகி
அழியாதவல்லதொருவன் ஆதியாய்நின்றமுதல்

ஏகவெளியாகி யெல்லாமநிரந்தரமாய்
ஆகமவேதமன்றி அசைவுபலநாதமின்றி
தானாகிநின்ற சருவதயாபரனார்
ஊனாயுடலா யுயிருக்குயிருயிராய்
வானாய் நிலநீராய் வாயுவாய்ச்செஞ்சுடராய்
பானாய்மதியாய்ப் பலவகைகள்தோற்றமுமாய்
அண்டமநேக்கா யண்டபகிரண்டமுமாய்
பிண்டமுதலண்டமுமாய்ப் பிரமாண்டகோளகையாய்
தட்டுநிலைதாபரமாய்த் தராதலமுமூர்வனவாய்
எட்டுத்திசையும் எழுவான்படுவானும்
ஆகட்டுமென்று அருளநினைவுகொண்டு
வாகிட்டரூபியென்றார் வந்துமுன்னே நிற்கலுற்றார்
எல்லாமுண்டாக்குமென்று இறையோன்பறையிடத்திற்
சொல்லமுடிந்ததுகாண் தோற்றமொடுக்கமெல்லாம்
தற்பரமாய்த்தான்றி தற்பரத்திலேயிருந்து
சிற்பரமுந்தோன்று சிற்பரத்திலேயிருந்து
பரந்தோன்றிநின்று பரத்திற்சிவந்தோன்றி
உரந்தோன்றவேசிவத்தி லுற்றசத்திதான்தோன்றி
சத்திதனிற்மூலபலன் தத்துவத்தில்நாதமுமாய்
முத்தினொளிபோலே மூலவிந்துதான்தோன்றி
விந்துதனில்நால்வேதம் வியனாறுசாஸ்திரமும்
பத்தமுறும்சாஸ்திரத்திற் பதினெண்புராணமுமாய்
தத்துவங்கள்தொண்ணூற் றாறுடனேதானமைந்து
நத்துமறுபத்து நாலுகலைக்கியானமுமாய்
ஆராதாரங்களுடன் ஐம்பத்தோரட்சரமும்
வீறுஞ்சதகோடி வேதமுதல்மந்திரமும்
மந்திரத்தில்விந்துவதாய் வந்தசதாசிவமும்
அந்தசதாசிவத்தி லாயமகேஸ்வரனும்
இந்தமகேஸ்பரனி லீன்றதொருருத்திரனும்
வந்ததொருருத்திரனில் வாசமுள்ளவிஷ்டுணுவும்
விஷ்ணுவிலேயிருந்து விதிப்பிக்கும்வேதாவும்

உஷ்ணமிட வேதாவி லுதித்ததொரு ஆத்மாவும்
ஆத்மாவிலேயிருந்து ஆகாசந்தான்தோன்றி
சாத்துமிவ்வாகாசந் தனனிலேவாவுந்தான
வாயுவுலேதேயுவதாய் வந்துதித்த இப்போது
தேயுவிலே அப்புவுந்தான் சிறப்பாகத்தான்தோன்றி
சிறப்பான அப்புவிலே சேர்ந்ததொருமண்தோன்றி
அப்பெரியமண்ணதனில் அருபவித்தாயுண்டாகி
ஒன்றுபத்துநூறு யொருகோடி ஆயிரமாய்
அன்றுவிதிகையா லனந்தநூறுயிரமாய்
வானும்புவியும் வகைபலவுந்தானுகி
ஊனூறுயிரும் ஊர்வனமும்பட்சிகளும்
திக்குந்திசையுந் தெண்டிரைசூழ்வையகமும்
நிற்குமொரு அஷ்டகிரி நேரான அஷ்டகெஜம்
ஈரேழுலகமுமாய் எண்பத்துநான்குயிராய்
பாரேழுந்தாங்கப் பணுமடிகளாயிரமாய்
யோனிபலவாகி உருவமதுவெவ்வேருய்
மானிலமேற்புற்பூடாய் மரங்கள்விருட்சமதாய்
நால்வகைசாதியுமாய் நால்வேதசாஸ்திரமாய்
நூல்வகைகளாகமுமாய் நோன்புவிரதமுமாய்
ஆண்பெண்ணிருவகையாய் ஆதாரமாமுதலாய்
காண்பதுங்கண்காமங் கலியாணமும்பெரிதாய்
ஆசையெல்லாங்கூட்டி யடக்குகின்றபொக்கிஷமாய்
ஓசைபஞ்சபூதம் உருவஞ்சுவைநாற்றம்
வாசலோரொன்பதுமாய் மலபாண்டம்வீடாக
பாசமெனுமைம்புலம் பரும்பூதமைம்பொறியும்
தத்துவங்கள்தொண்ணூற் றுறுசமையமுதல்
சுத்தண்டகூடச் சுவருமடங்கலுமாய்
மற்றுஞ்சராசரமும் மண்டலங்கள்மூன்றுடனே
உற்றதிதிராசி யோகங்கரணமுடன்
சந்திரனுஞ்சூரியனுந் தாரனநட்சேத்திரமும்
இந்திரனுந்தானவர்க ளிமையோர்முனிவர்களும்

சந்திரமாய்த்தான்வகுத்துச் சகலவஸ்துமுண்டாக்கி
அந்தரத்திற்பேச்சு ஆர்பெரியோனென்றறியில்
நாமேபுவியில் நால்வகையுந்நான்படைத்து
நாமேதமக்குச் சரியில்லையென்றிருந்தோம்
மாலவன்தானெல்லாம் வகுப்பிந்தோமென்றுசொல்லி
ஆலமரத்தேறி அவன்றானின்றுமாகில்
ஆரறியப்போரார்கள் அரியெனவும் அயனெனவும்
பேரறிவேதாதன் பெரியோனெனவுரைத்தான்
சென்றவனை நாமுஞ் சிலுகிட்டுப்போர்முடித்து
வென்றவனை நாமும் வெகுபெரியோன்வேதனென்று
நினைந்துமன திலெண்ணி நெருப்பிருகண் தீயெரிய
மனைந்தநெலாம்பொய்யோவகுந்தநெலாம்வீண்தானே
நன்றாச்செனவே நடந்தான்வைகுந்தமதில்
அன்றாச்சிகையா லடியுண்டமாலிடத்தில்
சென்றுனிருந்தான் சீராட்டுவார்த்தையதாய்
கன்றார்கனியெரிந்த காயாம்புமேனியனே
உன்பேச்சுமென்பேச்சும் உலகறியவேணுமின்று
தன்பேச்சுமேலாகத் தானெண்ணி நீயிருந்தால்
என்பேச்சுக்கீழா யிருப்பதுவும்ஞாயமல்ல
மூன்பேச்சுமூவுலகும் மூப்பத்துமுக்கோடி
தேவர்களுமற்ற சிவபலாசிகளும்
மூவர்களுந்தாமறிய மூழுமோசமோயிதுவும்
என்படைப்புக்குள்ளா யிருந்துபிழையாமல்
உன்படைப்புமேலென் றுலகமதிற்சொல்லுகிறாய்
வம்பாக நீதான் வாயிடும்புபேசினதேன்
எம்பிரான்தானறிய இனிமேற்பொறுக்கேன்காண்
ஈரேழுலோகம் இகபாமுந்தானறிய
பாராழும்நானே பச்மைால் நீயேது
இப்பாலென்கையா லீரேழுலோகமெல்லாம்
மெய்ப்பானசத்த மேகமுதலேழ்கடலும்
அஷ்டதிக்கு அஷ்டகிரி அஷ்டமாநாகமுதல்

அஷ்டகெஜமெட்டு மடங்கலுமேதாகுக
அட்டவசுக்களபல அசுரரொடுராட்சதரும்
கிட்டமுனுகாந்தருவர் சித்தவித்தியாதரரும்
கிம்புருடர்கெணநாதர் கின்னரர்கள் தன்னுடனே
தும்புருநாரதருந் தோற்றமெல்லாமென்னிடத்தில்
இந்திரனுமக்கினியும் எமன்திருதியுமாய்
வந்ததொருவாயு வருணன்குபேரனுடன்
இட்டநந்தியட்டதிக்குப் பாலகருமென்னுலே
கிட்டமுடனேசகல சீவன்மூதலென்னுலே
உண்டானதென்று உன்மனதிலெண்ணுமல்
விண்டோமிவனையென்று மேதினியிலுன்னுடைய
உந்திக்கமலமதி லுதித்தானிவனெனவும்
சிந்தித்திருந்ததெல்லாந் தீர்க்கமுடன்விட்டுவிடும்
ஏதினுலென்று லென்னுடையகைநினைவால்
வாதினுலெவ்வகையும் வகுத்துவிடாதிருந்தால்
ஆரை நீரட்சிப்பாய் அவனி யொன்றுமில்லாவிட்டால்
பேரைபறியாத பேச்சேதும்பேசுவரோ
சுவரில்லாச்சித்திரந்தான் தொட்டெழுதவல்லாயோ
எவரைமயக்குகிருய் இத்தொழிலைவிட்டுவிடும்
நால்வரையும் நீதான் ரட்சிப்போமென்றதெல்லாம்
மால்பெருமைசெய்யாதே மறந்துவிடுமிப்போது
உன்னைவிடவேறே உன்போலொருவனைநான்
பின்னையுண்டாக்கிப் பிரியமுடன்ரட்சியென்பேன்
ஆக்கமுடன்பாற்கடலில் அங்கே நீபள்ளிகொண்டால்
தீர்க்கமுடனசுரர் சென்றுவந்துகொல்வார்கள்
பாற்கடலைவிட்டுப் பக்கமேசென்றுபுக்கி
ஏற்கவேஓடி யிப்போதொளிந்திருபோ
என்னுடையபேரன் இயல்பிருகுமாரிஷியும்
உன்னுடையசெய்வினையா லுன்னையேதான்சபித்தான்
பத்துஜெனனம் பாரிற்பிறந்திறந்து
மூத்துமந்தச்சாபம் முழுதுந்துடைத்துவா

விட்டதறியாயோ விதித்தெழுமென்கையினால்
இட்டவெழுத்தின்படியே இருக்குமேயல்லாது
எல்லாவுயிர்க்கும் இன்னபடியென்றெழுதி
கல்லாவென்கையுங் கறுத்ததுவுங்காணீரோ
உன்னுடையஉந்திதனிலுதித்துவந்தேனென்றுசொலி
என்னுடையபேரை இகழ்ச்சியாய்ச்சொன்னீரே
முந்தவொருதூணில் முளைத்தெழுந்தசிங்கமதாய்
வந்துஇரணியனை மார்பைப்பிளந்தாயே
அந்தத்தூணுந்தனுக்கு அன்னையோதந்தையோதான்
தந்தையேதூணானால் தகப்பனும் நீயெந்தனுக்கு
அக்கினிதான்மூங்கிலுக்குள்ளவதரித்துவந்துபின்னும்
முக்கியமாய்மூங்கில்களை முழுதும்வெந்துநீறாக்கிப்
போட்டதுபோல்நானுமுந்திப் பூவுதனிலேயுதித்து
வாட்டியுனைக்கொல்ல மாற்றானாய்வந்துதித்தேன்
என்றுமலரோனிவையுரைக்கமாயவனும்
நின்றுமனதில் நினையாதெல்லாம்நினைந்து
காதிலேதாராசம் காய்ச்சியேவிட்டதுபோல்
ஈதிவனுஞ்சொல்ல ஏர்க்குமோமாயனுக்கு
அகோரம்பிறந்து அனலாய்ப்புனலெழும்ப
விகாதமுடன்நகைத்து வேந்தனுக்குஇந்தமதம்
வந்ததென்னவென்று வருத்தம்மனதிலெண்ணி
இந்தமகிமை இனியறிவோமென்றுசொல்லி
வேதாவைத்தான்பார்த்து விஷ்ணுவுங்கோபமதாய்
மாதாவுனக்கென் வயிறென்றறியாமல்
நீதாயுரைத்தாய் சிறுபிள்ளையாகையினால்
மீதாய்ச்சிறுபிள்ளை வெகுளியாய்த்தானுரைத்தால்
தந்தையிதுகுற்றமென்று தான்சினக்கலாகாதே
எந்தவிதம்நம்மை யிகழ்ச்சியாய்த்தானுரைத்தாய்
இப்படிச்சொல்ல எவர்பொறுப்பார்கண்டீரே
அப்படிக்கொற்றபிள்ளை யகந்தையதுசெய்திடத்தே
உன்னைப்போலெந்தனுக்கு உற்றபிள்ளைதானிருவர்

பன்னற்கரிய பராக்கிரமமுள்ளவர்கள்
மதுகயிடவாளெனப்பேர் வாய்ந்தாரிருவோரும்
எதிராடிப்பேசி யென்னுடனேபோர்க்குவர
தந்தையென்றுபாராமல் தாஷ்டீகனாதன்னுடனே
வந்தெதிர்த்துநம்முடனே மற்பொருதும்வேளையிலே
கொல்லமனமில்லாதாற் குழந்தைவெகுநாட்பொருது
வெல்லவுபாயம் வேறேநினைவுகொண்டு
சற்பனையாய்க்கொன்று தாரணியிற்போட்டுவிட்டேன்
அப்படியேவுந்தனுக்கு அறிவுவரப்பண்ணுவிட்டால்
உற்பனமென்றெண்ணாது உன்னகந்தைநில்லாது
நட்புடையதேகமதில் நல்வினைகளாலெழுந்த
புண்தனையுங்கீறிப் புறையறவேதானூற்றப்
பண்புடனேதானிருந்தாற் பகையாது ஆறிவிடும்
அத்தன்மைபோலே அகந்தைசெய்தபிள்ளைகளை
பெற்றபிள்ளையென்று பிரியமுடன்பாரார்கள்
உந்தன்சிரசி லொருசிரசைஈஸ்வரனார்
முந்தவேகிள்ளுகையில் மூளத்ததோஉன்சிரசு
அந்தமட்டுமுன்செயல்தா னெவர்தனக்குநீதலைவன்
அனந்தன்பணமுடிக ளாயிரந்தன்னிலொரு
கனந்தான்புவனங் கதித்தசிரசொன்றினுக்கு
பத்தாதலோகம் படைத்தோமெனும்பெருமை
கத்தாவாய்பேசுவது காரியமோவுன்றனுக்கு
சொல்லுமுன்வேதமெல்லாஞ் சோமுகாசூரனுந்தான்
தில்லுமெனவேபறித்து நெடுகவேகொண்டேக
மீன்வடிவுநானெடுத்து வேதமதையேபறித்து
நான்மிகவுந்தந்த நன்றிமறந்திரோ
நச்சுமாமானலும் நட்டமரந்தனையிப்போ
அச்சமறநாமும் அழிப்பதுவுமாகாதே
என்பதினல்நாமும் இந்தமட்டுந்தான்பொறுத்தோம்
உன்பலத்துக்காற்றேமென் றுள்ளமதிலெண்ணாதே
பொல்லாதபிள்ளையென்று தள்ளாதிதுவரையில்

கொல்லா துவைத்திருந்த குற்றமதோமீறிவந்தாய்
இனிமேலுங்குற்றமில்லை யென்றேநெடுமாலும்
கனிசிவந்தவாயாற் கண்கள்நெருப்பெழவே
உரத்தெழுந் தவார்த்தைசொல்ல உன்னிமலரோனும்
திரத்தில்மிகுந்தவர்போல் திடுக்கென்றெழுந்திருந்து
ஒருவர்க்கொருவர் ஒருபூசலாய்விளைந்து
இருவருக்குமற்போ ரெதிர்த்துப்பொருதவென்று
மட்டுமிஞ்சிவார்த்தை வாதுபலதான்கூறி
கட்டுவிடப்பேசி காவலர்கள்பூவுலகில்
குதித்தாரிருபேருங் கொடிமுடிகள்தானதிர
துதித்தார்பெருமாளுந்தொடைதட்டி யேதுசொல்வார்
மூன்னாளில்ராக்கதரால் முறையிட்டாய்நம்மிடத்தில்
மன்னுவுனக்காக வந்துநாமிராக்கதரைக்
கொன்றுங்கள்தெய்வப் பதவிகொடுத்தோமே
சென்றுங்கள்தெய்வப் பதவியதுசேர்ந்திருந்து
நன்றிமறந்தென்னை நையாண்டிபண்ணியிப்போ
மன்றிற்பொருத வாதாடிவந்தெதிர்த்தாய்
இனியறிவோமென்று எதிர்த்தாரிருபேரும்
பனிவரைகள்ரெண்டு பகைத்தெதிர்த்துநின்றாற்போல்

மாலுமயனும் மற்போர் புரிதல்.

மற்கட்டிச்சேர்ந்து மண்ணதிரவிண்ணதிர
திக்கெட்டுந்தானதிரத் திசைகள்கிடுகிடென
இடசாரிமாய னெடுத்தடியும்வைக்கவுந்தான்
அடவுடனேவேத னடுத்துவலசாரி
கால்களொடுகால்மாறிக் கைகளொடுகைசேர்த்து
மேல்களொடுமேலுரைந்து வேகமுடன்தானிருவர்
உரத்துமிகுத்துவெகு ஓங்காரங்கொண்டெழுந்து
அரத்துகிறசத்தம் அண்டகடாகமட்டும்
நடுங்கிமலைகலங்கி நட்சேத்திரமுதிர
கடுங்கோபங்கொண்டு கதிரோனுந்தான்மறைய

பூமியதிரப் புவனம்பதிறலும்
சாமிதிருமாலயனர் தர்க்கமதுக்காற்ருமல்
ஆரவுதலைமாற அடுக்கண்டந்தானசைய
இரவுபகலெனவு மெண்ணுதுமாலயனும்
இருவரும்போர்புரிந்தா ரிமையோர்நடுங்கிடவே
ஒருவர்கொருவர் உரத்துச்சினந்துகையால்
குத்துகின்றசத்தமது கொண்டலிடியதுபோல்
எடுத்துகின்றகால்களினு லெடுப்பட்டமாமலைகள்
அளாய்நெருங்கியது அளாய்பறந்துவிழ
ஆளாயிருபேரும் அடவாய்லகுவுகொண்டு
வலசாரியாக மாயோனடிபேர்ந்து
மலரோனிடசாரி வருவதும்பூவுலகில்
இரவுவந்துமூடுதல்போ லெம்பெருமாள்தன்மேனி
இரவிவந்துதோன்றுதல்போலெழில்வேதன்றன்மேனி
இப்படியாயோர்நொடிக்குள் ளிரவுபகலாயிரமாய்
மற்பிடித்துச்சக்கரம்போல் வட்டமிட்டுச்சுற்றுகையில்
பூவுலகிலுள்ள புற்பூடுசீவசெந்து
தாவுமிடமில்லாமல் தயங்குமாமந்தரத்தில்
ஆகையினுல்வானவர்க ளயிராவதத்தனிடம்
மாயைமருட்கொண்டு வந்துமுறையிடவே
அவர்கள்முறையிடுமுன் அயிராவதத்தோனும்
இவர்களுக்குமுன்னே இயம்பினுன்றன்கலக்கம்
ஆனாற்சிவனிடத்தி லபயமிடவாருமென்று
போனார்காண்தேவரெல்லாம் பொன்கயிலைதானேக்கி
அரனேவுனக்கபம் அத்தனேமுக்கணனே
பரனேவுனக்கபயம் பாருலகிலிப்போது
மாலோனும்வேதாவும் மல்யுத்தம்பண்ணுகிறார்
நாலாவகைச்சீவன் நாங்கள்முதலெவ்வகையும்
நிற்கநிலையில்லாமல் நீந்திவந்தோமுன்பாதம்
தக்கதுணையீதனவே தானுவேநம்பிவந்தோம்
சூருவழிக்காற்றுச் சுழல்காற்றுப்போலாகி

நீறாகிலோகம் நெருப்பாயெரியுதையா
அந்தரமாய்வானம் அஞ்சழிந்துபோகுதையா
இந்திரனோட்டத்திற்கு மெல்லாஞ்சுழலுதையா
சந்திரனுஞ்சூரியனுந் தானொளிந்துபோனார்கள்
மந்திரங்கள்வேதமெல்லாம் வரம்பழிந்போகுதையா
அடுக்குநிலைபோர்ந்து அலைகடலுந்தானதவறி
உடுக்களுதிர்ந்தே உயர்மூகடுதான்கிழிந்து
எல்லாந்தடுமாறி ஏங்குதுகாண்மூவுலகும்
நில்லாநிலையில் நிற்கும்பராபரமே
நாதனே எங்கள் நடுக்கந்தவிர்த்தருளும்
வேதனுடபோரும் விஷ்ணுவுடதன்போரும்
பார்க்கமுடியாது பரனேபராபரனே
காக்கவிதுசமயம் கடைக்கண்கிருபையினால்
ஏறிட்டுப்பாருமையா இருவருடதன்போரை
கூறிட்டுலோகம் குலுங்குதுகாணண்டமெல்லாம்
இறையோனே எங்களுட இடுக்கந்தனைத்தீர்க்க
முறையோமுறையோகாண் முக்கணனேதஞ்சமென்று
இமையோர்முறையிடவே ஈஸ்பரனுந்தானிரங்கி
அமையுமமையுமுங்கள் ஆபத்தைத்தீர்ப்போம்
என்றுபரமசிவன் இருவருடபோர்விலக்க
குன்றுவடிவாய் கொழுங்கனலாய்த்தான்வளர்ந்து
நின்றானனல்வடிவாய் நெடியதொருகம்பமென
ஒன்றாகலோகம் ஊடுருவத்தான்வளர்ந்தார்
இருவர்தனக்குமுன்னே எழுந்தார்நடுவாக
உருவன்றியக்கினியாய் ஓங்காரக்கம்பமமாய்
ஒருருவாய்நின்றார் உருகித்தணல்மலையாய்
ஆருமறியாத அகண்டபரவெளியாய்
அந்தமலைகண்டு அரியுமயன்றானும்
சிந்தைகலங்கித் திகைத்துநெடுமூச்செறிந்து
அக்கினியைக்கண்டு அகன்றிருவர்தான்விலகி
நிற்கிறார்கண்கள் நீலமதுதான்பூத்து

பக்கமெல்லாமக்கினியாய்பரந்ததுகாணண்டமெல்லாம்
திக்கெல்லாமக்கினியாய்சிவந்ததுகாண்லோகமெலாம்
எந்தவிதமென்று இருவோருந்தான்விலகி
வந்தசிவசோதிதனை வகுத்தறியமாட்டாமல்
நொந்திடைந்துநின்றளவில் நோக்கமுடனேசிவனும்
இந்தமகிமை இவரறியாரென்றுசொல்லி
ஞானக்கண்கொண்டறிவோர் நல்லோர்பெரியோர்கள்
ஊனக்கண்கொண்டறிய ஒவ்வாதெவராலும்
பார்க்கமுடியாது பாவியேயென்றுசொல்லி
தீர்க்கமுடனிருவர் தெளிந்துவகைபேச

அரியுமயனும் அரனின் அடிமுடிதேடுதல்.

இந்தமலைப்பெருமை இவரறியவேண்டுமென்று
அந்தமலையின் அடிமுடியுந்தான்காணத்
தங்களிலேசம்மதித்துத் தானேஇருபேரும்
அங்கெழுந்தார்வேதாவும் அன்னவடிவாக
சீலமுடன்பறந்து தேடினன்விண்ணடைந்து
சாலமேலேழுலகுந் தமனியனும்போயறிய
முடிதேடியேபறந்தான் மூகடுவெளியூடுருவ
அடிதேடியேமாயன் ஆதிவராகமதாய்
கிளலெனுங்கொம்பதனாற் கிளைத்துகீழ்லோகமெல்லாம்
நீளறுழைந்து நிமலனடிவரையைத்
தேடியேகாணுமற் றிரும்பியேமாயோனும்
வாடிமனதிடைந்து வந்திருந்தாரம்மானை
வந்திருந்துமாயன் மனதிற்பலநினைவாய்
இந்தமகிமைதனை ஏழுகீழ்லோகமெல்லாம்
ஆராய்ந்துதேடி யரைக்கணத்திலாயிரமாம்
பாராய்ந்துகாதவழி பார்த்துநாம்கண்டறியோம்
ஆதிவராகமென்று அருரூபங்கொண்டுசென்று
சோதிதனைத்தேடி தொல்லுலகமூடுருவி
கொம்புகளுந்தேய்ந்து குளம்புகளுந்தான்தேய்ந்து

சம்புசிவபாதந் தான்காணமாட்டாமல்
வருஷமொருநூறு மண்ணுலகமோரேழு
விரசுகொண்டபாதாள மெங்கெங்கும்நாம்பார்த்தோம்
இன்னவிடமென்றறியோ மீசருடதன்பாதம்
அன்னவாகனத்தோ னவன்காண்பதேதெனவே
எண்ணிமனதி லிறையோன்றனை நினைந்து
மண்ணிலிருந்து மனதிற்றியானமதாய்
ஞானக்கண்கொண்டு நாட்டமதில்நோக்கமதாய்
மானக்கருத்தில் மவுனமாய்த்தானிருந்தார்
பட்சிவடிவுகொண்டு பறந்ததொருவேதாவும்
கட்சிபொருகாதங் கணப்பொழுதிலாயிரமாய்
வெளிகடந்துசென்று மேலேழுலோகமும்போய்
தெளிவுசற்றுங்காணாமற் றிகைத்துமனமிடைந்து
அப்பாலும்நூறுநூ றாயிரங்காதமுமாய்
மெய்ப்பாய்வெளிதாண்டி மெய்யசந்துவேதாவும்
சிறகிரண்டுந்தேய்ந்து செயல்முழுதுந்தான்குறைந்து
இறகசைக்கமாட்டாம லிருந்துமனநொந்து
அண்டகடாகமட்டும் ஆராய்ந்து இன்னமுந்தான்
கண்ட இல்லை அக்கினியாங் கம்பத்தின்றன்முடிவு
இத்தூரம்வந்தும் இப்படியேயல்லாது
சத்தமதுகிட்டச் சமீபமதுகாணோமே
அளவற்றசோதிதனை ஆராய்ந்துமுற்றாமல்
களபமணிமாயன் கண்டானோவெப்படியோ
ஆரறியப்போறார்கள் அளவளவாய்நின்றானை
பேரறியச்சோதியது பேச்சுக்குமெட்டாது
அங்குமிங்குமொன்றால் அடிமுடியுந்தானாகி
எங்குநிறைந்திருக்கு மீஸ்பரனேயல்லாது
வேறேவுபாயம் விடயமிங்கேசற்றுமில்லை
கூறேனொருவசனம் கொண்டல்வண்ணன்தன்னுடனே
பகைமுடித்துக்கொண்ட பாவந்தொலையாதெனவே
வகையாயுறவுசெய்து வனமாலிதன்னுடனே

இணக்கமுடன் கூடி யிருந்துவிடாமலிப்போ
பிணக்குவரப்பண்ணிப் பிழைமோசமானேமே
என்றுமலரோ னெண்ணிமனம்புண்ணாகி
ஒன்றுமுரையாம லுள்ளமெல்லாந்தானடுங்கி
இருக்குந்தருவாயி லீசர்முடிமீதிருந்து
மருக்கமழந்தாழை மலர்தான்வருகிறதை
கண்டுமலரோன் கற்பனையாய்த்தானினைந்து
உண்டுபண்ணிப்பொய்யை உரைக்கமனதிலெண்ணி
பொய்சொன்னேமாறு பொருந்தவேசொல்லவென்று
மெய்யாகச்சாட்சி விளம்புதற்குக்கேதகையை
வசப்படுத்திக்கொள்ள மனதில் நினைத்துக்கொண்டு
நிரப்படுத்தவேதான் நேராகவாரதொரு
கேதகையே நீர்தான் கிருபையுடனெங்கிருந்து
மாதகையாய்வாரீர் வருத்தமென்னசொல்லுமென்றார்
அப்போதுகேதகையு மையனே நீர்கேளும்
இப்போதுஈஸ்பரனு ரேற்றமுடிமீதிருந்து
இருந்துதவறிவிழுந் திழுபட்டுநான்வாரேன்
பொருந்துவனேபாவி பொல்லாதகாலமதாய்
தவறிவிழுந்து தங்குமிடமில்லாமல்
அவதிமிகப்பட்டு அந்தரத்திலேயலைந்து
வாடியிடைந்து வருகிறேன் இத்தூரம்
நாடிதளர்ந்து நடையசந்துகாலோய்ந்து
வருகிறேனப்பா மகாகோடிகாலயுகம்
ஒருவரையுங்காணேனு னுன்னையெதிர்கண்டேனிப்போ
இன்னும்நிலத்தில்விழ எத்தனை நாட்செல்லுமதோ
தன்னமில்லாதங்குசென்று தகையாறிநாமிருக்க
எத்தனை நாட்செல்லுமதோ இன்னபடியென்றறியேன்
கத்தனுடசெயலைக் கணக்கிடவும்போகாது
எப்படியோவென்று இவ்வசனங்கேதகைதான்
செப்பமுடன்சொல்லத் திர்க்கமுடனான்முகனும்
நல்லதொருகேதகையே நான்சொல்ல நீர்கேளும்

வல்லதொருமாயனுக்கும் மாநிலத்திலெந்தனுக்கும்
வாதுவந்துசண்டையிட்டு மற்போருந்தான்பொருதி
தீதுவந்துமூண்டிருவர் செலுத்தமுடியாமல்
நீபெரியோன்நான்பெரியோ னென்றுசிலகாலம்
வாய்பேசிக்கொண்டு வழக்குரைத்துப்போராடி
மற்பிடித்துக்குத்துண்டு மண்டிசினம்வெகுண்டு
வெற்பிடியலோகமேலேழுந்தானதிர
அடுக்குநிலைகுலைய அண்டபகிரண்டமெல்லாம்
உடுக்கணங்கள்தானதிர உவர்திரையுந்தான்சுவர
பரிதிமதிசுழல பகிரண்டந்தான்சுழல
திருதிமுதலட்டதிக்கும் நெடியாவுந்தான்சுழல
தேவர்கள்தானவர்கள் திக்குத்திசைசுழல
மூவர்கள்முப்பத்து முக்கோடிசுரர்முனிவர்
யாவர்களுமேபெரிய அந்தரமுந்தான்சுழல
சீவசராசரங்கள் திரிலோகமுஞ்சுழல
போராடிநின்றோம் புவனந்தனிலிறங்கி
சீராடியிப்படியாய்ச் சென்றதுசிலகாலம்
ஒன்றையொன்றுமீராமல் ஒருபூசல்தான்விளைத்து
நின்றோம்நெடுநாள் நீணிலத்திற்கோவெனவே
அந்தமொருகேட்டு அரனேபராபரனே
வந்துவிலகவென்று மாயையாய்த்தான்தோன்றி
இருவருக்குமேநடுவா யெழுந்ததுகாணக்கினியும்
ஒருவருக்குந்தோற்றும ஊடேசுடர்வடிவாய்
வளர்ந்ததுகாண்ஜோதி மலையாய்ப்பருவதமாய்
அளந்துதுகைகாணாத ஆகாசமூடுருவி
நின்றநெருப்பேதெனவே நெறியறியமாட்டாமல்
ஒன்றையொன்றுபார்த்தே உழன்றுமனம்புண்ணாகி
நின்றுமயங்கி நிலைமைகள்தெரியாமல்
நன்றுபுதுமையிது நாமறியவேண்டுமென்று
தங்களிலேதாங்கள் சம்மதித்துக்கொண்டேதான்
இங்குவந்தேனன்னமேநான் இச்செய்திநீரறிவீர்

பண்டோரறியாய்ப் பழம்பொருளடிமுடியை
கண்டோன்பெரியோன் காணாதான்தான்சிறியோன்
என்றுவகைபேசி யிருவருமேசம்மதித்து
அன்றுபுவியூடுருவ ஆதிவராகமதாய்ப்
பாதாளஞ்சென்றார் பச்சைமால்கண்டிரோ
மீதானவிண்ணகத்தில் வேகமுடன் நான்தானும்
வந்தேனிளைப்பாய் வலுவுமிகக்குறைந்தேன்
உந்தனையேகண்டேன் உள்ளமெல்லாங்குளிர்ந்தேன்
கண்டபொழுதெந்தன் கவலையெல்லாந்தீர்த்தேன்
அண்டினேனுன்னையிப்போ ஆபத்தைக்காத்தருள்வாய்
நாரணனுந்தான்மெலிய நமக்கோருதவிசெய்வாய்
ஆரணனுந்தான்கேட்க அடவுடனேகேதகையும்
ஏதுகாண்சொல்லுமென்று இன்பமுடன்கேட்க
சாதுவாய்நான்முகனுஞ் சாட்சி நீசாற்றுமென்றார்
அந்தமொழிகேட்டு அரகராவென்றுசொல்லி
விந்தைமலர்க்கேதகையு மெய்யசைந்தங்கேதுசொலும்
என்னவிதிப்பயனோ வீசர்முடிமீதிருந்து
அன்னமேகேளும் அவதிவந்துஇத்தூரம்
தவறினேன்கண்டீர் தரிக்கவிடமில்லாமல்
குவலையத்திற்சொல்லக் கொம்பிழந்தமந்தியைப்போல்
ஆகாதபாவி அடியேனொருபொருட்டாய்
வாகாகவும்முடைய வருத்தமதைச்சொன்னீரே
எங்குந்நிரந்தரமாய் எள்ளுக்குளெண்ணெயைப்போல்
அங்குமிங்குமொன்று யடங்கலுமாய்எவ்வுயிர்க்கும்
நிற்கும்பராபரனை நீக்கியென்னசொன்னாலும்
தர்க்கமுடன்கேதகையுந் தகுமென்ன நான்முகனும்
ஆனால்முன்னாளி லமரர்முதற்றானவரும்
வானோரமுதம் வாரியதனிற்கடைய
ஆலவிடம்பிறந்த அகிலமெல்லாந்தான்பறந்து
காலவிஷஞ்சிறிவரக் கண்டமரர்தானோடி
பரனேபராபரனே பார்வதியேமனோகரனே

அரனே அபயமென அமாருக்காயவ்விஷத்தை
கொள்ளலையோவீசர் குவலயத்தோர்தான்பிழைக்க
தள்ளலையோவீசர் சர்ப்பவிஷமீதெனவே
பெரியோரிதெல்லாம் பேதமென்றுதள்ளார்கள்
தெரியாதார்க்கெல்லாம் தெரிந்துமனந்தேற
என்னபிழைவந்தாலு மேற்பார்பெரியோர்கள்
வின்னமென்றுகொள்ளார்கள் மேலானநல்லோர்கள்
அடுத்தாரைக்காப்பா ரடைக்கலமாய்வந்தோரை
விடுத்தே துஞ்சொல்லார்கள்மெய்யிதுகாண்கேதகையே
நமக்குமொருசெய்தி நாம்சொல்ல நீர்கேளும்
உமக்குச்சுகிர்தமுண்டு ஒருபேச்சுரைப்பீரே
ஈசர்முடிகண்டேனென் றியம்புவேன்மாலிடத்தில்
ஆசையுடன் நீர்தானும் ஆமென்றுரையுமென்றார்
ஆபத்துவேளையிலே அஞ்சாதேயென்றொருபொய்
பாபத்தைபாராமற் பகர்ந்துயிரைக்காக்கலையோ
ஆர்க்குமொருசமையம் யாவருக்குமிப்படியே
பார்க்கவல்லோவேண்டும் பாவியோநான்தானும்
உங்களுக்குநானு முதவேனொருபாருலகில்
தங்களுக்குத்தானே தாங்கள்வசப்படவும்
பார்ப்பீரோவேணுமென்று பாருங்காண்கேதகையே
ஏர்ப்போமுமக்காக இசைவோங்காண்வேதாவே
பொய்சொல்லக்கேதகையும் பொருந்தியேசம்மதித்து
மெய்சொல்லவேமறுத்து விதியோனுக்காகவேதான்
பொய்சொல்லவேதுணிந்து பூமிதனில்வந்திறங்கி
அய்யமறக்கேதகையும் அன்னமுந்தானொன்றாகி
மேதினியில்வந்துவிட்டுணுவைத்தான்பார்த்து
ஓதியதுபோல்யானும் உயர்வானகம்புகுந்து
அரைநிமிஷந்தன்னி லாயிரங்காதவழி
விரையவேஇப்படியாய் வெட்டவெளியூடேபோய்
கண்டேன்முடிதன்னை நீர் கண்டீரோசேவடியும்
கொண்டல்வண்ணரப்போக் கொடுத்துமனமிடைந்து

பன்றிவடிவெடுத்துப் பாதாளலோகமெல்லாம்
வென்றியுடன்தேடி மெலிந்துவந்தேனல்லாது
காணேன்சிவன்பாதங் காணவுந்தான்கிட்டாமல்
வீணேதிரிந்து வெளியேறிவந்தேன்காண்
முடிகண்டோமென்று மொழிந்தாயே நீபெரியோன்
அடிகண்டோமென்றால் அனலாயெரிந்திடுவேன்
கண்ணாரக்கண்டமென்ற காட்சிதனைக்கொப்பனையாய்
விண்ணோறிய விளம்புவையோவென்றுரைத்தார்
அப்போதுவேதன் அசத்தியமோஎன்வார்த்தை
இப்போதுகேதகையும் ஈசர்முடிமீதிருந்து
நாம்கண்டபோது நமக்கவர்தான்சாட்சியென்றார்
ஆர்காணும்விட்டுணுவே அப்போதுநான்கூட
என்றிந்தக்கேதகையும் இவ்வார்த்தைதான்கூட
அன்றிந்தப்பொய்யை அரனறிந்துகோபமதாய்
நெடுகவளர்ந்ததொரு நெருப்புமலைதான்கொதித்து
இடுதிடெனவேமுழங்கச் செந்தீயகோரமதாய்
நெறுநெறெனவேகுமுறி நேரேபடீரெனவே
கிறுகிறெனச்சக்கரம்போற் கீழேழுமேலேழு
லோகமெல்லாந்தான்சுழல நொடிக்குமிடியேறெனவே
சாகரமுந்தான்சுவறிச் சகலவஸ்தும்பொன்றிடவே
வெடித்ததுகாணங்கு வெந்தணல்போல் நின்றமலை
பிடித்ததுகாணெங்கும் பெருந்தீயனல்பாந்து
மண்ணுலகிலுள்ளோரும் மதிமயங்கிமூர்ச்சையுற
விண்ணுலகிலுள்ளோரும் மெய்கலங்கியுள்நடுங்கி
இறையோனேஎங்கள் ஈஸ்பரனேஎதுகுற்றம்
முறையோஉனக்கபயம் மூர்த்தியேகாருமென்று
சகலாண்டசீவ சராசரங்களுள்ளதெல்லாம்
அகலாதசோதி பரனேஉனக்கபயம்
பராபரமாய்நின்றோனே பரனேஉனக்கபயம்
தாராதரமாய்நின்றிலங்குஞ் சருவதயாபரனே
காருமிதுசமயங்கா ரணமாய்நின்றோனே

வாருமிதுசமயம் வள்ளலேயிப்போது
தீராவினை தீரச் சித்தம்பொறுத்தருளும்
வாராதகுற்றம் வந்தாலுமெங்களுக்காய்
வந்திப்போகாத்தருளும் மழுவேந்துங்கையோனே
தந்திபோல்வாக்குத் தரவேண்டுமீஸ்பரனே
தாங்கமுடியாமற் றராதலங்களுள்ளதெல்லாம்
ஏங்கிப்பிடித்து இடுக்கப்படுந்துயரம்
ஆங்காரமான அகோரமெல்லாந்தீர்ந்து
ஓங்காரத்தாளுெடுங்கி உத்தமமாய் நற்குணமாய்
செஞ்சுடர்போல நின்ற சிவனும் அபயஸ்தம்
அஞ்சலென்றேதந்த அரனுருமேதுசொல்வார்
ஏதுகாண் நான்முகனே எனமுடி நீகண்டோமென்று
வாதுசொல்லிமாயனிடம் வழக்குரைத்துநின்றாயே
காணுதநம்முடியைக் கண்டோமெனச்சாட்சி
வீணுனவார்த்தை விளம்பினையேஇப்போது
காதாரக்கேளாமல் கண்ணாரக்காணுமல்
கேதாய் நீசொன்ன கெருவமென்னவென்றுசொல்லி
சற்றேநகைபுரிந்தார் சங்கரநாராயணரும்
முத்தொழில்போர்சற்றே முறுவலதுசெய்தளவில்
அண்டகடாக மகண்டவெளிக்கப்புறமும்
கொண்டவிடிமின்போற் கொழுங்கனலுஞ்சோதியுமாய்
விண்டலங்களெங்கும் வேனல்வந்துதான்மூடி
கண்ட அசுரரெல்லாங் கால்கேளாடுகொல்கள்பின்னி
வீழ்ந்துகிடப்பாரும் மெய்சோர்ந்துநிற்பாரும்
தாழ்ந்துபணிவாருந் தன்மமோவென்பாரும்
சந்திரனுஞ்சூரியனும் தலைகெட்டநூலதுபோல்
இந்திரனுங்கெந்தருவ ரிமையோர்முனிவர்களும்
அந்தரமும்வானும் அடுக்குநிலைகுலைந்து
நந்திமுதற்றேவர் நடுநடுங்கிமெய்மறந்து
போனதுங்கனலோங்கிப் பூமேல்மலரோனும்
ஆனசவுரியமும் ஆங்காரமுள்ளதெல்லாம்

நீங்கிவலுக்குறைந்து நிலத்திற்றலைகவிழ்ந்து
தூங்கியிகவேங்கித் துக்கித்தான் நான்முகனும்
அப்போதுமுக்கணனும் அயனைமுகம்நோக்கி
இப்போதுபொய்யுரைத்தா யிவ்வுலகிலுந்தனுக்கு
கோயில்குளம்பூசை குவலயத்திலில்லையென்று
சேயில்வருமீசர் செப்பினாம்மானை
செப்பியசொல்மாயன் திருச்செவியிற்கேட்டவுடன்
மெய்ப்புடையவீஸ்பரனை விழுந்துநமஸ்கரித்து
ஆடினார்மாயன் அரனைமிகக்கொண்டாடி
பாடினார்மெய்மகிழ்ந்து பணிந்துபணிந்தன்புருகி
ஆனந்தக்கூத்தாடி அருட்கண்ணால் நீர்சொரிய
தானந்தமாகிநின்ற சதாசிவமேவுன்மகிமை
ஆரறிவாருன்கோலம் அகண்டமெல்லாந்தானான
போரறியாரூரறியார் பெருமைதனையறியார்
வேரறியார்தூரறியார் மேலறியார்கீழறியார்
ஓரறிவாயெங்கும் ஊடுருவிநின்றோனே
சீரறியாதுந்தன் செயலறியார்யாவர்களும்
கூரறியார்வீடுசெய்வார் குணமறியமாட்டார்கள்
நாயேனறியத் தகுமோநடனபதம்
பேயேன்சிறியேன் பிழையேதுசெய்தாலும்
பொருத்தருளவேண்டும் புரமூன்றெரித்தோனே
சிறுத்தொண்டன்மனையிற் சென்றமுதுகொண்டோனே
அய்யாபொருத்தருளும் அடியேன்தனக்காரும்
மெய்யாபரணமென விளம்பித்திருமாலும்
தோத்திரங்கள்செய்துதொகுத்ததெல்லாங்கண்டுசிவன்
நேத்திரத்திலறிந்து நெடுமாலைத்தானழைத்து
ஏதுவரமுள்ளதெல்லா மிப்போதேஉன்றனுக்கு
சாதுவாய்த்தந்தோம் சந்தோஷமாச்சுதென்று
ஈசர்புகழ்ந்துரைக்க எம்பெருமாள்தான்மகிழ்ந்து
நேசமுடனிருந்தார் நீணிலத்திலம்மானை
பொய்ச்சாட்சிசொன்னதொரு பூவேநீகேதகையே

இச்சாட்சிசொன்னமையா லங்கேநீநம்மிடத்தில்
வேண்டாமினிமேல் விருதியென் றுசாபமிட்டார்
தீண்டாமற்கேதகையுஞ் சிந்தைமிகவருந்தி
ஈசன்மேற்குற்றமில்லை இதுநம்மாலவந்தகுற்றம்
பேசவாயில்லையென்று பேசாமற்போனதுவே
வேந்தன்மனமிடைந்து வேகாமல்வெந்துருகி
நாதனே நானடியேன் நடந்ததெல்லாங்குற்றமையா
பொல்லாதான்செய்தபிழைபொறுத்தருளுமீஸ்வரனே
கொல்லாமலென்னைவிடக் கோபந்தணிந்தமையால்
இனிமேலும்நானடியே னீடேறவேண்டியதால்
தனியேதனிப்பொருளே தற்காக்கவேணுமையா
பாவிக்குமிச்சாபம் பலித்துவிட்டாற்பூவுலகில்
சேவிக்கநானடியேன் சிந்தைசெய்வதெக்காலம்
சத்தசமுத்திரமுந் தான்கொதித்துப்பொங்கிவந்தால்
சுத்தஜலம்விட்டுத் துளாவியே ஆற்றுதற்கு
மற்றுமொருதண்ணீர் மாநிலத்திலுண்டோதான்
கற்றுங்கருணைக் கடலேவெளியொளியே
முப்புரத்தைத்தானெரித்து மூவரையுங்காப்பாற்றி
அப்புரத்தைக்காக்கிலையோ அரனே அவர்க்கிரங்கி
காமனையுந்தானெரித்தீர் கடவுளேஇப்போது
பூமனையுமேதிரும்பிப் போதமுடன்காக்கிலையோ
மாக்கண்டனுக்காக மறலிதனையுதைத்தீர்
தீர்க்கமுடனேமனையுந் திரும்பவும்நீகாக்கிலையோ
மூன்றுமதமுள்ள மும்மதத்துயானைதன்னை
தோன்றுதாருகாவனத்துச் சூரர்கள்யேவிவிட்ட
ஆனைதனையுரித்து அடவுடனேதோல்போர்த்தீர்
ஏனைரிஷிவெகுண்டு எக்கியத்தாலக்கினியை
கோபமுந்தாபமுமாய்க் கூட்டியேமுச்சுடராய்
தீபமுள்ள அக்கினியைச் சிவனென்றும்பாராமல்
ஏவினதெப்போ தெடுத்தீர்மழுவாக
பாவினன்செய்த பகைதானொழியாதோ

மூட னுக்குள் நீயிருக்கும் மூகனைதெரியாமல்
காடவரும்பொல்லாக் ககமாலவஞ்ஞானம்
போலிருந்துநாயேன் பொசுங்கியேவெந்துவிட்டேன்
கோவியெந்தன் மீதிருந்தகுற்றமெலாந்தான்பொறுத்து
காத்தருளவேண்டுங் கஞ்சன்படுந்துயரம்
பார்த்திருந்துமீசர் பண்புடனேவேதனுக்கு
அஞ்சலென்றுசொல்லி யருளினர்காணம்மானே
வஞ்சமெனும்பூவுலகில் மாமறையோர்வீடுகளில்
செய்யுந்தவபூசையெல்லாஞ் சித்தித்தோமுன்றனக்கு
உய்யும்பலபடைப்பும் உலகமுதலெவ்வகையும்
எப்போதும்போலே இருந்துபடையுமென்று
முப்போதும்மீசர் மொழிந்தார்காண்வேதனுக்கு
ஆகையினல்வேதனுக்கும் அச்சுதற்கும்வந்தபகை
மாயையாயீசர் மலைபோலவேதோன்றி
இருவருடபகையும் ஈஸ்பரனுர்தான்தீர்த்து
ஒருவருடனொருவ ருறவாயிருங்களென்று
சேகரித்துநல்ல சிவபதமுந்தான்கொடுத்து
லோகத்திலெப்போதும் லோகத்திலுள்ளபடி
மாயனுக்கும்வேதனுக்கும் வஞ்சமினிவாராமல்
நேயமாய்ஞாயம் நீதியுடன்தான்தீர்த்து
அவரவர்செய்தொழிலை அவரவரேதான்முடித்து
விவரமுடனதானிரென்று வித்தகனுர்தாமுரைத்தார்
அந்தமொழிகேட்டு ஆயரும் அந்தணனும்
விந்தைமலர்ப்பாதம் விழுந்துநமஸ்கரித்து
எங்கள்தனக்காக இவ்வடிவுதானெடுத்து
தங்கமாய்த்தணல்வடிவாய்த் தற்போதுதான்தோன்றி
ரட்சித்துக்காக்கவந்த நாதாபராபரனே
பட்சிவடிவெடுத்தும் பன்றிவடிவெடுத்தும்
தேடியுங்காணுத சிவமேசிவதவமே
நாடியேநாங்கள் நாட்டமதிற்கண்டிருக்க
வேண்டும்பராபரனே மேதினியிலெப்போதும்

அண்ணுகுறை நீங்கி அடியேன்கள் தான்பிழைக்க
பூசையனுதினமும் புஷ்பமலர்தான்சாத்தி
ஆசையறுத்து அரனடியைச்சேர்வதற்கு
சிற்சொரூபமாகத் தெரிசனையேநேராக
தற்சொரூபங்காட்டித் தயவருளுமீஸ்வரனே
இந்தச்சொரூபம் இப்படியாய்த்தானிருந்தால்
அந்தசொரூபம் அறிந்தேறுபூசைசெய்வோம்
மேகஜலமுமக்கு மேனியெல்லாம்நீர்சொரிய
தேகமெல்லாம்மீன்குலங்கள் சிரசுமேற்புஷ்பமழை
பூசிக்கவீற்றிருக்கும் புண்ணியரேஉம்முடைய
காசுக்கிறுநகராய்க் கற்பிக்கவேணுமிப்போ
வேதனும்மாலும் விரும்பியிவையுரைக்க
போதமுனியீசர் பூரித்தகமகிழ்ந்து
அக்கினியாய்நின்ற அனலைமிகநிறுத்தி
மெய்க்கினியசாந்தமாய் மேதினியிலெந்நாளும்
நிற்கவொருமலையாய் நேமித்தாரம்மானை
தக்கதொருமலைக்குச் சாற்றினார்நாமமது
அருணனொளிவானதினா லருணாசலமெனவே
கருணைகடாட்சமதாய்க் கற்பித்தார்பெண்மலையை
அம்மலையிலீசர் அயிக்கமதாய்த்தானிருக்க
செம்மலையிலிங்கமதாய்ச் சிவரூபமாயிருந்தார்
அந்தமலையி லயனுந்திருமாலும்
கந்தமலர்ச்சோலைகளுங் கற்பகமுமுண்டுபண்ணி
தெய்வகம்மாளனையுஞ் சீக்கிரமாய்வாவெனவே
சைவர்க்குகந்த ஸ்தலமாம் அருணையிது
கோவில்திருப்பணியுங் கோபுரமுந்தான்சமைத்து
ஆவலுடன்பட்டணமு மலங்காரமாய்முடித்து
சிறப்பியுமென்று திருமாலும்நான்முகனும்
அறப்பெரியதச்சனுக்கு அருளினாரிவ்வசனம்
அந்தட்சணமே அரைநொடியிற்பட்டணமாம்
இந்தட்சணமுடித்து ஏவினான்விஸ்வகர்மா

வானுலகிலுள்ள மறையோர்முனிவர்களும்
தானுலகிலந்தத் தவத்திற்குடியேற்றி
அரம்பையரைத்தானழைத்து ஆடல்செய்யக்கோவில்
உறம்பெறவேதானிருத்தி யுகந்துசிவபூஜைசெய்ய
மாலுமயனு மகிழ்ந்திருந்தாரம்மானே
கோலாகலமாகக் குன்றவில்லிசொற்படிக்கு
அருணாசலந்தனிலே அய்யனுந்திருமாலும்
ஒருநாளும்பேதமற வுகந்திருந்தார்கண்டீரே
என்றுதன்மர்தம்பியர்க்கு எடுத்துரைத்தாரிக்கதையை
சென்றுவெகுதூரம் செலுத்திவழிதொலைய
நடந்தார்கள்பஞ்சவர்கள் நன்மலையுங்காடுகளும்
தொடர்ந்தவர்கள்போகையிலே தோற்றம்பலகாணும்

வீமன்விஜயனுக்கு ராமன் கதையுரைத்தல்.

ஏற்கவேமுன்னாளில் இராமருந்தானப்போது
பாற்கடலிற்பள்ளிகொண்டு பச்சைமால்தானிருக்க
அரக்கருபத்திரவம் ஆற்றுமலேயிமையோர்
புரக்கும்நெடுமால்பதத்தைப் போற்றியென்றாரம்மானே
தேவர்களுமப்படியே தெண்டனிட்டுநிற்கையிலே
ஆவல்தாக அவர்கள்தனைப்பார்த்து
ஆயனூர்தாமும் அருளுவாரோர்வசனம்
நேயமுடன்தேவர்களே நிலைத்திருக்கும்வானரமாய்
நீங்களெல்லோரும் நீணிலத்திலேபிறக்கப்
போங்களனைவோரும் புறப்படுங்களென்றுரைத்தார்
பாதிமதியணியும் பரமசிவன்றன்னருளால்
ஆதிபதிகோசலைநாட் டயோத்திக்கரசெனவே
நாடுடையானாக நான்பிறப்பேனென்றுசொல்லி
பீடுடையார்வந்து பிறந்தனர்காணம்மானே
செந்திருவுமந்த ஜெனகரானூர்தன்மகளாய்
வந்துமிதிலையிலே வளர்ந்தனளே அப்போது
மண்ணதிலேராமன் வளருகின்றநாளையிலே

திண்ணமுடன்கோசிகனார் தெரிசனைவந்துகண்டு
காவலனேஎன்வேள்வி காக்கவுன்மைந்தனையும்
ஏவுவாயென்று எடுத்துரைத்தாரப்போது
சின்னஞ்சிறியனல்லலா சிலையெடுக்கமாட்டானே
என்செய்வேனென்று எடுத்துரைக்கமன்னவனும்
மாமுனிவன்றானுமந்த வதிஷ்டர்தனக்காக
பூமன்னாவிப்போது பொறுத்தேனெனவுரைத்தார்
பேசாதமாமுனிவன் பேசுமொழியாற்பயந்து
கூசாமல்ராமனையுங் கூட்டிவிட்டாரம்மானை
உற்றதொருவேள்வி யுகந்துமுனேநடத்த
அற்றையழிக்கவென்று ஆங்காரங்கொண்டெழுந்து
நடுங்கிவந்ததாடகைமேல் நாரணனார்தான்விடுத்த
கொடுங்கணைதான்பட்டுருவிக் கூறாகத்தான்விழுந்தாள்
தையலெனுமகலி சாபந்தனைத்தொலைத்தான்
ஐயன்மிதிலை யடைந்தனர்காணந்நேரம்
பொன்னின்சிலையைப் போற்றியேதானெடுத்து
உன்னிவளைத்து ஒடித்தார்சிலையதனை
சீதையற்கும்ராமருக்குஞ் செய்யமணமுடித்தார்
கோதையரைக்கைப்பிடித்துக்கோதண்டராமனுந்தான்
மின்னனையர்ர்தன்னுடனே மேகவண்ணரப்போது
மன்னனயோத்தியிலே வந்தமர்ந்தாரம்மானை
தந்தையுராமனுக்குத் தனிமகுடஞ்சூட்டவென்று
சிந்தைதனில்நினைத்து சிறப்பித்தார்பட்டணத்தை
சீராருங்கைகேசி சென்றுதசரதனை!
பாராளப்பட்டம் பரதனுக்குஞ்சூட்டுமென்றாள்
கேட்டவுடன்மெத்தக் கிலேசமாய்மன்னவனும்
வாட்டமுடன்வீழ்ந்து மயங்கினாரப்போது
மாயவனுமந்த மடந்தையுடன்தம்பியரும்
தாயவள்சொல்மீறாமல் தக்கவனம்புகுந்தார்
சித்திரகூடமதிற் சென்றான்பரதனப்போ
பத்தியுள்ளதம்பியற்குப் பாதுகையேதான்கொடுத்து

தாண்டுபுகழ்ராமன் தம்பி நீபோவெனவே
வேண்டியயோத்திதனில் வீற்றிருந்தாராம்மானே
சாற்றரியராவணனார் தங்கையெனும்சூர்ப்பநகை
போற்றரியராமனையும் புணர்ச்சிசெய்யவே நினைத்தாள்
ஆனசெவிமூக்கை யறுத்துவிட்டான்லட்சுமணன்
கானுறையுமந்தக் கரதூஷணர்க்குரைத்தாள்
பாசமுடன்வந்தெதிர்த்துப்படைகூட்டியெப்போதும்
வாசமுளராமன்கையால் மாண்டார்காணெல்லோரும்
பட்டபின்ராவணர்க்குப் பரிந்துரைத்தாளப்போது
திட்டெனப்பொய்மானைச்செல்லவிட்டான்ராவணனும்
சீர்மால்சிலையெடுத்துச் சென்றுசனைதொடுத்து
பார்மீதிற்பொய்மானைப் பட்டுவிழவெய்துவிட்டார்
இங்கணிளையபெருமானெழுந்திருந்து
செங்கண்நெடுமாலைத் தேடலுற்றான்வனத்தில்
ஐயமென்றுராவணன்வந் தாரணங்கைத்தான்தூக்கி
உய்வதறியாமல் உலகளந்தோன்தேவிதனை
வண்டாடுஞ்சோலைதனில் வைத்தான்சிறையாக
கொண்டசிலைராமர் கூட்டம்வந்துதேடலுற்றார்
வைத்திடத்திற்காணாமல் மாயவருந்தம்பியரும்
சித்தமிகக்கலங்கித் திகைத்துமேதேடலுற்றார்
கண்டசடாயுவுந்தான் கன்னிநிலைதானுரைக்க
கொண்டுவைகுந்தபதங் கொடுத்தார்காணம்மானை
தாரார்சவுரி தனக்குநல்லமோட்சபதம்
சீராகவேயளித்துத் தேடலுற்றாரப்போது
அண்ணலனுமானை அருமையாய்யாண்டுகொண்டு
கண்ணுற்சுக்ரீபனையுங் காண்பித்துக்கொண்டருளி
அங்கவர்கள்சொல்லும்மொழி யத்தனையுந்தான்கேட்டு
இங்குநம்முடைய இடர்தீர்ப்போமென்றுரைத்தார்
வாலிதனைக்கொல்லவென்று மாமரங்களோரேழும்
கோலியேயூடுருவக் கோதண்டந்தான்கொடுத்தார்
தக்கசபதமிகவும் தான்கூறிச்சுக்ரீபன்

திக்கெனவேவாலிமுன்னே சென்றானேமன்னவனும்
தாகமுடன்வாலிதனைத்தாரகையுந்தான்விலக்க
போகமுடனிவர்க்குப்பூண்டதுகாண்சண்டையுமே
தூளிமிகவேவரவே சுக்ரீபனைப்பிடித்து
மூளையவர்வாயில்வர மோதினர்காணப்போது
சீரான ஸ்ரீராமன் சிலைவளைத்து அம்புவிட
மாரானவாலியுட மார்புதனிற்பட்டுருவ
வாலியதைத்தான்பிடித்து வாசித்தான்ராமனென
கோலியாயெய்துவிட்டீர் கொண்டல்வண்ணா நீதியிதோ
காட்டில்மறைந்துவில்லைக் காணாமற்றான்வளைத்து
போட்டியாயூடுருவப் போட்டாயேபாணமதை
மானிடர்க்குவானவர்க்குவழக்குண்டோசொல்லுமையா
பானுகுலத்துதித்த பராக்கிரமமீதெனவே
மிக்கதிரவாலி விண்ணுலகம்போய்ப்புகுந்தான்
சுக்ரீபனுக்குமுடி சூட்டினார்காணம்மானை
வாரிதனைக்கடந்து மாதாவைக்கண்டனுமான்
ஆரியனார்தான்கொடுத்த ஆழிதனையேயீய்ந்தார்
மங்கையரைக்கண்டு வாட்டமறத்தானுரைத்தான்
அங்கெங்குஞ்சென்று அரக்கன்பதியழித்தான்
தங்கமால்ராவணனைத் தான்போய்க்கண்டானனுமான்
எங்குவந்தாய் நீகுரங்கே என்றானிராவணனும்
உங்களரசழிய வொருமானைத் தூதுவிட்டு
எங்கள்மான்தன்னை யெடுத்துவந்தாய்ப்போது
உத்தமியைக்கற்புடைய உலகீன்றமாதாவை
வைத்திருக்கவொண்ணாது வல்லரக்காவிட்டுவிடு
வல்லரக்கன்தான்சினந்து வாலிற்றணல்கொளுத்த
கொல்லிலங்கைமுற்றும் கொப்பெனவேசுட்டெரித்து
வாரிதனைக்கடந்து மாதாவைத்தான்தொழுது
சீரியமால்பதத்தைத் தெண்டனிட்டாரம்மானை
அன்றேஸ்ரீராமர் அனுமான்முகம்நோக்கி
இன்றேபடையெடுப்பீரெனவானரவீரர்

திட்டாங்கடற்கரைக்கே சென்றார்களந்நேரம்
விட்டானிராவணனை விபீஷணனுந்தான்பகைத்து
திட்டமுடன்வந்து திருமால்பதம்பணிந்தான்
பட்டமுனக்கேயிலங்கைப் பட்டணமும்ராச்சியமும்
என்றுவிபீணற்கு ஈய்ந்தார்சிரஞ்சீவி
அன்றுவருணனைத்தான் அழைத்துக்கடலடைத்து
பத்துத்தலையுடையான் பட்டணத்தைக்கண்டாரே
கொத்துமுடியானுங் குறிப்பாகப்பார்த்துநின்றான்
அண்ணல்மகிழ்ச்சியுடனங்கதனைத்தூதுவிட்டு
வண்ணமிருநாலு வாசலையுந்தான்வளைந்தார்
முதல்நாள்சமர்பொருத மூரியனூற்றான்ராவணனும்
மதமுடையகும்பகர்னன் மாண்டானரைநொடியில்
என்றுகேட்டிராவணனும் இற்றமரம்போல்விழுந்து
கன்றலறும்பாவனைபோற் கண்டானதிகாயன்
எடுத்துச்சிலைவளைத்து இலட்சுமணன்தன்னுடனே
அடுத்துமகாசேனையுடன் அதிகாயன்வந்தெதிர்த்தான்
அச்சுதனார்தம்பிவிட்ட அஸ்திரத்தாலப்போது
மெச்சுமதிகாயன் விண்ணுலகம்போய்ச்சேர்ந்தான்
செருக்களத்தில்மாண்டவர்கள் சேனைபலகோடி
வெருட்சியுடன்நூறு வெள்ளம்படைபோனபின்பு
வைதுமகாராட்சதர்கள் வந்தெதிர்த்தாரந்திரவில்
கொய்துமுடிதானறுத்தார் கோதண்டராமனப்போ
இளையபெருமாளுடனே இந்த்ரசித்துவந்தெதிர்க்க
வளையவில்வாங்கி வதைத்துவிட்டாரம்மானை
மோகரித்துவந்துநின்ற மூலபலமத்தனையும்
வேகமுடன்கொன்றுவிட்டார் விஷ்ணுகணையாலே
மூண்டெழுந்தசேனையெல்லாம் மாண்டுவிழுந்தனவே
தூண்டுஞ்சிலைராமர்தனைத் துதித்தார்கள்தேவரெலாம்
ஆனைபடையுடனே அரக்கனையுந்தானறுத்தார்
சேனைதளத்துடனே சென்றானேராவணனும்
அற்றுவிழுந்தரக்கன் அரைக்கோடிதன்வயதும்

பெற்றவரந்தானிழந்து பிராணனும்போனதுவே
வாடிமனமிடைந்து வன்சிறையிற்போய்ப்புகுந்து
தேடியந்தச்சீதையுந்தான் தீயில்மூழ்கிவர
இலங்கைநகரி லருந்துவிபீஷணற்கு
துலங்குமுடிமகுடஞ் சூட்டினர்காணம்மானை
அண்ணல்மிகுசேனையுடன் அயோத்திநகர்க்கேக
வண்ணமணிப்பரதன் வந்தணலில்வீழாமுன்
தம்பியர்கள்தன்னுடஞ் ஜானகியாள்தன்னுடனும்
அம்பொன்முடிசூட்டி அயோத்திநகராண்டிருந்தார்
இத்தனைமாயைகளும் இவர்செய்தமாயையிது
கத்தனார்நம்மைக் கடைப்போகக்காப்பரென்று
சொல்லியதோர்தன்மர் துயரமுடன்போம்வழியில்
வில்லியதோதம்பியற்கு விபரமுடன்தானுரைப்பார்
கஞ்சமலரடி கஞ்சன்வரவிடுத்த
வஞ்சமெனுஞ்சகட்டை வாகாயுதைத்ததையும்
அலகைமுலையுண்டு அவ்வுயிரைக்கொன்றதுவும்
உலகுதனில்மாய னுகந்துவிளாமரத்தில்
கன்றுலெறிந்து கனிகள்மிகத்தின்றதுவும்
அன்றுதெருமண்ணை யள்ளிமிகவுண்டதுவும்
மரத்தையுதைத்ததுவும் வன்கட்டுரலுடனே
ஒருத்தரறியாம லுபாயங்கள்செய்ததுவும்
நச்சரவுஉச்சிதனில் நடித்தகதைதனையும்
அச்சமறத்தம்பியற்கு அன்பாகவேயுரைத்து
வாசமுடன்தன்மர் வருகிறாரென்றுசொல்லி
நேசமுடனேமாயன் நினைவறியவேணுமென்று
ஆதிகெருடனையும் அருகேவரவழைத்து
நீதியுடன்தன்மர் நினைவறிந்துவாருமென்று
அன்னமெனும்வடிவாய் ஐயரெதிரேபோய்
தன்மையாநின்று தர்க்கித்துவார்த்தைசொல்லி
உண்மையென்னவென்று உட்புலனை ஆராய்ந்து

வண்மையுறநன்ருய் வழுத்தி நீசோதியென்ருர்
ஆமென்றுதான்கெருடன அன்னவடிவாகி
ஓமென்றுசம்மதித்தே உயர்தகாலவிருக்காதில்
வந்திருந்துதன்மர் வரும்வழியிலன்பாக
இந்தக்கதைப்பயனை யேதென்றுகேட்கவென்று
பேசாமலேயிருந்தார் பெரியாலவிருக்கமதில்
ஆசாரமுள்ளதர்மர் ஆலமரத்தடியில்
இருந்துகதைபலவும் இளையோர்க்குத்தானுரைக்க
திருந்துதம்பியர்கள் செவியுற்றுத்தான்கேட்டு
விசாரமெல்லாந்தீர்ந்து மெய்மகிழ்ந்துதானிருந்தார்
உசாராயிருந்ததொரு உற்றபுகழன்னமுந்தான்

பாண்டவரை அன்னம் பரிசோதித்தது.

மன்னவரே நீங்கள் வருந்தியுரைத்தகதை
இன்னவகையென்று எனக்குரையுமென்றுசொல்ல
சீரானதன்மர் சிறப்புடனே அன்னமதை
நேராகநோக்கி நிறைந்தகதைதனையும்
சொல்லுகிறேன்புள்ளினமே சுகமாக நீர்கேளும்
செல்லுங்குலதெய்வஞ் செங்கண்மாலெங்களுக்கு
எம்பெருமாள்தன்பெருமை எல்லாமென்றனுடைய
தம்பியற்குதானுரைத்தேன் தாரணியிலேநடந்த
காரணங்களெல்லாங் கதையாகத்தான்முடித்து
பூரணமாநானுரைத்தேன் புண்ணியரைத்தானினைந்து
எங்கள்தெய்வந்தன்னையுமே எப்போதும்யான்மறவேன்
உங்கள்தெய்வமென்று உரைத்திரேமன்னவரே
தங்கள்தெய்வமே தானேது நீரேது
திங்களொளிகானகத்திற் றேடும்வகையேது
என்னவென்று அன்னம் இதமாகத்தான்கேட்க
அன்னமதுதனக்கு ஆனதர்மரேதுசொல்வார்
அண்டபுவனமளந்துற்றுழைந்ததுமுதல்
தண்டமிழ்நூல்வேத சாரமாய்நின்றமுதல்

எவ்வுயிர்க்குத்தானு யிருந்துகலந்தமுதல்
அவ்வுயிர்க்குமீய்ந்து அறஞ்செலுத்தி நின்றமுதல்
பாரதப்போர்செய்யப் படையெடுத்தநாள்முதலாய்
சாரதியாயெங்களையுந் தற்காத்து நின்றமுதல்
மாயனுபாயன் வாசன்புவிராசன்
ஆயன்சகாயன் ஐவர்க்கனுகூலன்
அச்சுதற்குநாங்க ளடிமைவிலையாகி
மெச்சுபுவியாண்டு விஷ்ணுபதந்தான்தேடி
நாயனெங்கேயென்று நாடித்திசைநோக்கி
நேயமுடன்தேடி நெடுகவந்தோமித்தூரம்
செய்யதொருவைகுந்தஞ் சேர்வோமெனவேதான்
அய்யமில்லாதேநாங்கள் அண்ணல்தனைத்தேடி
வாரோம்வழிதொலைய வாய்த்தகதை நம்பியற்கு
போராகச்சொல்லி பெரியதவந்தேடி வந்தோம்
என்று தர்மர்சொல்ல இன்பமுடனன்னமுந்தான்
ஒன்றுமறியா துரைத்திரோமன்னவரே
மண்ணுலகிற்காணாது மலைதனிலுங்காணாது
விண்ணுலகிற்காணாது வெளிதனிலுங்காணாது
மெய்புகந்து நீங்கள் விரைந்துதான்தேடுகிலும்
வைகுந்தங்காண வசமோதானுங்களுக்கு
சிந்தைகலங்காமற் றிரும்பியுங்களூர்தனிலே
விந்தையுடன்போயிருந்தால்வேண்டுந்தவமுண்டாகும்
மாயனையுங்கண்டிடலாம்வைகுந்தங்கைகொண்டிடலாம்
போயிருங்காணும்பதியிற் புண்ணியரோ நீர்தாமும்
உங்கள்தெய்வமென்றீர் யோனித்தழும்புபட்டு
இங்கவனிதன்னி லிறந்துபிறந்தேதிரியும்
மானிடவன்றன்னை மாயோனென நினைந்து
தேனட்ருஞ்சோலையிது தேடிவந்தீர்த்தூரம்
தேவனேயாமாகிற் சிறந்தவைகுந்தமதில்
போவதிறுலென்ன போயிருந்தாலென்னபலன்
மண்ணுளோர்தன்மரென்று வாழ்த்துவதும்பார்த்து

எண்ணரியவேந்தே இருந்துபதியாளாமல்
வந்திரோசும்மா மறந்திரோநற்றவங்கள்
தந்திரோதன்மமெல்லாஞ் சகலமுங்கைவிட்டீரே
நாடுதனையாண்டிருந்தால் நல்லதவஞ்செய்திடலாம்
வீடுபெறலாமெனவே விளம்பியேபுள்ளுரைக்க
கேளாய்நீபுள்ளினமே கிருபையுடனோர்வசனம்
நாளாய்நெடுநாளாய் நாடிமுந்துவந்தகதை
மண்ணாசைபொன்னாசை மற்றுமுள்ளபேராசை
பெண்ணாசையற்றுப் பிள்ளைமேலாசையற்று
தேடுந்திரவியமுஞ் சேனைமன்னர்தன்னைவிட்டு
வீடுவிட்டுக்காடுறைந்து வித்தகனைத்தானினைந்து
வந்தவருக்கின்னம் வடுவுண்டோபுள்ளினமே
இந்தமட்டுமில்லை இனிமேலுமெப்படியோ
உடலிலுயிரிழந்து உணவுசெய்யவோராசை
அடரும்பிணிதீர்க்க அவுஷதமுமோராசை
நடத்தலிருத்தல் நகைசுகியமோராசை
கிடத்தலுறக்கங் கேள்விசெய்யுமோராசை
காலில்முள்தையாமல் கடப்பதுவுமோராசை
மேலிலெலும்பூருதென்று விள்ளுவதுமோராசை
குளிருக்கனல்தேடிக் கொள்ளுவதுமோராசை
துளிருமலரெடுத்துத் தொண்டுபண்ணுமோராசை
மேடுபள்ளங்கண்டு விலகுவதுமோராசை
காடுசெடிவேறெனவே கருதுவதுமோராசை
வெயிலுக்கொருநிழலை விரும்புவதுமோராசை
துயிலுதற்குஒற்றநிலஞ் சூதானமோராசை
தாகத்துக்குண்ணுந் தண்ணீருமோராசை
நாகத்துக்கஞ்சி நடப்பதுவுமோராசை
அரித்தவிடஞ்சொரிதலறப்பசியுமோராசை
விரித்தபலவசனம் விளம்புவதுமோராசை
காடிபுலிசிங்கமதைக் கண்டஞ்சுமோராசை
இருவருடமீதென்று எண்ணுவதுமோராசை

எப்போதுமண்ணில் இருக்கவேபோராசை
ஒப்பாதபெண்களையும் உறவுசெய்யுமோராசை
கன்னல்சென்னலென்று கருதுவதுமோராசை
பொன்னும்வெள்ளிதேடிப் புதைப்பதுவுமோராசை
நாடாளுஞ்செங்கோல் நடத்துவதுமோராசை
மாடாடுதேடி மகிழுவதுமோராசை
புலைகொலைகள்செய்யப் பொருந்துவதுமோராசை
மலைகடல்களேறி வருந்துவதுமோராசை
மெய்மறந்துபொய்யுரைக்க விரும்புவதுமோராசை
நெய்பால்தயிரென்று நினைப்பதுவுமோராசை
வெளிதாண்டியேகவனம் விளையாடுமோராசை
அழியாமற்கற்பம் அருந்துவதுமோராசை
மனைதோறும்பிச்சை வாங்குவதுமோராசை
புனலாடவென்று போவதுவுமோராசை
ஒடுக்கம்மலைக்குகையி லொடுங்குவதுமோராசை
எடுக்கும்பலகோலம் எடுப்பதுவுமோராசை
இந்தமட்டுமோசை இருக்குதுகாணிவ்வுடலில்
அந்தாசைதன்னி லதிலுமொருபோராசை
தம்பியர்க்குமெந்தனுக்குந் தானேதெவிட்டாது
எம்பெருமாளாசையென்று லெங்கள்தனக்குளது
அளவற்றஆசையது அன்னமேயெங்களுக்கு
களபமணிமாயவனைக் கண்டாற்றுயர்தீரும்
ஆசையதுதீரும் அச்சுதனைக்கண்டாக்கால்
ஓசைபெறதேசமுகந்திருப்போங்கண்டாயே
என்றுதன்மர்சொல்ல இன்பமுற்று அன்னமுந்தான்
சென்றுதிருமால்பதமேதெண்டனிட்டேதுசொலும்
மாத்தரியபஞ்சவர்கள்மனதையெல்லாமாராய்ந்தேன்
பார்த்திபர்கள்வேறொருசொல்பகரவுந்தான்கேட்டு
எத்துயரம்வந்தாலும் எதிடர்கள்வந்தாலும்
அத்துயரந்தன்னை யணுவளவுமெண்ணார்கள்
மாலேதுணையெனவே வருகிறாரோர்மனதாய்

ஆலே துயிலுகின்ற அச்சுதனே தஞ்சமென்று
வாக்குமன தொன்றாய் வகிறார்பஞ்சவர்கள்
தீர்க்கமுடன் காக்கச் சித்தமிரங்குமையா
காத்தசிறைதன்னைக் கடைபோக நீர்காரும்
ஏத்தவரை முற்று மிடேற உம்பிடத்தில்
இங்கிருக்கப்பண்ணுமையா எங்கள்பெருமாளே
செங்கருடன்சொல்ல ஸ்ரீமன்நாரயணரும்
அங்கங்குளிர்ந்து ஐவர்மேலன்புவைத்து
செங்கண்நெடுமாலுந் திருவாய்மலர்ந்தருளி
தன்மருந்தம்பியருந் தடையறவே நம்பிடத்தில்
சென்மமதுகொண்டிவரத் தேவுலகுக்கேகுது
இம்மைதனிற்சென்மம் இகத்திலேதான்போட்டு
நன்மைசெய்தாலே தம்மருகிற்றானிருக்க
நால்வருங்கூடிவிட்டு நல்லவைகுந்தமதில்
பால்போலும்நம்பிடத்திற் பட்சமுடனேயிருப்பார்
சடத்துடனே தன்மர் தருகாமல்நம்முடைய
இடத்திலேவந்து இருப்பாரினிதாக
என்றுகார்மேகவண்ண ரிவ்வார்த்தைதானுரைக்க
அன்றலர்ந்தபுஷ்பமென ஆழ்வார்மகிழ்ந்திருந்தார்
சக்கரத்தைவாருமென்று தானழைத்துக்கோபாலர்
இக்கணமேசென்று எம்முடையபஞ்சவரை
காணாமல் நீகலந்து காவலாய் வாருமென்று
ஊணுதளெட்டெழுத்தை உபதேசமேபுரிந்து
பஞ்சவர்களைவர்தனிற் பகருகின்றநால்வருந்தான்
அஞ்சுமுடல்போட்டுத் தோற்றமுடன்நம்பிடத்தில்
வருவார்சுகம்பெறுவார் வைகுந்தந்தான்சேர்வார்
மருவாருந்தன்மர் வருவார்தனியாக
வாரவழிதனிலே மற்றுமொருவிக்கினங்கள்
சீராகயானைபுலி தீண்டாமல் நீதானும்
பக்கமேவாருமென்று பண்பானவார்த்தைசொல்லி
சக்கரத்தைப்போமெனவே சாற்றலுற்றாரம்மானை

அந்தப்படியே அச்சுதனூர்சொற்கேட்டு
இந்தப்பெருவனத்தி லெய்தியதேசக்கரமும்
சக்கரந்தான்வந்த சகாயமிவராறியார்
மிக்கானகாடும் வெகுமலையுந்தான்கடந்து
வண்டுளபமேனியனை வாகாகவே நினைந்து
கண்டுதொழவேணுமென்று கடுகிநடந்துசென்று
சுத்தளவுநூறு யோசனைகாதவழி
வித்தாரமான வடபால்விருட்சமதில்
போயிருந்தார்பஞ்சவர்கள் புகழான தன்மருடன்
மாயவனே தஞ்சமென்று மகிழ்ந்தாலின்கீழிருந்தார்
இருக்கும்பொழுதே இயலார்சகாதேவன்
நெருக்கும்விதிவசத்தை நேராயறிந்துபின்னும்
தனக்குவருங்கருமந் தானேதெரிந்துபின்னும்
எனக்குவருமயக்கம் இப்படியாமென்றுசொல்லி
தன்மர்தனக்குந் நமையன்மார்மூவருக்கும்
வன்மமுள்ளதெல்லாம் வகையாக இன்னதென்று
சற்றுநாளாய்ந்தேன் சக்ரதாணிந்தமட்டும்
முற்றிலுமேயென்றனக்கு முடிவுசரியாச்செனவே

மகாதேவன்வாழும் வைகுந்தபதவிக்குச்
சகாதேவனிகுச் சடத்தைவிட்டுச்சாருதல்.

தன்னையறிந்த சகாதேவனிதுரைக்க
என்னைத்துணையிழந்தோ மென்றுமயங்காமல்
நமக்குள்ளசாத்திரங்கள் நன்றாய்நடத்திவித்து
சுமக்குஞ்சுமையொன்று துன்பமற்றோமென்றுசொல்லி
நாராயணர்பாதம் நாளும்மறவாமல்
சீரானவைகுந்தஞ் சேருமென்றுதானுரைத்து
அண்ணன்மார்நால்வரையும் அருகேஇருமெனவே
எண்ணமறநிட்டைதனி லிருந்தான்சகாதேவன்
மாலேசரணமென்று மனதிற்றியானமதாய்
சாலோகசாமீவ சாருபமுந்தெரிந்து

மூலத்தெழுந்தீயை மூட்டிச்சுழிமுனையில்
ஞாலத்திலிருந்து நாரணனைப்போற்றிசெய்து

விருத்தம்.

ஏதுமறியேன்எனையறியேன் எல்லாவுயிர்க்குங்கடையா
வானுசிறியவழக்கோரம் மன்றிலிருந்துவழுவுரைத்து
தீதுபகாரநாயடியேன் ஜென்மமிழந்துவருகவென்று
தூதுவரவுமிருப்பேனோ சுகுந்தாமுகுந்தா தூய நீயே

இதுவுமது.

வீமன்விஜயன்நகுலனுடன் வேதஞானதன்மருவாய்
நேமமுடனேவைகுந்தம்நெடியோனடியைத்துணையாக
ராமதாசரென்னவேதான் நடந்தாருமதுநகர்தேடி
ஏமதூதாணுகாமல் இதமாயுதவிசெய்வாயே

இதுவுமது.

நாடிகளன்றுமதிமறந்து நடுக்கமிகுந்துபிராணனுயிர்
ஓடியுழன்றுதசவாயு வுள்ளேஅடங்கிமெய்பதறி
வாடிமனதுதடுமாறி மயக்கமிருமலிளைப்புடனே
கூடிவரவுங்காணுமற்கொண்டாட்கொள்வாய்கோபாலா

இதுவுமது.

காயமிழந்துநடுவழியிற் கருத்துமயங்கிநில்லாமல்
தூயபதமேதுணையாகத் தொல்லைப்பிறப்பிலினிமேலும்
மாயவிருளிலலையாமல் வந்தாள்நந்தகோபாலா
ஆயமானவைகுந்த மருள்வாயெனதுபெருமாளே

இதுவுமது.

ஜனனமரணமிரண்டுமினி ஜகத்திலுழன்றுதெரியாம
லுனதுமலர்த்தாளனுதினமு முதவிமிகவுமுண்மையதி
எனதுமுடிமேலிருபாத மிருக்கும்படியாயருள்புரிவாய்
தனதுஅடிமைசகாதேவன் சாமிதந்தகோபாலா.

அட்டாக்ஷரமுமரியெழுத்தும்ஐம்பத்தொன்றாய்நி
ன்றெழுத்தும்,எட்டாய்இரண்டாய்வட்டமதாய் ஈரெழு

த்துமோரெழுத்தாய், நட்டாய்முட்டமுடிபோகாநடுவாய்நின்றநாரணரே, விட்டாய்விட்டநரைமுடித்தேநன்விந்தமலர்த்தாள் பெற்றேனே

அரியெனுமெழுத்தினாலே அவனியிலுதித்தேன் யானும், அரியெனு மெழுத்தினாலே அறிந்துன்னைத் தெரிந்துகொண்டேன், அரியெனுமெழுத்தினாலே அருளதுபெற்றேன்மூர்த்தி, அரியெனுமெழுத்தினாலே அடைவதுமுந்தன்பாதம்.

இதுவுமது.

ஐவர்க்குமுன்னேவந்து அடைந்துவைகுந்தஞ்சேர்ந்து
மெற்றிற்குமுனதுபாதம் விரும்பியேபணிந்தபூசை
செய்விக்குமனதுகூர்ந்து சீக்கிரமென்னையிங்கே
உய்வதுன்பொருட்டாய்நல்கும்உண்மையேராமராமா

இதுவுமது-சந்தவிருத்தம்.

மரணமெனதுசடமழிந்துன் மலர்த்தாள் துணையாய்வந்துமெந்தன், கரணமெனதுபுரிபுலனற் கலங்கிமயங்கிநில்லாமற், கிரணவெளிபோல மாசகற்றிக்கிருபையுடையவைகுந்தம், சரணபதவி தந்தருள்வாய் சாமிநந்த கோபாலா.

உந்தன்மலர்த்தாளெனக்கு உற்றதுணையாயிப்போது
வந்தேன்வந்தேனென்றருளிவருவாயடியேன்மலையாது
கந்தனுடனேகணபதியுங் கட்சியுமையாளாயர்குலம்
நந்தாமுகுந்தாநரசிங்காநாராயணனே நமஸ்காரம்

கதை.

நாட்டமதிலிருந்து நாரணரைநெஞ்சில்வைத்து
வாட்டமறச்சிந்தை மயங்காமல்வாயுவதை ந
மூட்டியனலெழுப்பி மூச்சடைரையொன்றுக்கிக்
கூட்டித்திரட்டிக் கொள்ளுசுழிமுனைகூட்டி
நான்முகனைக்கண்டு நமஸ்கரித்து அப்பாலும்

மால்பதவிய்ந்த மணிபூரகந்தனிலே
நின்றுவணங்கி நெடியோனைப்போற்றிசெய்து
அன்றுபுரமெரித்த அரனானாகதத்தில்
வந்துசிவனை வணங்கியடிபணிந்து
முந்துமகேஸ்பரனார் மூதூர்விசுத்தியதில்
கண்டுமகேஸ்பரனைக் கருத்தில்மிகவணங்கி
தொண்டுபண்ணியப்பால் சோதிசதாசிவன்றன்
அக்கினியிற்சென்று அடங்கியொடுங்குகையில்
நக்கியதோர்சீவன் சத்தயர்ந்துமூலமிட்டு
பிருதிவிலேவந்தொடுங்கிப் பேசாதேமேல்நோக்க
அருகியெனவேபிருதி அப்புவிலேவந்தொடுங்கி
அப்புவினிலேயிருந்து அக்கினியில்வந்தொடுங்கி
வைப்புடைய அக்கினிதான் வாயுவிலேவந்தொடுங்கி
வாயுசதாசிவத்தில் வந்தொடுங்கிமாயோனைப்
போயப்பாற்சென்று பூரணமாயுள்ளடங்கி
தேடிவைகுந்தஞ் சேர்ந்ததுவே ஆத்மாவும்
ஓடியொடுங்கிப்பின் உடம்புமிக்குழைந்து
கழுத்துவிழுந்துழன்று கனத்ததலைசாய்ந்து
அழுத்தமன்றிமண்ணி லடித்துவிழுகுமுன்னே
எடுத்துச்சமமா யிருத்தியேநால்வருந்தான்
அடுத்திருந்து சாஸ்திரங்க ளாகமமெலாம்முடிந்து
நிலத்திலடக்கியபின் நீலவண்ணாதஞ்சமென்று
அலத்தினார்நால்வ ரச்சுதற்குத்தான்கேட்க
வந்தான்சகாதேவன் வைகுந்தந்தான்சேர்ந்தான்
நந்தாமுகுந்தா நாரணரே நீர்காரும்
மாயனேஎன்தம்பி வந்தடைந்தானுன்பாதம்
ஆயாயுனக்கபயம் அச்சுதரேகாத்தருளும்
தந்தைதாய்போலாகித் தற்காத்தீரெம்பெருமாள்
என்தம்பிவந்தான்கா ணினிக்காருனக்கபயம்
கண்ணரேகாத்தருளுங் காயாம்புமேனியரே
வண்ணரேநாங்கள் வருகிறோங்கண்டீரே

176487

நன்றுசகாதேவன் நடந்தான்நமக்குமுன்னின
என்றுதன்மார் தானு மியல்பானதம்பியரும்
வாழ்த்திமனந்தேற்றி மாயோனைத்தான்போற்றி
எத்தித்தொழுது இருகையாற்றான்குவித்து
அஞ்செழுத்துவஞ்சமெல்லாம் அஞ்சுபஞ்சபூதமுமாய்
அஞ்சுமுகமாய் அகண்டமெல்லாந்தானாகி
அஞ்சுபஞ்சலோகமுமாய் அஞ்சுபஞ்சவர்ணமுமாய்
அஞ்சுதலமாகி ஐம்பொன்மகாமேருவதாய்
அஞ்சுபுலனாகியெங்கும் அஞ்சுபொறியாகி
அஞ்சுமலர்வேள்தனக்கு அஞ்சுபூதபாணமுமாய்
எங்கும் நிறந்தரமாய்இப்படியாய்த்தானிருக்க
பொங்குமெங்குமிந்தப் பூவுலகிற்போகி
அய்வரொன்றுபோரா யன்றளவுமின்றளவும்
தெய்வமென்றுநாங்கள் தேர்ந்திருந்தோமிப்போது
ஐவர்தனிலேஒருவன் அங்குவந்தான்கண்டீரோ
மெய்வருந்திநாவலர் விட்டகுறைதீர
எத்தனைநாளோ இப்போதோ இக்கணமோ
அத்தனேஉன்பெருமை யாரறியப்போறார்கள்
சித்தமுடனெங்களையுஞ் சீக்கிரத்திற்சேருமையா
வித்தகரேவாரோம் விண்ணப்பமென்றுதன்மா

விருத்தம்

கேசவாமுகுந்தாவாரோம் கிருஷ்ணமாதவாவாரோம்
ராசகோபாலாவாரோம் நரசிங்கரூபாவாரோம்
தாசர்கள்நால்வர்வாரோம்தடையிடையில்லாவண்ணம்
நேசமாருனதுபாதம் தெடியவாதாருங்காரும்.

இதுவுமது

நாரணர்பாதந்தேடி நால்வரும்தம்பிவாரோம்
வாரணம்யாளிசிங்கம் வல்லியங்கரடிபன்றி
கோரணகோஷ்டியன்றிக் கோவிந்தாவுந்தன்காவல்
காரணமாகவந்து காத்தருள் செய்குவாயே.

கதை

தோத்திரங்கள்சொல்லித் தொழுது நமஸ்கரித்து
சாத்திரஞ்சொல்வேத சகாதேவனை நிறுத்தி
வழிதேடிசெவ்வனே மாயன்றனைத்தேடி
தெளிவாகியேநால்வர் திசைநோக்கியேநடந்தார்
நடந்தார்வெகுதூரம் நல்லதன்மர்தம்பியரும்
கடந்தார்மலைபலவுங் காடும்வனந்திரமும்
ஊடேநடந்து உகந்துவரும்வழியில்
கோடேறிவீமன் கும்பிட்டுவாய்புதைத்து
அண்ணாவியிப்போ அடியேன்சொல்விண்ணப்பந்தான்
கண்ணனைதம்பி கருத்துடையசகாதேவன்
விட்டுப்பிரிந்ததென்ன மேதினியில்நம்மையிவன்
கட்டனே என்றனக்குக காவலனேசொல்லுமென்று
வீமனுந்தான்கேட்க விளம்புகின்றார் தன்மருந்தான்
பூமனேமுன்னாட் பொருதுகின்றபாரதத்தில்
பேரிட்டுநாள்முகூர்த்தம் பேசினன்சாஸ்திரத்தில்
சீரிட்டுப்போர்முடியத் திருத்தமுடனரவானை
களப்பெலியென்றேயிவனைக்கணக்கிட்டாராதலினால்
அளப்பொன்றுமில்லை யதுக்காயிவன்சடத்தை
பழிதொடருமென்று பார்மீதிலேசடத்தை
வழிநடையிற்போட்டார் வகைவேறுமில்லையென
அந்தமொழிகேட்டவுடனுமென்று வீமனுந்தான்
சிந்தையதுதெளிந்து சேகரமாய்நால்வோரும்
வைகுந்தம்நோக்கி வனத்தோடே செல்லுகையில்
மெய்கண்டதீர்த்தமென் றுவிளம்புவாரோர்வசனம்
சந்திரகாந்தமென்னுஞ் சாந்தமாயோர்மலைதான்
இந்திரன்வந்தெந்நாளும் இருந்துசிவபூசைசெய்யும்
அந்தமலைமீதில் அந்தமுள்ள தீர்த்தமதை
விந்தமலரெங்கும் விகசிதமாய்ப்பூத்து நிற்கும்
கண்டார்கள்கங்கையது காசிநதிபோலே

கொண்டார்கள் தீந்தபள்ளிக் கோபாலர் தன்னருளால்
அப்பெரியபொய்கைதனி லரம்பையருந்தேவர்களும்
செப்பமுடன்வந்து தீர்த்தங்களாடுகையில்
கன்னியருந்தேவர்களுங் கண்டார்கள்நால்வரையும்
மன்னியசீர்கன்னியர்கள் வந்துகரையேறிநின்று
பார்த்தார்கள்நால்வரையும் பாதாதிகேசமுதல்
வாய்ந்தார்களென்று மனமகிழ்ந்துகன்னியர்கள்

தெய்வகன்னியர்கள் நால்வரைக்காணுதல்.

மாலுமயனும் மன்மதனும்போலாகி
மேலுமிருந்து விளையாடும்பாவனைபோல்
மெத்தமயலாகி மெல்லிநல்லாள்நால்வரிடம்
உத்தமர்போல்நேரா யுகந்துதான்வந்திருந்து
மன்னவரே நீங்கள் வந்தீரே இத்தூரம்
தென்னவரேஉங்கள் தேசமெங்கே நீங்களெங்கே
எந்தநாடெத்தேசம் எங்குவந்தீர்சொல்லுமென்று
விந்தமுறுகன்னியர்கள் விளம்புமென்றுகேட்டார்கள்
அப்போதுதன்ம ரன்புடனேதானிருந்து
இப்போதுசொல்லுகிறோம் மேந்திழையேகேளுமென
சீரார்குருநாடு தேசமெங்கள்தேசமது
தாராரும்பாண்டுமன்னன் தன்புதல்வர் நாங்களுந்தான்
ஏராளமாய்க்கலிய னிவ்வுலகில்வந்ததினால்
நேராகநாங்கள் நிலைமைவிட்டுத்தானகன்றோம்
யாதுதிருலட்சுமிதன் வைகுந்தஞ்சேரவந்தோம்
சாதுவாயுங்களையுந் தான்கண்டோமிப்போது
ஏதுவாய்த்தன்ம ரிவ்வசனந்தா னுரைக்க
ஓதுவார்கன்னியர்க ளுற்றதன்மர் தன்னிடத்தில்
வாரீர்முன்னாளில் மாதாக்கள்சொற்கேட்டு
பாரீர்புருஷர் பருகமதின்பால்வாங்க
வீமன்றனைய னுப்ப மெய்யுடையவீமனுந்தான்
நேசமுடன்கானகத்தில் நிமிஷத்திற்சென்றுபுக்கி
தந்திரத்தினாலே சபதமாய்ப்பால்வாங்கி

மந்திரத்தினாலே வலுவீமன்றன்வரவும்
தொடந்துவரும்மிருகமது சொன்னபடிதப்பாமல்
அடர்ந்துவலுமிருகம் ஆவிபிடிக்கையிலே
சதிரிலொருகாலுந் தனிவனத்திலோர்காலும்
எதிரில்வந்துபற்றி யிழுக்கவேவீமனுந்தான்
தர்க்கமிட்டுக்கொண்டு சமராடிநின்றிருவர்
மிக்கபுகழ்தன்மரிடம் விளம்புவோம்ஞாயமென்று
சென்றுமிருகமது நீர்க்மார்ய்வீமனுடன்
அன்றுதன்மர்முன்போய் ஆகமுடன்ஞாயமதை
கேளுமென்றுவல்மிருகம் கிருபையுடன்றானுரைக்க
வாளுடையவீமர் வகையாகச்சொல்லுமென்ன
இருவருடஞாயம் இயல்பாகத்தான்கேட்டு
ஒருவருக்குஞ்சாந்த முண்மைசற்றுமில்லாமல்
தம்பியென்றுசற்றுந் தயவுவைத்துப்பாராமல்
அம்பியுடமேனியிலே ஆளிலேபோர்பாதி
நிறையாகஉன்னுடலை நேராகத்தான்பிளந்து
குறையாமலேறுமற் கொடுத்துவிடுவீமா நீ
தச்சன்றனையழைத்துச் சதுரானநூல்போட்டு
மெச்சவேதான்பிளக்க விரைந்துதச்சன்வந்தமையால்
மிருகமதுகண்டு வெகுவாய்மனமகிழ்ந்து
தருகாமல்நான்போறேன் தன்மரேஉந்தனுக்காய்
பொறுத்தேனிதுஞாயம் பூவுலகிற்கண்டதில்லை
ஒறுத்தேனெனமிருகம் உயர்கானகந்தனிலே
போனதுகண்டிருப்போம் புண்ணியவான்தன்மரென
ஞானதினாலுங்களைப்போல் அவனிதனிலில்லையென்று
பின்னையுமோவீமன் பிரபலமுங்கேட்டிருப்போம்
முன்னையேபாரதப்போர் மூண்டசமர்களத்தில்
வல்லிடும்பன்றனுடனே வலியபகாசுரனையும்
சொல்லரியகீசகனுந் திரியோதனனியரும்
வல்லவிராடன்முன்னே வந்தமல்லர்களையும்
நல்லசராசந்தனையும் நாட்டிலுள்ளவேந்தரையும்

வீரமுடன்காலனுக்கு விருந்துதனையளித்த
பாரமுள்ளவீமனுட பராக்கிரமங்கேட்டிருப்போம்
ஈதல்லாற்பார்த்தனுந்தான் ஈஸ்பரனைத்தானோக்கி
பேதமில்லாப்பாசுபதம் பெற்றதுவுமில்லாமல்
அசுரர்தனைவென்றதுவும் அமரர்சிறைமீட்டதுவும்
பசியுடைய அக்கினிக்குப் பரிந்தமுதமீந்ததுவும்
பாலனபிமனையும் பாராமற்றேற்றரசன்
சூலமதாற்கொன்ற ஜயரமதுவைத்திருந்து
தேத்தரசன்றன்னுடனுஞ் சேரும்பதாதிகளை
மாத்தரசர்சேனையையும் மன்னரையுங்கொன்றுவென்ற
அருச்சுனனுமென்று அப்போதேகேட்டிருப்போம்
பரிக்குநகுலனென்று பாங்குடனேகேட்டிருப்போம்
மற்றுநிகழ்காலம் வருங்காலஞ்செல்காலம்
முற்றுஞ்சகாதேவன் மொழிவனெனக்கேட்டிருப்போம்
அப்படியேநாங்களவருடசெய்தியெல்லாம்
இப்படிக்கேட்டிருப்போ மின்னரெனக்கண்டறியோம்
அவரவரைநேர்காண ஆச்சரியமெங்களுக்கு
இவர்இவர்தானென்று எங்களுக்குச்சொல்லவென்று
மங்கையர்தான்கேட்க மகிழ்ந்துதன்மராஜனுந்தான்
சங்கையுள்ளபெண்காள்தன்மனென்னும்பேர்கண்டீரோ
மெல்லியரோநல்ல வீமன்விஜயனவன்
சொல்லும்நகுலனிவன் தோகையரேஇன்னமுந்தான்
வேதசகாதேவனுடன் பின்னுள் துரோபதையும்
போதமுடன்வைகுந்தம் போய்ப்புகுந்தாரென்றுரைக்க
திருந்துமதிக்கன்னியருந் தேவேந்திரன்மகளும்
இருந்துதன்மர்சொல்லு மியல்பதனைக்கேட்டிருந்து
வாருமையாஎங்களுடன் வானவர்கோன்றன்னிடத்தில்
சேருமையாஉங்களுக்குத் தேவலோகந்தானளித்து
மன்னவரேநாங்கள் மருவிமனையாளாய்
சொன்னபடிகேட்டுத் தொண்டுசெய்வோம்நாங்களுமே
எங்கள்பொருட்டா லினிக்கேளும்மன்னவரே

தங்களிலேவேள்விசெய்து தவம்பண்ணி நிற்போரும்
அக்கியினூசியின்மேல் லணிவிரலைத்தானூன்றிச்
சிக்கெனவே தவசு செய்துமுடிப்போரும்
கால்மேலுந்தலைகீழாய்க் கடுந்தவசு நிற்போரும்
பால்போலுமெக்கியங்கள் பண்ணிமுடிப்போரும்
தெய்வப்பெண்தாங்களென்று தெய்வப்பதவியென்றும்
மெய்வருடியாகம் விரும்புகிறபேரும்
வேண்டியேயித்தவங்கள் வேணுமென்றுசெய்தார்கள்
தூண்டி நினையாமற் சொற்பனத்திற்கேளாமல்
வலியவே தாங்கள் வரவழைத்தால் நீங்களுமே
பொலிவாகுமென்று பூரணமாயெங்களுடன்
வந்துபுரந்தன்னை வணங்கியனுதினமும்
முந்துதெய்வதலமாக முழுதுந்தனதாக
இருக்கலாமென்று எந்திழைமார்தானுரைக்க
வருக்கமுடனின்னும் வகையுமக்குச்சொல்லுகிறேம்
தீர்க்கமுடன்வைகுந்தஞ் சேரவேவேணுமென்றால்
ஆர்க்குமுடியாது அருந்தவத்தோற்கெட்டாது
துறந்தார்க்குமின்னந் துவ்வாதபேர்களுக்கும்
இறந்தார்க்குமேதினியி லிவ்வாழ்வோனே துணைகாண்
கேளீரோ பூவுலகிற் கிருபையுடன்மன்னவரே
ஆளீரோ தேவுலகும் அன்பாகவெங்களுடன்
ஈசனுமே பெண்களிருவர் தனையருகில்
வாசமுடன்வைத்து மருவியிருக்கலையோ
மாவிற்கலைமகளைப் பற்றுமறைவேதாவும்
நாவிற்றரித்துமவர் நட்பாயிருக்கலையோ
சீதைதனைநெஞ்சிற் றிருமாலும்வைத்திருந்து
கோதையுடன்கூடிக் குலாவியிருக்கலையோ
தேவேந்திரனுஞ் சிறப்பாயிந்திராணியுடன
கோவேந்தர்கூடிக் குலாவியிருக்கலையோ
மன்மதனும்ரதியை மருவியிருக்கலையோ
இன்பமுடன் தவசிலிருந்தபெரியோர்கள்

கண்டதிசைகொண்டு கலந்தாசை தீர்க்கலையோ
விண்டாசையெல்லாம் வெறுத்தமுனிவோரும்
தன்ருய்த்தனையறிந்த நாதாக்களெல்லோரும்
ஒன்ருய்க்கடவுளரை யூடுருவக்கண்டோரும்
பூதமோரைந்தும் புலன்பொறிகள்தானடக்கி
நாதமொடுவிந்துகழி நடுவணையுந்தான்திறந்து
நாடிதனையறிந்து நாட்டமுடன்வாட்டமதில்
தேடியமுதந் தெவிட்டாமலுண்டிருக்கும்
யோகிகளுமிப்போ துலகந்தனிலிறங்கி
போகமெனும் விந்துகளைப் புறம்போக்கிவீற்றிருந்தார்
அறவேவெறுத்து அவனியின்மேலாசைவிட்டு
துறவாகிவந்ததென்ன சொல்லுமென்ருர்கன்னியர்கள்
இன்பமுடன்கன்னியர்க ளிவ்வசனந்தான்கூற
அன்புடனே தன்மரவர்களுடனே துசொல்வார்
ஈதெல்லா நீங்க ளெடுத்துரைத்தீரப்போது
ஆதலாலந்த அற்பசுகவாழ்க்கைதம்பி
ஈடழிந்துநாங்க ளெடுத்ததவங்குலைந்து
கூடழிந்துபொல்லாக் கொடுநரகில்வீழ்வதற்கு
சொன்னீரேபெண்காள் சோதனையோவித்தவிதம்
மூன்னீர்பொழியும்முகில்வண்ணர் தன்னருளால்
இப்படியுஞ்சொல்வாரோ ஏந்திழையேஎங்களுக்கு
கற்பனையுங்கேட்கக் கருமமோவிப்போது
சீரானவைகுந்தஞ் சேரவென்றுபோகையிலே
நேராகநின்று நில்லுமெனச் சொல்வாரோ
ஒன்றுமுறையாமலோவியமே நீங்களுந்தான்
நின்றுவிடுமென்று நெடுமால்தனை நினைத்து
வாகுடையதன்மருமாய் வாய்த்ததம்பிமூவர்களும்
ஏகுவோமென்று இதமாய்வனத்தூடே
நடந்தார்வனவாசம் நால்வருந்தான்கூடி
கடந்தார்வெகுதூரம் காடுமலைதான்தாண்டி
வானோர்புகழ்புஷ்ப வாகினரிமாமலைக்கு

போனார்காண் நல்ல புதுமையொன்றுதானறிந்து
சேர்ந்தபலநதிகள் தீர்த்தமெல்லாந்தானுடி
வாய்ந்ததொருத்ராட்ச மரங்களுடன்சந்தனமும்
கற்பகக்காவுகளும் கண்டுமிகத்தெண்டனிட்டு
நட்புடையசோலையென்று நடந்தார்காணம்மானே
அந்தமலைக்கப்பால் ஆறைந்துயோசனைதான்
வந்தவர்கள்முன்னே வழிவில்வெகுவானரங்கள்
கண்டுமனமகிழ்ந்து காவலரே நீர்கேளும்
புண்டரீகமாயனுட பூமிதனில்வந்தேங்காண்
அந்நாளிலுங்களையும் அவனிதனில்யாங்காணேம்
எந்நாடுஎத்தேசம் எங்கிருந்து எங்குவந்தாய்
மன்னு நீர்சொல்லுமென்று வானரங்கள்தான்கேட்க
பொன்னுருந்தன்மர் புரையுடையாரேதுசொல்வார்
பண்ணுற்குருகுலத்திற் பாண்டுமைந்தர்நாங்களுந்தான்
மண்ணாசைவிட்டு வந்தோங்கலியதனால்
அத்திபுரத்திருந்து அச்சுதனைத்தானதேடி
பத்தியுடன்கானகத்திற் பரிந்துவந்தோங்கண்டீரே
சீதமதிவானரங்கள் செய்தியெல்லாந்தான்கேட்டு
ஆதலாலெங்க ளனுமார்க்கிளையவன்றான்
வீமனல்லோவென்று விஜயனுடதேர்தனக்கு
கோமானேவெற்றிக் கொடியல்லோ நாங்களுந்தான்
உம்மானையெங்கட் குரியோர்காண் நீங்களுந்தான்
எம்மானையிங்கே இருந்தீரேயாமாகில்
நாடுபகைவந்ததென்றால் நாங்களேவெற்றிகொண்டு
ஈடுபண்ணியுங்களுக்கு ஏவல்செய்துதானிருப்போம்
இங்கிருங்களென்று எடுத்துரைக்கவானரங்கள்
தங்குபுகழ்மன்னன் தன்மருந்தானேதுசொல்வார்
செங்கதிரோன்றன்குலத்தில்செனித்துஅயோத்திவள
துங்கமுடிராமருக்குத் தொண்டுசெய்யும்நீங்களல்லோ
கடல்தனையேகல்லணையாய்க் கட்டினவர் நீங்களல்லோ
திரமுடையராவணனைச் செயித்ததுவும்நீங்களல்லோ

ஆனதினாலென்னை அஞ்சாதேயென்றுசொல்லி
மானமுடன்காக்க வானவர்தாம் நீரலவோ
அகமகிழ்ந்து நீங்க ளவனிதனிலெங்களையும்
உகந்தினிமேற்காக்க உங்கள்மேற்பாரமென்ன
புகழ்ந்துதான் தன்மர் பூரித்துவார்த்தைசொல்ல
மகிழ்ந்துதான்வானரங்கள் வைகுந்தமாளிகைக்கு
போதமுடன்சேகாரம் போரவழியீதென்வே
நீதமுடன்காட்ட நெடுந்தூரம்கூடவந்து
வந்துதுணையாக வாகுடனேமுன்னடந்து
சந்துபயில்வானரங்கள் தாவிவழிகாட்ட
மெத்தமனமகிழ்ந்து விரைந்துவழிகூடி
நல்லபதம்தான்வேண்டி நடந்தார்வனத்தூடே
இயக்கர்பதியு மிராட்சதர்கள்தன்பதியும்
மயக்கும்புலையர் வல்வேடர்தன்பதியும்
கொலைஞர்பளிங்கர் குறவருடதன்பதியும்
மலையிற்பலசாதி வாழுகின்றோர்தன்பதியும்
கடந்துவெகுதூரம் காவலர்கள்தான்மிகவும்
நடந்துவழிகடந்து நாற்பதிங்காதவழி
மீதானகானகத்தில் வேகமுடன்தான்நடந்தார்
ஈதாகமூவர்க் கிளையநகுலனுக்கு

நகுலன் வைகுந்தப் பதவியடைந்தது.

மெய்கலங்கியுள்ளசந்து விதிப்பயனுந்தான்மூடி
கையசந்துகாலசந்து கண்ணுமிகச்சுழன்று
வாக்குந்தடுமாறி மதிமயங்கிவாய்குளறி
தாக்கறவேநின்று தள்ளாடும்வேளையிலே
வீமன்விஜயன் மிக்கானதன்மருமாய்
பூமன்நகுலனையும் போயணைத்தார்மார்புடனே
கார்மறலிதூதுவர்கள் கடுகவாவென்றுசொல்லி
போர்நகுலன்றன்னுடனே போராடிவார்த்தைசொல
தூதுவர்கள்வந்த துடுக்குமிவனறிந்து
ஏதுவாய்நெஞ்சில் எட்டெழுத்தைத்தானினைந்து

மாதுதிருமால்பதத்தை மனதிற்றியானமதாய்
ஓதுவான்போர்நகுலன் ஒதுங்கவேகாலனுந்தான்

விருத்தம்.

ஆண்டவரேஉந்தன்பாதம் அடைக்கலங்காருமென்றே
மாண்டோரிரண்டுபேரும் வைகுந்தம்வந்துசேர்ந்தார்
பாண்டவாளவர்தன்னிற் பாப்பரிநகுலன்வாரேன்
நீண்டவாளன்முன்வந்து நீதுணைசெய்குவாயே
தூயதோர்தருமன்வீமன் துலங்கியவிஜயன்றானும்
நேயமாய்ப்பின்னேவாரார் நீண்டவைகுந்தந்தேடி
மாயவாகருணைகூர்ந்து வந்துநீதுணையதாக
காயமாமுடலிற்சீவன் கழறுமுன்துணைசெய்வாயே
பாவியேன்பூமிதன்னிற் படுத்துடல்கிடத்திப்போட்டு
ஆவியேஉந்தன்பாதம் அடையவென்றோடிவாரேன்
தாவியேமறலிவந்து தடைபண்ணுவண்ணம்நின்று
கூவியேவாவாவென்றேன் கோவிந்தா அருளுவாயே

வேறு.

இக்குமறியேன் இசையறியேன்தேவர்செயலை நானறியேன், மெய்க்குமொருசொற் பொருளறியேன் வினையேன்வேண்டி வாமெனவே, தக்கும்பொருள் நீதரவருவாய்ச் சகலதுணையும் நீயெனக்கு, நிற்கும்நிலையாய் வைகுந்தம் நீயேதருக நினைத்தருள்வாய்.

பெரியதிருமால் வைகுந்தம் பெறவே ஐவர்பிரியமுடன், அரியதுணைகடனையிழந்து அரியே துணையாய் மனதிலெண்ணி, துரியவெளியுந் தான்கடந்து தோற்றமொடுங்கும்பரா்பரத்துள், விரியுங்கமல பதஞ்சேரவேணுமருள்செய்கோபாலா.

அண்டரும்முனிவர்கேட்க அகிலமீரேழுஞ்சாட்சி
விண்டதோருடலிற்சீவன் மெய்மறந் துன்னைத்தேடி
உண்டெனதம்பிவாரேன் உற்றதோர் துணைவேறில்லை
மண்டலமாதுபங்சா மாயோனே துணைசெய்வாயே.

கொச்சகம்.

ஆதியாய் நின்றதொரு ஆதிமகாமூலஞ்
சோதியாய் நின்றதொரு சோலைமலையழகா
நாதியநாதியுமாய் நடுவாய் அடிமுடிவாய்
ஓதியநால்வேதமுமாய் உள்ளாய்ப்புறம்பாகி.

இதுவுமது.

நீலமாயெங்கும் நிரந்தரமாய்வானாகி
மூலமாயோங்கி நின்று மூவுலகுஞ்சூழுருவி
சீலமாய் நின்றதொரு சீர்பாதமென்றனக்கு
காலமிதுவேளைதனிற் கைதருவாய்கோபாலா

கதை.

கூத்துவனுர்வத்துயிரைக் கோட்டாலிபண்ணுமல்
ஆத்துமத்தைக்காரும் அபயமுனக்கபயம்
என்றுநகுல னெட்டெழுத்தையுச்சரித்தான்
அன்றுஎமனுத ரகன்றனர்காணம்மானை
விண்ணேர்நகுலனையும் விமானமதிலேற்றி
பண்ணேர்வைகுந்தம் பதியில்வைத்தார்மெய்மகிழ்ந்து
நகுல னுயிர்போய் நாரணரைத்தான்சேர
பகுமானமீதெனவே பத்திமுத்திதன்னுடனே
தன்மருடதம்பியரும் தயங்காமலுள்மகிழ்ந்து
சென்மமெலாம்விட்டெறிந்துசீக்கிரம்போய்நாரணரை
காண்பதற்குத்தானினைந்துகருமமெலாந்தான்முடித்து
வீண்சடத்தையேசுமந்து விடக்கெனவேதான்களித்து
அடக்கினுர்பூமிதனி லன்பாய்நகுலனையும்
துடக்கெனவேவிட்டெறிந்து துதித்தார்பெருமாளை
அரிநமோவென்று அச்சுதனைத்தானினைந்து
கரியமால்நாரணரே காத்தருளவேணுமென்று
தீர்த்தமதுதானுடிச் செய்கருமந்தான்முடித்து
நாற்றிசையும்பார்த்து நமஸ்கரித்துமூவர்களும்
போற்றிவணங்கியே பூரணமாயுள்மகிழ்ந்து

தோத்திரமும்பண்ணித் தொழுதுதிருமால்தனையும்
மூன்றுசுமையிறக்கும் முகுந்தாவெனநோக்கி
தோன்றுமொருகானகத்திற் றுன்பமறவேநடந்தார்
ஆனதொருவீமனுந்தான் அண்ணரேயிப்போது
மானமுடன்நகுலன் மடிந்ததுதான்கானகத்தில்
ஏதுவயனமென என்கோவேசொல்லுமென்றான்
சாதுவுடன்தன்மர் தம்பியரைத்தானோக்கி
இவ்வுலகிற்கற்றகல்வி யாவர்க்குமீந்திலன்காண்
அவ்வுலகிலேநகுலன் அறிந்தவித்தைபுந்தியெல்லாம்
பிறருக்குரையாமற் பேசாதிருக்கையினால்
திறமுடைகானகத்திற் செத்தனர்காணென்றுரைத்தார்
அந்தமொழிகேட்டு ஆமென்றுவீமனுந்தான்
சந்தோஷமாகத் தன்மருடனேநடந்தார்
விசையனும்வீமனுடன் மெய்யானதன்மருமாய்
அசையாவழிகூடி அஞ்சாறுகாதவழி
இசையநடந்தார்கள் எய்ப்புமிளைப்பில்லாமல்
திசைகடந்துநோக்கிச் சிறப்பாய்நடக்கையிலே
மற்றுமந்தக்கானகத்தில் வடபால்நிழல்தானும்
முற்றுமிகவளர்ந்து முப்பதுயோசனைதூரம்
படர்ந்துநின்றஆல்நிழலைப் பரிவாகக்கண்டார்கள்
அடர்ந்தநிழல்தன்னி லவர்களிளைப்பாறி
இருந்துதகையாறி யெண்ணமெல்லாந்தான்தீர்த்து
வருந்துமனவாசை மாசறவேதீர்ந்துதென்று
அந்தமரம்பார்க்கி லச்சுதனார்பள்ளிகொள்ளும்
இந்தமரமாமென் றிறைஞ்சயேதான்பணிந்து
அங்கிருந்தமாமுனியை அடிபணிந்துதெண்டனிட்டு
பொங்கியபூரணமாய்ப் பூரித்தகமகிழ்ந்து
அந்தவனங்கடந்து அப்பாலும்நன்றாக
இந்தநல்லமூவ ரொண்பதுயோசனைதூரம்
போனார்களப்பாலும் போரவழிதனிலே
தேனாருஞ்சோலையிலே சிறந்தகருமேகமென்ன

வாரணம்போலெதிரே வந்துமுன்னேதோன்றிநின்று
காரணமாய்மூவிடமுங் கனகமதம்பொழிந்து
பாரைப்பிளக்கும் பகர்மலையைத்தான்போக்கும்
காரிவிடியேறெனவே கதித்துவாய்விட்டலறும்
சினத்துமதமீறித் திடுக்கிடவே தான்வெகுண்டு
வனத்தையழித்தெதிரே வந்ததுவேவாரணமும்

வேழமாய்வந்த விப்பிரற்கு வீமனால் விமோசனமானது

வந்தமதயானையுந்தான் மன்னவர்கள்தன்மேலே
மூந்தச்சினந்து முடுகிவந்துமோதிடவே
தெண்டாயுதவீமன் சினந்துமதயானை தன்னை
அண்டாதடித்து அவ்லதமதால்மஸ்தகத்தில்
குத்தியிருகையாற் கொம்பிரண்டையும்பிடித்து
வெற்றிமதவீமன் மெலிவுசெய்யமாட்டாமல்
நிற்கின்றான்கண்டீர் நெடியோன்மகிமையிது
எய்கிறான் தம்பி யிந்தமட்டும்யானைதன்னை
விட்டுநின்றபோதே விஜயனேகாரணந்தான்
கிட்டுகின்றநாளாச்சு கெம்பீரந்தான்போச்சு
சிராகநம்முடைய தேசம்விட்டுவந்தபின்பு
பாராய்வலுவீமன் பராக்கிரமந்தான்போச்சு
பாரதப்போரதனிற் பகதத்தனேறிவந்த
வீரமுள்ளயானைதன்னை வீமனிவன்கையாலே
சுக்கிரதீபமதைச் சுழற்றியேதானெறிய
சக்கிரவர்த்திமன்னர் தன்னிலும்நூறாயிரம்பேர்
அன்றெறிந்தபோதின்னம் அந்தரத்தில்நின்றிலையோ
இன்றெறியும்போதுபல மெங்கேயொளிந்ததென்று
சொல்லுகின்றபோதுமத யானைத்துதிக்கைதனை
வெல்லுமதவீமன் விரைந்துசென்றுதான்பிடித்து
கடியமதயானைக் கழுத்திலேதானேறி
மடிவுதொரட்டிகொண்டு மத்தகத்தில்குத்துகையில்
கையில்தகந்தன்னாற் கதறவேதானமுத்தி

னையவொருசாரி நடத்திவைத்தார்வீமனுந்தான்
விந்தையுள்ளதன்மர் மிகமகிழ்ந்துகொண்டாடி
கந்தமாதங்கானங் கடுகியளவாக
உல்லாசயானைதனை யுகந்துநடத்துமென
அப்பெரியவேழம் யானையுருத்தான்மாறி
செப்பெரியவேதியன்போற் சிறந்துநின்றனம்மானை
இந்தமகிமையிது ஏதென்றுதன்மருந்தான்
வந்தவகையேது மறையோனேசொலலுமென்றார்
அந்தமறையோனுரைப்பான் அவன்வந்தசெய்திதனை
சிந்தைமகிழ்ந்து சிறந்ததன்மரேகேளும்
அங்குஷ்டமாயிருக்கும் அகஸ்தியமாமுனிவர்
தங்குசிவபூசை தானேமுடிப்பதற்கு
நந்தவனந்தன்னில் நறுமலர்கள்நான்கொய்து
விந்தைமலர்வாவி விரைந்துநான்சொல்லுகையில்
ஓதிமரங்களிரண்டும் ஊடுதல்செய்தேயிருக்கும்
சேதிதனைக்கண்டு சிந்தைமயலாகி
காதலுடன்மயங்கிக் கண்குளிரப்பார்த்துநின்றேன்
போதமுனிதன்னுடைய பூசைமுடியாமல்
சாதமிருவேழமெனச் சாபமிட்டாரம்மானை
அய்யாவிச்சாபம் அகல்வதெப்போவென்றுகேட்க
மெய்யாகஉன்முதுகில் வீமன்வந்தேறினக்கால்
மாறுதசாபமது மாறுமென்றார்மாமுனியும்
வீறுனசாபமது வீமரேஉம்மாலே
போனதெந்தனுக்குப் பெருமையுமேயுந்தனக்கு
போறேன்நானென்று புகழ்மறையோன்போனபின்பு
தேறிவழிகூடிச் சென்றார்கள்பஞ்சவர்கள்
வேறேநினைவு விகாரமெல்லாம்விட்டொழிந்து
மாலேசரணமய்யா மாயோனேகாருமென்று
ஆலேதுயிலுகின்ற அச்சுதரேதஞ்சமென்று
கடுகிவனங்கடந்து காவலர்கள்மூவருமாய்
முடுகியேமூங்கில்வனம் மூன்றுயோசனையும்

வாகாகவேகடந்து மகேந்திரமாமலையில்
ஏகாந்தமாகவந்து இருந்துசுனை நீராடி
வந்தசுகமென்று மலைமீதிற்றானேறி
புந்திமிகமகிழ்ந்து புறனென்னுமாமுனியை
பாதம்பணிந்து பரிவுடனே தாலிருந்தார்
ஏது நீரிங்குவந்தீ ரியம்புமென்றூர்மா முனியும்
தாங்கள்வந்தவாறு தன்மர்முனிக்குரைக்க
ஓங்குமுனிகேட்டு உகந்தேதுவார்த்தைசொல்வார்
பேறுகளந்தனக்குப் பெண்களாயிரந்தான்
மாறுமல் நீங்கள் மனமுகந்துஇங்கிருந்து
காடுதனைக்களைந்து காவலரேஇப்போது
நாடுதனையாண்டு நம்மிடத்துவத்தீரே
பெரியவரைச்சேர்ந்தால் பிறைபோலேநாடோறும்
வரிசையாய்த்தான்வாழ்ந்து வாழ்வுமிகவுண்டாகும்
சீர்முனியைச்சேர்ந்தாற் சிறுமைபெருமையதாய்
தார்முனிவன்தான்சொல்லத் தன்மருந்தானோர்வசனம்
பார்முனியேஎங்களுக்குப் பாராசையொன்றுமில்லை
கார்முனியேஎங்களை நீர் கடந்தேறவே நினைந்து
எங்களுக்குவைகுந்த மிருப்பிடமேயல்லாது
தங்குவதுமில்லை தரிப்பதுவுமிங்கிலைகாண்
கஞ்சமலர்ப்பதத்தைக் காணவிடைதாருமென்று
தஞ்சமெனவேமுனியைத் தாளில்மிகப்பணிந்து
பணிந்துவிடைவாங்கிப் பஞ்சவரில்மூவருந்தான்
துணிந்துமிகமன்னர் துபாறவேதானடந்தார்
அப்பாலுங்கானகத்தி லம்பதுயோசனை தூரம்
மெய்ப்பாகவேநடந்து மெல்லடிகள்கொப்பளமாய்
வருத்தமுடன்தானடந்து வடவாலின்கீழிருந்தார்
கருத்துடனே அங்கிரண்டு கன்னியர்களூசியின்மேல்
பாதமதையூன்றிப் பாரில்விழ நீள்சடைகள்
நீளமுடன்தவசில் நின்றூர்கள்கன்னியர்கள்
கன்னியரைக்கண்டு காவலர்கள்தான்பணிந்து

மன்னவரே நீர்தாம் வந்ததுதானேதெனவே
கன்னியர்கள்தான்கேட்கக் கனத்தபுகழ்தன்மரவர்
பன்னியசீர்மாதே பத்தினியேஉத்தமியே
சீரார்குருநாட்டிற் சேர்ந்ததொருஅத்திபுரம்
பாராள்புவிராஜர் பாண்டுமன்னர்தன்புதல்வன்
மருவனையதன்மரென்பார் வாய்த்ததம்பிமார்களிவர்
திருவினையேநாங்கள் செய்தவத்தாலிங்குவந்தோம்
கண்டபோதெங்கள் கன்மமெல்லாந்தான்தீர்த்தோம்
தொண்டர்பதம்பெறவே சொல்லுமென்றார்தன்மருமே
தன்மர்மொழியத் தயவுவந்துகன்னிகையும்
இம்மைதனில்வேணுமென்றதெல்லாமுமக்களிப்பேன்
உங்களுக்குவேண்டியதைஉண்மையாய்க்கேளுமென்றார்
எங்களுக்குவேண்டியது இத்தவமேபோதுமென்றார்
சொன்னவுடன்கன்னிகையுந் தோத்திரமாய்த்தானே
மன்னவரே நீங்கள் வைகுந்தம்தான்பெறுவீர்
ஏகவிடைகொடுத்து ஏந்திழைமார்தானிருந்தார்
அன்றவடந்தன்னி லாழிய நீர்ப்பொய்கையிலே
தீர்த்தங்களாடித் திருநாமந்தான்தரித்து
பூர்த்தியெனவே புகழ்ந்துமனமகிழ்ந்து
மேகமளவாய்வளர்ந்த . வீரமகேந்த்ரமென்னும்
மாகமுயர்மலைமேல் வந்திவர்கள்தானேறி
அங்குள்ளமாமுனிவ ரடிகள்பணிந்தேற்றி
பொங்குநதியாடிப் புண்ணியர்களப்போது
அந்தமலைகடந்து அடவிகளுமேநடந்து
நந்திவளர்கோசமலை நாட்டமுடன்தானேறி
பவளமணிமேனிப் பரஞ்சுடராமாமுனியை
துவளவணங்கித் தொழுதனர்காணம்மானை
அம்மலையில்வாழு மகஸ்தியர்புலஸ்தியரை
வெம்மைவிசுவா மித்திரர்வசிட்டரையும்
ஜனகன்ஜனக்குமரன் ஜனகமுனிதனையும்
மனமருவுங்காலமுனி வாகானகோமுனியும்

சுகருடனேகாசிமுனி சொற்பெரியசீதமுனி
பகருமொருபேர்பெரிய பராசமாமுனியும்
சென்றுவணங்கித் திருத்தாள்சரணமென்று
நின்றுபலகலையும் நேசமுடன்கண்டகன்று
நடந்தார்மலைகடந்தார் நாகமலைதான்தொடர்ந்தார்
அடர்ந்ததொருகாடும் அருவிமலைபலவும்
கடந்துவெகுதூரங் கடுகிநடக்கலுற்றார்
தொடர்ந்துகருடாழ்வார் மலையேறியேகடந்து
மகிழ்ந்துகருடாள்வார் மலையேறியேகடந்து
புகழ்ந்தைம்பதின்காதம் போனார்கள்மூவருமாய்
அவ்விடத்திலுள்ள அதிசயமுந்தான்பார்த்து
எவ்விடத்துங்கண்டதில்லை இந்த அதிசயங்கள்
கண்காட்சியெல்லாங் கண்டோங்களிகூர்ந்தோம்
விண்காட்சிகாணவென்று விரையநடக்கலுற்றார்
நடக்கும்வழியதனில் நல்லமருத்துமலை
அடக்கமாய்நின்ற அதிசயமுந்தான்பார்த்து
தேவர்கள்வந்து திருக்கூட்டமாயிருக்கும்
பாவமெல்லாந்தீர்க்கும் பன்னகசாலையிலே
இருந்துதவிப்பாரி எண்ணமெல்லாந்தீர்த்து
அருந்துநதிமூழ்கி யமுதவற்க்குத்தானூர்ந்து
சிறந்துவளர்ந்தோங்குந் தென்னைவனந்தன்னில்வந்து
துறந்தமுனிவர்பதந் தொண்டுபண்ணியப்பாலும்
சிந்தைமிகமகிழ்ந்து திருமால்தனை நினைந்து
இந்திரலோகமென்னும் ஏர்மலைமீதேறி
செல்லுகின்றபோது சித்தாதிசித்தரெல்லாம்
நல்லவர்களென்று நயந்துமிகவார்த்தைசொல்லி
எங்கிருந்துஎங்குவந்தீ ரிம்மூவர் நீங்களுந்தான்
துங்கமுடிவேந்தர்களே சொல்லுமென்றாசித்தர்களும்
சித்தர்களுங்கேட்கச் சீரானதன்மருந்தான்
அத்தரேநாங்க ளத்தினபுரநாட்டில்
பாண்டுமன்னன்தன்புதல்வர் பஞ்சவர்கள்நாங்கள்

வேண்டுமென்பேர் தன்மர் விஜயனிவன் வீமன்
மாண்டுசகாதேவன் வைகுந்தந்தான்சேர்ந்தான்
மீண்டுநகுலனிப்போ விழுந்தான்மதிசோர்ந்தான்
அஞ்சுபேர் தன்னில் அடியேங்கள்மூவருமாய்
மிஞ்சுமொருவைகுந்தம் வித்தகரேசோவென்று
வந்தோம்வனத்தூடே மலைகடந்து இத்தூரம்
சந்தோஷமாச்சுதுங்கள் சன்னதியைக்கண்டவுடன்
இனிமேற்றுயராம் எத்தனைதானாலும்
பனிபோலே நீங்குமுங்கள் பாததெரிசனையால்
இன்பமுள்ளவைகுந்தம் எத்தனை நாள்செல்லுமையா
அன்புடனேசொல்லுமையா அடியேங்கள்போய்ச்சேர
என்று தன்மர்கேட்க இயல்பானசித்தர்கள்தான்
நன்று இன்றுசொல்லுகிறோம்நன்றாய்கேள்பஞ்சவரே
அந்தரத்திலேதிரிந்து ஆகாசமூடுருவி
தந்திரத்தினாற்குளிகை சாதகமாய் அண்டமெல்லாம்
கெவுனமாயாடியொரு கேசரிமார்க்கமதாய்
மவுனமாய்நான்திரிந்தும் வைகுண்டம்கண்டதில்லை
வைகுந்தம்சுற்றி வருவோம் அடுத்தறியோம்
மெய்கொண்டுதேடி விளங்கிநாங்கள் கண்டதில்லை
அந்தமட்டுங்கண்டறியோம் அச்சுதனை நாம்தாமும்
இந்தமட்டும் நீங்க ளெல்லாந்தலைவெடுத்து
நாடுவிட்டுவந்து நவனாதிசித்தரையும்
காடுதனிற்கண்டீர் கருத்துடனே எங்களையும்
ஈடுமக்குச்சோடு எதிருண்டோமன்னவரே
நீடுபுகழ்வைகுந்தம் நீர்பெருவீர்கண்டீரே
மாயனுடசீர்பாதம் மன்னவரே நீர்சேர்வீர்
தூயதொருதன்மரென்று சொல்லவேகேட்டிருப்போம்
கண்டோமேநாமுங்களையுங் காவலரே இப்போது
விண்டோம்நாமுங்களுடன் மெய்விட்டுவாய்திறந்து
கேதாரம்தூரமல்ல கிட்டச்சமீபமது
பாதாரவிந்தமதிற் பஞ்சவரேசேர்ந்திருப்பீர்

என்றுநவசித்தர்கள்தானேகினர்காணம்மானை
அன்றுதன்மர் வீமனருச்சுனனுமந்நேரம்
செங்கமலமாது சீதைமகாலட்சுமியாள்
பங்கரோதஞ்சமென்று பார்மீதிலேநடந்து
எல்லைகடந்தப்பா லெண்பதுயோசனை தூரம்
முல்லைபூச்சென்பகப்பூ முளரிவனத்தூடே
வில்வவனமும் விளங்குபூங்காவனமும்
தில்லைவனங்கடந்து செழுநதிகள்தான்மூழ்கி
குன்றுபருவதமுங் கொஞ்சரமுந்தான்கடந்து
சென்றுதிருமலைமேற் றீர்த்தங்கள்தானாடி
பற்பலபூவெடுத்துப் பஞ்சவர்கள்பூசைமுடித்து
நிற்பளவிலேவிஜயன் நீலவிழிதான்மயங்க

பார்த்தன் வைகுந்தப்பதவியடைந்தது.

நெஞ்சுலர்ந்துகண்சுழன்று நெடுமால்தனை நினைத்து
குஞ்சரமாமலையைக் குறித்தேநடந்தருகில்
வந்தார்தகைதீர்த்தார் வடவால்நிழல்தனிலே
அந்தமுள்ளபார்த்தனுக்கு அசதிவந்துதோன்றிடவே
காலசந்துகையசந்து கண்ணுமிகச்சுழன்று
மேலசந்துகீழிருக்க மெய்மறந்துநாவரண்டு
அங்கங்குளிர்ந்து அக்கினியுந்தானொடுங்கி
பொங்குஞ்சுவாசம் பொறிகலங்கிமேல்நோக்கி
நாடிதழன்று நரம்புமிகப்பதறி
ஓடியொடுங்கும் உண்மைதனைத்தானறிந்து
நெறிகலங்கும்நெஞ்சை நிறுத்தியசையாமல்
இருநான்கெழுத்தை இருதயத்திலேயிருத்தி
ஒருநான்கெழுத்தை உள்ளடக்கிமேல்நோக்கி
நின்றவெழுத்தைப்பார்த்து நினைவெழுத்திலறிந்து
குன்றெடுத்தமாலே கோவிந்தாவென்றுசொல்லி
அத்தனேயெங்க ளாதிநாராயணனே
நித்தனேபோற்றியிப்போ நீலவண்ணயான்போற்றி

அய்யனைபோற்றி அடியாற்கெளியோனே
வேதன்றனைப்பயின்ற வித்தகரேமெய்ப்பொருளே
பாதந்தனைமறவேன் பச்சைமுகில்மேனியனே
பேயமுலைப்பாலுண்ட பிரானேஉனைமறவேன்
போய்மறலிகையிற் பிடிபட்டுலையாமல்
அண்ணலேஎந்தன் கருத்திலே தானிருந்து
அண்ணலேகாக்க அடியேன்சரணமையா
ஆயனே அச்சுதனே அடியேன்சரணமையா
நேயனேஎந்தன் நெடுமால்சரணமையா
மாலையழகா வடிவழகாமாயழகா
சோலையழகா துணையெனக்கேநின்பாதம்
நம்பினேன்காத்தருளும் நாரணரே தஞ்சமையா
வெம்பியுயிர்மாளாமல் விபரமறிவுடனே
அவதாரம்பத்தும் அடியேன்பணிவிடைதான்
தவமாகவூழியஞ்செய் தாசனென்றுதானறிந்து
பத்தவதாரம் பார்மீதிலேஎடுத்தீர்
வித்தகரேஉம்மையும்நான் விட்டுப்பிரியுந்தேனோ
நாரணரேகேளும் நானவிருத்தம்பாடுகிறேன்
காரணரேகாக்கக் கடவுளரேகண்பாரீர்

விருத்தம்.

கண்ணுங் கருத்து மொன்றாகிக்கவளப்பெறியினு யிர்களைந்து, என்னுமெழுத்து மயாம லெட்டலக்காத் தைப் பிரியாமல், நண்ணுமபரத்தி லனுதினமும் நாரா யணனே தஞ்சமென்றேன், விண்ணும்புவியும் மளந்து நின்ற விந்தைமலர்த்தாள் தருவாயே.

அந்தணர்க்கரசேவேதந் தண்டமே அளவில்லாத
சுந்தரப்புயனே மாலே கருடனின் முடிவேயிப்போ
உந்தனுக்கடயமையா உற்றதோர்வேளை தன்னில்
எந்தனக்காரும்வந் துஏழையேன் மயங்காவண்ணம்.

நாவிற்கமலத்தரசிருப்பில் நடுவேகுடியாயிருக்கினுமெ
னாவிக்குணர்வுதடுமாறி அறிவேகலங்கிமதிமயங்கும்
பாவிக்குனதுதிருமலர்த்தாள் பதிதாமுத்திபெறவுமுயிர்
சீவிக்கும்போதுன்பதவிசேர்ப்பாய்காப்பாய்கோபாலா.

தருமருடனேவீமனையுந் தனியேவிட்டுயோன்வாரேன்
பொருமல்தவிர நீவருவாய் பூததயவுமுனக்கிலையோ
அருமையறிவாய்முன்னிருந்த ஐவருடனேயாமறியும்
பெருமையுனதுபெருமாளே பேசாதோடிவருவாய்.

கலங்கும்வேளைதனக்கிரங்கிக்கலங்காதெனவேபயந்திர
மலங்குமனதுமுகத்திருத்திமயங்காவண்ணவகைகாட்டி
இலங்கும்வடிவையெனக்காக எதிரேவந்துதிருநாமம்
அலங்காளங்களாயிரத்தெட்டரியோம்நந்தகோபாலா

திருவுடிசரணந்தன்னைத் தெரிசனையடி யேற்கிப்போ
குருவடிவாகவந்து கோவிந்தாவென்று சொல்லிப்
பருவடி நீண்டுயர்ந்த பங்கயப்பாதந்தந்தால்
ஒருவடிபோதுமெந்த னுச்சிமேற்பாதந்தானே.

ஏமனுமணுகாதென்னை யிருள்களுமணுகாதிப்போ
ராமனேராமாவென்று நாமமுமறவாதாலே
வீமனுக்கிளையவீரன் விஜயனேசூரனென்பேர்
சாமிசாரதியாய்நின்ற தகமையாலணுகாதென்றேன்.

மூவரும்வந்தோம்வந்தோம் முகுந்தனேவானிலுள்ள
தேவருமறியவந்தோம் சிறந்தவைகுந்தந்தன்னில்
யாவருமறியவந்தோம் அரியபாஞ்சாலிவந்தாள்
நீவரும்நினைவுசொன்னேனெடியமாலருள்செய்வாயே

ஆதியிலுனக்குச்சீஷன் அனுதினம்பிரியாநேசன்
நீதியிலுபாயமாகும் நெறியறிவிவேகிமுன்னே
பாதியுமுனதாய்நிற்கும் பார்த்தனென்றெவருமாய்தல்
சேதியுமறிந்ததந்த கோபனைதிருந்தாள்போற்றி.

கடியமறலிதானேது கமலக்கண்ணனிங்கிருக்க
முடியவினைகளனுகாது முகுந்தாமுகுந்தாகாவாவா
விடியவுதித்தகதிர்போலே விந்தமலராம்வைகுந்தம்
தேடியபதவியுண்டாக்கி நீயேயருள்வாய்கோபாலா.

கதை.

பத்துத்திருவிருத்தம் படித்துப்பணிந்தேற்றி
முத்துத்திருமால் முழுதுமனமகிழ
வாசமுள்ளதூதுவரும் வானவரும்வந்தெதிரே
நேயமுள்ளபார்த்தனையும் நேராகத்தானழைத்து
புட்பகவிமானமதிற் பூரணமாத்தானிருத்தி
செப்பமுடனத்தாத்தோர் சிங்காரமாய்நடத்தி
பொன்னுலகமெங்கும் பூப்பந்தல்தானிரைத்து
மின்னுலவுதோரணங்கள் வீதியெல்லாந்தானமைத்து
தோரணங்கள் நீள்கமுகு சோடித்தார்வானவர்கள்
பூரணகும்பமெங்கும் பூரித்தாரம்பையர்கள்
ஆலத்திகற்பூரம் அலங்கரித்தார்கன்னியர்கள்
தாலத்திருவிளக்குத் தானெடுத்தார்மாதரெல்லாம்
கற்பூரவாசங் கமகமென்றுதான்மணக்க
பொற்புடையவானோர்கள் பூரித்துச்சூழ்ந்து
நாரணனார் தன்பதிக்கு நல்லவழியீதெனவே
பூரணமாய்வானோர்கள் போற்றிமிகத்தழுவி
அசுரர்தனையறுத்து அமரர்பயந்தீர்த்த
விசயரேவானவர்கோன் வேந்தனுடபுத்திரரே
காண்டீபத்தாலசுரர் கட்டறவேவெட்டிமிக
வேண்டியதானவரை மிகமகிழவைத்தோனே
வானவரும்மாதவரும் வந்துமலர்சொரிய
தானவரும்வேதியருந் தனஞ்செயனுமென்பாரும்
அந்தணர்கள்சூழ்ந்துவர அரம்பையர்களாடிவர
கந்தருவர்கிம்புருடர் கணநாதரோடிவர
தேவேந்திரன்புதல்வன் தேர்மீதிலேவரவே

கோவேந்திரனே குபேரனேயென்பாரும்
திக்குவிஜயஞ் செலுத்தினனென்பாரும்
தக்கபுகழ்விஜயன் தனஞ்செயன்காணென்பாரும்
மிக்கபுகழ்பற்குணனும் வீரன்காணென்பாரும்
மைக்கணரம்பையர்கள் வந்துமலர் தூவ
அந்தாதுந்திமிக ளாலாத்தியேந்திவர
தந்திரகின்னரர்கள் சங்கீதம்பாடிவர
சோபனங்கள்சொல்லித் தோகையர்களாடிவர
பூபனருச்சுனனும் புட்பகவிமானமதில்
தேவர்கள்கொண்டாடச் செயசோபனத்துடனே
மூவர்களுங்கண்டு முத்திபெற்றானென்றுசொல்லி
தாமனருச்சுனனும் சந்திரனபோலிந்திரன்போல்
ராமர்வைகுந்தமதில் நாராயணனெனவே
கொண்டுவந்துவானவர்கள் கோவிந்தாவென்றுசொல
விண்டுவுடபதியில் வீற்றிரென்றுவைத்தார்கள்
வந்தானிருந்தான் வைகுந்தந்தான்சேர்ந்தான்
விந்நகோவிந்தபதம் விஜயனுஞ்சேர்ந்தபின்பு
பார்த்தனுயிர்போகப் பார்த்திருந்த தன்மருந்தான்
நேத்திருந்தாரின் றிருக்க நிட்சயமில்லாதவுடல்
காத்திருந்தகாற்று கழன்றோடிப்போனவழி
பார்த்திருந்தநெஞ்சம் பதறுமலுள்ளடங்கி
வீர்த்திருந்தபார்த்தனுக்கு வேணுமென்சாஸ்திரமும்
காத்திருந்துதானிருவர் கைக்கருமந்தான்முடித்து
சிவனேசிவராம திருமகளேகாருமென்று
அவனே அரிராமா அருச்சுனனைக்காருமென்று
தருமருடன்வீமனுமாய்த் தானினைந்துமாயனையும்
திருமாலேஉத்தன் சீர்பாதமெப்போதும்
மறவாமலேநடந்தும் வருவோம்பதிசேர்வோம்
இராமாகவும்முடைய சீர்பாதந்தாருமையா
இத்தரணிதன்னி லிருவோர்க்குந்தான் துணையா
வித்தகரேவந்து வீமனையுமெந்தனையும்

மெய்கலங்கி நில்லாமல் விந்தைமலர்த்தாள்காட்டி
ஐபனேகாத்தருளும் அச்சுதரேவாருமென்று
மெய்யுடையதன்மருந்தான் வீமனுடன்றனெழுந்து
வைகுந்தஞ்சேர வழியேநடக்கலுற்ருர்
ஓங்குமொருபட்சிக் கொருசிறகுவீழ்ந்தாப்போல்
தாங்குமொருசிறகு தனிவீமன் தானுகி
ஒருசிறகுகொண்டு உன்னிவழிநடந்து
நிதில்லா நீள்தருமர் சென்றுர்வனத்தூடே
ஓதரியவீம னெருவனுமேபின்னுக
அன்னவர்கள் நால்வ ரருங்கானிலேமடிய
மன்னவிருவோரும் மாகயிலேதான்சேர்ந்தார்
சேர்ந்திருந்துதாங்கள் தியக்கந்தனைதீர்ந்து
வாய்த்தபுயவீமன் மனதுமிகவுழன்று
தாராருந்தன்மணிட தாளிணையைத்தானேக்கி
சீரானவில்விஜயன் சீவித்தானிவ்வனத்தில்
ஏதையாசொல்லு மெனக்கரிய அண்ணுவே
தீதானபாரதத்தில் தேர்ப்பாகன்ருனுகி
மேகவண்ணன்தேர்நடத்தும் மிகையினுலிவ்வனத்தில்
தேகமதைவிட்டெறிந்து திருமாலிடஞ்சேர்ந்தான்
விசாரமினிவேண்டாம் வீமரேயென்றுசொல்லி
உசாவுதுணை நமக்கு உலகளந்தானுண்டெனவே
சோடிழந்தபட்சிகள்போற் றுயரமெல்லாமுள்ளடக்கி
கேடில்லாமன்னவர்கள் கிஞ்சுகவனந்தனிலே
கூடியேசென்று குமுதமலராறுதன்னை
நாடியேபாதை நடந்துவெகுதூரம்
தொடர்ந்துவனங்கடந்துதொண்ணூறுயோசனைதான்
நடந்துமலைமீதில் நாற்பதுயோசனை தூரம்
உத்தகருமலையும் ஓமகிரியென்னுமந்த
அந்தகிரிமலையு மங்கவர்கள்சென்றுகண்டு
சராசரமாமலையுந் தாங்கள்மிகக்கடந்து
வராகிமலைதன்னில் வந்தடைந்தாரம்மானை

வாரகமாய்வந்த மறையோனுக்கு வீமனாற்சாபந்தீரல்.
நன்றியுள்ள தன்மரின்மேல் நாடிச்சினமெழுந்து
பன்றியொன் றுலந்து பாய்ந்து தட்டிமோதுகையில்
பரிந்துமிகவீமன் பன்றிதனைப்பிடித்து
தெரிந்துகழுத்தைத் திருகுமந்தவேளையிலே
வேதியன்போல் நின்றான் மிகமகிழ்ந்துபன்றியுந்தான்
நீதியுள்ள தன்மர் நீனைவேதெனக்கேட்க
ஓதுவான்வேதியனு முள்ளபடி தப்பாமல்
சாதுவுள்ள தன்மர் தான்கேட்கவேதியனும்
கருதித்தவம்புரியுங் கார்மேகமாமுனிவன்
பருதிக்கவசம் பருவதத்தின்மேலிருப்பேன்
தக்கதொருவேள்விக்குச் சமிதைமிகவெடுக்கச்
சிக்கனவேவாவென்று செப்பினார்மாமுனிவர்
சமித்தெடுக்கப்போகத் தாமதமாய்ப்போச்சுதென
குமித்துமிகக்கோபங் கொண்டெழுந்துமாமுனியும்
இச்சாபமிட்டார்காண் ஏன்வடிவாகவேதான்
அச்சாபந்தீர்ப்பதெப்போ தருளுமென்றுதான்கேட்க
தன்மருடன்வீமன் தனித்துவரும்வழியில்
மின்மருவுந்தன்மனா நீ வேகித்தெடுப்பளவில்
வலுவீமன்கையால் வாரிப்பிடித்துன்னை
தலையைத்திருகவுமே தான்தீரும்சாபமென்றார்
ஆனதினாற்சாப மகன்றதுகாணம்மாலே
வானவர்கள்வைகுந்தம் மன்னவரேசேருமென்று
போனான்மறையோனும் புகழ்பெரியகானகத்தில்
தேனாருந்தன்மர் சிவனேசிவாயமென்று
இந்த்ரகிரிசந்த்ரகிரி யென்னுமொருமாமலையில்
அந்த்ரகிரிவானமலை யப்பாலுந்தான்கடந்து
ஓங்கிவளர்ந்ததொரு ஓமகிரிதான்கடந்து
மூங்கில்வனங்கடந்து மூப்பதின்காதவழி
பாங்குடனேபாதாளம் பட்டுருவப்பாதைவழி
தேங்குபிலத்துவாரத் திசைகடந்தப்பாலும்

வெளியேறிவந்தார்கள் வீமருடன் தன்மருமாய்
வழிகூடியேகடந்தார் மலைகள்வனங்கடந்தார்
இப்பாலிருநூற்றெண் பதுயோசனை தூரம்
மெப்பானகாட்சிகளும் வேணதெல்லாம்தான்பார்த்து
சோமகிரிகண்டு தொழுதங்கடிபணிந்து
நேமமுடன்கானகத்தில் நெடியோனையுள் நினைத்து
காரணமாகவேவளர்ந்த காடுதனிலேநடந்து
பூரணமாயிருந்த புட்கரணிதானுடி
கீர்த்திபெருஞ்சக்ரகிரி கிரவுஞ்சமாமலையும்
கார்த்திகைமாமலையும் கடம்பவனந்தான் கடந்து
இப்பாலிருவருந்தா னிருபதுயோசனை தூரம்
அப்பாலுந்தான்கடந்து அகன்ருர்காணம்மானை
அவ்வனத்திலே நிமித்த மார்பரித்துத்தான்கூற
இவ்வனத்திலே நிமித்த மென்னவென்றுபார்ப்பளவில்
தாராரும்வீமனுக்குச் சக்கரமுமாச்சுதென்று
நேராகவே நிமித்தம் நிச்சயமாய்ச்சொல்லுதென்று
தன்மாறிந்து தனியானேனென்றுசொல்லி
இம்மைதனிலெல்லா மிழந்தோமேயென்று தன்மர்
விந்தையுள்ள தம்பி வீமரோஉந்தனுக்கு
அந்தியகாலஞ்சரியா யாச்சுதென்று தபனுரைக்க
பாரியசொல்வீமன் பட்சமுடன்தன்மரையும்
ஆரியரே அண்ணுவி அடியேன்சொல்விண்ணப்பம்
உம்மைத்தனியேவிட்டு உடமிழந்துதான்போக
கன்மமதுசொல்லக் கவலைதொலையாது
இறப்பதுவும்மெய்யாகும் இருப்பதுவும்பொய்யாகும்
சிறப்புடையவைகுந்தஞ் சேர்வதேஉண்மையென்று
எமக்குப்பயமில்லை என்னுடை அண்ணுவி
உமக்காகவேமனது உழன்றதுவேயல்லாமல்
வேறேகவனம்விளைவுசற்றுமில்லையையா
கூறேனெருவார்த்தை கோவிந்தனேசரணம்
தனியென்றுசொல்லிச் சலியாமல் நீர்தாமும்

இனியவைகுந்தமது இப்போதேசேருமென்று
கண்ணர்தனை நினைத்து கருத்திற்றியானமதாய்
எண்ணமற்றண்ணரே நீ ரிருமென்றுவீமனுந்தான்
சொல்லும்பொழுது சோத்தியமும்வந்ததுவே
மல்லுப்புயவீமனுக்கு மதிமயக்கம்வந்தவுடன்

வலுவீமன் வைகுந்த மடைந்தது.

ஐம்புலனையுள்ளடக்கி அறிவைமிகத்திருத்தி
சென்மமதுமாயன் திருத்தாள்சரணமென்று
அரிநமோவென்று அஷ்டாக்கரன்தனையும்
பிரியாமல்நெஞ்சில் பிடித்தான் திருவிருத்தம்

விருத்தம்.

அய்வர்க்குஞ்சகாயமுன்னு ளடைக்கலங்காத்தமாலே
தெய்வர்க்குத்தெய்வமாகித் தேவனுயிருந்தமூர்த்தி
உய்பவர்க்கருளிதென்றே உள்ளத்திலன்புகாட்டி
மெய்வர்க்கமாகிநின்ற வேதநாராயணரேபோற்றி.

அருமறைப்பொருளேவுன்னை படைந்தவரைவரன்றோ
திருமறையுடையாய்நால்வர் திருவடிசரணமுற்றோம்
தருமரும்பிறகேவாரார் தனிவழித்தனியனுகி
வரும்வழிபயமில்லாமல் மாயனேவந்துகாரும்.

இன்பமும்பொருளும்நீயே இகபரசுகமும்நீயே
அன்பருக்கன்பன்நீயே அச்சுதாபச்சைமாலே
அன்பமுமிகழ்த்துநாயேன் சுருதியேபொருளதாக
நின்பதந்தேடிவாரேன் நெடியவாபோற்றிபோற்றி.

அருந்தவர்க்கெட்டாமூலம் அனுதியாமனுதிமூலம்
பொருந்தவர்நெஞ்சந்தன்னிற் பூரணமானமூலம்
திருந்தவெட்டெழுத்தாமூலஞ் செகதலமளந்தமூலம்
வருந்தவேவந்தமூலம் வைகுந்தமூலந்தானே.

மாருதப்ரசண்டகோர வாயுவின்புதல்வன்வாரேன்
பாரதப்போர்முடிந்த பாரியவீமன்வாரேன்
நாரதப்பிரியரான நாராணநந்தகோபா
வாரிதிசயனத்தானே மாயனேபோற்றிபோற்றி

கத்தனேகரியமாலே காரணசிவந்தபாதா
முத்தனேமுதல்வாபச்சை முகுந்தனே நந்தகோபா
அத்தனே அடியேன்வீமன் அடியிணைதொழுகவாரேன்
அத்தனேசுவாமிநாதா அரிகரிராமநாதா

அளவில்லாநந்தநாதா அரிகரிராமநாதா
களவினால்வெண்ணெயுண்ட கரியவாபெரியமாலே
துளபமேஅணியுமூர்த்தி சோதியேசுருதிவாழ்வே
தவளமேகளபவாசா ஜானகிநேயாபோற்றி

அஞ்சினுக்கஞ்சாய்மூன்று யகண்டமாயருளிநின்ற
கஞ்சமாமலர்த்தாள்காணக் கருதியான்வருகுநேரம்
துஞ்சலாய்மலையாவண்ண நதுணைப்பதமருளியென்றன்
நெஞ்சமேபுகுந்துகாக்க நீலமாமுகிலேபோற்றி

காணவுங்கடவதாகக் காட்டவுமிருதாள்தன்னைப்
பூணவும்பணிவதாகப்பொருளெனச்சிரமேற்கொள்ளத்
தோணவும்வருவாய்மாயைத் துயரறக்களைவாயெந்தன்
நாணமுமகற்றிச்செவ்வை நடத்துவாய்கரியமாலே.

முன்னாள்முதல்வாமுகில்வண்ணா முகுந்தநந்தகோபால
உன்னாளாகியிருந்தபடியேயுடலேபிரிந்துஉயிர்பிரிந்து
என்னுள்வந்தபடியாலே இப்போவந்தேன்வைகுந்தம்
தன்னுளெனவேதற்காக்கச் சரணஞ்சரணங்கோபாலா.

அங்குசக்கரனேபோற்றி அரிநமசிவாயாபோற்றி
சங்குசக்கரனேபோற்றி சங்காதரனேபோற்றி
எங்குமாய்நின்றாய்போற்றி ஏழைபங்காளாபோற்றி
பொங்குபூரணனேபோற்றி பூமகள்கணவாபோற்றி.

கதை.

ஆயனே அச்சுதனே அண்டர்பெருமானே
நேயனேபாண்டவர்க்கு நீதியாய்நின்றோனே
கண்ணகத்துள்ளே கண்மணியாய்நின்றோனே
விண்ணகத்துக்கெல்லாம் மெய்ப்பொருளாய்நின்றோனே
எனக்குவருமயக்கம் இறுதிமுடிவாகி
உனக்கபயமென்று ஓதினேன்நான்விருத்தம்
கடைக்கண்ணிருளாகிக் காதோதான்வேறாகி
படைக்கலமுங்கையமர்ந்து பாயுமுடல்வீழ்ந்து
அடைக்கலமென்றுந்தனியே அடியேன்மிகநினைந்து
வந்தாலடியேற்கு வைகுந்தந்தானருளி
தந்தருளவேணுஞ் சரணஞ்சரணமையா
பொய்கண்டநெஞ்சன் புலையனடியேனை
வைகுந்தஞ்சேர்த்து வைத்தருளுமாயோனே
பஞ்சாயுதத்துடனும் பசுந்துளபமாலையுடன்
கஞ்சமலர்மாதுறையுங் கனத்ததிருமார்புடனும்
செம்பொன்மணிமாலையுடன் சிறந்தபசுமேனியுமாய்
ஐம்பொன்முடியிலங்க அழகாயடியேன்முன்
ஆடுங்கெருடனரியதொருவாகனத்தில்
நீடுந்திருக்கோலமுடன் நீரிங்கெழுந்தருளி
அடியேன்தனைப்பழைய அடிமையாயாண்டுகொண்டு
படியாளும்வைகுந்தப் பதிதனிலேவைப்பீரென்று
கட்டழகன்வீமன் கருணைக்கடலாகி
எட்டெழுத்தையுச்சரித்து இறைஞ்சினனம்மானை
மேகவண்ணர்தன்பதத்தை வீமனுந்தானுச்சரிக்க
தாகமுடனிமையோர் தங்கள்விமானமதை
கொண்டுவந்துவீமனையுங் கூப்பிட்டதிலிருத்தி
விண்டுசங்குசின்னம் மேளம்பலமுழங்க
பைகொண்டநாகப் படத்தின்மேற்பள்ளிகொண்ட
வைகுந்தன்வாழ்பதியில் வைத்தனர்காணம்மானை
வீமன்வைகுந்தம் விரைந்தேகிப்போனபின்பு
தாமன்தருமன் தனியாகிஉள்ளுணைந்தார்

தருமர் தம்பிமாரை நினைத்துப்புலம்பல்.

வெம்பிமனமுடைந்து வெந்தமனம்புண்ணுகி
தம்பியரைக்காணுத தனிமையதுமிகுத்து
வீமாவிஜயா மிகுந்தசகாதேவா
தாமாபரிநகுலா தம்பியரேயென்றழுது
கர்ணர்தனையறிந்து கவலையெல்லாந்தான்தீர்த்து
எண்ணமெனஎண்ண வெம்பெருமாளுண்டுமென
இன்றைக்கிருப்பதுபொய் என்பிறவிஎன்பதும்பொய்
அன்றைக்கிருந்தபடி யல்லாதுவேறுண்டோ
பூமிதனில்வந்துபிறந்தோம் புவியாண்டோம்
சாமிதிருமால் சகாயமதுபெற்றிருந்தோம்
ஐவரென்றுபாரி லரசராய்த்தாமிருந்தோம்
ஐவரிலேநால்வ ரகன்றூர்கள்தம்மைவிட்டு
ஏதுசெய்வோமென்று இடைத்துருகிநொந்தாலும்
மாதுமலரோன் வகுத்தப்படியாமிவுதும்
விட்டுப்பிரியாத வீமனருச்சுனனும்
மட்டுப்படாநகுலன் வாய்த்தசகாதேவன்
மாண்டுவிட்டாரென்று மயங்கியழுதாலும்
மீண்டுந்திரும்பி விரைந்துவந்துநிற்பாரோ
இந்தமயக்க மிருந்தாற்பரலோகம்
வந்தெய்தமாட்டாதே வைகுந்தமிப்போது
என்றுதன்மர்தேறி யிருந்துதகையாறி
அன்றுதம்பிமீமனுக்கு அழகாகத்தானிருந்து
செய்யுங்கருமமெல்லாஞ் சீக்கிரமாய்த்தான்முடித்து
உய்யும்பொருள்நமக்கு உலகளந்தானுமெனவே
சிந்தைதனிலெண்ணித் திருமாலைத்தானினைந்து
சந்தைஜனக்கூட்டம் தானிந்தவாழ்விதென்று
நடந்துவனத்தூடே நாரணரேதஞ்சமென்று
கடந்துவெகுதூரம் கைவிட்டசூத்திரம்போல்
திகைத்துமருகித் திசையறியமாட்டாமல்

வகைக்குவகையீதெனவே வகைசொல்லும்தம்பிதனை
விட்டுப்பிரிந்து வெறிகொண்டபித்தரைப்போல்
தட்டுப்பட்டுநின்றலையுந் தாயில்லாக்குஞ்சதுபோல்
முன்னேவல்செய்ய முன்னேவழிகூடி
பின்னேவல்செய்யப் பிறவிதனைக்காணுமல்
வானகத்தைப்பார்த்து மயங்கிவழிதிகைத்து
கானகத்தைப்பார்த்துக் கவலைபெரிதாகி
இறகுதிர்ந்தஈக்களைப்போ லேங்கிமனமுழன்று
பிறவிமயக்கம் பிரமமதுதான்பிடித்து
வாசமுள்ள தன்மருக்கு மயக்கம்வந்துமூடியபின்
நேசமறந்து நினைவுதடுமாறியபின்
மெய்மறந்துகாலசந்து வேறுபட்டமானதுபோல்
கைமறந்துவாய்மறந்து கண்ணிரண்டுமேமாரடைந்து
நாடிழுந்தேயிந்த நடுக்கம்பிடியாமல்
சோடிழந்துநின்ற துயரமேதான்பிடித்து
நல்லறிவுகுன்றி ஞானம்மிகமறந்து
புல்லறிகொண்டு புலம்புவார்தருமருமே

கொச்சகம்.

அந்தரமேயேகவெளி யம்பரமேமங்குல்களே
சந்திரனேசூரியனே தம்பிமார்நால்வருந்தான்
இந்திரனேஇறையவனே எந்தவழிவந்தார்சொல்
செந்திருமால்வைகுந்தஞ் சேர்ந்தாரோசேரலையோ.

பாரேபருவரையே பனிமலர்கள்செண்பகஞ்சேர்
மேரேபரிமளமே மேதினியிற்கானகமே
சீரேசிறந்துபொங்குஞ் சிந்துநதிகாவேரி
வீரேளனக்கிளையோன் வீமன்வரக்காணீரோ.

நாகமேநீள்சாரை நற்குணங்குமாவிரியா
பூதமேவானரமே போற்றுஞ்சிறுபுள்ளினமே
காகமேநீலதிறக் கண்ணர்வைகுந்தமதில்
தேகவலுவீமனவ னிங்குவரக்காணீரோ

தேக்காசேபூவாசே தென்னேபுன்னை ஆச்சாவே
பாக்கிப்பைநெல்லிபலா பாதிரியேபோரேலே
நோக்கரியமூங்கில்களே நூதனமோயென்னிளவற்
பாக்கியமேபார்த்தனித்தப் பாதைவரக்காணீரோ.

காட்டுப்புலியே காடிபன்றியாளிகளே
கோட்டுத்திகிரிமதக் குஞ்சரமேஇப்போது
நாட்டும்பரிநகுலன் நாரணரைத்தான்தேடி
மேட்டுக்கிரியேறி விரைந்துவரக்காணீரோ.

ஆடுமயிலினங்காள் அன்னங்காள் கிஞ்சுகங்காள்
நீடுகுயிலினங்காள் நீலவண்ணர் தாமிருக்கும்
வீடுவைகுந்தமென விரைந்துசகாதேவன்
ஓடிவருதைக்காணீரோ உண்மைகண்டாற்சொல்வீரே.

எதறியேன்யானும் இடவலமுந்தானறியேன்
நீதறியேன்பொய்யறையேன் திருவுளமேயல்லாமல்
சூதறியேன்வஞ்சத் துடுக்கறியேன் நீயறியாய்
மாதுறையும்மார்பா நின் வைகுந்தந்தாருமையா.

வைகுந்தம்வைகுந்தம் வைகுந்தமென்றனுக்கு
வைகுந்தமேகெதியாய் வரவும்வரந்தருவாய்
வைகுந்தமென்றொருக்கால் வாயினற்றுரைத்தால்
வைகுந்தமேபெருக மாலருளிச்செய்வாயே.

விருத்தம்.

வழியுந் திசையுந் திசையுமென்று வழிதானறியத் தெரியாமல், விழிநீர்சொரிய மெய்சோர விட்டாய் வெட்டவெளிதனிலே, இளையோர்பிரிந்த நான்முதலா யெளியேன்மனது தெளியவே நீ, அழியாதிருக்கும் பெரியோனே அடியேன் மலையாதருள்வாயே.

இதுவுமது.

உன்னைப்பிரியாதிருந்தோர்கள் எங்கேஎங்கேவத் தார்பார், உன்னைப்பிரியாதேயிருந்தேனுலைமுன்மெழுகு போலுருகித் தன்னைத்தெரியா தலைவேனோதடுத்தாட் கொண்டுவைகுந்தம், பின்னைப்பதவி யெனக்கருகிப் பிரி யாதிருக்கவரந்தாரும்.

இதுவுமது.

தாருமெனக்குச்சீர்பாதந் தமியேன்வழியில்மலையாமல்
வாருமெனக்குத்துணையாக வந்தாளென துயர்தீரும்
ஆருமெனக்குத்துணையில்லை அடியேனொருத்தனுனை
ஞற்காருமுன துபதஞ்சேரக் கண்பார்நந்தகோபாலா.

கதை.

பொருள்மயக்கமில்லை பூமிமயக்கமில்லை
அருள்மயக்கமில்லை ஆயதவத்தாசையில்லை
இருள்மயக்கமாகி யேதுந்தெரியாமல்
மருள்மயக்கங்கொண்டு மனதுமிகவுழன்றேன்
பித்தனைப்போலாகிப் பிரமைபிடித்துழன்றேன்
அத்தன்நெடுமா லரியவைகுந்தமதை
நோக்கிவரும்போது நொந்துமனம்புண்ணாகி
தாக்கிவரும்வினைக்குத் தம்பிமாரில்லாமல்
தனியேவழிநடந்து தானங்கொருவருமாய்
இனியார்தமக்கு எம்பெருமானுண்டெனவே
கங்குல்தனிநிழழிற் கையேதழுவணையாய்
தங்கியேகண்டுயின்றோர் தன்மருந்தானம்மானை

தருமரைச் சர்ப்பம்விழுங்கச் சக்கரமறுத்தது.

சந்துலவும்மன்னவனைத் தானிரையாமென்றுசொல்லி
ஐந்துதலைநாகமது அருந்தியதே அம்மானை
அலையிற்றுயிலுகின்ற அச்சுதநாராயணனர்
தலைநாளுரைத்தமொழி தப்பாமற்சக்கரமும்

மற்றுமொருநால்வர் மடிந்ததன்பின் தன்மரையும்
பற்றுடனேகாத்துவந்த பரிவானசக்கரமும்
வடவாவிற்கண்டுயிலும் மன்னனையேகாணாமல்
அடவாகநாகமதை அறுத்ததுகாண்சக்கரமும்
அரவுதனைப்பிளந்து அடிவயிற்றிலுள்ளிருந்த
தருமர்தனையெடுத்துச் சாந்தமாய் ஆல்நிழலில்
துலுங்காமலேகிடத்தித் தூரநிற்கச்சக்கரமும்
அலுங்காமற்றன்மர் அசதிவெகுநித்திரையாய்
புத்தரவமுண்டதுவும் பூலோகசக்கரந்தான்
அந்தரவுரெண்டாயறுத்தெரிந்துபோட்டதுவும்
சற்றுமறியாமல் தருமருங்கண்டுயின்று
நித்திரையுந்தான்தெளிந்து நிருபனெழுந்திருந்தான்
ஆரறியார்போலே அண்ணல்தனைநோக்கி
ஊரறியார்பாதை யொருவனமாய்த்தானடந்து
கல்லுங்கரடுங் கடியவனுந்திரமும்
அல்லும்பகலும் அயராவழிநடந்து
இளைத்துமலைத்துத் திசைகெட்டமானதுபோல்
தளைத்துத்தனியே தவிப்பாயிளைப்பாறி
பேச்சுத்துணையும் பின்துணையுமில்லாமல்
மூச்சுவிடச்சற்று முற்றுணையுமில்லாமல்
பக்கத்துணையுமற்றுப் பரதேசிபோலாகி
துக்கசுகமின்றித் தொலைதூரந்தானடந்து
உன்னிநடந்துதன்மர் ஒன்பதுயோசனைதூரம்
கன்னிமலைகடந்து கடியவனந்தான்கடந்து
வருணன்மலைகடந்து வாயுமலைகடந்து
தருணநதிகடந்து தவளமலைதான்கடந்து
மிக்கதொருபொய்கை மிகுந்தபெருக்குடைய
புட்கரணிகண்டு புனலாடிப்பூசைபண்ணி
வீமன்விஜயனுக்கும் விந்தைநகுலனுக்கும்
தாமன்சகாதேவனுக்குந் நற்பணமுஞ்சாஸ்திரமும்
சொல்லிமுடித்துச் சூரியனைத்தெண்டனிட்டு

நல்லதம்பிமார்களுக்கு நாரணனாருண்டெனவே
தன்துயரந்தீராமற் றனியேவனத்தூடே
என்துயர்தீர எத்தனைநாட்செல்லுமென்று
சிந்தைதனிலெண்ணிச் சிவனேசிவாயமென்று
விந்தையதுபாருலகில் மேகவண்ணர்தன்கூற்று
பார்க்குமளவிற் பலவிதமாய்மாயைகளாய்
தீர்ககமுடன்தோன்றத் தெளிந்துதன்மரப்பாலும்
மார்க்கமுடன்செல்லும் வழிதனிலேஓர்மலைதான்
ஆர்க்குபுகழரிதா மண்டகடாகமட்டும்
ஓங்கிவளர்ந்துநின்ற உன்னிதத்தைக்கண்டவுடன்
ஏங்கிமலைத்துநின்று இதுக்குவழியெங்கேயென்று

வழியில்வளர்ந்தமலையை அழியச் சக்கரமகற்றியது.

நாலுதிக்குமோடி நன்றாக ஆராய்ந்து
காலுக்கெடுத்தூரமெல்லாம் கடவுசற்றுமில்லாமல்
வெம்பியழன்று மெய்மறந்துதன்மருந்தான்
தம்பியரில்லாதிடத்தே தாழ்வுவந்ததென்றுசொல்வி
என்செய்வேன்கோபாலா எவரிடத்திற்போயுரைபேன்
முன்செய்ததீவினையோ மூதாக்கள்செய்ததுவோ
ஏதுமயக்கமினி யென்செய்வேனந்தாத்தில்
வாதுமயக்கம் மதிமயக்கம்மால்மயக்கம்
சூதுதிருமால் சோதனையாலிம்மயக்கம்
இப்படியேயென்னை யிடறுபண்ணிப்பார்ப்பதுவும்
அப்படியுமாலே அடியேன்மலையேனே
கண்ணாவுனக்கபயம் கானகத்திலாருமில்லை
அண்ணாவுனக்கபயம் அருகேஒருவரில்லை
அனந்தாசயனா அபயமுனக்கபயம்
வனந்தனிலேவந்த வழிமயக்கந்தான்தீர்த்து
அபயமென்றசத்தம் அச்சுதற்குக்கேட்கலையோ
உபயகரச்சக்கரந்தா னொளித்தோடிப்போனதா
சங்குத்தொனிபண்ணச் சமயமுனக்கிலையோ

மங்குமதிமயக்கம் வந்துதோஎன்றாலே
ஆயிரநாமா அசந்துதோவென்றாலே
பாயிரமாம்பாயலிலே பள்ளிகொள்ளப்போனீரோ
உன்சித்தமென்று உன்னைநம்பிவந்திடத்தில்
என்சித்தமேகலங்க இப்போதிடைவழியில்
தம்பியருமாண்டு தட்டழிந்துநான்தானும்
வெம்பிமுகம்வாடித் தவிப்பதறியீரோ
நம்பினேனுன்னையென்று நானவரவும் நீர்தானும்
வம்புசெய்துமென்னை மயக்குவிக்கலாமோதான்
மனதுதிடமறிய வழிமயக்கியிப்போது
தனதுநிலைக்குரிய சமர்த்தரிவேணுமென்று
சித்தமேயல்லாது செயல்வேறுமில்லையென்று
சுத்தமாய்த்தன்மர் தோத்திரங்கள்பண்ணியபின்
காத்திருந்தசக்கரமும் கண்ணருடஏவலினாற்
பேத்தெடுத்துமாலையைப்பெருங்கடலிற்போட்டது
ஏகவெளியாக இடையூறுதான் நீங்கி
போகவழிகண்டு பூரித்தகமகிழ்ந்து
வேகமுடன் தன்மர் விரைந்துவழிகூடி
தாகமுடன்நாற்காதந் தாண்டியே அப்பாலும்
அஞ்சனமாமலையு மதிலுள்ளகுன்றுகளும்
கஞ்சமலர்வாவிகளும் கண்டுபுனலாடி
மஞ்சலவுசோலை வனமும்பலகடந்து
பஞ்சமலநீங்கும் பாரமலைகடந்து
சென்றார்வழியூடே சீரானகானகத்தில்
நின்றார்திகைத்து நெடுமாலெனக்கூறி

தருமர் புருஷாமிருகத்தைக் கண்டது.

காட்டகத்தில்வாழுங் கடியபுருஷாமிருகம்
கேட்டவுடன்வந்து கிருபையுடன்தன்மரையும்
ஆரெவர்தானென்று அறிவுடனேதான்கேட்க
நீரே இனிக்கேளும் நீதியுடன்சொல்லுகிறேன்

அத்திபுரநாட்டி லானதொருபாண்டுமன்னன்
புத்திரனானதன்மர் புண்ணியரே நீர்கேளும்
காசினியிற்காலங் கலியுகமும்வந்ததினால்
தோசிக்கலியன் தொடாமல்நாங்களுந்தான்
பாஞ்சாலிதன்னுடனே பஞ்சவர்களைவருமே
வாஞ்சையாஎட்டெழுத்தை மறவாமலே துதித்து
வந்தோம்வனத்தூடே வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாகவந்த தம்பிமார் துரோபதையும்
மாண்டிறந்துமுன்னே வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
ஆண்டிபோல்நானும் பரதேசியாகிவந்தேன்
தனியொருவனாகிச் சலசமிளைத்தண்ணீர்போல்
இனியொருவர்காணாம லிங்குவரவுன்னையுந்தான்
கண்டேனெனக்குக் கவலையெல்லாந்தீர்ந்ததென்று
விண்டேபுருஷ மிருகந்தனக்குரைக்க
கேட்டுவனுமிருகங் கிலேசமிகவுண்டாகி
நாட்டுபுகழ்தன்மரேவுன் ஞாயமதுக்கொப்பாக
இப்புவியில்யான்காணே னிங்குவந்தீர் நீர்தனியே
ஒப்புடையவீம னுயிர்த்துணையாமெந்தனுக்கு
வீமனிறந்ததொரு விசாரமெனக்காறுது
நேமமுன்னீர்தான் நீதியாயெங்களுக்கு
முன்னுள்வழக்கு மொழிந்ததறியேனோ
இன்னுனைமறந்தா லீடேறமாட்டேனே
நீதியுள்ளதன்மரிங்கே நீர்தனியேவந்தீரோ
ஆதிச்சிநேகமதை மறக்கவேமாட்டேன்யான்
வருவேன் துணையாக வைகுந்தஞ்சேரமட்டும்
குருவேசரணமென்று கோலியேபின்னாக
வாரமிருகமதை வகையுடனே தன்மருந்தான்
தேரவேசிந்தை தெளியவே ஆதரவாய்
எந்தன்மனந்தேற்றி யித்தூரம்வந்தீரோ
சந்தோஷமாச்சுதினித் தாயே நீபோவெனவே
தன்மனிவையுரைக்கத் தனிமிருகமேதுசொல்லும்

இம்மைதனில்வைகுந்த மெவர்சேர்ந்தாரிப்புவியில்
நன்மைதீமைரண்டும் நாட்டிலனுபவித்து
ஜென்மங்களையேறச் செய்வார்கள்தான் தருமம்
வைகுந்தஞ்சேர்ந்து வாரியெடுப்பதென்ன
கைகண்டதோர்பலந்தான் காவாதான்தாரேன்
அரசபதிலோக மடங்கலுமேஉண்டாக்கி
விரசுமுடிசூட்டி வேந்தனைப்போலிங்கிருக்க
வைக்கிறேனும்மை மன்னவனே நீயிரென்று
தக்கபுருஷா மிருகமதுதானுரைக்க
நல்லதென்று தன்மர் நகைத்தேது செப்பலுற்றார்
அல்லவேயெந்தனுக்கு அன்பாக நீருரைத்தீர்
சொல்லவேகேளுந் தொல்லுலகம்விட்டகன்றேன்
செல்லவேவைகுந்தஞ் சேரவென்றுயான்போரேன்
நில்லென்றுசொல்லி நிறுத்துவ துனக்யமல்ல
தம்பியர்தாஸ்மாண்ட சலிப்பொன்றும்பாராமல்
நம்பியெனையாசு நாட்டுகிறேமென்றுமே
நந்தகோபாலர் நரசிங்கரூபனையே
எந்தவிதமானுலு மேகவழிநடந்து
விஷ்ணுபதஞ்சேர்ந்து மெய்மகிழ்ந்தனுதினமும்
கிருஷ்ணரவரோடென் கிலேசமெல்லாந்தானுரைத்து
பாதம்பணிந்து பரிவுடனேபோற்றிசெய்து
நீதமுடனென்னை நீயனுப்பவேணுமென்று
புருஷாமிருகமுடன் போதனையாய்ச்சொன்னவுடன்
புருஷாமிருகமது புகழ்ந்துமேதன்மரையும்
பாங்காகப்பின்தொடர்ந்து பாதைவழிகூட்டி
நீங்காமலெங்கும் நெறியுடனேதானடந்து
ஸ்ரீராமர்வைகுந்தஞ் சேர்த்திருநீரென்றுசொல்லி
போராமல்மாமிருகம் பிரியமுடன்றன்றழுவி
போமென்றுசொல்லிப் புருஷாமிருகமது
நாமொன்றுசொல்லுகிறோம் நல்லவைகுந்தபதவி
மெத்தச்சமீபமது விசாரமினிவேண்டாங்காண்

கத்தனுடசீர்பாதங் காண்பீரெனவுரைத்து
அனுப்பியேவல்மிருகம் அருங்கானில்போனதுவாம்
தனுப்போலுந்தன்மர் தருகாமலேநடந்தார்
அரியதிருமாலே அருகாகஎன்னுடனே
பிரியாமல்நேரே பின்னே துணையாக
வரவேணுமையா நீ வைகுந்தவாசகரே
தரவேணுஞ்சீர்பாதந் தரவேணுமென்றுதன்மர்
நடந்தார்திசைநோக்கி நாற்பதிங்காதவழி
கடந்தார்வெகுதூரங் கண்ணாரேதஞ்சமென்று
கங்காதரனை காளகண்டநாகமென்னும்
சங்கரனுர்தாமுறையும் சத்திசித்திமாமலையும்
அன்புதிரிகோணமலை யருகாகவந்துநின்று
என்புருகிநின்று இறையோனைநெஞ்சில்வைத்து

விருத்தம்.

ஆசையிருந்த பொய்க்கூடை அடருங்காமபோகவிஷத்தை ஓசையிருந்த துருத்திதன்னை உடைந்துவழியுங்கிருமியுடன் வாசமிகுந்தமலசலத்தை மருவியடியேனித்தூரம் பாசமுடிந்த பருஞ்சுமையைப்பார்த்தேசெலுத்தவருவேனே.

இதுவுமது.

எல்லா முனதுசெயலாலே ஏகவெளியுந்தானுகி, நில்லா நிலையில் நின்றேனே நினைவில்நடுவேயசையாமல் அல்லாலொருவ னுண்டெனவே அடியேன்மனதிலனுதினமும், சொல்லால்பெருமைதனையடையச்சுமையோடவடம் பெறுவேனே.

இதுவுமது,

பிறவித்துணைகள் தனையிழந்து பொய்போற்றனியே கானகத்தில், அறவேமனது தடுமாறி அடியேன் தெளியாதுழன்று நெடுந் திறவுதனையேபொருளெனவே சிவ

னேவுந்தன் கிருபையினால், உறவாம்பெரிய வைகுந்தம் உடலோடவிடஞ் சேர்வேனே.

ஒன்றாய்ரண்டாய்மூன்றாகி ஓரஞ்செழுத்தாய் உருப் பலவாய் நின்றாயகண்ட வெளிதானாய் நிலக்குஞ்சுத்தப் படிகமதாய், நன்றாயொளிவுக் குள்ளொளியாயநடனம் புரிந்தபெருமானே என்றாலடியேற் கிரங்கியிப்போ திறைவாவென முன்வருவாயே.

கோலத்துடனே அடியேனுங் குருநாடதனை விட் டேகினாலத்துடனே துயரமெல்லாம்நன்றாய்க்கழித்து வழிதோறும் தூலத்துடனேவைகுந்தஞ்சொர்க்கபதவி தான்சேர ஆலத்துடையார் துணைசெய்வா யானேயா னுன் னடைக்கலமே.

வந்தேனுன துதிரிகோண மலையினருகேதானிருந் து, செந்தேனொழுகும் நதிமூழ்கிச் சிவனே சிவனே யெ னத்தொழுது, நொந்தேன் திகைத்து வழிதேடி நோன் புவிரதம்பறவாமல்,உந்தேனுந்தன் மலர்த்தாளே உத வி யெனக்குத்தருவாயே.

வேறு.

மாரனையெரித்தகண்ணும் மான்மழுதரித்தகையும்
வீரனைத் துணித்தவாளும் விடமுண்டகந்துங்காலக்
கோரனையுதைத்ததாளும் குஞ்சரமுரித்துப்போத்துஞ்
சீரினைத்தெரிவேன்வந்தாள் சிவசிவநமசிவாயா.

என்றுமழியாப் பொருளாகி ஏகபரமுந்தானாகி அன்றுமுதலாயின்றளவும் அணுவுக்கணுவா யுள் ளாளியாய் நின்றுகொடிய புவனமெல்லாம் நீயாயிருந் தபரஞ்சுடரே, ஒன்றுமறியே னுமைபாகா உடையா ருடைய படிகாரும்.

காசினில்தன்னை வாழ்ந்து கன்மபேமிகவுஞ் செய்து
பாசிநீர்போலேயானும் பாலரவிட்டகன்றுசெல்வே

தேசிகனாகியிந்தத் தேகத்தைச்சுமந்துகொண்டு
வாசனையுடனேயுந்தன் மலரடிபெறவாறேன்
மாயனார்வாழுகின்ற வைகுந்தந்தன்னிலென்னை
ஆயனோடருகிருக்க அருளியேகடாட்சந்தம்தாரும்
தூயனே நமசிவாயா சோதியே ஆதிமூலம்
நாயனே துணையதாக நடத்துவாய்நமசிவாயம்

தருமருக்குப் பரமசிவன் தரிசனமானது.

தொழுதுவிருத்தம் துதித்தவுடனே ஆரனார்
முழுதுமனமகிழ்ந்து முன்னின்றனம்மானை
கண்டாரனார் தம்மைக் கருணைவிழிகூரத்
தெண்டனிட்டுக்கண்குளிரச் சிந்தையகமகிழ்ந்து
மாயனுங்காணாத மலரடியை நாயேனும்
காலடிகள்கண்டதினாற் காண்பேன்வைகுந்தமென்று
சங்கையில்லாதேதருமர் சரணமெனத்தொழுதார்
கங்கைசடைக்கணிந்த கறைகண்டருடமகிழ்ந்து
மாயவரை நீகாண்பாய் வைகுந்தந்தான்பெறுவாய்
என்றுசிவருத்திரனா ரிவன்பேரும்யோகரிஷி
அன்றுபட்டங்கூறி யரனாரனுப்பினராம்
சம்புசிவருத்திரனார் தன்மலையிற்றீர்த்தமெல்லாம்
இன்பமுடன்தானாடி யிருந்தங்கிளைப்பாறி
தூண்டுமணிரத்னகிரி சுனையிற்புனலாடி
வேண்டுங்கயிலையென்னும் வெள்ளிமலைக்கப்பாலும்
ஆரியனார்தன்மலையும் அண்டர்திருப்பதியும்
கூடியதோர்வாளகிரி கொடுமுடியுந்தான்கடந்து
கால்கடியவேகங் கடுவேகமாய்நடந்து
பால்வடியுமேனிப் பாஞ்சுடரைத்தானினைந்து
எண்பத்திருகாதம் எய்ப்பறவேதான்கடந்து
பண்புற்றுநேசம் பசுந்துளபமேனியர்சொல்
ஆசைகொண்டுதன்ம ரனேகநெடுந்தூரம்
பாஷைபலபேசிப் பல்மிருகப்பட்சியொடும்

பேசிநடந்து பெருந்துயரந்தான் தீர்த்து
தேசகனுமமென்னுஞ் சிவலோகபட்சியுந்தான்
இத்துயரங்கொண்டு இங்குவந்தீரோனவே
அத்துயரங்கேட்க அரியபட்சிதன்னுடனே
இப்புவியிலத்திபுர மியல்பானதன்மரென்பேர்
மெய்யுடையதம்பியரை விட்டுப்பிரிந்தமையால்
வைகுந்தவாழ்பதிக்கு வழியறியமாட்டாமல்
மெய்துவண்டியானும் விசாரமாய்வந்தேன்காண்
தாழ்ந்துமனந்தேற்றிச் சலியாதிருமெனவே
வாழ்ந்தநெடுமால்பதத்தை மனதோடுசொல்லுமென
யுள்ளதுவுஞ்சொல்லப் பூரணமாயுளம்கிழ்ந்து
வள்ளல் திருவைகுந்தம் மன்னவனே தூரமல்ல
கிட்டச்சமீபமது கேதாரச்சேத்திரங்காண்
சட்டமுடன்தன்மரே நீர் சலியாமலேநடந்து
போமென்றுசொல்லிப் பூரித்தகமகிழ்ந்து
நாமெங்கிருந்தாலும் நமக்குநீயுண்டெனவே
எண்ணியிருப்பேன்காணென்னுடையபுள்ளரசே
புண்ணியரேபோமெனவே போகலுற்றார் தன்மருமே
தன்மர்தனைப்பட்சியுமே தானனுப்பிப்போனதின்பின்
நன்மருவுஞ்சோலை நடுவனந்தான்கடந்து
இப்பால்வெகுதூர மிளையாமலேநடந்து
அப்பாலிருக்கின்ற அந்தவனந்தனிலே
கீதபட்சியென்னுங் கிரணப்பிரகாசமதாய்
நீதமுடனேயிருந்து நீராரெனக்கேட்க
சாதுபயில்தன்மர் சாற்றுவாருள்ளதெல்லாம்
ஓதும்பயனெல்லா முண்மையாய்க்கேட்டிருந்து
எல்லாங்கழித்துமிங்கே இத்தூரம்வந்துவிட்டீர்
பொல்லாங்கினியுனக்கும் போச்சுதுகாணச்சமில்லை
அடுத்தீர்வைகுந்த மன்பானதன்மரே நீர்
கொடுத்திரமுகளித்தீர் கோபாலருண்டெனவே
தன்மம்பலித்ததுகாண் தன்மரேஉந்தனுக்கு

கன்மமெல்லாம்போயகலக் கண்ணர்பதம்வந்ததுகாண்
ஜென்மமுடன்வைகுந்தஞ் சேர்வீர்பயமறவே
இம்மைதனிலுந்தனைப்போ லிப்புவியிலாருமில்லை
என்றந்தப்பட்சி யெடுத்துமிகத்தானுரைக்க
நின்றந்தத்தன்மர் நீயாரெனக்கேட்க
ஈசனடியாண்யான் இமையவனுந்தான்வளர்ந்த
வாசமுறுகிள்ளைதனை வதைசெய்தேனுகையினல்
கோபமுடன்மாதாவுங் கூறியபுள்ளாவையென்றாள்
தூபமுடன்சாபமெனைச் சூழ்ந்ததென்றபட்சியுந்தான்
அக்கயிலைவிட்டு அகன்றநானப்போது
மிக்கதொருவைகுந்த வீதிவழியேவந்தேன்
செங்கணெடுமாலுடைய திருக்கோலமுள்ளதெல்லாம்
பொங்கமுடன்சொல்லிப் பூங்காவனந்தனிலே
இருக்குமலர்ப்பொய்கை யெல்லாமுன்னதுகாண்
தருக்குமுடனிவ்வனத்திற் றனிருப்பீரென்னுளும்
இந்தத்தலத்தி லினியதவமிருந்தால்
எந்தப்பலன்களுமிங் கெய்திடுங்காண்தப்பாது
தாகமுடன் நீயிருந்தாற் றவமுந்தவப்பாலனும்
மேகவண்ணர்தன்னை விரைந்துநாணிங்கழைத்து
மவுலிதரித்து மகுடமுடிசூட்டி
பவ்விகமாயுன்னைப் பாராளவைப்பேன்காண்
அரசர்மடந்தையரும் அரம்பையருமுந்தனுக்கு
விரசுடனேஏவல்செய்ய மேவுதலாய்ப்பண்ணிவைக்க
என்றுசொன்னபட்சியைப்பார்த் தேதுரைப்பார்தர்மர்
நன்றுநனது நீயுரைத்தாய் நாதகிதபட்சியேகேள்
தந்தைதாய்சுற்றமுதற் றாரமொடுமைந்தர்களும்
வித்து நிலையென்று வெறுப்பாகவேயானும்
தாரணிமேலாசைவிட்டுச் சற்றுமனமில்லாமல்
ஆரணனர்வைகுந்த மடையவென்றுபோகையிலே
பின்னுமாசைவைத்துப் பேசுவரோபுள்ளரசே
என்னுமாசையானாலும் இனிமேலேஎள்ளளவும்

இல்லையிங்கேசற்று மென்மனதுக்கேறுது
கல்லையுருவாக்கிவைத்த காரணரேஉண்டெனவே
இகலுடையவேந்தே எந்தன்மொழிநீகேளாய்
ஆகிதிருமாலுடைய அன்பர்காண் நீர்தாமும்
நீதியுடன்தம்பியரை நீர்நினைத்தகாரியமோ
வேறுநினைவு விசாரமதுதானுமன்றி
கூறுமொருநினைவு கோவிந்தாவென்றுசொல்லி
பார்த்திபரேதம்பியர்மேற் பாசந்தனையகற்றி
எத்தியேமால்பதத்தை இறைஞ்சுமென்றாரம்மானை
ஓகரியமுன்னுளி னூழ்வினையைஉம்மாலே
என்றுகீதபட்சிசொல இன்பமுடன்தன்மருமே
ஒன்றுமறியாம லுரைத்தீரேபுள்ளினமே
ஓங்குபஞ்சபூத மொன்றுலுங்கூடாமல்
தாக்கமயக்கமெனும் துயர்கடலிலேவீழ்ந்து
அழுந்துவினையகற்று மச்சுதனையல்லாது
தொழுந்தகைமையார்க்குந் தோற்றுமோபுள்ளரசே
என்றுதன்மர்சொல்ல இயல்பானபட்சியுந்தான்
நன்றுகாண்தன்மரென்று நவின்றேகிப்போனதுவே
பட்சியுமப்பாற் பறந்தேகிப்போனவுடன்
காட்சியாய்த்தன்மர் கதிக்கவேதான்கடந்து
அன்றவடம்விட்டு அநேகநெடுந்தூரம்
மன்றலருஞ்செண்பகப்பூ வனமும்மிகக்கடந்து
திருக்கோணமாமலையிற் சென்றுதயவாகி
துரியகமலமென்னத் தோன்றுமந்தமாமலையும்
பார்த்துமகிழ்ந்து பாலாறுதன்னில்வந்து
சாத்துமொருநாளுஞ் சதுர்வேதமாமலையும்
தாராருந்திண்புயத்தான் தன்மருந்தானப்போது
சீராரும்பாறையின்மேற் சென்றிருந்தாரம்மானை
பரியமலைதன்னிற் பன்றியொன்றுதான்வரவே
கரியதிருமாலைக் கண்டீரோபன்றியென்றார்
இவனுரென்வே ஏதென்றும்பேசாமல்

கவனமதுவேருய்க் காட்டகத்திலோடியதாம்
ஓடியதோர்பன் றிதனை உத்தமனேபோமெனவே
நாடியேசெவ்வை நடந்தார்வழிகூடி
புலிகரடியாளிசிங்கம் போரானைமற்றுமுள்ள
நலிவுகண்டுதானதட்டி நடந்தார்வனங்கடந்தார்
சேனையுடைய செகவேந்தராஜனுந்தான்
கானைநதிவந்து கண்டார்காணம்மானை
ஆதவனுஞ்சென்று அடைவுடனவ்விருளில்
போதமுடன் தன்மர் புல்லேலதழுவணையாய்
நேமியுயர்கானகத்தில் நெடுமரங்கள்கீழேதான்
தாமியல்வாக்கண்டுயின்ருர் தன்மருமேதானசந்து
அங்கேபரிதி அருணவுதயமென
பங்கயம்போலாகிப் பரிதிவந்துதோன்றியபின்
வெண்மையுடனெழுந்த வேகவதியாறுதன்னில்
வண்மையுடன்புஷ்பகரணி மாதீர்த்தமாடுதற்கு
செந்திருவையொப்பாகத் தெய்வமடைந்தையர்கள்
அந்தநதிதீர்த்த மாடவுற்ருரம்மானை
நீராடிக்கன்னியர்கள் நீள்கரையிற்ருனேறி
சீராடித்துகிலுடுத்திச் சிகையாற்றியேமுடித்து
பூசையதுமுடித்துப் புஷ்பமலர்தான்தரித்து
ஓசையுடன்காவி லுலாவிவருகையிலே
சோபமுடன்தன்மர் சோலைநிழல்தனிலே
தாபமுடனிருக்கத் தான்கண்டார்கன்னியர்கள்
பூவுலகுமன்னன் பொய்கைக்கரைதனிலே
காவுதனில்வந்திருந்த காரணந்தானேதெனவே
வந்தருகில்நின்று மாதரெல்லாந்தான்கூடி
இந்தவனந்தனிலே இத்தூரம்வந்ததென்ன
என்றுசொல்லிக்கன்னியர்க ளீதுரைக்கத்தன்மருமே
மன்றுலகில்நானும் வாசமுள்ளதம்பியரும்
இருந்துசிலகால மில்லறமும்விட்டிழந்து
திருந்துவைகுந்தஞ் சேரவென்றுவந்திடத்தில்

மடிந்தார்கள் தம்பியர்கள் வனத்திலே நால்வருந்தான்
இடிந்துமனமுழன்று இங்குவந்தேன் நானொருவன்
வழியறியேன்யானும் மற்றுந்திசையறியேன்
வெளியே தனியாக வேற்றுமுகமாகிவந்தேன்
களிகூறஉங்களை நான் கண்டேனே கன்னியரே
தெளிவாச்சுதெந்தனுக்குத் தெள்ளமுதே இப்போது
உங்களை நான்கண்டதன்பின் உடலுயிர்வந்ததுவே
திங்களொளியதுபோற் றெரிசித்தேனுகையினல்
விந்தையுள்ளவைகுந்தம வீடுபெறவெந்தனுக்கு
எந்தநாளோ அறியேன் எத்தனை நாட்செல்லுமதோ
மாதர்களேஎந்தனுக்கு வழிதானும் நீங்களுமே
ஆதரவாய்ச்சொல்லி யனுப்புமென்றார் தன்மருமே
அந்தமொழிகேட்டு அரம்பையர்களந்நேரம்
விந்தமதுதேடி விரைந்துவந்தீர் தன்மரே நீர்
அதிலும்பதிமடங்கு அரசனேயுந்தனுக்கு
சதிரும்பதியுஞ் சம்பத்தும்வாலுலகில்
உம்மைமுடிசூட்டி உமக்கேவல்செய்து நிற்போம்
நன்மையுடனெங்களை நீர் நம்பியேவாருமென்று
கன்னியர்கள்சொல்லக் கருத்துடனேதன்மருந்தான்
மன்னியதோர்பெண்ணரசே மண்ணுலைசயில்லையினி
உண்மையாய்ச்சொல்லுகிறே னுற்றகருமமென்று
தன்மையாய்நாளுந் தற்காத்து நின்றதொரு
அச்சுதனார்பாதமல்லால் ஆசைவேறில்லையென்று
நச்சுவிழிமாதே நடவுமென்றுதானுரைத்தார்
வேந்தனிவைசொல்ல விரைந்துதான்கன்னியரும்
சாந்தமுடன்கானகத்திற் றூனடந்தாரம்மானே
தேவகன்னிமாரும் திசைநீங்கிப்போனவுடன்
ஆவலுடன்தன்மர் ஆயன்பதிநோக்கி
மனோமனசாட்சியதாய் வளரும்திருமாலே
அனாதிப்பொருளான ஆதிமகாலட்சுமியை
வஞ்சியெனுமின்னுள் மாதுமகாலட்சுமியை

நெஞ்சிலனுதினமும் நீங்காமல்வைத்தருளும்
நீலவண்ணர்தம்மை நினைந்துவெகுதூரம்
சீலமுடனேமகிரி சிகாமதுதான்தெரிந்து
அங்குள்ளதீர்த்தமது ஆடிக்கரையேறி
துங்கமுடிவேந்தன் தொண்ணூறுகாதவழி
கடந்தங்கொருவனுமாய்க் கங்கைமலைதானேறி
அடர்ந்தமலைசார்பி னருகாகத்தன்மருந்தான்
சென்றுகங்கை நீராடிச் சிந்துவைரந்தான்கேட்டு
குன்றுகுடையாய்ப்பிடித்தகோவிந்தவென்றுசொல்லி
கேசவனைத்தானைந்து கிருபையுள்ளதன்மருந்தான்
ராசகோபாலர்திரு நாமமிடும்பூங்கருணை

ஆற்றைக்கண்டு தன்மர் அரியைத்துதித்தல்.

ஆறுதனில்வந்துநின்று ஆழமிதுவென்றுசொல்லி
வேறுவழியெங்கும் விசாரித்துக்காணாமல்
நின்றுதிகைத்து நெடுமாலைத்தானினைந்து
ஒன்றுளத்திலெண்ணி யுரைப்பார்திருவிருத்தம்

விருத்தம்.

ஆழியும்நதியுங்கண்டேன் அக்கரைகடக்கவென்றால்
நீளிவையாறுதன்னை நீந்தவுமாட்டேனிப்பே
வாளியோர்வீமனில்லை மற்றுள்ளதம்பியில்லை
சூழவோர்துணையுமில்லை சுந்தரநந்தகோபா.
அக்கமும்நீயேயெந்த னாத்துமதேகம்நீயே
பக்கமுந் நீயேயல்லாற் பாவனைவேறுகாணேன்
சிக்கமுந்திசையும்நீக்கித் திசையென்னுமனதிற்றீன
நிக்கவே நிலத்தோடென்ற நீயருள்நந்தகோபா.
வருந்தியுனையேயான்தேடி வரவேவழியில்வெகுமாயை
பொருந்திமயக்கிமிகப்பகட்டிப் பொல்லானெனவேவே
ருக்கி, இருந்தநினைவிற்றூனிருந்தாற் சிறியேன்வினையு
மீடேதான், அருந்தியுனதுபதஞ்சேர அருள்வாய்
நந்தகோபாலா.

எல்லாப்பாடும் மட்டலுத்தே னிளையோர் பிரிந்த நாள்முதலாய், பொல்லாப்பொழியவேறில்லேபூததயவு முனக்கில்லே, சொல்லாற்பெரியவைகுந்தந் துரையே யுன்னே நாடிவந்தால் இல்லாப்பகையை எதிர்விடுத்தா யெளியேன் துணை நீகோபாலா.

கல்லோமரமோ துணையெனக்குக்காடோசெடியோ துணையெனக்குப், புல்லோபுனலோ துணையெனக்குப் பூடோநிலமோ துணையெனக்கு, அல்லோபகலோ துணையெனக்கு அகன்றேயிருந்தாலார் துணை சொல். வல்லோர்புகழும்பெரியோனே மாயாநந்தகோபாலா.

இதுவுமது

ஆருங்குளழுங்காடுமலே அரியகரடிபுலிசிங்கம், எதுங்களிறுபூதகனம் இருண்டவரக்கர்தனேப்போலும், அாரம்கடியஇருள்போலுந் தோன்றித்துன்பஞ் செய்தால்நான், தேருங்கருமமெந்தவிதந் தெளியத்திரும் கோபாலா.

இதுவுமது.

அருடானை துவிளையாட லனந்தங்கோடியாதிமுதல்
இருடானை துதிறமறியச் செயலேதெனக்குன்தொழில
றிய வருடார்தனையுமவருளாய்நீ மாயமாயவுபாயா நீ
கருடாறவார்மேலேறிவந்துகருணைபுரிவாய்கோபாலா.

இதுவுமது.

தொடரும்வினைகள் தொடாமற்றுன்பச்சலத்தில ழுந்தாமல், அடரும்பகைகள அணுகாம லருளேப்பொருளேயறியேற்கு, இடருமகலத் துணைப்பதத்தை யெனது சிமேல அனுதினமும், படரும்படியாய்க் கிருபையது டார்பார்நந்தகோபாலா.

வேறு.

சீரியதேவாபோற்றி செந்திருமாலேபோற்றி
ஆரியராமாபோற்றி ஆழியிற்றுயில்வாய்போற்றி

பாரிய ஆறுதாண்டப் பரிவுடன்பாதைதோன்றக்
காரியமாகவந்தேன் கண்ணிற்றோன் றுவாயே.

இதுவுமது.

மாமணி துளபமாலை மார்பினிலிலங்கவெய்யோன்
பூமணிகளபமேனிப் புளகிதநளினமாக
நாமணிவயிரமுத்தும் நவமணிபூணைந்துமெந்தன்
தாமணிச்சிரமேல் நிற்கும் சச்சிதாநந்தகோபா.

மாயன் ஆறுவழிவிட வத்தச்செய்தது.

நல்லதிருவிருத்தம் நாரணனார்தான்கேட்டு
மெல்லச்சிரித்து மெய்மகிழ்ந்து பூரணமாய்
ஆறுதனைப்பார்த்து அமருமென்றார்கோபாலர்
மாறுபுனல்சுவரி வழியாகத்தோன்றியபின்
அந்தவழிகடந்து அப்பாலும்போகையிலே
கந்தமலர்த்தருமர் கருத்தறியவேண்டுமென்று
நந்தகோபாலரங்கே நமனைவரவழைத்து
விந்தமுறுத்தன்மருட மெய்யதனைசோதியென்றார்

சுணங்கனாக வந்தநமன் தருமரைச்சோதித்தல்.

அந்தமொழிகேட்டு ஆனதொருமறலி
சிந்தைமகிழ்ந்துவருஞ் சீக்கிரமாய்த்தான்மாறி
இணங்குமுடல்வாய்கண் ணெங்கும்புழுச்சொரிய
சுணங்கனெனும்வடிவாய்த் தோன்றி நின்றாரமானை
வந்துதன்மார்முன்னே வாலதனைத்தானாட்டி
நொந்துமனமிடைந்து நோக்கிமுகமண்ணாந்து
ஓலமெனவூளையிட்டு ஓடியோடியேதிரும்பி
காலடியில்வந்துநின்று காலனெனும்நாய்தானும்
ஆய்ந்துடலிற் புண்தானமுகிப்புழுச்சொரிய
சோர்ந்துவிட்டேன்மெத்தத் துன்பவினைதன்னாலே
சாருந்துணையில்லை சஞ்சலத்தீர்ப்பாருமில்லை
ஆருந்துணையில்லை ஆதாவுதானுமில்லை

எந்தன் துயர் தீர்க்க இனியாருமில்லாமல்
உந்தனருகே ஓடிவந்தேன் காருமென்று
இந்தச்சுணங்க னெடுத்துரைக்கத் தன்மருந்தான்
எந்தனாலுந்தனக்கிங் கேதுதவியாகுமிப்போ
வாராய்சுணங்கேநான் வகையுனக்குச்செய்வதென்ன
சீராகச்சொல்லுமென்று செப்பினார் தன்மருந்தான்
ஏந்தலே நீர்கேளும் இயம்புவேனோர்வசனம்
சாந்தமொழிதன்மரே நீர் தனியொருவனாகவந்தீர்
நான்தான் துணையாக நம்பியேநான்வாரேன்
சாந்தமாய்ஏவல்செய்து தான்வருவேனுன்பிறகே
வருகிறேனெந்தனை நீ மனதுவைத்துக்காப்பாற்றி
அருகேயெனைவளர்த்து ஆதரவாய்க்கொண்டுசென்று
நம்பினபேரை நட்டாற்றிற்றள்ளாமல்
தம்பிரானாணைதொரு தன்மரேசாட்சியென்று
தாழ்ந்துசுணங்கன் சஞ்சலமாய்வார்த்தைசொல்ல
ஆய்ந்தசுணங்கனுக்கு அஞ்சலென்றுவார்த்தைசொலி
காக்கிறோமென்று கலங்காமல்வார்த்தைசொன்னார்
மார்க்கமுடனென்பிறகே வாவென்றுதானடந்து
போகையிலேபோரான் பூமிதனிலேபெருக்காய்
ஏகுவதைக்கண்டு இவர்கள்மிகமயங்கி
நிற்குமளவில் நீளவாய்ச்சுணங்கனுந்தான்
அக்கரையிலென்னை அய்யனேகொண்டுசென்று
விட்டுவிடுமுந்தனுக்கு வேண்டுஞ்சுகிர்தமுண்டு
கட்டுடனேதர்மர் கருத்தில்மிகநினைத்து
போராறுதாண்டவென்று பெருமாள்தனைநினைத்து
தாரேறுந்தன்மர் தானிறங்கியாறதனில்
வாட்டமுறச்சுணங்கா வாவென்றருகழைத்து
தேட்டமுடன்கை நீட்டிச் சேர்த்தணைத்துத்தான்வாரி
மார்பிலணைத்து வயிற்றளவுவெள்ளத்தில்
சோர்வரிந்துதன்மர் சுணங்கனையுந்தானெடுத்து
வயிற்றளவுதண்ணீரும் மார்பளவுதான்வரவே

புயத்திலேதானேத்திப் போனார்சுணங்களையும்
கழுத்தளவுதண்ணீராய்க் கண்டவுடன்தன்மருமே
அழுத்தமுடன்சிரசி லன்பாய்ச்சுணங்களையும்
வைத்துச்சுமக்கவழிந்தொழுகவே திரும்பி
மொய்த்துவழிந்து மூகந்துவழியாக
மிகுத்துக்ருமி வெகுதிரளாய்த்தானுதிர
மூகத்துவழியாக மூகந்துநெஞ்சுவாயுதடு
அள்ளியெறிவதுபோல் அங்கமெல்லாம்புழுச்சொரிய
தள்ளிவிடவேண்டுமென்று சற்றுமனமில்லாமல்
அல்லலறத்தன்மர் ஆற்றின்நடுவாக
செல்லுமளவிற்சுணங்கள் செப்புமொருநற்செய்தி
நான்செய்ததீவினையை நல்லவரே நீர்கேளும்
ஊன்சேரும்ஆவதனை உண்ணவென்றுகட்டித்தேன்
வேதமறையோர்தம் விரதமழித்துவிட்டேன்
காதலுடன்மங்கையர்தன் கற்பையழித்துவிட்டேன்
நேசமுடகுருவை நிந்தனைகள்சொல்லிவிட்டேன்
வாசமுள்ளவேதியரைவதைப்படுத்தியான்பிழைத்தேன்
தந்தைதாய்மாமன் தமயன்முதல்மூத்தோரை
எந்தனுக்குள்ளாக்கி ஏவல்செய்யுமென்றுவிட்டேன்
சூதுசெய்வார்தன்னுடனும் துஷ்டருடனுங்கூடி
தீதுசெய்யும்பாதகங்க செய்துவிட்டேனிப்போது
அழிவழக்குத்தானுரைத்து அரியமணங்கலைத்து
பழிகொலைகள்செய்துவெகுபாவங்கள்செய்துவிட்டேன்
செய்தநன்றிதான்மறந்தேன் தீவினைசெய்துவிட்டேன்
எய்தியேநம்பிவந்தோர்க் கிடுக்கமேசெய்துவிட்டேன்
காசினியோர்தங்களுட கட்டையழித்துவிட்டேன்
வீதியேசுற்றியுள்ள வேலிபிரித்துவிட்டேன்
அறையிலிருந்தோரை யறவேவதைத்துவிட்டேன்
பொறையுடையாரையும்பொல்லாங்குசெய்துவிட்டேன்
எண்ணரியபாவமெல்லா மெத்தனையோசெய்ததினால்
புண்ணியரேமேனியெல்லாம் புழுவாய்சொரிகிறது

வைத்துச்சுமக்க வழிந்தொழுகசீசலமும்
சற்றுமனங்கோணாமல் தான்சுமந்துபோறதினால்
உமக்குச்சுகிர்தமுண்டு ஒப்புடனேசொர்க்கமுண்டு
எமக்குநரகமுண்டு என்னையுந்தானின்சலத்தில்
போட்டுவிடுமுந்தனுக்குப் புண்ணியமேஉண்டாகும்
நாட்டுபுகழ்தன்மரே நீர் ஞாயமல்லபோட்டுவிடு
பாதகனைப்போட்டுவிட்டுப் பாணியிலேதானம்பண்ணி
சாந்தகமாய்வாசமுள்ள சவ்வாதுதான்பூசி
துற்கந்தம்போக்கிச் சுகந்தமிகவணிந்து
நற்கந்தமாக நடவுமென்றாரம்மானை
தலைமேற்சுணங்கன் தானிருந்துசொன்னதெல்லாம்
அலைமேற்றுரும்பெனவே அந்தவுரைகேளாமல்
பாதகம்நீசெய்தாலும் பழிகொலைகள்செய்தாலும்
ஆதரவாயுன்னை ஆறுகடக்கவிட்டு
போவென்றுசொல்லாமற் புல்லறிவுகொண்டுனைநான்
சாவென்றுசொல்லித் தள்ளுவனோ ஆறதனில்
வேறென்றும்பேசாமல் வெண்சுணங்கே நீயிரென்று
ஆறென்றுநீந்தி யக்கரையிற்றானேறி
வந்துநின்றுதன்மர் வருந்திச்சுணங்குதனை
நொந்துதோஉன்னுடம்புரோமமெல்லாம்புண்ணாச்சே
வெந்துதோஎந்தன் வெக்கைபட்டுமேனியெல்லாம்
நைந்துதோசிந்தை நடுங்கிற்றேஉன்மேனி
என்றுசுணங்கனையு மிதமாயிறக்கிவிட்டு
சென்றுசிலகால்நாலுஞ் செவ்வேபிடித்துருகி
ஆற்றமிகப்போற்றி அன்பாயரவணைத்து
தேற்றித்தவிப்பாறித் தேகமெல்லாந்தான்தடவி
இன்பங்குளிர்ந்தப்போ எமதன்மராஜனுக்கு
அன்புடையமைந்தனுக்கு அழகாகத்தன்வடிவை
காட்டிச்சகிழ்ந்தணைத்துக் கண்ணைத்தேமுத்தமிட்டு
நாட்டிலெந்தன்புத்திரனே நன்மைசெய்தாய் நீமகனே
காதர்பதிதனிலே கனமாகவீற்றிருப்பாய்

பார்த்திபனேவைகுந்தப் பதிதனக்கேசெல்லுமென்று
எமதன்மர்தானும் எமலோகம்போய்ப்புகுந்தார்
நேமமுள்ள தன்மர் நீதியென்றுந்தப்பாமல்
வீறுடனேயிப்பால் விரைந்துவெகுதூரம்
கூறுஞ்சிகரக் கொடியென்னுமாநதியும்
பார்த்துமிந்திராணியுட பஞ்சமூதப்பாரையென்று
ஏற்குமொருசோடான இரண்யமலைதான்கடந்து
மற்றுமுள்ளதோணிகளும் மலைகள்பலதான்கடந்து
உற்றதலமெல்லா முன்மையாய்த்தான்பார்த்து
சத்திரசேரசமென்னுந் தாணுமலையானதுவும்
இந்திரவிமானம்போ லிருக்குமலங்காரம்
பார்த்துப்பணிந்து பரிவுடனேதானடந்து
சாற்றுமொருமால்தான் தரணிதனில்முன்னாளில்
மண்டலத்தில்மாவெலியால் மாயன் இடம்வாங்கி
அண்டமுழுதளந்த அரியோன்மலர்பதத்தை
தோத்திரங்கள்பண்ணித் துதித்துமிகப்பணிந்து
எந்தியிருநாளை யிருதயத்திலே நினைந்து
தேம்பயிலுமந்தக் கேதாரமாமலையும்
ஓதுமொருமூன்றுபத்து யோசனைதூரமென்ன
வளர்ந்திருக்குமந்த வடவாலவிருட்சமதில்
தளர்ந்துமிகத்தவித்துத தன்மருந்தான்வந்திருந்தார்
இருந்துதவிப்பாரி யெழுந்திருந்துதானடந்து
பொருந்துவனமும் பொருப்புமிகக்கடந்து
செவ்வைபோற்கானகமுஞ் சீர்மலையுந்தான்கடந்து
கொவ்வைபடர்ந்தமலைக் கோபுரமுந்தான்கடந்து
தோற்றுந்திருக்கோபுரஞ் சோதிமலைகண்டுகந்து
போற்றியே அப்பதியிற் புகுந்திருந்தாரம்மானை
மேடைகளும்மண்டபமும் வெற்றிச்சிகரங்களும்
மாடமிருகூடமுமாய் மதிலுந்திருவீதியுமாய்
நீடுஞ்சுனையும் நிறைந்ததொருவாவிகளும்
கூடுஞ்சிவதலமும் கொண்டல்வண்ணராலயமும்

நாடுந்திருக்கோவரம் நாகரீகங்கண்டுசென்று
ஆடிங்கொடிவேந்தாமாந் திருந்தாரம்மானை
மிக்கவைகுந்தமதில் மேவியேசக்கரமும்
திக்கிலுள்ளோர்போற்றுந் திருமால்தனைப்பணிந்து
பத்தியுன்மேலாசையில்லால் பார்மீதிலாசையில்லை
மற்றுந்தருமன் மலையும்மலைச்சாரல்களும்
காடுப்பலநதியுங் கடந்துவந்து இப்பாலும்
மன்னர்திருக்கோதர மாமலையில்வந்திருந்தார்
அன்னலைக்காப்பாப்ப தடைக்கலங்காணென்றுமொரு
சக்கரமுஞ்சொல்லிச் சரணமிகப்பண்ணியபின்
மிக்கதொருசக்கரந்தான் விளம்பியதெல்லாங்கேட்டு
செங்கண்மால்தான்மகிழ்ந்து சீர்தருமனுக்கெதிரே
இங்குள்ளவானவர்களெதிர்கொண்டழையுமென்றார்

அவர்கள் தருமனை அழைத்துப்போகுதல்.

அந்தமால்தானனுப்ப அமரர்கோனிந்திரனும்
முந்தியேமுப்பத்து முக்கோடிதேவர்களும்
சித்திவித்தியாதருந் தேடரியகாந்தருவர்
சத்தரிஷிமாமுனிவர் தபோதனர்கணநாதர்.
கின்னரர்கிம்புருடர் கெருடாரவுணருடன்
துன்னுமகத்தியருந் தோற்றமுள்ளமாநிருதர்
தேவரிஷிமாதவரும் தேவகன்னிமார்களுடன்
பாலகரும்பாடகரும் பத்தமொடுசித்தர்களும்
வாத்தியங்கள்தான்முழங்க வானவர்கள்தான்கூடி
நோக்கியேதன்மரிடம் நுண்ணிடைப்பெண்ணருடனே
ஆவலுடனேபாடலுமாய் அரம்பையர்களாடிவர
ஏடலருந்தன்மரையும எதிராகக்காண்பதற்கு
ஓடிவருவாரும் உபசாரஞ்செய்வாரும்
நாடிவருவாரும் நல்லதன்மரென்பாரும்
பார்க்கவருவாரும் பரிமளங்கள்பூசுவாரும்
ஏர்க்கவேவந்து எல்லையிட்டுநிற்பாரும்

வானவர்கள்வந்து பார்க்குமுடன் தன்மனையும்
தானவர்கள்வந்தெதிரே தழுவியரவணைத்து
வந்தமர்ந்ததன்மருடன் மகிழ்ந்துமுகம்நோக்கி
முந்தியபாரதப்போர் முடித்ததொருபாவமெல்லாம்
போகவே நீருமிந்தப் பொய்கைதனில்மூழ்குமென்றார்
அகமகிழ்ந்து தன்ம ரப்படியேதான்மூழ்கி
பழைவுருமாறிப் பசும்பொன் நிறமானார்
அழகாகத்தன்மருக்கு அமரர்மலர்பொழிய
இந்திரவிமானமதி லேற்றியேதன்மனையும்
அந்தரதேவதைகளமராருகிருக்க
தேர்நடத்திவானவர்கள் சிறப்பாய்மலர்சொரிய
மார்படைத்துமுன்னிருந்து படந்தையர்களாடிவர
தயக்கமிகுவாரேருந் தன்மருமேதேரேறி
இயக்கர்பதிதன்னி லேகினர்காணம்மானை

வானுலகத்துக்குத் தருமர்வந்தது

மன்னவரே இந்நகரில் வாழ்ந்திருப்போம்வாருமென்று
பொன்னகரோர்சொல்லப்போர்வேந்தனே துரைப்பார்
என்னுடையதம்பியர்க ளிருக்குந்தலந்தனிலே
பன்னமறைவேதியரே பரிவுடன்கொண்டேகுமென்றார்
பரிபதியிதுகாண பார்த்திபனேயுந்தனுக்கு
கருதிமுடிசூட்டிகிறோங் கருத்துடனே நீரிங்கே
அச்சுதனார்வாழும் அரியவைகுந்தமதில்
மெச்சவே நான்போகவேணுமெனவே தருமர்
அப்பதியைத்தான்கடந்து அமருடன்மன்னவரும்
செப்பரியருத்திரர்கள் சிறந்திருக்குமவன்காலை
சென்று தருமருக்குச் சிராருமாதரெல்லாம்
அன்றுமுடிசூட்டவென்று அருள்செய்வார்வானவர்கள்
ஈறில்லாதெம்பெருமான் இருக்குமிடமில்லாமல்
வேறேபதியொருநாள் வேண்டெனவுரைத்தார்
உடுக்கள்பரதன்னி லுறையுமென்றுதானுரைத்தார்

இடுக்கப் வருவேனை தன்னி லிமையோரே எங்கள் தமை
நடுக்கந் தவிர்த்துலகில் நயமாக நாடோறும்
அடுக்கவே காத்தருளும் மச்சுதனூர் தன்பதிக்கு
போகவேவே ணுமென்று பொன்னுலகந் தன்னில்வந்த
தோகை நவரத்தினஞ்சூழ் துலங்குமுடி மன்னவரே
தீதில்லா மாநகரிற் சிங்காதனத் திருந்து
மாதான ரம்பையர்கள் வயிரக்கவரியிட
அந்தமுடனிங்கிரென்று அமரர்கோன் தான்கூற
இந்தவுலகாகாதென் றெடுத்துரைத்தார் தன்மருமே
வானவர்களந்த மறலிதனைவந் துகண்டு
தேனமருந்தார் மார்பன் தேசமெல்லாம் விட்டகன்று
கலிதானும்வந்தமையால் காடுமலைகடந்து
வலியவிந்தமானகரில் மன்னவனும்வந்தனர்காண்
அழைத்தேயவர் தனக்கு அரியபதியீயுமென்று
தழைத்தோங்கவாழுமென்று சாற்றலுற்றாரம்மானை

தருமனை எமபதிக்கழைத்துப்போகுதல்.

மறலியுந்தான் மகிழ்ந்து மைந்தனையுமந்நேரம்
அந்தகன்பால் தன்மனையு மழைத்துமுன்னேவிட்டார்
வந்துபணிந்ததொரு மைந்தனையுந்தானெடுத்து
சந்தோஷமாய்மார்பிற் றனைத்துமுத்தமிட்டு
சிந்தைமகிழ்ந்துநமன் செப்புவானோர்வசனம்
உத்தமனேயிந்த உலகருள்வேனுந்தனுக்கு
எத்திசையும்போற்ற இருமென்றார் தன்மனையும்
அப்போதுதன்மார் அன்புடனேஎதுசொல்வார்
இப்போதுமக்குநான் இன்பமுடன்வேணுமென்றால்
அண்ணல் திருவைகுந்தம் அடைவதற்கென்னையுமே
புண்ணியரேயந்தப் பொன்னகர்க்குவருமென்றார்
பாசமுடன் நீர்பொருதும் பாரதப்போர் தனிலே
நேசதுரோணருடன் தினதுசமர்பொருத

மாமுனிவகைச்சிலையுள் வலிமைகண்டுமாயோனும்
ஆமுனியேயுந்த னைசுவத்தாமாவெனவே
சொல்லவேயெனமாயன் சொல்லேலெனநீயும்
அல்லவென்றுமாயனப்போவெகுண்டுரைக்க
கோபிக்கநீர்பயந்து கூறுகின்றபொய்மொழியால்
தாபிக்கும்பாவமொன்று தானிருக்குதுன்பேரில்
வைத்தார்மணிபார்பா மன்னவனேசொல்லுமென்றார்

சொர்க்கம் நரகமெனத் தூதுவர்காட்டல்

இன்றுதான்பாருமென்று ஏழுநரகமுந்தான்
சென்றேயிகக்காட்டித் திரும்பியேவாருமென்று
தூதுவரைத்தானனுப்பிச் சொற்பெரியதன்மரையும்
போதமுடன்கொடுபோய்ப் புண்ணியரேபாருமென்று
பார்த்துவரும்பாதையிலே பலவிதமாய்நாகரிகம்
தோற்றுதுகாணேதெனவே சொல்லுமெனத்தர்மருமே
கற்பகக்காவிற் கமலசிங்காசனத்தில்
சொர்க்கந்தனிலிருந்து துலங்குகுடை நிழலற்ற
பரிந்துதெய்வகன்னியர்கள்பணிவிடைகள்செய்துநிற்க
தெரிந்துபலஏவல்களைத் தேவர்களுஞ்செய்துநிற்க
கற்பகக்காவுடனே காமதேனுவந்துநிற்க
விற்பனமாய்வந்து வேணதெல்லாந்தான்கொடுக்க
களித்தேயிருப்பாரைக் கண்டேபிரியமுடன்
செழித்தபுகழ்தன்மருந்தான்சிறந்துரைப்பரேதெனவே
இவர்கள்செய்ததன்மமேதோவெனக்கேட்க
தவமுடையகிங்கிலியர் சாற்றுவார்தன்மருக்கு
தக்கதவஞ்செய்து தருமந்தழைத்தோங்க
துக்கமுடன்பாவந் தொலைத்தோரிவர்காணும்
ஓதுகின்றபல்லுயிரு மொன்றாகவேபாரில்
நீதமுடனடத்தும் நிருபரிவர்காணும்
சீரார்சிவபூசை செய்தோரிவர்காணும்
பாரீரர்பூசை செய்தோரிவர்காணும்

விளங்கவேமா தருமம் மேதினியிலெப்போதும்
களக்கமறச்செய்து களித்தோரிவர்காணும்
பூசுமசேஷ்வா பூசைகளுந்தான்கொடுத்து
ஈசுதமிழ்வேதியர்க்கு ஈய்ந்தோரிவர்காணும்
அடைந்தோர்கள்தம்மை ஆதரித்தோரிவர்காணும்
இடைந்தோரைத்தாங்கி யிளைப்பாற்றிவிட்டவர்காண்
மிகுந்ததவமுனிவர் வேள்விகளைக்காத்தோன்காண்
பகுத்தறிவாய்நால்வகையும்பட்சமுடன்காத்தவன்காண்
மறையோர்க்குநல்ல மாதானஞ்செய்தவர்காண்
குறைகள்செய்துவந்தோர் குடிகாத்துவைத்தோர்காண்
பசித்துவந்தோர்தங்களுக்குப்பாலமுதமீய்ந்தோர்காண்
மூசித்துவெகுதன்மமெலா மூடித்ததொருபுண்ணியரே
கோதானமீய்ந்து குளங்கிணறுண்டாக்கினர்காண்
பூதானமீய்ந்து புண்ணியமேசெய்தவர்காண்
தக்கதொருகன்னிகா தானமுடித்தோரிவர்காண்
மிக்கதொருபூவுலகில் வேந்தேஇவர்களெல்லாம்
அத்தவங்களசெய்து இங்கிருந்தார்கண்டீரோ
மூத்தனே நீதரும மூர்த்தியேயென்றுர்கள்
தன்மத்தனைச்செய்தவர்கள் தாங்காமல்சொர்க்கமதில்
இன்மைதனிலிப்போது இங்குவந்தார்கண்டீரோ
குன்றுமொருகீழ்நாகு கொற்றவனேபார்ப்பதற்கு
இன்று நீர்வாருமென்று ஏகினர்காணம்மானே
ஒன்றும்நரகமது ஒருநூறுயோசனையாம்
நன்றுமிரண்டாம் நரகமிருநூறுகும்
இந்தவகையிலொரு ஏழுநரகமுந்தான்
உந்தியகளகம் ஒருயோசனை நீளம்
பெருத்தகிருமிகளாய்ப் பேருடனு முள்ளுமாய்
வருத்தமறியாமல் மானிடரைத்தான்பிடிங்கி
தெளியும்புழுவும் நிறைந்தவுதிரங்களும்
உளியுமுதலையுட னூருகின்ற அட்டைகளும்
பாம்புடனே நீர்நாயும் பத்தியிழுத்துச்சிக்கச்

சோம்புவார்கண்டுதன்மர் துயரமுடனப்போது
பொய்யுமபுரட்டும் பொருந்தாக்கொலைகளவும்
செய்யாதகாரியங்கள் செய்தோரிவர்காணும்
இந்தநரகமதிற் கேழாம்நரகமதை
வந்திப்பாரென்ன மலைத்துச்சென்றார்தன்மருமே
நாடியேஎழாம் நரகிலுள்ளபாவங்களை
கூடியெமதூதருடன் கொற்றவனும்தான்பார்த்து
ஏழாம்நரகமதின் கீழாயிருந்தாலும்
பாழாம்நரகமது பாதாளபாதகமும்
ஆழாம்நரகமதில் அலறிக்கிடப்பாரை
தாழாமுடியனையுந் தான்கண்டார்தன்மருமே

துரியோதனாதியர் துன்பமடைவதைக்காணல்.

பாசமுள்ளதோர்நரகிற் பரதவிக்கும்நூற்றுவரை
வாசமுள்ளதன்மர் வாகுடனேகண்டனராம்
பொல்லாதநூற்றுவரைப் புழுக்களரித்துடம்பை
இல்லாதரேகட்டலை இருசெவிமூக்கிலுமாய்
ஊடுருவியே துளைத்து உலாவித்திரிவதையும்
வாடுமுடல்கிடந்து மயங்கித்தவிப்பதையும்
கவ்விமுதலை கடித்துப்பிடித்திழுக்க
குவ்விய நீர்நாய்கள் குறுக்கேபிடித்திழுக்க
மதித்ததொரு நூற்றுவர்கள் மயக்கும்வருத்தமெல்லாம்
கதித்தபுகழ்தருமர் கண்டார்காணம்மானை
கண்டவுடன்தருமர் கலங்கியுடல்பதறி
அண்டமுறநின்று அரிநமசிவாயவென்று
ஓதுமுலகமெங்கு மொருகுடைக்கீழாண்டதொரு
மாதுமயில்மன்னன் மாநகருக்குள்ளானார்
என்றுசொல்லித்தன்ம ரேங்கமனமிடைந்து
நின்றளவிலந்த நெடியதுரியோதனனும்
விண்டுரைக்கமாட்டாமல் விசாரமாயுள்ளசந்து
கண்டுதன்மர்தன்னைக் கண்கலங்கியேதுசொல்வான்

தருமரைப்பார்த்துத் துரியோதனன் சொல்லுதல்.

விருத்தம்.

தம்பியுனையயான்செய்தசதிகேடதனைப்பொறுத்தருளி
வெம்பிநரகிலழுந்தாமல் வேண்டியெனையேகரையேற
நம்பியுனதுகைகொடுத்து நடத்துமுழுதுந்தன்மரொன
எம்பியெனையேவைகுந்தத்திருக்கநினையுந்தவமுனக்கே

யான்செய்தவினையினாலே அழுந்தினேன்நரகில்வீழ்ந்து
தான்செய்ததவத்தினாலே தன்மரென்றிங்கேவந்தீர்
ஊன்செய்தபகையினாலேஉடல்தனைக்கிடத்திப்போட்டு
வான்செய்தவுயிர்தான்வாடு மயக்கமுந்தீர்ப்பாயெம்பி.

முன்னுளிருந்தபகைவினைகள் முழுதுமறந்துநினையாம
லின்னுளெனக்குத்துணையாகவிரங்கிக்கசத்திற்கிடவாது
மன்னுவுனதுகைதந்து வாவாவென்றுகரையேற்ற
சொன்னல்மறலி ஆமென்று துயரந்தீர்ப்பாருமக்காக.

பிறவிமயக்கந்தெளியாமற பேதாபேதமிகநினைத்தேன்
இறவிசுகத்திபெருமைதனைத்திரணமளவுந்தோற்றுமல்
அறவேகொடுமைபண்ணிவிட்டேன் அந்தப்பெருமை
நீபொறுத்து, இறவாதிருக்கும்வைகுந்தம் எய்தும்படி
யாய்க்கைதாரும்.

இதுவுமது.

பேரால்பெரியதன்மனெனப் பெற்றாய்பெருமையத
னாலே,தோராய்பெரியகன்மனென நின்றேன்கொடுமைய
தனாலே, பாராய்புவியிலுன்னையென்னைப் பகர்வார்
பெரியோர்பாரதத்தில், சீராய்மனதுதயவுடனேதிர
மாய்வந்துகைதாரும்.

வேறு.

பஞ்சவாளஞ்சுபேர்க்கும் பாஞ்சாலிதனக்குந்தானே
வஞ்சமாச்செய்தபாவம்மட்டல்லசொல்லக்கேளும்

கொஞ்சமா நினைத்தபுத்திகொடியதோர்நாகஞ்சேர்ந்தே
தஞ்சமென் றுன்னைச்சார்ந்தேன் தர்மரே நின்கைதாரும்
சூதினாற்கபடஞ்செய்து தூரத்தினேன்வனத்தில்யானும்
ஏதினாற்குவலயத்தி லிப்படிநரகம்புக்க
வாதினாற்பகையேசெய்து வங்கிஷமுழுதுமாண்டு
தீதினால்நரகஞ்சேர்ந்தோம் ஜெயமுண்டுகையேதாரும்

இதுவுமது.

மாயனார் தூதுவந்தார் மதித்துநான் துதித்தேனில்லை
ஆயனார்மனதுக்கேரு தாகச்சே அரசுதோற்றேன்
தூயனார்பாதம்போற்றித் தொழுதிடவே னுயின்று
வேயனார்க்காகத்தன்மா விரைவுறுகையைத்தாரும்

வேறு.

பெருமையுடைய தன்மரே நீர் போனுலெனக்குக் கெதியில்லை, இருமியுடனேத் துலேக்குதுபார்கெஞ்சியழுது பாதவிக்க, உருமியதட்டி நீர்நாயும்உறுக்கிமுதலேபிடித் திழுக்கச், சிறுமைகெடுநாட்பட்டழுத்தேன் தெய்வப் பிறப்பேகைதாரும்.

வேற்றுமையுனக்கேதப்பாமெய்யுயிராக்கைக்கெல்லாம்
பார்த்திபனுனமூர்த்தி பாரபரம்வந்தாய்சேர்ந்தாய்
நாற்றிசைபுகழுங்கீர்த்தி நரகம்விட்டகல வென்னை
ஏத்தியேகரையில்விட்டு இருக்கவைகுந்தஞ்சேர்ப்பாய்
உந்தனைக்கண்டபோதே உடலுயிர்மகிழ்ச்சிபெற்றேன்
எந்தனைவிட்டுப்போனு லெனக்கினி துணைவேறில்லை
சிந்தனை யூர்த்துதம்பி திருவுளமறிய நீயும்
வந்தனைதருமரே நீர் வைகுந்தஞ்சேருமிப்போ.

கதை.

தேர்வேந்தேநா னுனக்குச் செய்ததொரு தீவினையை
ஓர்கசடுதானு முன்மனதிற்காணுமல்
தருமநெறியுரையுந் தயவுந்தயிரியமும்

ஒருமையுடன் நீயிருந்த வுற்பனைத்தாலும்பரிடம்
வைத்திர்வைகுந்தம் வாழ்பதியுந்தான்பெருக
முந்திநான்செய்த மோசமெல்லாம்விட்டுவிடு
மன்னவனேயான்செய்த வன்மமெல்லாம்விட்டுவிடு
என்னை நரகம்விட்டு ஈடேறத்தான்பாரும்
ஏராதபாவி யிவையுரைக்கத்தான்கேட்டு
தாராருந்தன்மர் தயவுடனே தானோக்கி
பேதமாய்ப்பார்த்துநின்ற பேர்பெரியதன்மருக்கு
ஓதரியகிங்கிலிய ருகந்தேது சொல்வார்கள்
புண்ணியபாவமெல்லாம் பொருந்தவேபார்த்து
எண்ணிநமன்பக்கலுக்கு ஏகுமென்றார் தூதுவர்கள்
மன்னவனைக்கண்டு மறலிபக்கம்நான்போக
அன்னவனைக்கூட்டி யனுப்புமென்றாரம்மானை
பார்த்திபன்தான்செய்ததெல்லாம் பாவமேயல்லாது
எத்தியொருதன்மமுந்தானிவன்செய்தானில்லையென்றார்
இவனன்றோ பரகதியி லெய்துவதுமெப்படியோ
தவமுடையதன்மரோ நீர் சாற்றுமென்று காமுரைத்தார்
இருந்தவேதான தர்மஞ் செய்திலனேயாமாகில்
பொருந்தியிப்போநான்செய்த புண்ணியத்திற்பேர்பாதி
மன்னனுக்குநன்றாய் மகிழ்ந்தளித்தேனிப்போது
சொன்னேன்காண் தூதுவனே சுகமாக நீர்தாமும்
பூலோகராஜனையே புழுக்குழியைவிட்டேக
மேலாகத்தூக்கி விடுமென்றாரம்மானை
அந்தமொழிகேட்டு ஆனதொருகிங்கிலியர்
வந்துமொருகாந்தாரி மைந்தனையேகைதூக்கி
கூசாமற்றானெடுத்துக் கூட்டினாரம்மானை
ஆசாரமாக அண்ணல் துரியோதனனை
காராருந்தன்மர் கழுத்தோடுறவணைத்து
சீராகப்பேசித் தீவினையெல்லாமகற்றி
பாரார்புகழ்தருமர் பாவிகையைத்தான்பிடித்து
வாரார்மறலிமுன்னே வந்துகண்டாரம்மானை

இருவர்வரக்கண்டே இயமராஜன்கலங்கி
அருவினையன்மாபாவி அவன்வருவதேதெனவே
புகழ்தருமன்செய்துவந்த புண்ணியத்திற்பேர்பாதி
இயழாதிவ்வேந்தனுக்கு ஈந்தாரெனவுரைத்தார்
கேட்டுமகிழ்ந்துநமன் கிட்டவேமுன்னிருந்து
வாட்டமில்லாமன்னவற்கு மகிழ்ந்துரைப்பானம்மானை
அடர்ந்துதீமைசெய்தவர்கள் அவதிக்கப்படுவார்
நடந்துநன்மைசெய்தவர்கள் நல்லபதம்பெறுவார்
எனனும்பழமொழியுண் டென்பதிந்தமூவுலகும்
முன்னேபெரியோர் மொழியவேகேட்டிருப்போம்
ஆயநெடுமாலிவர்க்காய் ஐந்தூர்விடுகவென்ன
ஈயிருக்கத்தானு மிடமில்லையென்றார்காண்
தெரிந்திவன்முன்செய்ததீமையெலாந்தான்பொறுத்து
பரிந்துசெய்தபுண்ணியத்திற் பாதிபகுந்தீந்தீரே
ராரிசிஷிகானுமிவன் நளினமுடிசூட்டுமென்றார்
பாசமுள்ளகூற்றுவனும் பகுந்துரைத்தாரம்மானை
இமையோர்மனமகிழ்ந்து இராஜரிஷியென்றுபட்டம்
அமையமுடிசூட்டி அங்கிருக்கவேதருமன்
தோற்றுமிந்தநரகம்விட்டுச் சுற்றத்தார்யாவரையும்
ஏற்றுங்கரையிலென்று தன்மரவர்தானுரைக்க
வையமகிழ்தன்மர் வங்கிஷத்திலுள்ளோரை
ஆயநமன்சொற்படிக்குச் சொர்க்கத்திலேற்றியே
மற்றுந்தருமனையே மகிழ்ந்துமொருவானோர்கள்
சுற்றமெல்லாம்பூமிதனில் சூழ்ந்துமிகவந்தாரே
சொர்க்கத்திற்தன்மருந்தான்சுற்றமுள்ளோர்தங்களையும்
வர்க்கமுள்ளசொர்க்கமதிற் வைத்தாரெனவேதான்
தேனுர்தொடைமார்பன் தெய்வத்தருமனையும்
வானோர்களெல்லாம் மகிழ்ந்தார்களம்மானை
அந்தகனுமங்கே அருள்மைந்தனைநோக்கி
உந்தனுக்கேயிந்த வுலகமெல்லாம்நான்தருவேன்
தங்கமுடிசூட்டிச் சொர்க்கந்தனையாளுமென்று

அங்கேமறலி யருளினார் தன்மருக்கே
தன்மராசுகேட்டுச் சரணமெனப்பணிந்து
ஜென்மமழிந்தாலும் செய்தருமம்போனாலும்
எம்பிரானெம்பெருமா னிறையோன்வைகுந்தமல்லால்
நம்பியேயொரிடத்தில் நான்தரியேனென் றுரைத்தார்
பகர்ந்ததொருமறலி பாங்குடனேமால்பதிக்கு
உகந்து நீர்செல்லுமென்று உபசாரமாயுரைத்தார்
தந்தையிவைசொல்லத் தருமரடிபணிய
மைந்தன்றனையடுத்து வைகுந்தஞ்சேருமென்றார்
தொடர்ந்துசுற்றமுள்ளவையுந் துரியோதனன்றனையும்
அடர்ந்துசொர்க்கஞ்சேருமென் றன்புடனேதானேவி

தருமர் பிரமபதி சென்றது.

வானோர்கள் தன்மனையும் மகிழ்ந்துரதமேற்றி
சேனாபதித்தருமர் செல்லலுற்றாரம்மானை
அந்தரத்திற்றுந்துமிகள் ஆர்ப்பரிக்கும்பேரொலியும்
முத்தியபேரிகைகள் முரசினுடபேரொலியும்
எழுகடல்போலுலகி லெத்திசையுமேமுழங்க
வாழும்பிரமலோகம் வந்தடைந்தாரம்மானை
அகத்தியனுங்கோசிகனும் அத்திரிபுலத்தியனும்
மகத்திற்கௌதமரும் வசிட்டர்பாராசருமே
சொல்லவுஞ்சவுமியருந் தூர்வாசர்காசிபரும்
வல்லசமதக்கினியும் மார்க்கண்டர்வால்மீகி
அட்டதிக்குப்பாலகரும் அட்டவசுக்களுடன்
திட்டமுடனெல்லோரும் ஜெயவென்றுபோற்றிசெய்ய
மாணிக்கத்தாற்சமைத்த வண்ணமணிமண்டபத்தில்
ஆணிக்கனகமணி யழகியசிங்காசனத்தில்
ஓதுமீரேழுலகம் உகந்துபடைத்தோனும்
வேதனும்நன்றாய் வீற்றிருக்கும்வேலையிலே
தெரிந்தமுனிவர்களுந் தேவர்களுஞ்சூழ்ந்துவர
பரிந்துநல்லதன்மர்வந்து பணிந்தார்காணம்மானை

இசைநான்முகத்தோ னிவனாரெனக்கேட்க
நிசவான்குருகுலத்து நீள்பாண்டுதன்புதல்வன்
தருமனிவன்காணுந் தாரணியிலேகலியன்
பெருமையுடன்வந்ததினால் பேருலகைத்தானிழந்து
ஆதிநெடுமா லரிகேசவன்பாதம்
நீதிவைகுந்தம் நினைத்துவந்தாராகையினால்
அழைத்துவந்தோமும்முடையயடிபணியவேணுமென
தழைத்தோங்குதன்மனென்று சாற்றினார்வானோர்கள்
செப்பரியநான்முகத்தோன் சிந்தைமிகமகிழ்ந்து
ஒப்பரியதன்ம ருலகமதிலெப்போதும்
நன்றாகச்செங்கோல் நடத்துவிசேஷமெல்லாம்
குன்றாதமாமுனிவர் கூறநாம்கேட்டிருப்போம்
நண்ணியகாயமுடன் நன்றாமலிங்குவந்தான்
புண்ணியவானென்றுமிகப் போதமனமகிழ்ந்து
இன்னமும்பூவுலகி லிவர்க்காசையுண்டெனினும்
பொன்னுலகின்மேலாசை போதவேயுண்டெனினும்
எவ்வுலகம்வேண்டியது இப்போமுடிசூட்ட
அவ்வுலகந்தன்னி லரசாளவைப்பேனான்
வேண்டியதுகேளெனவே வேதாமகிழ்ந்துரைக்க
ஆண்டவனேவைகுந்தம் அமையுமென்றார்தங்களுக்கு
ஏதுமிவர்க்காசையில்லை இறையவனேயிப்போது
தாதுமறைவேதாவுந்தான் தந்தைபதம்வேண்டி
வந்தானிவனெனவே வானோருரைத்ததற்பின்
சிந்தாகுலம்படைக்குந் திசைமுகனும்மேதுரைப்பான்
தருமன்தனக்குமிப்போ தானவரேவானவரே
பிரமரிஷியென்றுபட்டம் பேரிட்டழையுமென்றார்
அத்தினத்தில்வானோரும் அருள்முனிவர்நாரதரும்
இத்தலத்துப்பிர்மரிஷியென்றுசெப்பித்தானழைத்தார்
பிரமபுரிவிட்டுப் பேரானதன்மரொரு
கருமங்கள்தானகலுங் கயிலைதனிற்செல்வமென்று
ஈசரிருக்கு மியல்கயிலை நன்னாட்டில்

வாசமலர்சொரிய மாமுனிவரோலமிட
ஆடுவார்கோடி யலங்காரமாகவேதான்
பாடுவார்கோடி பலவாத்தியமுழங்க
கொட்டுவார்கோடி கூத்தாடுவார்கோடி
தட்டுவார்கோடி சங்கூதுவார்கோடி
கானமயிலாடக்கண்டிருந்தவான்மறையோர்
ஆனதுதிக்கூத்தா மாவென்றுசெல்வாரும்
ஆவினமுங்கன்றும் அடந்துபுவியில்வாழும்
காவுதனில்மேய்ந்து கரடிபுலியாளியுடன்
வாரமுடன்நான்மறைகள் மற்றுமுன்னபட்சிகளும்
சேரவொருதுறையிற் சென்றடையும்வாவிகளும்
குன்றுதவாவிகளும் கோலத்தெருவீதியெல்லாம்
சென்றபக்கமெல்லாஞ் செண்பகங்கள்பூச்சொரிய
வாசல்கடோறும் மாபழுத்துப்பழமுதிர
தேசமெங்குஞ்செழிக்கத் தேவகணிமகிழ்வாய்
மாவாலேகோலம் மகாதேதர்க்கென்றுசொல்லி
ஆலவாய்நாலுதிக்கும் அழகாகத்தான்போட்டு
வன்னமுள்ளமாலே வயிரமுத்துமாலேகளும
பொன்னுநவமணிகள் போதவலங்கரித்து
இருகைமுடியில்வைத்து இருந்துதவம்செய்தோரும்
சருகுபொசித்திருந்து தவம்பண்ணுவார்கள்சிலர்
தவத்தின்பெருமைகண்டு தன்மர்மிகமகிழ்ந்து
அவத்தின்படியோனே ஆண்டுகொண்டதெப்படியோ
எம்பிரான்வாழ்வுகண்டு இயல்தருமரோதுரைப்பார்
தம்பிரானேஅடியேன தானுமென்னபேருபெற்றேன்
செப்பமுடன்புவியில் சித்தனர்திருவருளால்
இப்புதுமைகாணவும்நான் என்னதவம்செய்தேனோ
நாராயணனருளோ நரசிவனர்தன்னருளால
சீராருமையருளோ தேவர்கள்தன்செயலோ
என்றுசொலலித்தரும ரிமையோருடன்கூடி
சென்றுகயிலாச்சிறப்பதனைத்தான்பார்த்து

சந்தோஷமே பெருகித் தன்மரங்கே துரைப்பார்
அந்தரதேவர்களே அரனார் தங்கோவிலெங்கே
என்றுமெய்யான தன்ம ரியம்பவிமையோரும்
சென்றுநின்றிதோ பாரும் சிவனார் திருக்கோவில்
பயமுடைய தேவர்களும் பார்த்துநின்றுதாமுரைக்க
நயமுடைய நந்தீசர் நாதர்க்கெடுத்துரைக்க
ஓடினார் நந்தீசர் ஒருநொடியிலீஸ்பரர்முன்
தேடியே தெண்டனிட்டுச் சிவனாருடனுரைப்பார்
வாசமுள்ள தன்மரும்நம் வாசலில்வந்தாரெனவே
நேசமுள்ள தன்மர்தனை நீரழைத்துவாருமென்றார்
பாதமிகப்பணிந்து பண்புடைய நந்தீசர்
நாதருரைகேட்டு நல்லதன்மபுத்திரரை
தேசமிகப்புகழுஞ் சிறந்ததன்மபுத்திரரை
வாசலிலே நந்தீசர் வாருமென்றுதானழைக்க
நந்தீசர்பாதம நன்மையுடன் தெண்டனிட்டார்
வந்தனஞ்செய்து வாய்த்ததொரு தன்மருக்கு
அல்லலறஈசனருள் பெறுவீரென்றுரைத்தார்
நல்லதென்றுசொல்லி நடந்தாரே தன்மருந்தான்
வாசற்படிகடந்து வந்தார் நந்தீசருடன்
ஈசா கயிலைமலை வாசா ஜெகதீசா
அந்திவண்ணா முக்கண்ணா அரனேயெனத் துதித்து
சந்திரசேகரனை தலைசாய்த்துத் தான்வணங்கி
மாடேறுமீஸ்பரனார் மலர்பாதங்கண்ணிலொற்றி
ஈடேற்றவேண்டுமென்று ஈசாடிபோற்றினரே
ஆரணிக்கமான அரியதொருபஞ்சவர்தம்
காரணிக்கங்கேட்டிருப்போம் காசினியிலேதருமம்
உன்னை நிகர்சொல்ல உலகத்திலெப்பொழுது
பின்னையும்நான்காணேன் பேர்பெரியதன்மரே நீர்
என்றுமனமகிழ்ந்து ஈஸ்பரனார்கொண்டாடி
வென்றியுடனிசைப்பார் விஜயதெடுநால்வோரும்
காட்டிலுடல்போட்டுக் கண்ணனார்பொற்பாதம்

தேட்டமுடன்றானுஞ் சென்றார்களவ்விடத்தில்
வைகுந்தம்பெறறுமவர் வாழ்ந்திருப்பார் கண்டாயே
கைகண்டதாகையினால் கயிலைப்பதிதனிலே
ஒன்றுங்குறைவில்லை உன்றனக்கிங்கெப்போதும்
என்றுமொருநாளா யிருப்பீர்காணென்னிடத்தில்
ஆனதினாலின்னமொன்று அன்பாகச்சொல்லுகிறோம்
மானாபரனை மாலுமேயுங்களுக்காய்
திரியோதனாதிகளைச் செயம்பண்ணித்தந்ததுவும்
அரியோன்தானுங்களுக்கு அணுவணுவாய்நின்றதும்
தோற்றாரைவெல்லத் திருமாலருச்சுனனும்
நாற்றிசையும்கொண்டாட நம்மிடத்தில்வந்தபின்பு
அன்றுபுரமெரித்த அவ்வாளிவாங்கியதும்
சென்றுகுருக்ஷேத்திரத்தில் திரியோதனாதிகளை
பாரதப்போர்வென்றுதந்து பாராளவைத்ததுவும்
வாரிதுயில்மாயனுங்கள் மைத்துனனாய்த்தோன்றியது
என்றுமொருநாட்போ லிருந்துலகாண்டதுவும்
நன்றியுள்ளநாரணரை நாடோறுந்தான்போற்றி
வந்ததுவுமந்த வகையறியோம்கண்டீரோ
நந்துபயில்நாரணரும் நாந்தாமுவேற்றுமையோ
சீலமுடன்வைத்திருப்போம் சீர்வேந்தேஉங்களைநாம்
மாலவனைவிட்டிருக்க வல்லீரோவென்றுரைத்தார்
தேவரீர்க்கேற்ற திருவுளந்தானெக்காலம்
ஏவல்செய்வோமென்றுதன்ம ரேற்றினர்காணம்மானை
தன்மனிவைசொல்லச் சங்கரனுமேதுரைப்பார்
அன்பனே உன்னினைவு அங்கேயிருப்பதினால்
மாயவனார்தம்மிடத்தில் வைகுந்தத்தேயிருந்தே
சீலமுடனேவந்திருந்து தெரிசித்துப்போங்களப்பா
என்றரனார்சொன்னதின்பின் ஏற்றுள்ளமாதருமர்
நின்றுதுதித்து நீலகண்டர்தாள்பணிந்து
பாதம்பணிந்து பரிவாகத்தெண்டனிட்டு
நாதருடகோவில் நன்றாகவிட்டகன்றார்

முப்பத்து முக்கோடி தேவர் முனிவர்களும்
இப்படியே நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகள்
கின்னரர் கந்தருவர் கிம்புருடர் விஞ்சையரும்
அன்னமுயர்ந்தோனும் அயிராவதத்தோனும்
இம்மையிற்றன்மமென எவர்பெற்றுமென்றுசொல்ல
தும்புருநாரதருஞ் சுபசோபனம்பாட
ஆலாத்திக்காரியர்க ளணியணியாயவ்குவர
மாலாயன்பட்டணத்தை வாகாகவேபார்க்க
தேவகன்னிரம்பையர்கள் ஜெயமங்களம்பாட
ஆவலாய்த்தன்மருடன் அமரர்களுமங்குவர

தேவர்கள் வைகுந்தத்தைச் சிங்காரித்தல்.

மெய்கொண்ட தன்மர் விரும்பிவருவதற்கு
வைகுண்டலோகமெல்லாம் வானோரலங்கரிக்க
நன்மணஞ்சேர்மண்டபமும் நற்கனகமண்டபமும்
பொன்மணிசேர்மண்டபமும் பூமலர்சேர்மண்டபமும்
வைத்தழுத்தும்பவள மாணிக்கமண்டபமும்
கத்துகடல்முத்துங் கனகத்தூண்மண்டபமும்
புட்பராகம்பதித்த புதிதானமண்டபமும்
அற்புதமாய்ரத்னமணி யமைத்ததொருமண்டபமும்
அய்யகோமேதகத்தாற் றானிறுத்துமண்டபமும்
வையமகிழ்பச்சை வயிரத்தூண்மண்டபமும்
சிங்காரமண்டபமும் சீர்பளிங்குமண்டபமும்
வங்காரமண்டபமும் வச்சிரத்தூண்மண்டபமும்
வீறுனபட்டாடை மேற்கட்டிமண்டபமும்
மாறுதகண்ணாடி மாளிகையின்மண்டபமும்
விரைத்துசவ்வாததினால் மெழுகியதோர்மண்டபமும்
நிறைத்துநல்லசந்தனத்தால் நிலமெழுகுமண்டபமும
கந்தபொடிவாசங் கமகமெனறமண்டபமும்
மந்தாரைபிச்சி மலர்தூக்குமண்டபமும்
சாரவேகற்பூரத் தான்துலங்குமண்டபமும்

ஆரவேகல்லூரி யால்மணக்குமண்டபமும்
ஆரிரண்டாழ்வா ரமைந்ததோர்மண்டபமும்
கூறுமொருபொற்களகங் குவிந்திருக்குமண்டபமும்
நீண்டகருடக்கொடி யுடைய நீள்மதிலும்
கூண்ட அனுமக் கொடிநிறைந்தகோபுரமும்
உப்பரிக்கைமேடைகளும் உயர்ந்சிகரமுமாய்
அப்பெரியதேவாலங்கரித்தா ரப்பதியை
தூயதொருமாணிக்கந் தோரணமுந்தானட்டி
மாயனுடமாளிகையை வானோரலங்கரித்தார்
போதவேவீதியெங்கும் பூங்கமுகுநாட்டி
காதலுடன்கதலிக் கரும்புமிகநிறைத்து
பொன்னரியமாலை புரணமாய்த்தான் தூக்கி
மன்னணிய முத்துமணி மாலைபலதூக்கி
களபமொடு துளபங் கண்குளிரவே நிறைத்து
அழகாகவைகுந்த மலங்கரித்தாரப்போது

வைகுந்தநாதன் தருமனை தன்னருகில்வைத்தது.

மாசில்லாதன்மருடன் வாண்வர்கள்தேரேறி
பேசியதோர்வைகுந்தப் பெருநகரில்வந்துபுக்கார்
மண்ணுலகில்வாழ்தருமன் வைகுந்தம்வாழ்பதிக்கு
எண்ணியேதேவருட னிங்குவந்தாரென்றுசொல்ல
கேட்டுமகிழ்ந்தப்போது கேசவநாராயணரும்
சக்கரமுஞ்சங்குந் தரித்தமணிமாலையுடன்
திக்கெங்குந்தானிலங்கத் திகழ்கருடன்மீதேறி
மன்னமணித்துளப மாலைகளும் நின்றிலங்க
எண்ணரியதன்மருக்கு எதிர்வந்தார்கோபாலர்
அண்டபகிரண்ட மகண்டமுந்தானாக
உண்டுமிழ்ந்து நின்ற உலகளந்தார்தன்பதத்தை
பண்டுநான்செய்ததன்மம் பலித்ததுகாணென்று தன்மர்
கண்டுமனமுருகிக் கண்குளிரத்தெண்டனிட்டார்

விருத்தம்.

கண்டபொழுதே கலிதீர்ந்தேன் கன்மவினையின் கசடறுத்தேன், அண்டர்புகழும் பொற்பாதம் அடியேன் பணியத்தவம்பெற்றேன் தொண்டனிவனுமென் றுருகிச் சொல்லும்பெரிவைகுந்தக், குண்டமதிலே எனையிருத் துங் கோவேநந்தகோபாலா.

வேறு.

ஆதவாவுன்னைக்கண்டேன் அல்லிருளகன்றதிப்போ
மாதவாயென துசிந்தை மயக்கமுந்தீர்ந்தேன்செய்ய
சீதாதுளபமாயா தேவகிநந்தகோபா
கீதவாயிசைகள்சேருங்கிருஷ்ண வைகுந்தஞ்சேர்ந்தே

இதுவுமது.

ஜானகிராமராமா சாரங்கபாணிபூமா
மாநகரயோத்திராமா மாதவாவாசுதேவா
ஒநமோராமராமா உலகினையளந்தமாயா
தானவாவுனதுபாதம் சரணமேகண்டேன்கண்டேன்.

வேறு.

பட்டேன்புவியிலுழன் றடியேன் பாசங்களைந் துவருமளவும், விட்டேனுணர்வுதனைமறந்தேன் விரதமுனதுவைகுந்தம், மட்டேயறிய நடந்துவந்தேன் மறலிமலரோன் வானவரும், தொட்டேயணைத்தார்சுகம்பெற்றேன் தொழுதேனுனைநான் தொழுதேனே.

வேறு.

வைகுந்தப்பதவிசேர வருவதுஎளிதோவுந்தன்
வைகுந்தமென்றுசென்றால் வருவினையகன்றுபோமே
வைகுந்தராஜராஜே வடமலையானே அய்யா
வைகுந்தந்கருவாயின்று வைகுந்தஞ்சேர்ந்தேன்யானே

கவிதை.

மாயாமுகுந்தா மாபாரதந்தனிலே
ஆயாதிகாரியெரிந் தாதவனைத்தான்மறைந்து
சீராருபீமனுக்காய்த் தேத்தரசன் தன்னைவென்று
தாரார்விஜயனையுஞ் சாகாமற்காத்தனையே
ஆனை நின்றுமூலமென்ன அந்தமடுக்கரையில்
கானில்வந்து அஞ்சலென்று காகுத்தாவென்றுசொல்லி
தொழுதான்பணிந்தான் துயரமெலாந்தான் தீர்ந்தான்
அழுதான்கருணைவிழி யானந்தநீர்சொரிய
ஆடினான்மெய்மகிழ்ந்து அரிகரியென்றுசொல்லி
பாடினான்கீதம் பணிந்தானிருபாதம்
செங்கமலப்பாதம் சேவைபண்ணவே நிதமும்
இங்கிருக்கப்போறேன் யானென்னதவஞ்செய்தேனோ
என்றுதன்மர்சொல்லி ஏற்றுகின்றதோத்திரத்தை
மண்ணுலகில்மாயோன் மனமகிழ்ந்துதன்மரையும்
வாருமென்றுதானழைக்க வானவர்களந்நேரம்
பாருமென்றுகூடவரப் பங்கையனுமிந்திரனும்
தேடரியபாதஞ் சேவிக்கப்பெற்றனையே
ஆண்டவனேயுந்தனுக்கு ஆர்சரியென்றுரைத்தார்
என்றுசொல்லித்தன்மரையு மிமையோர்மகிழ்ச்சியுடன்
அன்றுகந்துகட்டி யணைத்தார்காணம்மானை
மற்றுமந்தமாயவனார் வானோர்தமைநோக்கி
கொற்றவனைக்கண்டு கோவிலிலேவையுமென்றார்
பரிந்துதன்மர்கோவில்புகப் பச்சைமால்மகிழ்ந்து
இருந்தங்கிமையோரை எம்பெருமாள்தானனுப்ப
சாற்றுபுகழ்தன்மருந்தான் தாளிணைக்கீழ்பூசைசெய்ய
ஏற்றதொருமாய னிருமென்றுதானுரைத்தார்
பொய்யில்லாவாசகனே போதவே நீயுமிப்போ
வைகுந்தலோகம் வளம்பார்க்கவாருமென்றார்
அய்யன்முகுந்தன் அரிகேசவனுடனே
உய்யுந்தருமனிவருடன் நடந்தாரம்மானை

வைகுந்த வளமையைத் தன்மருக்குக்காட்டுதல்.

கூறரியமாவெலிதன் கோவில்மணிவாசல்தனில்
வீறுடனேதானடந்து மேகவண்ணர்வந்துநின்றார்
மாயோனுந்தன்மருமாய் வாசலிலேவந்தாரெனவே
தூயதொருமாவெலிக்குத் தூதுவர்போயுரைத்தார்
கரைந்துகரைந்துருகிக் கண்ணாயிரத்தோனும்
தாணுமற்றேவர்களும் நான்முகனுந்தான்தேடி
காணாதபாதமது கடையோன்பொருட்டாக
கொடியேன்சிறுகுடலிச் கோபாலர்வாசல்தன்னில்
அடியேன்பொருட்டாக அய்யா நீரிப்போது
இங்கேயெழுந்தருள என்னதவம்செய்தோம்
சங்கேந்துமாலே சரணஞ்சரணமென்றார்
திருமாலேயிங்கிவனார் செப்புமென்றார்மாவெலியும்
குருகுலத்துத்தர்மனிவன்குணமும்பெருமையுள்ளோன்
சாதகமாம்நாள்முதலாய்ச் சத்தியன்தானுமிவன்
நீதமுடையவன்காண் நீணிலத்துத்தன்மருக்குள்
தக்கபொறைநெறியுந் தவமுமுடையவன்காண்
முக்கணனைக்காணவென்று வேண்டியேவந்தேன்காண்
மாவெலியேயென்றுரைக்க மாயோனேயும்முடைய
ஏவலினாலேவருந்தான் இந்திரரைப்போலாகி
தாழ்ந்தோருயர்ந்தோராய்த் தானிருப்பார்கண்டீரோ
வாழ்ந்தோனவன்பெருமை மாயோனேசொன்னீரே
தங்குசெம்பொன்மேருவினிற் றாழ்கானஞ்சேர்ந்திருந்த
அன்றுமந்தக்காகம் ஐம்பொன்னிறமாகலியோ
ஆகிலுநாமின்னமொன்று அருளக்கேள்மாவெலியே
தாகமுடன்கேளுமென்று சாற்றலுற்றாரம்மானை
பரிந்துநல்லமாமறையோர் பன்னீராயிரம்பேர்க்கு
திருந்துமொருவேள்வி தினந்தோறும்பண்ணிவைத்து
மற்றுமாராயிரம்பேர் மாமறையோர்தங்களுக்கு
நித்தமன்னதானம் நிறையக்கொடுத்தவன்காண்
நன்றாய்மனுநீதி நடத்துமுறைதனிலே

குன்றுமலா றிலொன்று கொண்டோனிவன்தானே
இல்லோரிரவோ ரிளைத்தோர்கள் தங்களுக்கு
எல்லாருயிரு மிவனுயிர்போற்காத்தவன்காண்
சத்தியம்வாய்மை தவறுமற்பூவுலகில்
நித்திய நீதி நிலை நிறுத்தும்புண்ணியன்காண்
திங்கள்மும்மாரி சிறந்துமிகப்பொழிய
பொங்கும்புலியும் புல்வாயுமோர்துறையில்
உண்ணுமதுதண்ணீ ருறவுமிகவுண்டாகும்
மண்ணுலகிலந்த மகிமையிவன் நீதி
வழக்காகிவீமனுடன் வந்தபுருஷாமிருகம்
பழக்காருந்தன்மருட பக்கலிலேஞாயமிது
வந்திருவர்தாமும் வழக்கென்றுதான்கூற
பிந்தினான்வீமனையும் பிளந்துபோவென்றவன்காண்
தெரிந்துதுரோபதையைத் திரியோதனன்பிடித்து
பரிந்துதுகிலுரியப் பார்த்துநின்றநால்வோரும்
வில்லம்புநீட்டி வெகுண்டுசினந்தெழுந்தார்
வில்லம்புதன்னை விலக்கியே நின்றவன்காண்
பாரின்மேலாசையற்றுப் பரிந்தேபரகதியை
சேரவேதானினைந்து தீங்கொன்றும்பேசாமல்
ஆவலுடனிங்குவந்தான் அன்பாகநம்மருகில்
மாவெலியேயென்று மகிழ்ந்துரைத்தாரம்மானை
என்றளவில்மாவெலியும் இருதயமுந்தானமகிழ்ந்து
சென்றுதருமனையுஞ் சிந்தையுறத்தான்தழுவி
மன்னவனே நீர்தான் வருந்தியேசெய்தவத்தால்
இன்னகரில்வந்தாய் நீ யென்றுமிகப்புகழ்ந்து
உற்றதொருதன்மருக்கு முபசாரமேபுரிந்து
மற்றுமந்தமாயோனை வணங்கினான்மாவெலிதான்
மாவெலியைத்தானிருத்தி மாயோனுமன்பாக
காவலனார்தன்மரையுங் கையுடனேகொண்டுசென்று
போரார்பாலகரார் பிரகலாததேவனுடன்
தாராரும்நாரதனுஞ் சதுர்வேதமாமுனியும்

உத்தமனுகியதோர் உருக்குமாங்கதனுடனே
பத்தியுள்ள ஆழ்வார் பன்னிருவர் தன்னுடனே
வீற்றிருக்குஞ்சோலைதனில் மேகவண்ணர் தன்கோவில்
போற்றியேவானவர்கள் பொற்ருளுறப்பணிந்து
தங்குதிகழ்தன்மருக்குச் சககரமுந்தான்தரித்து
பொங்குதிருமாயோனைப் போற்றிநின்ருர்வானேர்கள்
அங்கவர்கள்தம்மை அச்சுதனுர்தாம்நிறுத்தி
இங்கனுதல்வேந்தனுமாய்த் திருமாலெழுந்தருளி
குளிர்ந்தமலர்ச்சோலைதனில் கோபாலர்தானடந்தார்
அழுந்தநவரத்தினத்தா லலங்கரித்தமண்டபத்தில்
செல்லும்பொழுது ஜெயவிஜயன்வீமனுடன்
சொல்லுமிரட்டையருந் தோராத்துரோபதையும்
இருவரையுங்கண்டு எதிரேயெழுந்திருந்து
அரியபொருள்கண்டவர்போ லரியினிணையடியில்
வந்துபணிந்து மலர்கள்மிகச்சொரிந்து
சிந்தைமகிழ்ந்து சேவித்துநிற்பளவில்
தம்பிமார்தங்களையும் தன்மரெடுத்தணைத்து
எம்பிரான்சீர்பாத மிறைஞ்சினேம்போதுமினி
நந்தகோபாலர் நரசிங்கருபமுடன்
விந்தமதில்நடந்து மெய்தளர்ந்துவிட்டீரோ
என்றுரைத்துத்தம்பியரோ டியல்பாகஜவருந்தான்
மன்றுலவுமாயோனை மகிழ்ந்துரைத்தாரம்மானை
மன்னவரே நீங்கள் மண்ணுசையற்றுவந்தீர்
இந்நகரிலெப்போது மிருமென்றுதானுரைத்தார்
ஆனந்தவாரிதிகொண் டைவரையும்நீராட்டி
தானந்தமானவள்ளல் சாற்றிமுடிசூட்டி
மாயவனுர்தான்வாழ்த்திவாழ்ந்திருங்களென்றுசொல்லி
நேயமுடன்கொண்டுசென்று நீலமணிமண்டபத்தில்
அன்பாகதம்மிடத்தி லருகேயிருமெனவே
இன்பமாய்நீரு மிருமென்ருரம்மானை
நாரதனுர்தான்முதலாய் நன்முனிவோர்தான்கூடி

சிரானதால்வேதந் திருந்தவேஓதுமென்று
வீரசிங்காசனத்தில் மேவியிருமென்றுரைக்க
பாரசிங்கமாவேந்தர் பரிந்துமிகவீற்றிருந்தார்
வெண்கவரிதான்வீச விருதுபலமுழங்க
தங்கமணிமண்டபத்தில் தம்பியருந்தன்மருமாய்
ஏந்திழையாள்தம்மோடிருந்துபணிமாற
ஆய்ந்தமடமாத ரரம்பையர்களாடல்செய்ய
அச்சுதனார்நேச மகலாதபஞ்சவர்கள்
மெச்சுபுகழ்வைகுந்தம் வீற்றிருந்தாரம்மானை
பொய்யில்லாமெய்யரவர் புண்ணியவான்மாதருமர்
செய்யுவெகுதர்மமெல்லாம் தேடியேசெய்தமையால்
பரிதிமதிகாணாத பச்சைமால்தன்பதிக்கு
விருதரசர்பஞ்சவர்கள் மேவினர்காணம்மானை
இவர்பெற்றபேர்தா னெவர்பெற்றார்பூவுலகில்
கவருற்றநெஞ்சரின்னங் காணாதவிந்தைநகர்
கண்டாரிவரெனவே கனகசபைதான்முழங்க
அண்டர்முனிவோரு மதிசயமாய்க்கொண்டாட
கெய்கண்டார்கண்டார் வெளியிலொளியாயிருந்த
வைகுண்டங்கண்டார் வாசமுள்ளபஞ்சவர்கள்
என்றுகதைசொல்ல ஏற்றஜெனமேஜெயனுக்கு
சென்றுதிருச்செவியின் செவிடுமறுநன்றாக

ஜெனமேஜெயனுக்குப் பிரமஹத்திதோஷம் நீங்குதல்.

ஓசையுறக்கேட்டே யுள்மகிழ்ந்துதானிருக்க
பாசமுடன்பார்த்த பழையகறும்பட்டதுவும்
வெண்பட்டுமாகி வெறிபறந்துபோய்நீங்கி
பண்பட்டுவார்த்தை பழையபடிதான்பேசி
சிறுமையகன்றதென்று ஜெகதலத்தோர்கொண்டாட
பொறுமையுள்ளபஞ்சவர்கள் புவியாண்டுவிந்தமதில்
போனஅதிசயந்தான புதுமைபுதுமையென்று
ஜெனஜெயமேஜெயனுக்கு அறிவுவந்ததாகையினால்

சத்தியவான்வசனம் சத்திவிளங்குதென்று
பத்தியுடனப்போது பஞ்சவர்கள்கோவிலொன்று
கட்டிமுடித்துக் கைகுவித்துப்பூசைபண்ணி
திட்டிகழித்துத் திருக்கோவிலாயமாய்
பூமிதனிலிந்தப் பூலோகங்கொண்டாட
ராமனேராமனென்று நாதமணிதானுட
திருவிளக்குநின்றிலங்கத் தீபமுடன் தூபம்
பரிமளங்கள்வீசப் பஞ்சவர்கள்கோவிலொன்று
வருவார்பணிய வருவினைகள்தானகல
தருவார்துளபமுடன் சந்தானமுண்டாக
மெய்யதிகங்காட்டி விளக்கியேலோகமெல்லாம்
ஐவரதிசயங்க ளன்புடையோர்கொண்டாட
தன்மர்கதையென்று தாரணியிலேதுதிக்க
கன்மமகலக் கற்பனைகள்விட்டோட
நோய்கள்பலதீர நொந்துமனங்களிப்ப
பேய்களகலப் பிரமஹத்திதான்தீர
குட்டங்குறைவுநோவு சூலமூட்டி நீராமை
அட்டகுன்மவாயுவுடன் அலங்காதபீலிகையும்
வெட்டைகரப்பன் வெடிசூலமேகமுதல்
துட்டக்கிரந்தி சோகைகாமாலையுடன்
அத்தரவாயுவுடன் அண்டபவுத்திரமும்
முந்திபிடிப்புவலி முழங்கால்கரப்பானுடன்
கன்னக்கரப்பன் கடியகண்டமாலையுடன்
அன்னக்கிருமி அழிநீரழிவுமுதல்
பற்குத்துபல்லரணை பாண்டுநீராம்பலுடன்
உட்குத்துடம்பூளைதல் ஒடுங்காக்கரப்பனுடன்
ஈளையிருமல் இளைப்புப்பெருவயிறும்
கோழைகுடவாழை கூடியநீர்ப்பீனசமும்
வாதக்கரப்பன் மண்டைபொரிக்கரப்பன்
காதிரைச்சல்கண்புகைச்சல் கண்மாசடைதலுடன்
வைப்புப்பதைப்பு வலுத்தபில்லிசூனியமும்

வெப்புவெகுப்பு விரணம்பலவிதமும்
மூகவாதசன்னி முடங்கல்தலையசைப்பும்
பகராதிபித்தம் பழுத்தரத்தகாசமுதல்
கடுத்துவயிறெழுக்கல் கண்டிப்புக்கொண்டையுடன்
அடுத்துநடுக்கல் அசதிசந்துவாசமுதல்
வலிப்புமிசிப்பு வாய்நோய்வரட்சியுடன்
கலிப்புப்பிளவை கண்ணோசைவிப்புருதி
சண்டிவலிவிப்பிருமல் தாதுநட்டமானதுவும்
அண்டவலி அகோரநோயத்தராவாயுமுதல்
பருப்படுவன்சில்விஷங்கள்பண்டிப்புத்தொண்டைவலி
கழிப்பழிந்தூர்கிருமி கனவுமிகச்சொற்பனமும்
உள்ளுருக்குநோயு முடம்பிலெலும்புருக்கி
வெள்ளுநளுவைவெள்ளுதடு வீங்கும்பெரும்பாண்டு
எரிபிளவைகரிபிளவை ஈடுமுறைபாடுமுதல்
அரிபிளவைசப்பாணி ஆனந்தவாயுவுடன்
அழல்நோய்பொருமலடைப்பு நீர்கல்லடைப்பு
கழல்வாதங்குளிர்காச்சல் கண்ணோவு நீர்வருதல்
சீதசுரம்பார்வை சேட்டுமத்தின்கொட்டாலை
வாதசுரம்பித்தம் வலுத்தசுரமிப்படியாய்
எழுநூறாகி எழுந்தவியாதிகளும்
திருமென்றுமாயன் திருவாய்மொழிந்தபடி
ஆருந்தவமுடையோர் அரிகரிவென்றுசொல்ல
வாக்குமனமுமொன்றாய் மகிழ்ந்திருந்துதான்கேட்டு
பார்க்கும்பழிபாவம் பறந்துவிடும்சத்தியமே
என்னதவமானாலும் இச்சித்துக்கேட்போருக்கும்
சொன்னமயமாகச் சொரிவான்துரோபதையும்
பிள்ளைத்தவமும் பெருந்தவமுந்தான்கொடுத்து
கிள்ளைத்துரோபதையுங் கேட்கவரந்தானீய்ந்து
நேமமுள்ளகாரியங்கள் நிமிஷத்தில்வேணுமென
வீமனுதவிசெய்ய விஜயனுமேகிக்கதிர
சென்றுசெலுத்தித் திசைகளெட்டுங்கீர்த்திகொண்டு

வென்று நகுலன் வெகுதவங்கள் தானீய
யன்னுசகாதேவன் வந்தநோய்விக்கினங்கள்
பன்னுமொருஞானப் பார்வையால்தான் தீர்க்க
தருமர்குருவாகத் தான்கொலுவிலேயிருக்க
கருமப்படர்ந்தோடக் கசடுவினை தீர
சத்திவிளங்கச் சகலபிணிதான் தீர
வெத்திகொண்டபாரதமா விண்ணுலகுமண்ணுலகும்
அங்குமரிகேசவனமால் ஐவர்சிறந்திருக்க
இங்குமைவர் தானிருந்து ஏற்றவரங்கொடுக்க
பெற்றோர்பெருமையென்று பேருலகங்கொண்டாட
உற்றோருறவோருக்குத் துபணிமாற
பூங்கோவில்வாசனைகள் போதவேதான்பணைக்க
பாங்காமணிவிளக்கு பக்கமெல்லாம் நின்றிலங்க
சாம்பிராணிவாசம் சன்னதியெல்லாம்மணக்க
தேம்பாமல்நாதமணி திருச்சங்குதான்முழங்க
தீராவினைக்குந் திறமுஞ்சவுரியமும்
தாரார்ஜெனமேஜெயன் தானறிந்துபோற்றிசெய்ய
பொறுமையுள்ளபஞ்சவர்கள் பூலோகந்தன்னிலிப்போ
சிறுமைபிரமஹத்தி தீர்ந்ததேளத்தனுக்கு
விதிவசத்தையாராலும் விலக்கமுடியாதெனவே
அதிசயமாய்க்கொண்டாடி அத்திபுரநகரில்
வீற்றிருந்துசெங்கோல் விளங்கமுடிசூட்டி
பார்த்திபருஞ்சூழப் பார்மன்னர்தான்சூழ
சிங்காசனத்திருந்து செங்கோல்செலுத்துதற்கு
மங்காவியாசருட வாக்கியமுந்தான்கேட்க
நினைத்துஜெனமேஜெயன் நெஞ்சுருகிந்தான்தேட
அனைத்துயிருமொன்றென் றறிந்தவியாசரவர்
பொன்னுலகம்விட்டுப் பூலோகந்தன்னில்வந்தார்
மின்னுலவுமந்த வேதவியாசனையும்
கண்டுஜெனமேஜெயன் கண்களிக்கத்தான்போற்றி
தொண்டனுக்குப்புத்தித் தோற்றமுடனேயுரைத்தீர்

அந்தவிபாமதை ஆய்ந்தறிந்தபாராமல்
வந்தபிரமஹத்தி மாற்றிவைக்கவேண்டியெனை
பஞ்சவர்களவர் பாராண்டுபாரிழந்து
வஞ்சமில்லாவைகுந்த மாபதிக்குப்போனகதை
கேளுமென்றுசொன்ன கிருபைப்படிதானும்
நாளுமொருமாதம் நன்றாகத்தான்கேட்டு
ஆளும்பிரமையது அகன்றதுகாண் மாமுனியே
கோளும்வினையுங் கொடுமைகளுந்தான்விலகி
போனதினாலவர் புதுமைஅதிசயத்தால்
தானமுடன்பொற்கோவில் தானிருந்துபூசைபண்ணி
வானவரேயிப்போது வைத்துவணங்குகிறேன்
நானுமுந்தன்பாதம் நாடோறுந்தான்மறவேன்
என்றுஜெனமேஜெயன் இவ்வார்த்தைதான்கூற
வென்றிகுருவேத வியாசரகமகிழ்ந்து
சத்தியவாய்மை தவறாதாரிப்போது
நித்தியமாயெங்கும் நிரந்தரமாய்த்தானவர்கள்
இங்குமிருப்பா ரெவ்வுலகுந்தாளுவ்வார்
அங்குமிருப்பா ரமாரோடாசனத்தில்
நல்லவர்கள்பஞ்சவர்கள் நற்றவம்பெற்றாரெனவே
வல்லபுகழ்மாமுனிவர் மகிழ்ந்துஜெனமேஜெய்னுக்கு
நாகசிங்காசனத்தில் நன்றாயிருந்துசெங்கோல்
வாகமுடன்பூவுலகில் மன்னுவிருமெனவே
வாழ்த்திவிடைகொடுக்க மகிழ்ந்துஜெனமேஜெயனும்
போற்றிநமஸ்கரித்துப் பொற்பாதப்பூண்டுகொண்டு
ஏற்றியிணையடியை யிறைஞ்சிநின்றுதோத்திரமும்
சாற்றினார்மாமுனிதான் சரணமெனக்கைதொழுது

விருத்தம்.

தேதுமிவ்வரகநாட்டித்தே வுலகளைத்தும்பூட்டி
வேறுசொற்பகையுங்காட்டி மித்திரபேதமாக்கி
கூறுமுதற்கதையுங்காட்டிக் கொலைதொழில்புரியவீட்டி
பேறும்பெற்றைவரென்று பெருமையுமுடித்தாய்ஜோதி

அறியேனடியேன் பிழைபொறுத்தி ராசநிறுத்தி வினையறுத்தீர், சிறியேனுனது மகவாகச்சித்த மிரங்கி யனுதினமும், வெறியேயகலவகைபுரிந்தீர்விட்டகுறை யும் நிறைவேறக், குறியாய் மகுட முடி கூட்டுங் கோவே எனது குலக்கொழுந்தே.

இன்னஞ் சிறியேன கலியுகத்திலிருந்து மெலிந்து மிளையாமல். முன்னஞ்சுபேர்க்கும் நூற்றுவர்க்குமொழி யும்விபா மதுபோல, வின்னஞ்சுவிரா நடுஞாயம் விரு ம்பியுரைத்து அடியேனைத், தன்னஞ்சறிவுதானதுபோற் றற்காத்தருளுந் தயாபரனே.

இதுவது.

முன்னாள் நடந்தவழிவசமும்முறையுமெனக்குத்தெ ரியாது; இன்னாள் நடக்கும்விபரித்தாலென்னைமறந்து சடையாமல் அன்னாட்கலியன்வந்திநூலவராள்வாரரி யிடத்தில், பின்னாலுமக்குநாயடியேன் பேசாதடுமையா ள்வாயே.

வேறு.

குருகுலத்தரசுக்கெல்லாங் கொற்றவாவுற்றவேளை
தருகெனச்சமையமென்பேன் தந்தருள்புரிந்து நீரும்
குருவெனத் தடுத்தாட்கொண்டு கொற்றவ அடியேன்
மீது, தருவெனக்கனகமீயுஞ் சற்குருதாதாபோற்றி
தோத்திர முஞ்சொல்லித் தொழுது நமஸ்கரிக்க
தாழ்த்திவிடை கொடுத்து மா முனியுந் தான்போனார்
வேதவியாசர் விண்ணகத்துக்கேகியபின்
சாதுஜெனமேஜெயனுந் தாரணியோர்போற்றிசெய்ய
இருந்தான்கொலுவி லேகசிங்காசனத்தில்
வருந்தார்தமக்கு வணங்காதகோவேந்தாய்
கலியுகத்திலேயிருந்த காரணமாம் நற்கதையைச்
சலியாமற்கேட்டுத் தான்பிரமைதீர்ந்தமையால்
பழுதில்லா இக்கதையைப் பட்சமுடன் தான்கேட்டு

எழுதப்படிப்போர்க்கும் இன்புற்றுக்கேட்போர்க்கும்
வைகுந்தமென்றொருக்கால் வாயினாற்சொன்னோற்கும்
மெய்கொண்டமூர்த்தி விஷ்ணுபதமுண்டாக
வந்தவினையும் வரும்வினையுந்தான் தீர்த்து
செந்திருமால்பாதஞ் சேர்ந்திருப்பார்கண்டீரே
இந்தவைகுந்தக்கதை இயல்பாகமுன்னாளில்
சிந்தைமகிழ்சீரங்க ராயருடன்தன்சிஷன்
வெங்கியருள்வடவன் விளம்பினானிக்கதையை
பொங்கியசொல்லதனைப் பூரித்துநன்றாக
முதலைமுதல்தெரிந்து முற்கதையை ஆராய்ந்து
குதலைமொழியெனவே கொண்டாடிக்கேட்பவர்க்கு
ஒருசொற்பொருளை ஒன்பதாய்த்தான்விரித்து
கருவாகவேதெரிந்து கற்பித்தான்விற்பனமாய்
திருந்துபுகழ்வைகைத் தெய்வீரையம்பதியான்
பொருந்துதவஞ்செய்யும் புகழழகுதன்புதவன்
மன்னவனும்பொன்னழகு மருகனெனவேவளரும்
அன்னதருவானவர்க்கும் அன்புடையோர்தங்களுக்கும்
சொன்னபடிகேட்டுத் தொழுதுமிகவணங்கும்
இன்னிலத்திற்றெள்ளுதமி ழியம்புங்கவிவாணருக்கும்
சேஷாடியார்க்குஞ் சிஷனாய்த்தானிருந்து
தாசனென்றுகூறித் தமிழினாலிக்கதையை
தேடித்தெளிந்து திருவிருத்தந்தான்கலந்து
பாடிப்படித்தெழுதும் பாருலகிலுள்ளோர்க்கும்
நூற்றெண்பதோர்விருத்தம் நுணுக்கமாய்த்தான்பாடி
பார்த்தன்புகூறிப் பனுவலுடன்கலந்து
க்ஷேத்திரப்போய்நன்றாய்த் திரட்டியொருநூலாகக்
கோத்திரமுந்தான்வாழக் கூறினானிக்கதையை
பாரிலுள்ள ஆடவரும் பாருலகமங்கையரும்
ஆரியரும்மற்றோரும் யாவர்களுந்தான்படிக்க
முன்னாளிலேவடவன் மொழிந்தவைகுந்தக்கதை
அச்சுக்கூடத்ததிப ரனேகரிதுவரையில்

உச்சிதமாயச்சிவிதை யோங்கப்பிரசித்தார்கள்
அட்டதிக்குமபுகழ அச்சிவிதைத்தானியற்ற
கற்றோரும்மற்றோருங் களிப்பாய்ப்படிப்பதற்கு
சொற்குற்றமில்லாமல் சுத்தப்பிரதியதாய்
தப்பிதங்களைத்திருத்தித் தன்னாலியன்றமட்டும்
குப்புசாமிக்குரிசில் குவலயத்தோர்கொண்டாட
வாழிமிகவாழி மங்காதநூல்வாழி
வாழிசெங்கோல்செலுத்து மன்னர்மிகவாழி
அன்னைசுற்றம்வாழி அருந்தமிழோர்தான்வாழி
சின்னஞ்சிறுபிள்ளை செல்வமுடனே தான்வாழி
ஆல்போல்தழைத்து அருகதுபோலவேரூன்றி
பால்போலருசிக்கப் பாரில்மிகத்தான்வாழி
மூங்கில்போலன்னைசுற்றம் மூசியாமற்றான்வாழி
ஓங்கியநால்வேத முயிரா பிறவுந்தான்வாழி

விருத்தம்.

அரிகரிராமாவென்றால் அகன்றிடுங்கோடிபாவம்
அரிகரிராமாவென்றால் ஆகமப்பொருளுஞ்சேரும்
அரிகரிராமாவென்றால் அறங்களுமிருந்துவாழும்
அரிகரிராமாவென்றால் அவர்கள்மெய்ஞ்ஞானியாமே.

மகாவிந்தமென்னும்

வைகுந்த அம்மானை

முற்றிற்று.

அம்பாசமுத்திரம் வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ
எச். டி. சுப்புசாமி அய்யரவர்களாலியற்றப்பெற்ற

ஸ்ரீராமாயணச்சிந்து.

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி லீலைக்கும்மியும் கூடியது.

மூவடியளந்தோன் சேவடிபோற்றும் பாவடியார்கள் பக்திக் கேற்பக் காவடிச்சிந்து வர்ணமெட்டுகளில் எழுதிய பாடல்கள். பக்திமான்களும் உத்தமமங்கையரும் பக்தியோடிதனை நித்தம் படித்தால் முத்தியும் பெறுவர். நினைத்த காரியம் சித்தியும் பெறுவர் என்பதில் ஐயமில்லை. விலை அணு 3.

ஹிப்னடிஸம் மெஸ்மெரிஸம், என்று வழங்கும் வசிய சாஸ்திரம்.

நம் முன்னோர்களான மஹரிஷிகளால் அப்பியாசித்துச் சிறப்படையப் பெற்ற இப்புத்தகத்திற்கூறிய முறைகளைச்சரிவர அப்பியாசித்து வருவோர்க்கு தேவவசியம், மானிடவசியம், உலகவசியம், ஜனவசியம், தனவசியம், மிருகவசியம், இந்திரஜாலம், மஹேந்திரஜாலம், முதலிய வித்தைகள் விரைவில் சித்தியாகும். பேய் பிசாசுகளை இலகுவில் ஓட்டலாம். விஷம் முதலிய நோய்களை இலகுவாய் நீக்கலாம். "ஜலமேல் நடக்கலாம், தனல்மீதிருக்கலாம், தன்னிகரில சித்தி பெறலாம் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை. சித்திரப் படங்களுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

விலை ரூ. 1-8-0.

தேவதா சித்தி யென்னும் மலையாள மாந்திரீக ரத்னாகரம்.

புதிதாய் வெளிவந்த அற்புதமான நூல்.

ஏராளமான சக்கரங்களடங்கியுள்ளது.

மனைகள்தோறும் அவசியம் இருக்கத்தக்கது.

இதில் தேவதாவசியம், உலகவசியம், வியாபார வசியம், தனவசியம், மெஸ்மெரிஷமென்னும் மனோவசியம், மிருகவசியம், பதினெண்வகை பூதகண பேதங்களென்னும் பேய் பிசாசுகளை ஆட்டுதல், அவைகளை ஓட்டுதல், பாம்பு தேள் முதலிய விஷஜெந்துக்களின் விஷங்களை நீக்குதல், பாலகிரகதோஷ பரிகாரங்களுக்குள்ள மந்திரங்கள் முதலிய இன்னும் அநேகவித அருமையான மந்திரங்கள் [illegible] சக்கரங்களுடன் அடங்கியிருக்கின்றன. (தற்புகழ்ச்சியன்று) புத்தகத்தை வாங்கிப் பார்ப்பவருக்கே உண்மை விளங்கும்.

முதல் காண்டம் 8 பாகங்களடங்கியது ரூ. 1.
2-வது காண்டம் 8 பாகங்களடங்கியது ரூ. 1.

இரண்டு காண்டங்களும் ஒரே தடவையில் வாங்குவோருக்கு விலை ரூ. 1-8-0

176487